THE BOOK WAS DRENCHED

UNIVERSAL
LIBRARY
OU_208224
UNIVERSAL
LIBRARY

கழக வெளியீடு—கஅக

பதினெண் கீழ்க்கணக்கு

கடுகங் கடிகை மாமூலம்

பதவுரை விளக்கவுரைகளுடன்



திரிகடுகம் - -
நான்மணிக் கடிகை
சிறுபஞ்ச மூலம் -



திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை

[Copy-right]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD., :
TIRUNELVELY, & MADRAS.

முன்னுரை

சங்க காலத்து நல்லிசைப் புலவர்களாற் பாடப்பெற்ற நூல்கள் **மேற்கணக்கு, கீழ்க்கணக்கு** என வகுக்கப் பெற்றுளளன. கீழக்கணக்கு நாலடியார், திருக்குறள் முதலிய பதினெட்டு நூல்களாம். அவற்றுள் இன்னா நாற்பது, இனியவை காறபது, கார் நாற்பது, களவழி நாற்பது ஆகிய நான்கு நூல்களையும் பதவுரை விளக்கவுரைகளுடன் "**நாலுநூறபது**" என்ற தலைப்பில் ஒன்றுய்க் கட்டடஞ் செய்து வெளியிட்டிருக்கின்றேம். அதன்பின் ஐந்திணையம்பது, ஐந்திணையெழுபது, திணைமாலை நூற்றைம்பது, திணை மொழியம்பது என்ற நான்கு நூல்களையும் பதவுரை, பழைய பொழிப்புரை, விளக்கவுரைகளுடன் "**நானூற்றிணை**" என்ற தலைப்பில ஒன்றுய்க் கட்டடஞ செய்து வெளியிட்டுளளோம்.

இபபோது ஒவ்வொரு பாட்டிலும மூமமூன்று பொருளகளை உணாததுவதாகிய "**திரிகடுகத்தை**யும, நநகான்கு பொருளகளை உணாததுவதாகிய **நான்மணிக் கடிகை**யையும, ஐநதைநது பொருளகளை உணாத்துவதாகிய **சிறுபஞ்சமூலத்தை**யும் பதவுரை விளக்கவுரைகளுடன் ஒருசேரக கட்டடஞ செய்து இந்நூலாக வெளியிடுகின்றேம்.

இனி, பதினெண்கீழக்கணக்கிலுள்ள எஞ்சிய நூல்களையும் முறையே நான்கு பகுதிகளாய்க் கட்டடஞ் செய்து வெளியிடத் தீமானித்திருக்கின்றேம்.

இங்ஙனம்,

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

கழக வெளியீடு—1அக.

நல்லாதனார்

இயற்றிய

Checked 1969

திரிகடுகம்

Tirikatukam

(By Nallathanar)

*

பாளையங்கோட்டை அர்ச். சவேரியர் கல்லூரி
தலைமைத் தமிழாசிரியர்
வித்துவான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்
எழுதிய
விருத்தி யுரையுடன்

*

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி & சென்னை.

First Edition, October 1936.
Second Edition, February, 1943.
Third Edition February, 1948.

[*Copyright*]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI & MADRAS.
1948

P. I. C. Ms. 95 B

Printed at The Royal Printing Works, Mount Road Madras.

சுமரகுருபரன் துணை

முகவுரை

தமிழ் மொழியாக் தாய்மொழி பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தோற்றமுற் றிலங்கும் உயர்தனிச் செம்மொழி. இத னைச் சங்கம் கிரீஇ வளர்த்துக் காத்த பெருமை பழம்பதியாகிய பாண்டிநாட் டமிசமாம் பாண்டியர்க்கே யுரியது. இங்ஙனம் பாண்டியர் கிரீஇய சங்கம் முதல், இடை, கடை எனா மூன்றாகும். இவற்றில் மதுரையிலிருந்த கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தவர் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையாரனார், பெருங்குன் றூர்கிழார், இளந் திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலான வர். அவருளிட்டுப் பலர் பாடினர். அவர்கள பாடியன கூதுமு வரியும், பேரிசையும், சிற்றிசையும், பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும், பதினெண் கீழ்க் கணக்கும் என்றிக் தொடக்கத்தன இவற்றுள், **பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மேற்கணக்கைச்** சார்ந்தவை.

> ''அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
> அறம்பொருள் இன்பம் அடக்கி அவ்வத்
> திறம்பட உணர்ப்பது கீழ்க்கணக் காகும்''

என்ற **பன்னிரு பாட்டியற்** சூத்திர மேற்கோளுக் கிணங்க, குறைந்த அடிகளையுடைய செய்யுட்களால, அறம் பொருள் இன் பம் என்பவற்றைத் தழுவியமைகத நூல் கீழ்க்கணக்காகும். கணக்கு-நூல். கீழ்க்கணக்குச் சிறுபான்மை ஐம்பதிற் குறைந் தும், ஐந்நூற்றின் மிக்கும் வரும். இனியது, இன்னா, காஞ்சி, களவழி காஞ்சும் ஐம்பதிற் குறைந்து வந்தன. மூப்பாலாகிய திருக் குறள் ஐந்நூற்றின் மிக்கு வந்தது. இக் கீழ்க்கணக்கு நூல் 'கனையே தாயபனுவல்' என்னும் பெயராற் கூறுவர் எனவும், இவை அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்

லுவ எனவும், வே றிடையிடை அவையன்றித் தாஅய்ச் செல்வது முண்டெனவும், இச் செய்யுட்கள் அடிநிமிராது இரண்டடி முதல் ஆறடி யிறுதியாக வருவன எனவும், அவை பல எழுத்தினின் அகன்று காட்டாது சில எழுத்தினின் வருவன எனவும், அவை எண்ணுச் சுருங்கிச் சிலவாக வருவன எனவும், "வனப் பியல்தானே வருக்கும் காலைச், சின்மென் மொழியாற் ரூய பனுவலோ, டம்மைதானே அடிநிமிர் பின்றே," என்ற தொல்காப்பி யப் பொருளதிகாரச் செய்யுளியல் உஉடு-ஆம் சூத்திரத்துப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் உரைத்தவாற்றான் உணர்ந்து கொள்க.

பதினெண்கீழ்க் கணக்கு நூல்களாவன :—

"நாலடி நான்மணி நானற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
மெய்ந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
யகந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்ற பழம்பாட்டிற் கண்டாங்கு (1) சமணமுனிவர்கள் இயற்றிய நாலடியார், (2) விளம்பி நாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, (3) பூதஞ்சேந்தனார் இயற்றிய இனியவை நாற்பது, (4) கபிலர் பாடிய இன்ன நாற்பது, (5) மதுரைக் கண்ணங்கூத்தனார் இயற்றிய கார் நாற்பது, (6) பொய்கையார் பாடிய களவழி நாற்பது, (7) மாறன் பொறையனார் இயற்றிய ஐந்திணை ஐம்பது, (8) கண்ணஞ் சேந்தனார் பாடிய திணைமொழி ஐம்பது, (9) மூவாதியார் இயற்றிய ஐந்திணை எழுபது, (10) கணிமேதாவியார் இயற்றிய திணைமாலை நூற்றைம்பது, (11) திருவள்ளுவனார் இயற்றிய திருக்குறள், (12) நல்லாதனார் இயற் றிய திரிகடுகம், (13) பெருவாயின்முள்ளியார் பாடிய ஆசாரக் கோவை, (14) முன்றுறையரையனார் பாடிய பழமொழி, (15) காரியாசான் சிறுபஞ்சமூலம், (16) மாரிசேகத்து முள்ளிநாட்டு கல்லார்க் காவதி யார் மகனார் புல்லங்காடனார் இயற்றிய ஏகந்திலை, (17) கூடலூர்க் கிழார் இயற்றிய முதுமொழிக்காஞ்சி, (18) கணிமேதாவியார் இயற் றிய மூலாதி என்பன.

இவ்வெண்பாப் பழம்பிரதிகளுள் "இன்னிலைய காஞ்சியுட னேலாதி என்பவே, நன்னிலைய தாருங் கணக்கு" "ஐந்தொகை முப்பால்" "நன்னிலையவாங் கீழ்க்கணக்கு" எனச் சிறிது சிறிது வேறுபட்டுக் காணப்படுதலின், சிலர் இன்னிலை யென்று பொய்கை யார் பாடிய 45 வெண்பாக்க ளடங்கிய நூலை மேற்குறித்த கைந நிலைக்குப் பதிலாகக் கூறுவா. கீழ்க்கணக்கு நூலகள் பதினெட்டு இவை என்று இன்னும் வரையறுக்கப்படாமை வியப்பே.

"கண்ணகன் ஞாலம் அளந்ததூஉம், காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம்—நண்ணிய
மாயச் சகடம உதைந்ததூஉம், இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி"

என்ற திரிகடுக வழிபடு கடவுள் வணக்கச் செய்யுளான், இந் நூலாசிரியராகிய நல்லாதனார் வைணவா என்பது பெறப்படும். "அருந்ததிக் கறபிலா தோளுமம்.....நட்புமை இமமூன்றும, திரிகடுகம் போலும் மருந்து" எனக் கூறப்பட்டதிலுளள திரி கடுகம் என்னுஞ் சொல்லே சிறப்புப்பற்றி இநநூலுக்குச் சிறப்புப் பெயராகக் கொளளப்பட்டது உவமை யாருபெயா.

திரிகடுகம்: சுக்குத் திப்பிலி மிளகு என்பது, பிங்கல நிகண்டு சூத்திரம் கருஉ-ஆல விளங்கும். சுக்கு முதலிய மூன்றிணைகிய கடுகம ஒருவா உடல் நோயை மாற்றி இன்பம் புரிவதுபோல் ஒவ்வொரு பாட்டின் அமைந்த மூமமூன்று பொருளும் உள நோயாகிய அறியாமை முதலியவறறைப் போக்கி இன்பஞ் செய் வன என்க. இந்நூல் காப்புச் செய்யுளுள்பட 101 வெண்பாக் களைக் கொண்டது கடைச்சங்க காலத் தொகை நூல்களி லொன்றாகக் கருதப்படுதற கிணங்க, இந்நூல் இன்றைக்கு 1800 ஆண்டுகட்குமுன் இயற்றப்பட்ட தென்பது பெறப்படும்.

இந்நூற்குச் சில பல வுரைகள் நாளிதுவரை வெளிவந் துள்ளன. சில பொழிப்புரையுடனும், சில பொழிப்புரை கருத் துரையுடனும், சில பதவுரை முதலிய சில குறிப்புகளுடனும்

விளங்குகின்றன. இவற்றி னுரைகளிற் கண்ட நயங்களைக் கொண்டும், காணுது நிற்கும் உரைக்குறிப்பு, இலக்கணக் குறிப்பு இவற்றைச் சேர்த்தும் **விருத்தியுரை யொன்றை** எழுதித் தரல்வேண்டுமென்பதாகத் திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அமைச்சர், **திரு. வ. திருவரங்கம் பிள்ளை**யவர்கள கேட்டுக்கொண்டதற் கிணங்க, இவ் விருத்தியுரை எமமால எழுதப் பெறுவதாயிற்று. செய்யுள மூலங்களிற சில பாட பேதங்கள சிறப்பாகச் செய்யப்பட்டுள்ளன. அருஞ்சொற பொருளகராதியும், செய்யுள் முதற்குறிப் பகராதியும் படிப்பவாக்கு உதவியாகச் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல அச்சிடப் படுங்காலத்து ஒப்புநோக்கித் திருத்தம் புரிந்துதவிய சென்னை அரசினர் மகமதிய உயாகிலைப் பாடசாலைத் தமிழாசிரியர் திரு அ. நடராச பிள்ளையவாகட்கு எம் உளமார்ந்த நன்றி உரியதாம

பதினெண் கீழக்கணக்கு நூல்களில் விருத்தியுரை வேண்டப் பெறும் நூலகட்கும் தக்க உரை இயறறி யுதவ விழையும் எம் முளளப்பாங் குணாநது, அங்ஙனமே செய்துதரக் கேட்டிருக்கும் தென்னிநதிய சைவசித்தாநத நூற்பதிப்புக்கழகத்தாக்கு எம நன்றி யென்றும உரித்தாகின்றது.

இம் முயற்சி யினிது நிறைவேறுக தோன்றுத் துணையாய் நிற்கும் இறைவன் திருவருளை என்றும் நினைந்து வழுத்துகின்றோம்.

தமிழ நூற பயிற்சி பெறும் யாவாக்கும் இவ்வுரை மிகவும் பயன்படுமாதலின், தமிழகத்தார இத்தகைய நூல்களை வாங்கிப் பதிப்பாளாக்கு ஊக்கமளிக்க வேண்டுகின்றோம்.

புலவரகம்,
பாளையங்கோட்டை.
27—1—36.

இங்ஙனம்,
பு. சி. புன்னைவனநாதன்,
தமிழாசிரியர்.

திருகுகம்

மூலமும் விருத்தியுரையும்

காப்பு

கண்ணகல் ஞாலம் அளந்ததூஉம் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தம் சாய்த்ததூஉம்-நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ணன் அடி.

(இதன் பொருள்) கண் அகல் - இடம் அகன்ற, ஞாலம் பூமியை, அளந்ததூஉம - அளந்ததும், காமரு - விரும்பப்பட்ட, சீர் - சிறப்பையுடைய, தண - குளிர்ச்சியும், நறும - மணமும் (பொருந்திய), பூ குருந்தம் - மலர்களையுடைய குருந்த மரத்தை, சாய்த்ததூஉம - முறித்ததும், நண்ணிய - கிட்டி வந்த, மாயச் சகடம் - வஞ்சகமான வண்டியை, உதைத்ததூஉம - உதைத்ததும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும் (செய்தவை), பூவை - காயாம்பூவைப்போலும், வண்ணன் - நிறத்தினையுடைய திருமாலின், அடி - திருவடிகளாம்; (என்றவாறு).

எடுத்துக்கொண்ட தூல் இனிது முற்றுப்பெறும்பொருட்டு இச் செய்யுளால் கடவுள் வணக்கம் செய்யப்பட்டது கடவுள் வணக்கம் ஏற்புடைக்கடவுள் வணக்கம், வழிபடு கடவுள வணக்கம் என் றிருவகைப்படும். இது வழிபடுகடவுள் வணக்கம். இங்குக் குறித்த கடவுளே காத்தற் கடவுளாகவும் இருக்கின்றார். காப்புச் செய்யுளில் காக்கும்படி சிறப்பாக வேண்டப்படுபவர் திருமாலும் பிள்ளையாரும் ஆவர். இக் கடவுள் வாழ்த்துப் படர்க்கையிற் கூறப்பட்டுள்ளது.

(கருத்துரை) எவ்வுலகத்தாரும் உய்யும்படி உலகளந்ததும், தமக்கும், தம்மவருக்கும் இடர் செய்யத் துணிந்த நியர்களை அழித்தல் செய்ததும் ஆகிய அத் திருவடியைத் துதிக்க இந்நூலுக்கு நேரிடும் இடையூறுகள் நீங்கும்.

திரிகடுகம் என்னும் இந்நூலிற் செய்யுள்களதோறும் மும் மூன்று பொருளைச் சேர்த்துச் சொல்வது தோன்ற இக் காப்புச் செய்யுளினும் திருமாலின் திருவடிகள செய்த மூன்று செயல் களைச் சேர்த்துக்கூறினர்.

ஞாலம் அளந்த கதை :—விரோசனன் மகளாகிய பலிச் சக்கரவர்த்தி என்பவன் பெருவலி படைத்தவன். மேல நடு கீழ் என்னும் மூன்று உலகங்களையும் வென்றவன். இவன் வெறறி யிற் பொருமை யுற்ற இந்திரன வேண்டுகோட் கிணங்க திருமால் ஒரு குறுகிய பிரமசாரி வடிவில வந்து தம்மடியால் மூவடி மண் வேண்டினர். அசுர குருவாகிய சுக்கிரன், வந்தவர் மாயத் திருமால் என்று கூறித்தடுத்தும் மாவலி தானஞ் செய்து கொடுத் தனன். கொடுத்த மண்ணைத் திருமால அளக்கக் கருதி நெடு வடிவங் கொண்டு மேல் இடை கீழ ஆகிய மூன்று உலகங்களை யும் அளந்தனர் என்பது இது, "மாலும் குறளாய் வளர்ந கிரண்டு மாணடியால் ஞாலம் முழுதும் நயந தளந்தான்" என்ற திருவள்ளுவ மாலைச் செய்யுளடியாலும தெளியப்படும்.

குருந்தஞ் சாய்த்தது —கிருட்டின அவதாரத்தில் கம்ச னகிய தம மாமனால் ஏவப்பட்ட ஓர் அசுரன் யமுனை ஆற்றங் கரையில் குருந்த மரத்தில் தங்கிக் கண்ணனுக்குத் தீங்கு வருவிக் கப் பார்த்திருந்தான். அம் மாயம் உணர்ந்த கண்ணன் இடைப் பெண்களோடு விளையாடுகின்ற முறையில் தம் திருவடிகளால் அம்மரத்தை முறித்துத் தள்ளிவிட்டார் என்பது.

சகடம் உதைத்தது :—கண்ணன் நந்தகோபர் மனையில் குழநதையாய்த் தொட்டிலிற படுத்திருக்கையில் கம்சன் ஏவலால சகட வடிவமாய் வந்த அசுரனைத் தம காலால் உதைத்து அழித்தார் என்பது.

கண் - ஏழனுருபு, ஈண்டு இடம் என்னும பொருட்டு. அகல ஞாலம் - வினைத்தொகை அளந்ததூஉம், சாய்த்ததூஉம், உதைத்ததூஉம; இன்னிசை யளபெடை. இவறறை வினை யாலணையும பெயரென்பர். அளந்த பொருள சாய்ந்த பொருள் உதைதத பொருள என்று கூறுவர். காமரு - காமர் என்னும் உரிச்சொல் உகரச்சாரியை பெற்றது; அழகிய என்னும் பொருளது. ஞாலம் - உபலட்சணமாய் வானுலகம் முதலிய வற்றையும் காட்டும். வண்ணன் - வண்ணத்தை யுடையவன். வண்ணம் - நிறம. அடி - அடிகள்; சாதி யொருமையாதலால் சாய்த்தது உதைத்தது அளந்தது என்பன ஒருமையாகின்றன.

செய்தலை - சொல்லெச்சம். இச் செய்யுளில் அளந்தது என் பதிலும், பேரருளும், சாய்த்தது என்பதிலும் பேராற்றலும், உதைத்தது என்பதிலும் பேரறிவும் ஆகிய இம் மூன்றும் கடவுட் குணங்களில் குறிக்கப்பெறுவதும் காண்க.

நூல்

அருந்ததிக் கற்பினுர் தோளும் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியும்—நொல்லின்
அரில்அகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றும்
திரிகடுகம் போலும் மருந்து,

(இ-ள்.) அருந்ததி - அருந்ததிபோலும், கற்பினார் - கற்பை யுடைய மகளிரது, தோளும் - தோள்களும், திருந்திய - குற்ற மற்ற, தொல - பழமையான, குடியில் - குடிப் பிறப்பில் (தோன்றி), மாண்டார் - மாட்சிமையடைந்தவரோடு, தொடர்ச்சி யும் - கொள்ளும நட்பும், சொல்லின் - சொறகளினிடத்தே, அரில் - குற்றங்களை, அகற்றும் - நீக்கவல்ல, கேள்வியார் - கேள் வியை யுடையவரோடு, நட்பும் - செய்யப்படும நட்பும் இ மூன்றும் - இந்த மூன்றும், திரிகடுகம போலும் (ஒருவனுக்கு) திரிகடுகம் போன்றுள்ள, மருந்து – மருந்துகளாம் (எ-று.)

(க-ரை.) நற்குண நற்செய்கைகளுளள பெண்ணை மணஞ் செய்திருப்பது முதலிய மூன்றும் இம்மை மறுமைகளில் தோடிடும துன்பங்களைத் தீர்த்து இன்பம் கொடுப்பவாதலால் தோயைப் போக்கி நலத்தைக் கொடுக்கும் சுக்கு திப்பிலி மிளகுகளாகிய மருந்துபோலும் என்பது.

"திருகடுகம் சுக்கு திப்பிலி மிளகு" பிங்கல நிகண்டு தூத். 352. சுக்கு மூதலிய மூன்றும்போல் தோள் முதலிய மூன்றும் இல் வாழ்வானெருவனுக்குத் துன்பம் அகற்றி இன்பம விளைதல லால், அவை உவமை மகளாயின இம் முதற் பாட்டிற் கூறப் பட்ட, 'திரிகடுகம்' என்ற சொலலே சிறப்பு நோகட இந நூலுக் குப் பெயராகக் கொளளப்பட்டது; உவமையாகுபெயர

அருந்ததி-எழு முனிவருள் ஒருவராகிய வசிட்ட மனைவி. கற்புடையார் பலரினும் இவர்க்கு உயர்வு எங்ஙனம் எண்ணில், விண் மீன் நிலையிலும், எழுமுனி வட்டம் என்ற நாட்கூட்டம் மூன்பக்கம் அடியில் இருக்கும் மூன்று விண்மீன்களில்

நடுவிலிருப்பதான வசிட்டமீஞெடு துணையாய் மின்னுவது. மாண்டார் - சிறந்தார், மாண் - முதனிலை, உரிச்சொல். அரில் - ஐயந் திரிபுகள். சொல்லின் அரில் அகற்றும் கேள்வியார் என்ற தொடரிலுள்ள பொருளோடு 'நுணங்கிய கேளவியரல்லார்' என்ற குறளின் கருத்தை ஒப்பு நோக்குக. (1)

தன்குணங் குன்றுத் தகைமையும் தாவில்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்செலவும் இம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில்.

(இ-ன்.) தன் குணம - தனது (குடிப்பிறப்பின்) குணம, குன்று - குன்றுமைக்கு (ஏதுவாகிய), தகைமையும - ஒழுக்கமும, தா இல் - அழிதல் இலலாத, சீர் - பெரும புகழைத தருகின்ற, இன்குணததார் - இனிய குணததையுடையோர, ஏவின - ஏவிய தொழில்களீை, செய்தலும - செய்வதும், நன்கு - 'அறதனினியல்லை, உணர்வு – (அறியும) அறிவையுடைய நான்மறையாளர் - நான்குவகைப்பட்ட வேதங்களீை ஓதிய வேதியர், வழி - (கூறிய) வழியில், செலவும் - நடதததலும, இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும மேல் முறையாளர்-மேன்மையாகிய ஒழுக்கத்தை ஆளுதல் உடையாரது, தொழில - தொழில்களாம; (எ - று.)

(க .ரை) தன்குலச் சிறப்புக் கெடாதவண்ணம ஒழுகுதலும, குணஞ் சான்றவர்க்கு ஆவன செய்தலும, நான்மறையாளர சொலலும் வழி நிற்றலும் மேலோர் செய்கை.

குன்று - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம. தகைமை - பெருமையுமாம. தாவில் என்பதைத தாவு + இல் என்றும் பிரிக்கலாம். இக்குத் தா என்னும் முதலகிலியே உகரச்சாரியை பெற்றுத் தாவு என்றுயிற்று. தா + இல என்னுமிடததுத் தா - முதனிலைத் தொழிற்பெயர். நான்மறை - நான்கு மறை; நான்கு கூறுமாய் மறைந்த பொருள்களுமுடைமையால நான்மறை என்றார். அவை பௌடிகமும், தைத்திரியமும், சாமவேதமும, தலவகாரமும் ஆம. இவற்றை இக் காலத்தவர், இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பர். (2)

கல்லார்க் கினனுய் ஒழுகலும் காழ்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும்—இல்லம்

சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.

(இ-ள.) கல்லார்க்கு - கற்றறியாதவர்க்கு, இனன் ஆய் - உற வினனாகி, ஒழுகலும - நடத்தலும், காழ கொண்ட - மனவுறுதி கொண்ட, இல்லாளை - மனைவியை, கோலால் புடைத்தலும் - கோலினால் அடித்தலும், இல்லம் - தம் வீட்டுள, சிறியாரை - சிற்றறிவினரை, கொண்டு - உடன் கொண்டு, புகலும் - புகுத லும், இம் மூன்றும - ஆகிய இம்மூன்று செயல்களும், அறி யாமையான் - தம் அறியாமையினாலே, வரும கேடு - விளைகின்ற கேடுகளாம்; (எ-று).

(க.ரை.) மூடரோடு சேர்ந்திருப்பதும, கற்புடை மனைவியை அடித்தலும், புல்லிய அறிவினரை வீட்டுள அழைத்துச் செலவு தலும் கேட்டைத் தருவன.

இல்லாள - மனைவி, இல்லறத்துக்கு உரியவள என்பது பொருள். காழ் - உறுதி, மூண்டு மனத்திண்மை, கற்பு. கேடு, ஆகு பெயர; கேட்டைத் தருவது என்று பொருள்தருமாதலால். (3)

பகைமுன்னர் வாழ்க்கை செயலும் தொகைநின்ற
பெற்றத்துள் கோலின்றிச் சேறலும்—முன்தன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம்மூன்றும்
சாவ வுறுவான் தொழில்.

(இ-ள்.) பகை முன்னர் - தன் பகைவர் முன்னே, வாழ்க்கை செயலும - செலவத்துடன் வாழ்தலைச் செய்தலும், தொகை நின்ற - தொகுதியாக நின்ற, பெற்றத்துள - மாடுகளின் கடுவே, கோல் இன்றி - கோல் இலலாமல், சேறலும் - செல்லு தலும், முன் - முன்னே (நின்று,) தன்னைக் காய்வானை - தன்னை வருத்துமவனை, கை வாங்கி - முன் விட்டு நீங்கி, கோடலும் - பின் அவனை நட்புக் கொள்ளுதலும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்று செயல்களும், சாவ உறுவான் - சாகவேண்டியவனுடைய, தொழில் - செய்கைகளாம்; (எ-று).

(க-ரை). பகைவர்களுக்கு எதிரில் செல்வன் காட்டினால் அவர்கள் அதற்குக் கேடு செய்ய முற்படுவார்கள். கோலில்லாது மாட்டு மந்தையிற் போனால் ஏதாவது ஒரு மாடு முட்டும். பகை வரோடு கட்புப் பாராட்டினால் கெடுதி உண்டாகும்.

பகை - பகைத்தல், முதனிலைத் தொழிற்பெயர்; இங்கு ஆகு பெயராய்ப் பகைவரை யுணர்த்தியது. பண்பாகு பெயரென்னு மாம். பகைமுன்னர் - பகைக்கு முன்னர், நான்காம் வேற்றுமைத தொகை, பெற்றம் - பசுவுக்கும் எருதுக்கும் பொது, தென் பாண்டி நாட்டுத் திசைச்சொல். சேறல், கோடல் - தல் ஈற்றுத் தொழிற் பெயர்கள்; செல், கொள என்பன முதனிலை கள், கை வாங்கல - ஒரு சொல்லின் தன்மையில், கைவாங்கு - பகுதி, சாவுறுவான் - இறக்கும்படி துன்பம் அடைவான், உறுதல் - துயருறுதற்குரிய வினை. (4)

வழங்கா துறையிழிந்து நீர்ப்போக்கும் ஒப்பப்
விழைவிலாப் பெண்டிர்தோள் சேர்வும்—உழந்து
விருந்தினரு வேற்றார் புகலுமிம் மூன்றும்
அருந்துயரம் காட்டு நெறி.

(இ-ள்) வழங்கா - யாவரும் இறங்கிப் பாராத, துறை இழிந்து - துறையில் இறங்கி, நீர் போக்கும் - பெருமை நீரில் போதலும், ஒப்பா - தனக்கு ஒப்பாக, விழைவு இல்லா - விருப்ப மில்லாத, பெண்டிர் தோள - வேசையர் தோளை, சோவு - சேர் தலும், உழந்து - வருந்தி, விருந்தினரு - பிறர்க்கு விருந்தாளி யாகி, வேற்றார் - அயலாரில், புகலும் - புகுதலும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும், அரும - (ஒருவனுக்கு) அரிய, துயரம் - துன்பத்தை, காட்டும் நெறி - காட்டும் வழியாம்; (எ-று).

(க - ரை) ஆறு முதலியவற்றிற பழகாத துறையில் இறங் கிச் செல்லுதலும், தன்மேற் பற்றில்லாதவளைச் சேர்தலும், வயிற்றை நிரப்பும் பொருட்டு அடுத்த ஊர் செல்லுதலும் இன்ப மன்றித் துன்பத்தையே செய்யும்.

வழங்காத துறை - வழங்காத துறை, வழங்காத - இறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், போக்கு - போதல், தொழிற் பெயர், ஒப்பா - செயவென் வாய்பாட்டு வினையெச்சம்; ஒ - பகுதி, விழைவு - தொழிற்பெயர், இல்லா - இல்லாத, ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், பெண்டிர் - குலமாதர் அல்லாத வேசையர், பெண்டு + இர் - பல்லோர் படர்க்கைப் பெயர். (5)

பிறர் தண்ணீர்ப் பேணுங்கால் நாணனும் பேணூர்
திறன்வேறு கூறிற் பொறையும்— அறவினையைக்

காராண்மை போல வொழுகலும் இம்மூன்றும்
ஊராண்மை யென்னுஞ் செருக்கு.

(இ-ள்) பிறர் - மற்றவர், தன்னை பேணுங்கால் - தன்னை விரும்பி மேன்மைப் படுத்துமிடத்து, நாணலும் - நாணுதலும், பேணர் - விரும்பாதவராய், பிறன் - தகுதியை, வேறு கூறின் - வேறுபடச் சொல்லுமிடத்து, பொறையும் - அதனைப் பொறுத்தலும், அறவினையை - உபகாரச் செய்கையை, கார் - மேகம், ஆண்மை போல் - ஆளுதல் போல, ஒழுகலும் - (ஆளுதல் செய்து) நடத்தலும், இ மூன்றும் - இந்த மூன்றும், ஊர் - (பிறர் மேற் பட்டு) செல்லுகின்ற, ஆண்மை என்னும் - ஆண்மை என் இன்ற, செருக்கு - செல்வங்களாம்; (எ-று).

(க - ரை) பிறர் ஒருவர் தன்னை உயர்த்திப் பேசும்பொழுது தனக்கு இது தகாது என்று நாணுதலும், தன்னை விரும்பாதவர் தன்னை இகழுமிடத்து வெகுளாமல பொறுத்தலும், மேகத்தைப் போல் கைமாறு கருதாமல உதவி செய்தலும் சிறந்த செல்வ மாகும.

பேணுதல - விரும்புதல், நாணுதல - கூசுதல், பேணர் - முற் றெச்சம்; பகைவர் என்றலும ஆம், பிறன் - பிறம் என்பதின் போலி, ஆண்மை - தொழிற் பெயர், கார் பண்பாகு பெயர், அறவினை - பண்புத் தொகை, ஊர் ஆண்மை - வினைத்தொகை செருக்கு - காரியவாகு பெயர; செல்வம் என்னும் காரணத்துக் காதலால் (6)

வாளாமீன் உள்ளல் தலைப்படலு ஆளல்லான்
செல்வக் குடியுள் பிறத்தலும்—பல்லவையுள்
அஞ்சுவான் கற்ற அருநூலு மிம்மூன்றும்
துஞ்சுமன் கண்ட கனு.

(இ-ள்.) வாளாமீன் - வாளா என்னும் மீனை, உள்ளல் - உள் ளான் என்னும் சிறு பறவை, தலைப்படலும் - எடுக்க முயற்சி செய்தலும, ஆள் அல்லான் - ஆளமாட்டாதவன், செல்வ குடி யுள் - செல்வமுள்ள குடியில், பிறத்தலும் - பிறந்து அதனை ஆளக் கருதுதலும, பல் அவை உள் - கற்றார் பலர் கூடிய சபை யில், அஞ்சுவான் - அஞ்சும் இயல்புடையவன், கறற - படித் துள்ள, அருநூலும் - அருமையான நூலுணர்ச்சியும, இ மூன் றும் - ஆகிய இம் மூன்று செயல்களும், துஞ்சு - தூங்குகின்ற, ஊமன் - ஊமையானவன், கண்ட கனு - கண்ட கனவைப் பாலாம்; (எ-று.)

(க - ரை.) எங்ஙனம வாய்பேசாத ஊமையன் தான் கண்ட கனவைப் பிறர்க்கு எடுத்துரைத்துப் பயன்படுத்தக் கூடாதவனு வனே; அது போல உள்ளான் வாளா மீனைத் தாக்குதலும், நிறமையிலலாதவன் செலவக்குடியிற் பிறந்து அதனைக் காப் பாற்றுதலும, சபைக்கு அஞ்சுகின்றவன் படித்த படிப்பும் இம் மூன்றும் பயன்படாதவைகள.

வாளா மீன் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை, மீன் உளளல் - இரண்டாம வேற்றுமைத தொகை நிலைத் தொடர்; மீனுக்கு என நான்காம வேறறுமைத் தொகையாகவும் கொள் ளலாம, வாளா மீன உளளல் தலைப்படல என்பது ஒருவன் தனக்கு முடிதறகரிய போரைச செய்து வெற்றிபெற முயலு தல் என்னும் பொருளைக் குறிக்கிறதால பிறிது மொழிதல் என்னும அணி. ஆள் - ஆளதல் என்பதில் தல விகுதி கெட்டு வந்த முதனிலைத் தொழிற் பெயர், பிறததல் - ஆகு பெயர், பல் லவை - பல + அவை, பண்புத் தொகை, பல என்பதன் இறு கெட்டுப் புணர்ந்தது, அஞ்சுவான் - அஞ்சுகின்றவன், வினையா லணையும் பெயர், அரு நூல் - பண்புத் தொகை, நூல் - நூலுணர்ச்சிக்கு, ஆகுபெயர், கனு - கனவு, இதற் கெதிர்மொழி நனு. நனு - நினைவு, கனுத் தகைமையைத தலைப்படல முதலிய மூன்றில் ஆரோபித்துக் கூறுதல் உருவக அணி. (7)

தொல்லையுள் தோன்றுங் குடிமையும் தொக்கிருந்த
நல்லையுள் மேம்பட்ட கல்வியு—வெல்சமத்து
வேந்துவப்ப வட்டார்த்த வென்றியு இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறுப் பொருள்.

(இ-ள) தொல் அவையுள - பழைமையை ஆராயவல்லோர் கூடியிருக்கும சபையிடத்தே, தோன்றுமை - தானக விளங்கித் தோன்றும, குடிசையும - குடிப்பிறப்பும, தொக்கு இருந்த - பல வகை நூலோரும கூடியிருநத, நல் அவையுள - நலல சபையி னிடத்தே, மேமபட்ட - மேன்மைப்பட்ட, கலவியும் - படிப்பும், வெல் சமத்து - வெல்லும் போரிடத்தே, வேந்து - தம் வேந்தன், உவப்ப - மகிழ, அட்டு - பகைவரைக் கொன்று, ஆர்த்த - நிறைத்த, வென்றியும - வெறறியும், இ மூன்றும - ஆகிய இம் மூன்றும், தாம - தாமே, தம்மை - தமமைக் குறித்து, கூறு - புகழ்ந்து பேச வேண்டாத, பொருள் - பொருள்களாம்; [எ-று]

[க.ரை.] பேர்பெற்ற குடிப்பிறப்பு, சிறந்த கல்வி, வெற்றி மிகுந்த வீரம இவை தாமே பிறர்க்கு விளங்குவன. இவற்றை யுடையவர் தாமே எடுத்துரைத்தல் பேதைமையுடைத்து; ஆதலால் எடுத்துரைத்த லாகாது.

தொல்லவை - தொன்மை + அவை. தொன்மை - பழமை; பண்புப்பெயர். நல்லவை-நன்மை + அவை.குடிமை: குடி-குலம், இஃது ஆகு பெயராய் அதிற் பிறப்பைக் குறிக்கும். தொக்கு - தொகு என்ற பகுதி இரட்டித்து இறந்தகாலங்காட்டியது; வினையெச்சம். மேம்பட்ட - மேன்மைப்பட்ட; படுதல் - உண்டாதல். வேந்து - வேந்தன் தன்மை, வேந்தனுக்கு ஆகு பெயர்; கூற்று, அரசு முதலியவைபோல. உவப்ப, அட்டு என்னும் வினையெச்சங்கட்கு முறையே உவ, அடு என்பன முதனிலைகள். ஆர்த்தல் - முழங்குதலுமாம். வென்றி - தொழிற் பெயர். சமம் - போர், இருவர் எதிர்த்துநிற்றல என்பது. (8)

பெருமை யுடையா ரினத்தின் அகறல்
உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்
விழுமிய வல்ல துணிதலி மூன்று
முழுமக்கள் காத லவை.

(இ-ள.) பெருமை - பெருந்தன்மை, உடையார் - உடையவருடைய, இனத்தின் - இனத்தினின்றும், அகறல - நீங்குதலும், உரிமைஇல்-தமக்கு உரியராதல் இல்லாத, பெண்டிரை-மாதரை, காமுறறு - விரும்பி, வாழதல - அவரோடு வாழுதலும், விழுமிய அல்ல - சிறந்தவை அல்லாதவறறை, துணிதல - சிறந்தவையாகத துணிதலும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும, முழுமக்கள - மூடர், காதலவை - விரும்புபவையாம; (எ-று).

(க-ரை.) நல்லாரிணக்கம் விடுதலும், தமக்கு மணஞ்செய்து கொடுக்காத பெண்களை விரும்புதலும், பயனறற செயலகளைச் செய்தலும, அறிவறற மூடாகள செயல்களாம்.

பெருமை-அறிவொழுக்கங்களில மிகுதியுடைமை. அகறல்-தல் விகுதிபெற்ற தொழிறபெயர். உரிமை: கிழமை. பற்று-தன் மனைக்கு உரிமையுடையவள; மனைவி, காமுறறு-காமுறு பகுதி, காமம் உறு என்பதன் விகாரம், விழுமிய-பண்படியாய்ப் பிறந்த பலவின்பாற பெயர். அறிவின்மையாகிய குறையுளள மக்களை முழுமக்கள் என்றது மங்கல வழங்கு; முழுமையாகிய மக்கள - பண்புத்தொகை படித்து வருந்தி மனதிலாயினும் உடம்பிலாயினும் சிறிதும புரைபடாதவர் அஃதாவது பிறநதபடி யிருப்பவர், "முழுமகன் சிதடன் இழுதை மூடன்"—திவாகரம். அகறல் வாழ்தல் துணிதல் - இவற்றில் உம என்னும் எண் இடைச்சொல் தொக்கு நின்றது, பெயர்ச் செவ்வெண். (9)

கணக்காயர் இல்லாத ஊரு பிணக்கறுக்கு
மூத்தோரை இல்லா அவைக்களனு—பாத்துண்ணு
தன்மை யிலாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்த லில

(இ-ள்.) கணக்காயர் - நெடுங்கணக்கு முதலியன கற்பிப்பவரை, (ஆசிரியரை), இல்லாத-உடையதாயிராத, ஊரும-ஊரிலிருத்தலும, பிணக்கு-மாறுபட்ட பொருளை அறுக்கும-நீக்கும், மூத்தோரை - (கலவி கேளவிகளில்) முதிர்ந்தவரை, இல்லா - உடையதல்லாத அவைக்களனும் - சபையிலிருத்தலும, பாத்து-பகுத்து, உண்ணும - சாப்பிடும், தன்மை - குணம், இலாளர் - இல்லாதவர், அயல இருப்பும-பக்கத்திலிருத்தலும, இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும, நன்மை-(ஒருவனுக்கு) நன்மையை, பயத்தல் - தருவன, இல - அல்லவாம; (தீமை பயப்பனவாம்) (எ-று.)

(க-ரை) கலவி கற்பிக்கத்தக்கவரிலலாத ஊரிலிருப்பதும், ஏற்பட்ட வழக்கைத தீர்க்கும திறமிலலாதவர் சபையிலிருப்பதும், உதவிசெய்யாதவர் பக்கத்திலிருப்பதும் பயனற்றவை, இருக்கவேண்டாம என்பது கருத்து.

கணக்காயா - கணக்கு + ஆயா, கணகைக ஆய்ந்தவர், கணக்கு-இஃது இலக்கணம முதலியவற்றிற்குமு உப லட்சணம், ஆயர் - ஆராய்ந்தவர்; ஆய் - ஆராய், இவர் மூல பாடங் கற்பிப்பவா என்பது "கற்றதூஉங்கின்றிக் கணக்காயர் பாடத்தாற் பெற்றதாம் பேதையோ சூதிரம" என்ற நாலடியால் விளங்கும். பிணக்கு - பிணங்குதல், பிணங்கு என்னும முதனிலை பிணக்கு எனத் திரிந்தது, தொழிற்பெயர்; ஒரு பொருளைக் குறித்து இருவாக் குளதாம மாறுபாடு. அறுக்கும - ஐயந்திரிபற நீக்கும், மூத்தோர் - கற்றறிந்த பெரியோர், "அவைக்குப் பாழ் மூததோரை யின்மை" என்பது நான்மணிக்கடிகை. அவைக்களன்-சபையாகிய இடம், இரு பெயரொட்டுப் பண்புத் தொகை. களன் - களம் என்பதன் கூபலி. பாத்து - பகுத்து, "பாத்தூண் மரீஇயவனைப் பசியென்னும், தீப்பிணி தீண்டலரிது" என்ற திருக்குறள் 227-ல பாத்து பகுத்து என்னும் பொருளில் வந்துளது. "பகடு நடக்தகூழ பலராரோ டுண்க," என்பது நாலடி. இல்வாழ்வான் பிரமசாரி முதலிய ஒன்பதின் மர்க்கும் கொடுத்துண்பது முறையெனத் திருவள்ளுவர் அறுதி

யிட்டிருப்பினும், விருந்தினர்க்கும் உறவினர்க்குமாவது கொடுத்துண்பது இன்றியமையாதது என்பது வற்புறுத்தப்படும். "விருந்தின்றி யுண்ட பகலும்" என்ற இந்நூல் 44-ஆம் செய்யுளடியையும் நோக்குக. (10)

விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும் வீழக்
களியாதான் காவா துரையும்—தெளியாதான்
கூரையுள் பல்காலும் சேறலும் இம்மூன்றும்
ஊரெல்லாம் நோவ துடைத்து

(இ-ள்.) விளியாதான் - (தன்னை) அழையாதவன், கூத்து ஆட்டு - கூத்தாட்டத்தை, காண்டலும் - (தான் சென்று) பார்ப்பதும், வீழ - (தளர்ந்து) விழும்படி, களியாதான் - மதுவுண்டு களியாதவனுயிருந்தும், காவாது - காவாமல், உரையும-(வழுப்படச்) சொலலுதலும், தெளியாதான் - (தன்னை) நம்பாதவன், கூரையுள் - வீட்டிலே, பலகாலும் - பலமுறையும், சேறலும் - செல்லுதலும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும, ஊரெல்லாம்-ஊரிலுள்ளோரெலலாரும், நோவது - துன்பப்படுங் குற்றத்தை, உடைத்து - உடையன; (எ-று)

(க-ரை.) அழைக்கப்பெறுத ஆட்டதைக் காணப்போவதும், களியன்போல காவாது உரைதலும, தன்னை நம்பாதவன் வீட்டிற செல்லுதலும், வருந்தததக்க குறறஙகளாம்.

கூத்து - நாடகம். ஆட்டு - ஆடுதல்; ஆட்டு - விகாரப்பட்ட முதனிலைத் தொழிற் பெயர் "கூத்தாட் டவைக்குழாத் தற்றே" என்ற திருக்குறள 332-லும் கூத்தாட்டு, கூத்தாடுதல் என்னும் பொருளில வந்துள்ளது. கூததாகிய ஆடல் எனின் இரு பெய ரொட்டுப் பண்புத்தொகை களி - கள்ளுண்ணுதலால் ஏற்படும் வெறி; இதை யுடையவன் களியெனப் படுவான். விளியாதான், களியாதான், தெளியாதான் - வினையாலணையும் பெயர்கள். உரை - முதனிலைத் தொழிற் பெயர். பலகாலும்: உம்-முற்றுப் பொருளது, நோவது - நோவுதற்கு ஏதுவானது, நொ - பகுதி முதல் நீண்டது. அ - சாரியை, து-ஒன்றன்பால் விகுதி. இம்மூன்றும் உடைத்து எனபது பன்மையில் ஒருமை மயக்கம். ஊர் - இடவாகு பெயர். விளியாதான் கூத்தாட்டுக் காண்டல் என்பதற்கு இனிமையாகப் பாடாதவன் கூத்தாட்டத்தைச் செய்தலும் என்றும் கூறலாம். விளித்தல் - ஒலித்தல்; ஈண்டுப் பாடலின் மேற்று. காண்டல் - செய்தல், "மூனனவன் கண்டது முதனூல்"

என்பதிற் காண்க. கூரை - சினையாகு பெயராய் வீட்டை யுணர்த்திற்று. (11)

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது

(இ-ள்.) தாள் ஆளன் என்பான்-முயற்சியை ஆளுதலுடை யான் என்று சிறப்பித்துச்சொல்லப்படுபவன், கடன்படா-கடன் படாமல், வாழ்பவன் - வாழ்தலுடையவன், வேள் ஆளன்-உதவி யாளன், என்பான் - என்று சொலலப்படுவோன், விருந்து-வந்த விருந்தினர், இருக்க - (பசித்து) இருக்கையில், உண்ணுதான் - (தனித்து) உண்ணுதவன், கோள் ஆளன் - (பிறர அறிந்த காரி யங்களை மனதிற்) கொள்ளுதல் உடையவன், என்பான்-என்று சொல்லப்படுபவன், மறவாதான் - கேட்டவற்றை மறவாதவன், இ மூவர் - இம் மூவரும், கேள் ஆக - தனக்கு நட்பினராயிருக்க, வாழுதல் - (ஒருவன்) வாழுவது, இனிது - (அவனுக்கு) நன்மை தருவதாகும்; (எ-று).

(க-ரை.) கடன்படாது வாழ்வதே நல்ல முயற்சியென்ப தும், வீட்டுக்கு வந்த விருந்தினரைப் பேணுதலே சிறந்த உதவி என்பதும், தான் ஒருவர் சொலலியவறறை மறவாது மனதிற் கொண்டிருத்தலே நற்சிந்தை என்பதும், ஆம்.

தாள - முயறசி வேள் - உதவி, என்பான் - என்று சொல் லப்படுவான், செயப்பாட்டுவினை செய்வினையாக வந்த வினையா லணையும் பெயர்; என் - இடைச்சொல் - பகுதி "எந்நாளும் காப்பாரே வேளாளா காண்" என்ற கம்பர் தனிக் கவியடியும் வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணுதான் என்ற உண் மையை விளக்கும். படா - எதிர்மறை வினையெச்சம், து-விகுதி கெட்டது இருக்க - செயவென் வாய்பாட்டு வினையெச்சம். ஆக - செயவென் வாய்பாட்டு - வினையெச்சம் கோள் - முத னிலை திரிந்த தொழிற்பெயர். விருந்து, கேள - இவை பண்பாகு பெயராய் விருந்தினரையும் கேளிரையும் உணர்த்தும். கோளா ளன் என்பதற்கு ஆசிரியர் கூறிய நூற்பொருளை அமையக் கொள்ளும் மாணக்கன் என்று சொல்லப்படுவோன் கேட்ட வற்றை மறத்தலில்லாதவன் எனலும் ஆம். (12)

சீலம் அறிவான் இளங்கிழா சாலக்
குடியோம்பல் வல்லான் அரசன்—வடுவின்றி
மாண்ட குணத்தான் தவசியென் றிம்மூவர்
யாண்டும் பெறற்கரி யார்.

(இ-ள.) சீலம் - (பிறர்) குணத்தை, அறிவான் - அறிந்து கடக்கிறவன், இளம கிழா - இளமை (தொட்டுவந்த) சுற்றத்தா லுவான், சால - மிகவும, குடி - குடிகளை, ஓம்பல் - பேணுதலில், வல்லான் - வலலவன், அரசன் - அரசலுவான், வடு இன்றி - குறறம இலலாமல, மாண்ட - மாட்சிமைப்பட்ட, குணததான் - குணத்தையுடையவன். தவசி - தவசியாவான், என்ற - என்று சொலலப்பட்ட, இ மூவர் . இம் மூவரும, யாண்டும் - எவ்விடத் தும், பெறறகு - பெறுதற்கு, அரியார் - அரியராவார் ; (எ-று).

(க-ரை.) பிறர் குணம அறிந்து கடக்கவலல சுற்றத்தானும குடிகளைக் காககவலல அரசனும, குற்றமில்லாது துறவோ டிருக்கவலல தவசியும எல்லாராலும் தேடிப் பெறவேண்டுபவ ராவர்

இளங்கிழா - புத்திரலுவான் என்பதுமுண்டு. இளமையாகிய கிழா - பண்புத தொகை. இளமை என்றதறகு இளமை தொட்டு வந்த என இலகணையாற பொருள கொளளப்பட்டது. கிழா - சுற்றததாகு உவமையாகுபெயர். சால-உரிச்சொல; மிகுதி யென்னும பொருட்டு. குடியோம்பல - தளர்ந்த குடிகளைப் பேணல. அஃதாவது ஆறிலொன்றுகிய இறைப் பொருளையும் வறுமை நீங்கிய வழிகொளளல் வேண்டின் அவ்வாறு கோட லும், இழுத்தல் வேண்டின் இழுத்தலும் ஆம. மாண்ட : மாண். பகுதி ; மாண்ட பெயரெச்சம். தவசி - காரணப்பெயர். தவசு- பகுதி. தவமாவது - மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு நோன்புகளால் உண்டி சுருக்கல் முதலாயின. அரி யார் - என்பதில் அருமை என்னும் பகுதி இன்மையென்னும் பொருட்டு. (13)

இழுக்கல் இயல்பிற் றிளமை பழித்தவை
சொல்லுதல் வற்றாகும் பேதைமை—யாண்டும்
செறுவொடு நிற்குஞ் சிறுமை இம்மூன்றும்
குறுகார் அறிவுடை யார்.

(இ-ள்.) இளமை - இளமைப்பருவம், இழுக்கல்-வழுவுதலை இயல்பிற்று - இயல்பாகவுடையது ; பேதைமை - அறியாமை பழித்தவை - (அறிவுடையோரால) விலக்கப்பட்டவைகளை

சொல்லுதல் - சொல்லுதலில், வற்று ஆகும் - வல்லதாம், சிறுமை - ஈனதன்மை, யாண்டும்-எக்காலத்தும், செறுவொடு-சினததோடு, நிறகும் - நிற்பதாகும், (ஆதலால்) இ மூன்றும் - இம்மூவகையினையும், அறிவு உடையர் - (மேல் விளைவை) அறிதலையுடையார், குறுகார் - நெருங்கார்; (எ-று).

(க-ரை.) இயல்பாக வழுவுதலையுடையது பாவமாம், வெறுபபவைகளைச் சொல்லுதல் மூடத்தனம், எப்போதும் சினத்தோடிருப்பது சிறுமை, இவை ஒருவனுக்கு இருக்தால் பெரியோர் அவனைச் சேரார்.

இழுக்கல் - வழுக்குதல்; இழுக்கு - பகுதி, அல் - தொழிற பெயர் விகுதி. இயலபிற்று குறிப்பு முற்று. இயல்பு - பகுதி, இன் - சாரியை, று-விகுதி, னகரம றகரமாகத் திரிந்தது. பழித்தவை - பலவின்பால் வினையாலணையும பெயர் வறறு: வன்மையில் திரிபாகிய வல - பகுதி. று - ஒன்றன்பால விகுதி, வகரம றகரமானது சந்தி. செறுவொடு - ஒடு என்னும மூன்றனுருபு விசேடணப் பொருளது. சிறுமையுடன் செறுவும் உடனிகழுதலால், உடனிகழச்சிப் பொருளுமாம். இளமை, பேதைமை, சிறுமைகள் அவறறை யுடையார்க்குப் பண்பாகு பெயரென்றாயினும், இழிவுபற்றி உயர்திணையை அஃறிணையாகக் கூறிய தென்றாயினும் அமைத்துக்கொள்க. (14)

பொய்வழங்கி வாழும் பொறியறையும் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும்—ஊழினுல்
ஒட்டி வினைநலம் பார்ப்பானும் இம்மூவர்
நட்கப் படாஅ தவர்.

(இ-ள்.) பொய் - பொய்ச்சொற்களை, வழங்கி-பேசி, வாழும (அதனால் உயிர்) வாழுகின்ற, பொறி அறையும - திருவில்லாத வனும, கை - முறைமை. திரிந்து - வேறுபட்டு. தாழ்வு இடத்து - (ஒருவன்) தாழ்ந்த இடத்து, நேர் - (அவனைத் தனக்கு) நேராக, கருதும் - நினைக்கின்ற, தட்டையும் - மூங்கில்போலும் (புரை பட்ட) மனத்தவனும், ஊழினுல் - (ஒருவனைச் சேரவேண்டிய) முறையினால், ஒட்டி - சேர்ந்து, வினை - (அவன்) காரியத்திலே, நலம் - (தனக்குப்) பயன், பார்ப்பானும் - பார்க்கின்றவனும், இ மூவர் - ஆகிய இம் மூவரும், நட்க - (யாவராலும்) கட்புக் கொள்ள, படாஅதவர் - தகாதவர்; (எ-று.).

(க-ரை.) "பொய் சொல்லும் வாய்க்குப் போசனம் கிடையாது" என்றபடி பொய் சொல்பவனிடம் செல்வம் நிலையாது; தனக்கு மேம்பட்டவன் ஏதாவது காரணத்தால் தாழ்வடைகிற காலத்தும் அவனைத் தனக்கு மேலானவனாகவே கருதவேண்டும்; கட்புச் செய்யப்பட்டவனிடமிருந்து தனக்கு என்ன பயனுண்டா மென்று எதிர்பார்த்தல் தகாதது.

பொறி - இலக்குமி. இங்குச் செல்வத்தைக் குறித்தது. அறை - அறுதலையுடையவன், ஐ - கருத்தாப் பொருள் விகுதி. இனிப் பொறி அறை என்பதற்கு அறிவற்றவன் என்றும் பொருள கூறலாம். கை - ஒழுக்கம். தட்டை - மூங்கில்; மேலோரை வணங்காமையால் தட்டை என அஃறிணைப் பொருளாகக் கூறப்பட்டது; உவமையாகுபெயர். ஊழ் - முறைமை. நட்கப்படாதவர் - வினையாலணையும் பெயர், கள - பகுதி, கு - சாரியை, ப் - சந்தி, படு - செயப்பாட்டு வினைப்பொருள் விகுதி. உகரக்கேடும், ளகரத்திரிபும் சந்தி. நட்கப்படு என்ற பகுதியுடன் ஆ - எதிர்மறை விகுதி, த் - விரித்தல் விகாரம், அ - சாரியை, ப்-சந்தி, அர் - பலர்பால் விகுதி. பொறியறை, தட்டை என்ற இரண்டும் உயர்திணைச் சிறப்புப் பெயராகிய பார்ப்பான் என்ப தொடு விரவிச் சிறப்பினால் உயர்திணை முடிபேற்றன. படாஅதவர்-இசைநிறை அளபெடை. (15)

மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்ப்
பெண்ணினுள் கற்புடையாள் பெற்றானும் — உண்ணுநீர்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா உடம்பெய்தி னர்.

(இ-ள்.) மண்ணின்மேல்-மண்ணுலகத்தில், வான்-பெரிய, புகழ் - புகழை, நட்டானும்-நிலைநிறுத்தினவனும், பெண்ணினுள் பெண்களுள, மாசுஇல - குற்றமற்ற, சீர் - சிறப்புடைய, கற்பு உடையாள-கற்புடையவளை, பெறறானும்-(மனைவியாகப்) பெற்ற கணவனும், உண்ணும் நீர் - உண்ணப்படுகிற நீர், குறைவு இன்றி - குறைவுபடாதபடி, கூவல் - கிணறுகளை, தொட்டானும்-தோண்டி வைத்தவனும இ மூவர் - ஆகிய இம் மூவரும், சாவா-(எக்காலத்தும் இறவாத, உடம்பு-(புகழ்) உடலை, எய்தினர்-பெற்றவராவர்; (எ-று.)

(க-ரை.) உலகத்தில் 'ஈதல் இசைபட வாழ்தல்' என்ற பொய்யாமொழிக் கிணங்க, இரப்பவர்க்கு ஈந்து சிறந்த புகழை நாட்டியவனும், சிறந்த கற்புடை மனைவியைப் பெற்றவனும்,

நீரருத கிணறு முதலியவறறைத் தோண்டிவைத்தவனும், இறந்தும் இறவாத புகழுடம்பைப் பெற்றவராவர்.

மண்-கருவி யாகுபெயர். நட்டான், தொட்டான், பெற்றான் என்பவை கடு, தொடு, பெறு என்ற வினைப் பகுதியடியாகப் பிறந்த வினையாலணையும் பெயர்கள். பெண் - சாதியொருமை. சீர் கற்பு - சீரும் கற்பும எனக் கொள்ளுமிடத்து எண்ணுமமை தொக்கது கற்புடையாட் பெற்றான் - உயர்திணைப் பெயராயினும் இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலால், ளகரம் டகரமாகத் திரிந்தது. கூவல - கூவம என்பதன் போலி. பூத உடம்பு அழிந்தும் அதனாலாய புகழுடம்பு அழியாதிருத்தலால் சாவா வுடம்பு எனவும், அம் மூவரும் என்றும் உள்ளார்போல விளங்குதலின் உடம்பு எனவும் கூறினர். (16)

மூப்பின்கண் நன்மைக் ககன்ருனும் கற்புடையாள்
பூப்பின்கண் சாராத் தலைமகனும்—வாய்ப்பகையுள்
சொல்வென்றி வேண்டும் இலிங்கியும் இம்மூவர்
கல்விப் புணைகைவிட் டார்.

(இ-ள்.) மூப்பின்கண்-மூப்பு வந்த இடத்தும், நன்மைக்குறவறத்துக்கு, அகன்ருனும - (அஞ்சி) நீங்கினவனும், கற்பு உடையாள்-கற்புடைய மனைவியை, பூப்பின்கண்-பூத்து நீராடியபின், சாரா—மருவாத, தலைமகனும்-கணவனும், வாய்ப்பகையுள் - (சோர்வாலுண்டாகின்ற) வாய்மொழிப் பழி நான்கனுள், சொல் வென்றி - (தான் கூறிய) சொல்லினது வெறறியை, வேண்டும் - விரும்பித் துணிகின்ற, இலிங்கியும் - தவ வேடத்தானும், இ மூவர்-ஆகிய இம்மூவரும், கல்விப் புணை – கல்வியறிவாகிய தோணியை, கைவிட்டார்—முற்றும் நீங்கினவராவர்; (எ-று).

(க-ரை.) மூப்புப் பருவத்திலும் துறக்காதிருப்பவனும், மனைவியைச் சார்ந்திருக்கக் குறித்த காலத்தில் சேராத கணவனும், வீண் மொழியாடும் துறவியும், கல்வியறிவைக் கைவிட்டவராதலின் உய்வில்லர்.

மூப்பின்-மூப்பினும்: எல்லா இன்பங்களையும் நுகர்தற்கியலாமையால் உம்-இழிவு சிறப்பினது. மூப்பு - என்ற குறிப்பால் நன்மை துறவற மெனப்பட்டது. நன்மை - பண்பாகு பெயர். அகன்ருன் - அகல் பகுதி. பூப்பு - மகளிர் சூதகம். இது கண்ட முதல் மூன்று நாளும் சேராது நான்காம் நாள்முதல் பதினைரும் நாள்வரை பூப்புற்ற மனைவியைக் கணவன் சேர்ந்து வாழ்தலே

முறை என்பது உடலியல் நூலோர் கூற்று. "பூத்த காலைப் புணையிழை மனைவியை, நீராடிய பின் ஈராறு நாளும், கருவயிற் றுறுகால மாதலிற, பிரியப் பெருஅன் பரதலையிற பிரி வோன்," என்ற அகப்பொருள விளக்கம 31-வது சூத்திரப்படி நீராடியபின் பன்னிரண்டு நாளுங் கருப்படிய காலமாதலிற் பரத லையிற பிரிந்த தலைமகனும அப பன்னிரண்டு நாளும் தலைவி யைப் பிரிந்து உறைதலாகாது என்பது விளங்கும. இது, "பூப் பின் புறப்பா டீராறு நாளும் நீதகன றுறைதல அதகதா றன்றே, பரத்தையிற் பிரிந்த காலியான" என்று தொல்காப் பியனும், "தீண்டா நாள முநநாளும நோகநா ர, நீராடிய பின் ஈராறு நாளும இகவற்க என்பதே. போறிவளர் துவிவு," என்று ஆசாரக் கோவை யாசிரியா பெருவாயில முள்ளி யாரும் கூறியவறறினும வலியுறுததபபடும வாயபபகை-வாய் மொழிப் பகை; அவை, பொய், கடுஞ்சொல, குறளை, பயனில சொல என்ற நானகும. இவை தீமையைத தருவதால பகை யெனப்படும் வென்றி, மூப்பு - தொழிறபெயாகள, லிஙகி - இலிங்கி - இலிஙகம அணிநதவர் கலவி - காரணவாகுபெயா "வாய்ப்பின்கட் சாராத தலைமகனும" என்ற பாடஙகொணடு, பொருநதுங் காலததுச் சேராத கணவனும என்று பொருள கூறுதலும ஒன்று (17)

ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்
கிருதலையு மின்னுப் பிரிவு—முருவினை
யுள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியு மிம்மூன்றுங்
கள்வரி னஞ்சப் படும.

(இ-ள்.) ஒருதலையான் - உறுதியாக, வந்துறூஉம்-வந்தடை யும, மூப்பும் - கிழப்பருவமும, புணாநதாாக்கு - கட்டினாருக்கு இருதலையும் – (பிரியப்பட்டவரும் பிரிந்தவரும ஆகிய) இரண் டிடத்தும், இன்னுப் பிரிவும - துன்பதததைத் தருகின்ற பிரிவும, உருவினை - உடம்பை, உள் - உள்ளிடத்துளள தசை முதலிய வற்றை, உருக்கி - கரையச் செய்து, தின்னும - வருத்துகின்ற, பெரும் பிணியும் - (மருநது முதலியவற்றால்) தீராத நோயும், இ மூன்றும் - ஆகிய இம்மூன்றும், களவரின்-களவர்க்கு அஞ்சு வதுபோல், அஞ்சப்படும் - பயப்படும்; (எ - று.)

(க-ரை) கள்வருக்கு அஞ்சி எச்சரிக்கையா யிருப்பது போல உறுதியாக வரக்கூடிய மூப்பு, நண்பரிருவர்க்கும் விருப்ப

மில்லாத பிரிவு, உரு அழிக்கும் நோய் இம்மூன்றுக்கும் அஞ்சிச செய்யவேண்டுவன செய்து எச்சரிக்கையா யிருக்கவேண்டும்.

ஒரு தலையான் என்பதற்குக் கணவன் மனைவி என்னும் இருவருள ஒருவரிடதது எனலுமாம். பருவம முதலிய ஒதத தலை மகனும் தலைமகளும மணததல் மரபாதலால் ஒரு தலையான் எனப் பொதுப்படக் கூறப்பட்டது. இருதலை : தலை - இடம, இது தலைமகன தலைமகள என்ற இருவரையுங குறிக்கும்; பன மையில ஒருமை வநத பால் வழுவமைதி. இன்ஞை பிரிவு - இன்ஞைமையைத தரும பிரிவு எனின் இரணடாம வேறறுமைத் தொகை; இன்ஞைமையாகிய பிரிவு - பண்புத் தொகை உரு - பண்பாருபெயர். உள - இடவாருபெயர். உருக்கி உருக்கு என் னும பிறவினைப் பகுதியடியாகப் பிறந்த வினையெச்சம பெரும பிணி-பெருமையாகிய பிணி - பண்புததொகை. பெருமையாவது மருந்துண்ணல, மந்திரிததல், மணி முதலியன தானஞ் செய்தல் இவைகளால தணியாமை. களவரின் - இன் ஐநதனுருபு, ஒப்புப் பொருள். அஞ்சப்படுமை - ஒரு சொல நீர்மைத்து. (18)

கொல்யானைக் கோடுங் குணமிலியு மெல்லிற்
பிறன்கடை நின்ருழுகு வானு—மறந்தெரியா
தாடும்பாம பாட்டு மறிவிலியு மிம்மூவர்
நாடுங்காற் றூங்கு பவர்.

(இ-ள.) கொல யானைக்கு - கொலை செய்வதாகிய (மத) யானைக்கு, ஓடுமை - (பின்வாங்கி) ஓடுகின்ற, குணம் இலியும் - குணமஇல்லாத வீரனும, எல்லில - இரவிலே, பிறன் கடை - பிறன் வீட்டுவாயிலில் (அவன் மனையாளை விரும்பி), நின்று - (தனக்கு வாய்ப்பான சமயம பார்த்து) நின்று, ஒழுகுவானும - நடப்பானும, ஆடும்பாமபு - ஆடுந தொழிலுள்ள பாமபை, மறம்- (கன்றி செய்தார்க்கும் தீமையைச் செய்கிற) கொடுமையை, தெரியாது - தெரியாமல், ஆட்டுமை - ஆட்டுகின்ற, அறிவிலியும் - அறிவில்லாதவனும், இ மூவா - இம்மூவரும், காடுங்கால்-ஆராயு மிடத்து, தூங்குபவர் - (பழி முதலியவற்றினின்றும்) விரைத வில்லாதவா; (எ-று.)

(கா—ரை.) போர் யானைக்கு அஞ்சிப் பின்வாங்கும் வீரனும், அயலான் மனைவியை விரும்பித் தீமையா யொழுகுபவனும், கச்சுப்பாம்பை ஆட்டுகின்றவனும் விரைவில் கெடுபவராவர்.

உணவு முதலியன கொடுத்துக் காத்த அரசனுக்குப் போர வந்த காலத்துப் போர்க்களத்தில் யானைக்கு அஞ்சி ஓடுதலால் குணமிலி எனப்பட்டான். யானைக்கு ஓடும குணமிலி என்பதற்கு யானைக்கு எதிரில் ஓடுகின்ற அறிவில்லாதவனுக்கு என்றுமாம இலி-இல் எதிர்மறைப் பண்படிப் பகுதி; இ வினைமுதற் பொருள விகுதி. எல் - இரவு. பிறன்கடை நின்றொழுகுவான என்றது இடக்கரடக்கல், நாடுங்கால - கால் ஈறறு நிகழகால வினையெச் சம. " கொம்புளதற் கைகந்து குதிரைக்குப் பத்துமுழம, வெமபு கரிக் காயிரந்தான் வேண்டுமே " என்றபடி வெமபுகரிமுன் செலலாதிருத்தலி அறியாமையின் குணமிலி என்று ரைனறு மாம். " தூங்காமை கல்வி துணிவுடைமை " என்ற நிருக்குற ளில தூங்காமை என்பதற்கு விரைவுடைமை என்று பரிமே லழகா உரை விரித்திருத்தலின், தூஙகுதல விலை தலிலலாமை என்று கொள்ளப்பட்டது. தூங்குபவர் என்பதறகு இறப்பவர் என்றும் பொருளகூறுவர். (19)

ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கொளலும் — கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலும் மிம்மூன்றும்
எல்லார்க்கு மின்ன தன.

(இ-ள.) பிறன் கண்-பிறலெருவ லிடத துளள பொருளுகளு, ஆசைப்படுதலும் - விருப்பத்தைச் செய்தலும, பாசம - தன சுறறதாரா, பசிப்ப - பசித்திருக்க, மடியை - சோமபலி, கொள லும - கொளளுதலும், கதித்து - வெறுத்து, ஒருவன்-ஒருவனை, கல்லான் என்று - கற்றிலன் என்று, எளளப்படுதலும - இகழப் படுதலும், இ மூன்றும் - ஆகிய இம மூன்றும, எலலார்க்கும - யாவர்க்கும், இன்னாதன - இன்பந் தராதவைகளாம; (எ-று.)

(க-ரை.) அடுததவர் பொருளுக்கு ஆசைப்படுவதும, மக்கள முதலிய கிளைஞர் உணவின்றி வருந்த யாதொரு முயறசியு மின்றிச் சுமமா இருப்பதும், கல்லாதவன் என்றிகழபபடுவதும இன்பந் தராதவை என்றபடி.

பிறன் என்பது அவன் பொருளுக்கு ஆகுபெயர். இனி, பிறன்கண் ஆசைப்படுதலும் என்பதற்குத் தீயோனிடத்துச்செல் வம உண்டாதலும் என்றுங்கூறலாம. இங்கு நலலோனுகு மறு தலிப்பட்டவனைப் பிறன் என்றார். பாசம - கயிற்றின் பெய

ராகிய இஃது ஒருவினை நீங்கவொட்டாமற் கட்டுப்படுத்துகிறதென்னும ஒப்புமையால ஆசைக்கு ஆயிற்று. பின்பு ஆசைக்கு இடமாகிய சுற்றதற்கு ஆகுபெயர் கதித்து - கதம் என்னும பெயரடியாகப் பிறந்த விணையெச்சம, கதி - பகுதி கதித்து என்பதற்குப் பெருத்து வளர்ந்து எனவும் பொருள கூறுவர் ஒருவன் - கருத்தாப் பொருளில வந்த மூன்றும வேறறுமைத தொகை இன்னதன - இனிமை என்னும பண்படியாகப் பிறந்த எதிர்மறைப் பலவின்பால் விணைமுற்று. (20)

வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி தல்லவை கற்றல் இம்மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்.

(இ-ள) வருவாயுள-தமககு வரும பொருளகளிலே, கால-கான்கிலொரு பங்கு, வழங்கி - (அறத்திற) செலவு செய்து, வாழ்தல - வாழ்தலும, செரு - போரினிடத்து, வாய்ப்ப - (வெற்றி) கிடைப்ப, செய்தவை - (தான்) செய்த செயலகளை, நாடா-ஆராயாதபடி, சிறப்பு உடைமை-(யாவாக்கும விளைவைத் தோன்றும) சிறப்புடையதையும, எய்த - நிரம்ப, பல நாடி - பலவற்றையும ஆராய்ந்து, நல்லவை-(அவற்றுள) நல்லவைகளை, கற்றல்-படிததலும, இ மூன்றும - ஆகிய இம்மூன்றும, நலம்-நற்குண நறசெய்கைகளால, மாட்சி - பெருமைபெற்ற, நல்லவர் - நலலவருடைய, கோள் - கொளகைகளாம; (எ-று.)

(க-ரை.) வரவுக்குத் தகுந்தபடி அறஞ்செய்தலும, போரில் வெற்றி பெறுதலும, நல்ல பொருளகளைக் கற்றலும் நலம என்றபடி.

வருவாய் வரும் வழியையுடைய பொருள், விணைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. கால்-எண்ணலளவையாகுபெயர். செருவாய்ப்ப என்ற குறிப்பால் செய்தவை என்பது வெற்றிச் செய்கை என்பதன் மேலாயிற்று. வாய்ப்ப - நிகழ்காலத்தில வந்த செயவெனெச்சம். வாய்-பகுதி, ப் - எழுத்துப்பேறு, ப் - சந்தி; அ - விகுதி; வழக்கத்தில் வாய்க்க என வரும். உடைமை - தொழிற்பெயர். கோள் - கோட்பாடு, தொழிலாகு பெயர். ஒருவன் தன் தேட்டத்திற் பாதி தன்வகைச்

செலவுக்கும், காற்கூறு அறத்திற்கும், மற்றிருரு கால் சேர்த்து வைப்பதறகும பயன்படுத்த வேண்டுமென்பது நூற் கொளகை. (21)

பற்றென்னும் பாசத் தனையும் பலவழியும்
பற்றரு தோடும் அவாத்தேருந்—தெற்றெனப்
பொய்த்துரை யென்னும் பகையிருளும் இம்மூன்
வித்தற வீடும் பிறப்பு. [றும்

(இ-ள.) பறறு என்னும-பற்று என்று சொலலப்படுகின்ற, பாசத்தனையும - கயிறறு விலங்கும, பலவழியும-பல பொருள களிலும், பறறு - பிடிப்பு, அருது - நீகாமல, ஓடும – ஓடுகின்ற, அவாத தேரும - விருப்பமாகிய தேரும, தெறறென-தெளிவாக, பொய்த்து உரை என்னும - பிறர்க்குப் பொய்மரை உரைப்ப தாகிய சொல என்று சொலலப்படும, பகை இருளும-(அறிவுக் குப) பகையாகிய இருளும், இ மூன்றும் - ஆகிய இமமூன்றும, வித்தறற - தனக்குக் காரணமாகிய அவிச்சை கெட, பிறப்பு வீடும - பிறப்பு அழியும ; (எ-று.)

(க-ரை.) பற்றையும, அவாவையும், பொய்யையும நீக்கி லை வீடடையலாம

ஒன்றின்மேற பறறிருநதால அதை ஒழிதது அகனகு செல் வது கூடாமையால பாசததனை யென்றும, ஒன்றின்மேல ஆசை மேலே மேலே ூடிக்கொண்டிருததலால அவாத தேர் என்றும் கூறினர். "எலலா விளக்கும விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு" என்ற குறளுககு இணங்கப் பொய்யாமை விளக்கம் எனப்படுதலால, பொய்யுரை இருள் எனப்பட்டது. பறறு - அகப்பறறு புறப்பறறு என்றிரு வகைத்து. கான் என்னும உணர்ச்சியுடனிருப்பது அகப்பற்று, எனது என்னும் உணர்ச்சியுடனிருப்பது புறப்பறறு. பறறு - பறறுதல, முதனிலைத் தொழிற்பெயர் பொய்தது - பொய்ம்மை என்னும் பண்படியாகப் பிறந்த அஃறிணை யொன்றன்பாற பெயர்ச்சொல். பொய்த்துரை - இருபெயரொட்டுப் பண்புத தொகை. தெற்றென - செயவெனெச்சம். விதது-விதை, முனை. "அவா என்ப எல்லாவுயிர்க்குமளஞ் ஞான்றும், தவாஅப் பிறப்பீ னும வித்து" என்றார் வள்ளுவனரும் இதற்கு உடமபு நீங்கிப் போங்காலத்து அடுத்த விணையும், அது காட்டும கதி நிமித்தங் களும், அக் கதிக்கண் அவாவும் உயிரின்கண் மூறையே வந்து நிப்ப, அறிவை மோகம் மறைப்ப அவ் வுயிரை அவ்வவா அக்

கதிக்கட் கொண்டு செல்லுமாதலால், அதனைப் பிறப்பினும் வித்து என்று பரிமேலழகர் உரை விரித்திருப்பது கருதத்தக்கது. வீடும் - அழியும ; வீட்டுதல் - அழித்தல், பிறவினை. (22)

தானங் கொடுக்குந் தகைமையு மானத்தார்
குற்றங் கடிந்த வொழுக்கமுந்—தெற்றெனப்
பல்பொரு ணீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

(இ-ள்.) தானம - தானத்தை, கொடுக்கும்-கொடுக்கின்ற தகைமையும்-பெருஞ செய்கையும், மானத்தார்-பழிக்கு நாணுத லுடையாரது, குற்றமை கடிந்த - குற்றத்தை நீக்கிய, ஒழுக்கமும் - நலலொழுக்கமும், தெற்றென - தெளிய (உண்மையாக), பல பொருள்-பல விடயங்களினின்றும், நீங்கிய-ஒழிந்த, சிந்தையும்-எண்ணமும், இ மூன்றும்-ஆகிய இம் மூன்றும, நல்வினை-அறத்தின் பயனை, ஆர்க்கும் - (நீங்காதபடி) கட்டுகின்ற, கயிறு - கயிறும ; (எ-று)

(க-ரை) தானங் கொடுத்தலாலும், மானங் கெடாத நல்லொழுக்கத்தாலும, பொருள் மேலே சிந்தனை யொழிந்திருப்பதாலும, நலவினைகளே மேன்மேலும் செய்யலாம.

தானம-அறநெறியால் வந்தபொருளைத் தக்கார்க்கு உவகையோடுங கொடுத்தல. தகைமை - பண்புப் பெயர. பொருள் நீங்கிய - பொருளின் நீங்கிய என்று ஐந்தனுருபு விரிக்க. வினையென்னும் காரணப் பெயர் தன் காரியமாகிய பயன்மேல் நின்றது. ஆர்க்கும - எதிர்காலப் பெயரெச்சம்; ஆர் - பகுதி, உம்-விகுதி. கு - சாரியை, க்-சந்தி குற்றம் - பண்புப்பெயர், கடிந்த-பெயரெச்சம்; கடி என்னும் உரிச்சொல பகுதி. (23)

காண்டகு மென்றோட் கணிகைவா யின்சொல்லுந்
தூண்டிலின் உட்பொதிந்த தேரையு—மாண்டகீர்க்
காழ்த்த பகைவர் வணக்கமும் இம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கும் அளறு.

(இ-ள்.) காண் தகு - காணுதற்குத் தக்க, மென்தோள் - மெல்லிய தோள்களையுடைய, கணிகை - வேசையின், வாய் - வாயிற் பிறக்கின்ற, இன்சொல்லும்-இனிய மொழியும், தூண்டிலினுள் – தூண்டிலினிடத்து, பொதிந்த - (மீனுக்கு இரையாக

அதன் மூள்னை மறைத்து) வைக்கப்பட்ட, தேரையுடை தவளையும், காழ்த்த-வயிரம்பறறிய, பகைவர்-பகைவர்களுடைய, மாண்ட-மாட்சிமைப்பட்ட, சீர்-சிரையுடைய, வணக்கமும்-வணக்கமும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும், ஆழ்ச்சிப் படுக்கும் . (உயிர் கனை தன்னுளளே) அழுநதப்பணனுகின்ற, அளறு - நரகம் (போல்வனவாம்); (எ-று.)

(க-ரை.) வேசியர் பேச்சுமை, பகைவர் வணக்கமும், வெளிக்கு நலமபோ லிருந்து உளளே கவடு கொண்டிருததலால் நலமல்ல ; ஆதலால, அவற்றை நமபுதல தூண்டிலில வைத்த தவளையை விழுங்கப்போய், மீன் அகப்பட்டுக்கொண்டு கெடி வதுபோல கெடுதியே விளைக்கும

காண்தகு – காண்டகு, காண்-முதனிலைத தொழிற்பெயர, நான்கனுருபு தொகைதாகக்கொண்டு, காணுதறகு என்று பொருள் சொல்லப்பட்டது கணிகை - கணிக்கின்ற தன்மையி லிருப்பவள் அதாவது "செக்கூர்நது கொண்டாருஞ் சோநத பொருளுடையா, அக்காரம அன்னர் அவர்கு" என்ற நாலடிச் செய்யுட்படி எவன் மிக்க பொருள தருபவனென்று சிந்திக்கின்றவள் என்பதாம். வாய் என்று வேண்டாது கூறி யது, பொருளுடையாரிடத்துக் கடுஞ்சொல் பயிலாமையைக் குறிக்க வேண்டியாம். தூண்டில - தொழிலாகுபெயர் மீன்கனை விரும்பத் தூண்டுவது. இனி இல் கருத்தாப பொருள விருதி யாகவுங் குறிக்கலாம். ஆழச்சி - ஆழுதல ; தொழிற்பெயர். காழ்த்த - காழ என்னும பெயரடியாகப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். நரகம் போலுதலாவது அழிதறகேதுவாய துன் பம் தருவது. (24)

செருக்கினுல் வாழுஞ் சிறியவனும் பைத்தகன்ற
அல்குல் விலைபகரும் ஆய்தொடியு—நல்லவர்க்கு
வைத்த வறப்புறங் கொன்றுனும் இம்மூவர்
கைத்துண்ணூர் கற்றறிந் தார்.

(இ-ள.) செருக்கினுல் - (பெரியோரை மதியாமல்) இறுமாப் புடன், வாழும் - வாழ்கின்ற, சிறியவனும் - அறிவில்லாதவனும், பைத்து-படத்தைப் போன்றதாய், அகன்ற - விசாலமான, அல் குல் - நிதம்பத்தினை, விலைபகரும்-விற்கும், ஆய் தொடியும் - ஆராய்ந்தெடுத்த வனையலணிந்த வேசையும், நல்லவர்க்கு-துற வறத்தார்க்கு, வைத்த-அமைத்த, அறப்புறம் - அறச்சாலையை, கொன்றுனும் - அழித்தவனும், இ மூவர்-ஆகிய இம் மூவருடைய,

கைத்து - பொருளை, உண்ணர் - புசியார், கற்று - (அற நூல்களைப்) படித்து, அறிந்தார் - (அதன் பொருளை உள்ளபடி) அறிந்தவர்; (எ-று.)

(க-ரை) மதிக்கத் தக்க பெரியாரை மதிக்காதவன், விலை மாது, நலலவர் பொருட்டு ஏற்படுததப்பெற்ற அறச்சாலையை அழிததவன், ஆகிய இமமூவரிடமும அறிஞர் உணவுகொளளல் ஆகாது என்பது.

செருக்கு - மதம, செலவக் களிப்பு; ஆல் - மூன்றன் உருபு, உடனிகழ்ச்சிப் பொருள். சிறியவன் என்பதில சிறுமை அறிவின்மேல நின்றது கொலலல-அழித்தல, "இன்றும வருவது கொலலோ நெருகலும, கொன்றதுபோலும் நிரப்பு" என்ற திருகுருறள் 1048-ல கொன்றது எனபதறகு இன்னதவறறைச் செய்தல என்று பொருள கூறபபட்டுளளது. பைதது-பையை யுடையது, பை-படம. கைத்து-கையிலுளளது; ஒன்றனபாற படாக்கை விளையாலணையும பெயர், கை - பகுதி, த்-சாரிநி, து - ஒன்றனபால விகுதி "வஞ்சததாற பலகின்பங் காட்டும பரத தையும" என்ற பாடங்கொளவதும உண்டு. (25)

ஒல்வ தறியும விருந்தினரு மாருயிரைக்
கொல்வ திடைநீக்கி வாழ்வாரும்—வல்லிதிற்
சீல மினிதுடைய வாசானும் இம்மூவர்
ஞால மெனப்படு வார்

(இ-ள.) ஒலவது - (தனக்குச்) செய்யக்கூடியதை, அறியும - அறியவலல, விருந்தினனும - அதிதியும, ஆ உயிரை - அருமை யாகிய உயிரை, கொலவது-(ஒருவன்) கொலலுந தொழிலை, இடை நீககி - கொலவோனுக்கும கொலலப்படுவதறகும நடுவே (சென்று) விலக்கி, வாழவானும் - வாழகின்றவனும, வல்லிதின்-(மனததின்) உறுதியினால, இனிது சீலம - (உயிர்க்கு) நன்மை யைத தருவதாகிய ஒழுக்கததை, உடைய ஆசானும - உடைய ஆசிரியனும, இ மூவா - ஆகிய இம்மூவரும், ஞாலம் எனப்படுவார் - உயர்ந்தோர் என்று சிறபபித்துச் சொல்லப்படுவார்; (எ - று.)

(க-ரை.) பெற்றது கொண்டு மகிழ்ம அதிதியும்; கொலையை நீக்கி வாழபவனும், உயிரினும் இனிய ஒழுக்கத்திற் சிறந்த ஆசிரியனும, உயர்ந்தோர் என்று சொல்லபபடுவார் என்பது.

ஒல்வது-தொழிலாகுபெயர். விருந்து - புதுமை. இப் பண்பு ஆகுபெயராய் விருந்தினனை யுணர்த்தும். விருந்தினன்: விருந்து -

பகுதி, இன்-சாரியை, அன் - ஆண்பால் விகுதி. விருந்து - அறி விருந்து அறியாவிருந்து என்றிரு வகைப்படும். முன் அறிந்திருந் தமையால் குறித்து வரும் விருந்து அறிவிருந்து; அறிந்திரா மையால் குறியாமல வரும விருந்து, அறியாவிருந்து. ஆருயிர் - ஆர் உயிர்; ஆர் - அருமை. ஆருயிர் - பண்புதொகை. அரு, இரு, பெரு முதலிய பண்புகள வருமொழி முதலில் உயிர் வந் தால் முதல் நீளப்பெறும். கொலவது - எதிர்காலத் தொழிற் பெயர். வலலிது - வலிது என்பதன் விரிதலல விகாரம; குறிப்பு வினையாலணையும் பெயர். ஆசான - ஆசாரியன், ஞாலம் - உலகு. இங்கு ஆகுபெயராய் உலகத்து உயர்நதோரை உணர்த்தியது (26)

உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றுண்மை குன்றுமை இம்மூன்றும்
நாஉய மென்பார் தொழில

(இ-ள.) உணபொழுது - உண்ணுதறகுரிய காலததில, நீர ஆடி - குளிதது, உண்டலும - உணணுதலும, என் பெறினும - (சாட்சியாகுமபொழுது) எவவளவு பெருமபயனை அடைவதா யிருநதாலும, பால-ஒரு பகுதி, பறறி-சாரநது, சொல்லா விடுத லும - பொய்க்கரி சொலலாமலிருததலும, தோல வறறி - (உண வின்மையால) உடமபு இளைத்து, சாயினும - அழிவதாயிருநதா லும், சான்று ஆண்மை - பல நறகுணஙகளால நிறைநது அவறறை ஆளுதல, குன்றுமை - குறையாமையும, இ மூன்றும - இவை மூன்றும, நாஉயம - (மனம் மொழி மெய்களால) குறற மறறவாகளாயிருகின்றோம, என்பார் - என்று கருதுவோர், தொழில-செயலகளாம; (எ-று)

(க-ரை.) நீராடி யுண்பதும, பொய்க்கரி புகலாமலிருப்ப தும், உயிர நீங்கினும சான்றுண்மை நீங்காதிருப்பதும நாயவா செயல்கள.

விதித்த காலங்களில நீராடக் கூடாமற் போனாலும் உண் ணும்பொழுதாயினும் நீராடுதல இன்றியமையாத தென்பது. என் - எவன் என்னும வினுப்பெயர. சான்று-அறிவின் நிறைவு; சால் என்னும் உரிச்சொல் லடியாகப் பிறநத பெயர்; று-விகுதி ஆண்மை-ஆளுதல்; தொழிற்பெயர். தோல-உடம்பு சினையாகு பெயர். வற்றி - வறுமை என்னும பண்புப்பகுதி ஈறு செட்டுப் பகுதி இரட்டித்து இசை விகுதி பெற்றது. நாஉயம - உயிரள பெடை; இசை நிறைத்தற்கண் வந்தது. சான்றுண்மையாவது-

பல குணங்களாலும் நிறைந்து அவற்றையாடற் றன்மை. 'ஊழி பெயரினுந் தாம பெயரார் சான்றாண்மைக், காழி யெனப்படு வார்,' என்ற பொய்யாமொழிக் கிணங்கத் தோல்வற்றிச் சாயினும என்றார் பாலை - பக்கம். வள்ளுவரும் " சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற், கோடாமை சான் றோர்க் கணி " என்று கூறியுள்ளார். இதில் ஒருபாற் கோடாமை யாவது - விரு விடைகளாற் கேட்டவற்றை மறையாது பகை, நொதுமல், நட்பென்னும் மூன்று திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதல். நீராந்நிலை அழுக்கு முதலிய உடம்பின் குற்றம் நீங்குதலும், பாலபறறிச் சொல்லாமையினால பொய் முதலிய வாய்க்குறறம நீங்குதலும், சான்றாண்மை குன்றாமையினால் வஞ் சனை முதலிய மனக்குறறம நீங்குதலும் சொல்லப்பட்டன. (27)

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானுங்—கல்வி
செவிக்குற்ற மார்த்திருப் பானும் இம்மூவர்
உமிக்குத்திக் கைவருந்து வார்.

(இ ள) வெல்வது - சொல்வென்றியை, வேண்டி - விரும்பி வெகுண்டு உரைக்கும - (உண்மைப்பொருளை யுரைப்போரைச்) சினந்து சொல்லுகின்ற, நோன்பு இலியும - தவம் இல்லாதவ னும, (தீயோனும,) இலாதது - (தனக்கு) கிடைத்தற்கரிய பொருளை, காமுற்று - விரும்பி, இருப்பானும் - இருக்கின்ற வனும, கல்வி - பிறரா கற்ற கலவிப் பொருளில், செவிக குற்றம் - செவியினால குறறத்தை, ஆர்த்திருப்பானும் - ஆராய்ந்து பார்க் கின்றவனும, இ மூவரு ஆகிய இமமூவரும், உமி குத்தி - உமி யைக் குத்தி, கை வருந்துவார் - கைவருந்துவோரை ஒப்பர்; (எ—று)

(க - ரை) வெகுண்ட பேச்சால் பிறரை வெல்லக் கருது தலும் கிட்டாததைப் பெற முயலுதலும, ஒருவன் கல்வியின் தன்மையை ஆராயாது குற்றம் கூறுதலும் உமியைக் குத்து வா போல் துன்பத்தையும் பயனின்மையையும கொடுக்கும் என்பது.

வெல்வது - எதிர்காலத் தொழிற் பெயர். வெல் - பகுதி, வ் - இடைநிலை, அ - சாரியை, து - விகுதி. "வெல்வது வேண் டின் வெகுளி விடல," என்பது சான் மணிக்கடிகை. வெகுண்டு - இறக்தகால வினையெச்சம். வெகுள் - பகுதி, ட் - இடைநிலை, உ - விகுதி, ளகரம ணகரமானது விகாரம். நோன்பு - உயிர்க்

குறுகண் செய்யாமை. "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறு கண் செய்யாமை, அற்றே தவத்திற்குரு," என்றார் வள்ளுவரும். இலி - இல்லாதவன், உமிக் குத்தி - இரண்டாம் வேற்றுமைத் தொகை, ஒப்பர் என்னும் சொல எஞ்சி நின்றது. (28)

பெண்விழைந்து பின்செலினும் தன்செலவிற் குன்றுமை
கண்விழைந்து கையுறினு நாதல் பொருட்கின்மை
மண்விழைந்து வாழ்நாண் மதியாமை யிம்மூன்று
நுண்விழைந்த நூலவர் நோக்கு.

(இ - ள) பெண் - ஒரு பெண், விழைந்தது – விரும்பி, பின் செலினும் - பின் சென்றாலும, தன் செலவில்-தன்னடக்கையில, குன்றுமை - குறையாமையும, கண் விழைந்தது - (தன்) இடக் தேடி, கை உறினும் - வந்து கைப்பட்டாலும, பொருட்கு (பிறன்) பொருளிடத்தே, காதல் இன்மை - ஆசை யில்லாதிருத்தலும, மண் விழைந்து - (மனை முதலிய) நிலத்தை விரும்பி, வாழ்நாள – (அறப்பயனை யடையாமல) வாழ்கின்ற காலத்தை, மதியாமை - நல்லதென எண்ணாமையும், இ மூன்றும - ஆகிய இம்மூன்றும, நுண் - நுட்பமான, நூல - நூல்களை, விழைந்தவர் - விரும்பிக் கற்றுணர்ந்தவருடைய, நோக்கு - கருத்தாம்; (எ - று)

(க - ரை-) முறைபிறழ்ந்து தன்னைச் சேர விரும்பும் பெண் ணைச் சேராமையும, பிறன் பொருள வலியவந்தெய்தினும கைக் கொளளாமையும, மண்ணாளுதலில் விரும்பிய வாழ்நாளை மதியா மையும் நூலுணர்வுடையார் கருத்து.

விழைந்தது - உகரவீற்று விணையெச்சம. பின் - இடைச் சொல். செலின் - செலவின் என்பது லகரம தொக்கது செல வில்; செலவு - தொழிற்பெயர். இல் - ஐந்தாம வேற்றுமை, நீக்கப் பொருள்; ஏழாம் வேற்றுமையுமாம. குன்றுமை - எதிர் மறைத் தொழிற்பெயர். குன்று - பகுதி. பின்செலினும், கையுறி னும - உம், எதிரமறை பொருளகளின் நுண்மையை அப் பொருள்களை யுணர்த்தும் நூலின்மே லேற்றி நுண்ணூல் என் றார் விழைந்த நூலவா என்பதை நூல் விழைந்தவர் எனப் பின் மூன்றை நிறுத்தி விகுதி பிரித்துக் கூட்டுக. பொருட்கு என்னும் நான்கனுருபு ஏழாவதனிடப் பொருளில் வந்தது. நோக்கு - முத னிலைத் தொழிற் பெயர். கருவிப் பொருள் விகுதி புணர்ந்து கெட்ட பெயர் எனலுமாம். (29)

தன்னச்சிச் சென்ருரை யெள்ளா வொருவனு
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்று மழுக்காறு இகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

(இ - ள்.) தன் நச்சி - தன்னை விரும்பி, சென்ருரை - அடைந்தவரை, எள்ளா ஒருவனும் - இகழாத ஒருவனும், மன்னிய - மிகுந்த, செல்வத்து - செலவம வந்த காலத்தில், பொச்சாப்பு - மறதியை, நீததானும் - நீக்கினவனும், என்றும - பிற ரிடத்துப் பகைமை யுண்டாகிய காலத்திலும, அழுக்காறு - அவ ரது செலவங் கண்ட இடத்து மகிழாமையை, இகந்தானும - (கடந்தவனும) நீகினவனும, இ மூவர் - ஆகிய இம மூவரும, நின்ற புகழ உடையார் - அழியாப் புகழை புடையாா , (எ-று)

(க - ரை) தன்னை மதித்து வந்தவரை இகழாமல ஏற்றுக் கொளவதும, செலவம சிறந்த காலத்தும நண்பர் முதலியவா களை மறவாமல போறறுவதும, பிறன் வாழுவக்கு மகிழுவதும் புகழுக்குக் காரணமானவை என்பது.

தன்நசசி - இரண்டாம வேற்றுமைத்தொகை நச்சி : நச்சு- பகுதி இ - விணையெச்ச விகுதி. எளளா – எளளாத, ாறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்; மன்னிய - மன் என்னும இடைச் சொல்லடியாகப் பிறந்த இறந்தகாலப் பெயரெசசம. பொச் சாப்பு - பொச்சா - பகுதி, பு - தொழிறபெயர் விகுதி; ப் - சாரதி நீத்தான் - விணையாலணையும் பெயர்; நீ - பகுதி. அழுக்காறு - முதனிலை திரிந்த தொழிறபெயர்; அழுக்கறு - பகுதி. இகத்தல - கடத்தல், இக - பகுதி நின்ற - நிலைபெற்ற. (30)

பல்லவையுள் நல்லவை கற்றலும் பாத்துண்டாங்(கு)
இல்லற முட்டா தியற்றலும்—வல்லிதின்
தானெ றெருபொரு ளாக்கலும் இம்மூன்றுங்
கேள்வியு ளெல்லாந் தலை.

(இ - ள்.) பல்லவையுள - பல நூல்களிலும், நல்லவை - நலல நூற் பொருள்களை, கறறலும் - கற்றுணாதலும. பாத்து - (பிரமசாரி முதலிய பதின்மர்க்குப்) பகுத்துக்கொடுத்து, உண்டு - (தானும்) உண்டு, ஆகு - அந்நிலையில், இல்லறம் - இல்லாளோடு கூடிச் செய்யும அறமானது, முட்டாது –குறைவுபடாமல்-இயற்

றலும் - செய்தலும், வல்லினின் - ஊக்கத்தோடு, தாளின்-முயறசியால், ஒரு பொருள் - செப்தற்கரிய செய்கையை, ஆக்கலும் - செய்து முடித்தலும், இ மூன்றும் - இந்த மூன்றும், கேளவியுள எல்லாம் - கல்விகளெல்லாவற்றிலும், தலை - சிறந்த கல்விபாம், (எ - று)

(க - ரை) கற்கத் தக்கவற்றைக் கற்றலும், இல்லறத்தை மூட்டினறிச செய்தலும், ஊக்கததோடு முயற்சியால் அருஞ் செயல ஆறறலும தலைசிறநதன.

பலலவை - பல அவை, சபையுமாம முட்டாது - எதிர்மறை வினை யெச்சம்; முட்டு - பகுதி. வலிது - வலிமை என்னும் பண்படியாகப் பிறநத ஒன்றன்பால விணையாலணையும பெயர். தாளின்; இன் உருபு - ஐநதாம வேற்றுமை, ஏதுப்பொருள். ஆக்கல - அல ஈறறுக தொழிறபெயர கேள்வி - தொழிற பெயர், தொழிலாகு பெயருமாம் கேளவியுளெலலாம : உருபு மாறி நின்றது, இலககணப் போலி. (31)

நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலு நூற்கேலா வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை—நன்மொழி சிற்றினமல்லார்கட் சொல்லலு மிம்மூன்றுங் [யைச் கற்றறிந்தார் பூண்ட கடன்.

(இ - ள்) மொழி நோக்கி - (நூலகளில்) சொறகளை ஆராய்நது, நுண் பொருள - நுட்பமாகிய பொருளகளை, கொளலும்-கொளளுதலும, நூறகு - நூல்களுக்கு, ஏலா - தகாத, வெண் மொழி - பயனறற சொற்களை வேண்டினும - பிறர் விரும்பினு மும, சொலலாமை - சொலலா தொழிதலும், நல்மொழியை - (உயிர்க்கு உறுதி கொடுக்கும) நலல சொற்களை, சிற்றினம - கீழக்குலம, அலலார்கண் - ஆகாதவரிடத்து, சொல்லலும - சொல்லுதலும், இமூன்றும் - ஆகிய இம் மூன்றும், கற்று அறிந்தார் - பல நூல்களையும் படித்தறிந்தவர, பூண்ட-மேறகொண்ட, கடன் - கடமையாம; (எ - று)

(க - ரை.) சொற போக்குக்கு இயையப் பொருள் கொள்வதும், பயனற்றசொற் கூறுமையும, கல்ல நூற்கருத்துக்களை அவறறை விரும்பிப் போற்றுவாக்குக் கற்பிப்பதும், கல்வியின் பயனும் என்றபடி.

நுண்மொழி நோக்கிப் பொருளகொளலும் என்பதற்கு நுட்பமாகிய பொருளை யுணர்த்துஞ் சொற்களை ஆராய்ந்து அவற்றின் பொருளை யுள்ளபடி உணர்ந்து கொள்ளுதல் எனவும் பொருள்

கூறப்படும். வெண் மொழி - வெண்மை மொழி; பண்புத் தொகை. வெண்மை-நுட்பமின்மை, கருத்தாழமின்மை. வேண் டினும் - உம் எதிர்மறைப் பொருள். சிறறினம் - சிறுமை + இனம். சிறிய இனமாவது நல்லதன் நலனும், தீயதன் தீமையும் இலலென்பவரும், விடரும், தூத்தரும், நடரும் உள்ளிட்ட குழு. இஃது அறிவைத திரிதது இருமையுங் கெடுககும இயல்பிறறு. சொல்லாமை : இறுதி உம் - தொக்கது. (32)

கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
யாலம்வீழ் போலு மமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன் றும்
படைவேந்தன் பற்று விடல்.

(இ - ள.) கோல அஞ்சி - (தன்) செங்கோலைப் பயந்து, வாழும் குடியும் - வாழகின்ற குடியும், குடிதழீஇ - குடிகளைத் தழுவி, ஆலம வீழ போலும் - ஆலமரத்தின் விழுதைப்போல் (தாங்கவல்ல), அமைச்சனும்-மநதிரியும, வேலின்-வேலினிடத்து கடைமணிபோல்-பூண்போல, திண்ணியன்-திட்பமுடையவனது, காப்பும் - காவலும, இ மூன்றும் - ஆகிய இம்மூன்றும், படை வேந்தன் - படையையுடைய அரசன், பற்றுவிடல-பற்றுவிடாது ஒழுகுக; (எ - று.)

(க - ரை) அரசியலுக்கு அடங்கி நடக்கும குடிகளையும், குடிகளை ஓம்புவதில் சூழகண்ணுக விளங்கும அமைச்சனை யும், குடியை நீங்காதபடி உறுதியாகக் காககுந தொழிலையும் அரசன் கைவிடலாகாது என்பது.

கோல் அஞ்சி - கோலை அஞ்சி; இரண்டாம் வேறறுமைத தொகை. கோலுக்கு அஞ்சி என்று நான்காம் வேறறுமையாக்கு வாரு முளர். வாழும - என்ற குறிப்பால் கோல் பொதுமையின நீங்கிச் செங்கோலை யுணர்த்தியது. குடி-குடிப்பிறந்தோர். தழீஇ-செய்தென் விநையெச்சம், தழுவு - பகுதி, தழுவி என்று இருக்க வேண்டியது விகுதிகெட்டு, பகுதி தழி எனத்திரிந்து உயிர் நீண்டு அளபெடுத்து வநதது, சொல்லிசை யளபெடை. வீழ் - வீழ்வது எனக் காரணக் குறியால் வந்தது, இகர விகுதி புணர்ந்து கெட் டது, தொழிலாகு பெயருமாம் அமைச்சன் - அரசனோடு இருப் பவன் என்ற பொருளில் அமாத்யன் என்ற வடசொற்றிரிபு என்ப. விடல் - எதிர்மறை வியங்கோள் விநைமுற்று. 'பற்றி

விட்டல்' என்ற பாடங் கொள்ளுமிடத்துக் கைகொண்டு விடாதிருக்க என்று பொருள கொளக. (33)

மூன்று கடன்கழித்த பார்ப்பானும் ஓர்ந்து
முறைநிலை கோடா அரசுஞ்—சிறைநின்று
அலவலை யில்லாக் குடியும் இம்மூவர்
உலக மெனப்படு வார்.

(இ - ள்.) மூன்று கடன் - மூவருக்குஞ் செய்யுங் கடன்களை கழிதத - செய்து முடிதத, பார்ப்பானும் - அந்தணனும், ஓர்ந்து - தன் கீழவாழுவார் குற்றஞ் செய்தால்(அக் குறறதனை)நாடி,முறை நிலை - நீதி நிலையில, கோடா - வழுவாத, அரசும்-அரசனும், சிறை நின்று - அரசன் ஆணைக்கு அடங்கி, அலவலை - கவலை கொளளுதலை, இல்லா - கொண்டிராத, குடியும் - குடிகளும், இ மூவா - ஆகிய இமமூவரும, உலகம - உயாநதோா, எனபபடுவாா-என்று சொலலப்படுவாா, (எ - று.)

(க - ரை.) கடன் முறை தவறுப் பாாபபா னும, முறைமாறு அரசனும், கவலையற்ற குடியும் உயர்ந்தோா எனறு புகழப்படுவாா

மூன்று கடன் - தேவா முனிவா பிதிரா இவாகடருச் செயயுங கடன். இவறறில தேவா கடன் வேள்வியாலும, முனிவர் கடன் வேதம ஓதலாலும, பிதிர்க்கடன் மகப் பெறுதலாலும தீாக்கப்படும. ஓாது ஈனையெச்சம, ஓா பகுதி; ஆராய்; நாடு. முறை - அறநூலும நீதிநூலும் சொலலும நெறி. கோடா - ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம; கோடு - பகுதி. சிறை-ஆணை. குடி தாம் கருதியபடி தீயவழியிற செல்லுல, தண்டிதது அடக்கி நல்வழியிற செலுததிச் சிறை போலுதலால், ஆணை சிறை எனப் பட்டது. அலவலை - அல - பகுதி, அல - தொழிறபெயர் விகுதி, ஐ - சாரியை, மூன்று கடன் கழித்த என்பதறகு வேதம் ஓதல், வேள்வியாற்றல மகப்பேறு என்ற மூன்று கடனகளையும நிறை வேற்றின எனலுமாம. சிறை நின்று என்பதற்கு அரசனால செய்யப்பட்ட சிறைச்சாலைப்பட்டு என்பதுமாம். அரசு, குடி என்பன உயர்திணைப் பொருளாயினும், சொலலால அஃறிணை யாதலால், பார்ப்பான் என்ற உயர்திணை ஆண்பாற சிறப்புப் பறறி அவை மூவர் என்ற உயர்திணை முடிபேற்றன, திணைவழு வமைதி. (34)

முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையு
நுண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானு
மைந்நீர்மை யின்றி மயலறுப்பா னிம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர்.

(இ - ள.) முந்நீர் - கடலில், திரை - அலைபோல, எழுந்து - (தன் மனம) எழுந்து, இயங்கா - அலையாத, மேதையும் - அறிவுடையவனும், நுண் - நுட்பமாகிய, நூல - சாத்திரங்களிலும், பெரும கேள்வி - மிகுதியாகிய கேள்வியிலும, நூல்கரை - நூல்களின் முடிவை, கண்டானும - (ஐயந்திரிபறக்) கண்டவனும, மைந்நீர்மை - குறைத்தன்மை, இன்றி - (தன்னிடத்தில்) உண்டாகாதபடி, மயல் - மனக்கலக்கம, அறுப்பான் - ஒழித்தவனும், இ மூவர் - ஆகிய இம்மூவரும, மெய் நீரமை - அழிவின்மையாகிய தன்மையையுடைய, மேல - முத்தி உலகத்தில, நிறபவர் - நிறபவராவர்; (எ று.)

(க - ரை) மெய்ப்பொருள காணும அறிவுடையவனுக்கும நூல தேர்ச்சி மிகுந்தவனுக்கும், உலகப்பற்றைவிட வலலவனுக்கும முத்திபெற எது உண்டு என்றபடி.

முந்நீர் - கடல; பகைத்தல, காத்தல, அழித்தல என்னும முத்தொழிலைச செய்ய வல்ல நீர; காரணக்குறி, இனி ஆறறு நீர, ஊறறு நீர, வேறறு நீர ஆகிய மூன்று நீரும சேர்ந்ததாகக கொண்டால பண்புத்தொகைப் புறத்துப பிறந்த அன்மொழித தொகை. திரை - தொழிலடியாய்ப பிறந்த பெயர். இன் - ஐந்த னுருபு, ஒப்புப் பொருள. இயங்குதல - நடத்தல, செல்லுதல. மேதை - அறிவுடைமை; இங்குப் பண்பாகுபெயர்; அறிவுடையவனுக்காயிற்று. நுண்ணூல - நுண்ணுமையாகிய நூல நூற்கரை - ஆரும் வேறறுமைத தொகை. நூல் நூல்போலுதலின் உவமை யாகுபெயர். மை - காமம, வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்கள். மேல் - பண்பாகுபெயர். (35)

ஊனுண் டுயிர்கட் கருளுடையே மென்பானுந்
தானுடன் பாடின்றி வீனையாக்கு மென்பானுங்
காமுறு வேள்வியிற் கொல்வானும் இம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட வாறு.

(இ-ள) ஊன் உண்டு-ஒன்றின் மாமிசத்தைத் தின்று, உயிர்களுக்கு - உயிர்களிடத்தில், அருள் உடையேம் - தயவுடையோம்

என்பானும் - என்று சொல்வானும், தான் உடன்படாது இன்றி - தான் (யாதொரு முயற்சிக்கும்) உடன்படாமல், வினை ஆக்கும் - வினை (செயல்) செய்யும், என்பானும் - என்கின்றவனும், காமுறு- (ஒருபயனைப் பெறவேண்டிச் செய்ய) விரும்புகின்ற, வேளாவினை - யாகத்தில், கொல்வானும் - (ஓருயிரைத்) கொலை செய்வானும், இம்மூவர் - ஆகிய இம்மூவரும், தாம கண்ட ஆறு - தாங்கள் அறிந்தபடியே, தாம் அறிவர் - தாங்கள் அறிந்தவர்களாம்; (எ-று)

(க-ரை) தன் உடலில் பொருந்தும் விருப்புடன் உயிரைக் கொன்று தின்னும் மாமிசத்தை இரக்கமுள்ளோர் என்று பகர்வதும், எல்லாம் விதிவிலை வருகிறதென்று சொல்லிச் சோம்பி இருப்பதும், இம்மையை பயன் கருதிச் சில சடங்கு செய்து உயிரைக் கொல்வதும் நூல்களின் உண்மை யுணராதவர் செய்கைகளாம்

உயிர்கட்கு - உருபுமயக்கம் ஒடு என்பார்தி - முதலினில் திரிந்த தொழிற்பெயர். வினை - ஊழ், முன்னிலையாய பயன் ஒருவன் தனக்குள் தானென்றறக் கருதுமதேபோது தன்னைத் தன்னையே பன்மையாக வைத்துக் கூறுதல் மரபாதலால் ஈண்டு யான் எனபது வழாநிலை காமுறு வேளாவியாவது-தான் விரும்பிய பொருளை அடையும்பொருட்டுச் செய்யப்படுதல் யாகம் ஆதலான் கருத்தை அறிவுடையோர் பாற கேட்டு உண்மை ணர்கிலராதலால், தாங கண்டவாறு தாம் அறிவர் எனப்பாடட ஆகும் என்ற குறிப்பால் வினை ஊழை உணர்த்தியது (36)

குறனெயுள் நட்பளவு தோன்று முறலினிய
சால்பினிற் ரேன்றுங் குடிமையும்—பால்போலுந்
தூய்மையுட் டோன்றும் பிரமாணம் இம்மூன்றும்
வாய்மை யுடையார் வழக்கு.

(இ-ள) குறனெயுள - பொருட கருக்கத்திலும், நட்பு அளவு- ஒருவன் நட்பின் எல்லை, தோன்றும்-காணப்படும், உறல் இனிய- பொருந்துதற்கு இனிய, சால்பினில்-(நருளை நற்செய்கைகளின்) நிறைவில, குடிமை - உயர்குடிப் பிறப்பின் நன்மை, தோன் றும் - விளங்கும், பால் போலும் - பால்போன்ற, தூயமையுள - மனம தூயனந்தன்மையினை, பிரமாணம்-(நிலை பினது) அளவு, தோன் றும் - விளங்கும், இ மூன்றும் - இந்த மூன்றும், வாய்மை உடை யார் வழக்கு - உண்மை கூறும் பெரியோரது மொழியாம்; (எ-று.)

(க-ரை) நட்பளவு, குடிமை, பிரமாணம் இம் மூன்றும் ஒரு தன்மையவாய் நல்லாரிடத்து நிற்கும்.

குறிப்புரை: குறு-பகுதி; அள் - தொழிற்பெயர் விகுதி; ஐ - சாரியை; உள - வழக்குருபு, ஏதுப்பொருளில் மயங்கிற்று. குறிய நட்பளவு தோன்றும் என்பதற்கு (நட்பின் சிருவரைப் பிரிக்கும்படி ஒருவன் சொல்லும) கோட்சொலலில் அக்கோளாக் கேட்டோனது நட்பினது அளவு விளங்கும் என்றுங் கூறலாம். பாலில் பிரை முதலிய பொருளகளுள ஒனறு கலக்கின், அது கெடுதல போல, மனத் தூய்மையில காமம முதலிய குறறம் மூன்றனுள ஒன்று கலக்கினும அத தூய்மை கெடுமாதலால, பாலபோலும தூய்மை எனப்பட்டது வாய்மை யுடையார வழக்கு-மெய்ந்நெறி யுடையார ஒழுங்கு எனனுமாம் வழக்கு-முதனிலி திரிந்த தொழிற் பெயர்; தொழிலாகு பெயருமாம் சால்பினில்-இல, ஐந்தனுருபு-ஏதுப்பொருள. (37)

தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றுஞ்
செல்வ முடைக்கும் படை.

(இ-ள்.) தன்னை-ஒருவன் தன்னை, வியந்து-(தானே) நன்கு மதித்து, தருக்கலும்-அகங்கரித்தலும், தாழ்வு இன்றி-அடக்கம் இலலாமல், கொன்னே-வீணாக, வெகுளி-சினத்தை, பெருக்கலும்-பெருகச் செய்தலும், முன்னிய கருதிய, பல்பொருள்-பலவகை பொருளகளையும, வெஃகும் - இச்சிக்கின்ற (விரும்புகின்ற), சிறுமையும்-சிறுமைத் தன்மையும, இம்மூன்றும - ஆகிய இந்த மூன்றும், செல்வம்-(ஒருவன்) செல்வத்தை, உடைக்கும் படை - அழிக்கும கருவி; (எ-று)

(க-ரை) தற்புகழ்ந்து செருக்குவதும், வீணாகச் சினங்கொளவதும், பிறர பொருளை விரும்புவதும் செல்வத்தைத் தேய்க்கும் படை என்றபடி.

வியந்து, தருக்கல: விய, தருக்கு பகுதிகள். கொன் - பயனின்மையைக் குறிக்கும் இடைச்சொல. வெகுளி-தொழிற்பெயர வெகுள-பகுதி. முன்னிய-முற்பட்ட என்பதுமாம்; படை-படு எனனும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர். தன்னை வியத்தலால் அடக்கமின்மையும, வெகுளி பெருக்குதலால் நண்ணயாயினவர

பிரிவும், பல பொருளாயுள் விழைதலால் குற்றமும் விளங்கும் என்பது. இம்மூன்றும் பழுது என்று உருவகிக்கப்பட்டன. (38)

புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டிர்த் தோய்தல்
கலமயக்கங் கள்ளுண்டு மீறுதல்—சொலிமுனிந்து
பொய்ம்மயக் கஞ்சூதின் கண்தங்கல் இம்மூன்றும்
நன்மையி லாளர் தொழில்.

(இ-ள்) புலை - இழி நன்மையோடு, மயக்கம்-கலந்தலாவது, பொருட் பெண்டிர்-பொருளே விரும்பி நிற்கும வேசியரை, வேண்டி-விரும்பி, தோய்தல்-கூடுதலாம், கலம மயக்கம-பிறர் எச்சிற் கலந்தோடு கலந்தலாவது, கள் உண்டு-கள்ளைக் குடிந்து, வாழ்தல்-வாழ்தலாம், சொல்லை-(பெரியோர் கூறும உண்மை) மொழியை, முனிந்து-வெறுத்து, பொய் மயக்கம-பொய்யோடு கலந்தலாவது, சூதின்கண் தங்கல்-சூதாட்டத்தில் இருந்தலாம்; இ மூன்றும்-ஆகிய இந்த மூன்றும, நன்மை-அறம், இலாளர்-இலலாதவரது, தொழில்-தொழில்களாம்; (எ-று)

(க-ரை.) வேசியரைச் சேர்வதாய நீசத்தன்மையும், கள ளுண்டலாகிய பிறர எச்சிலை யுண்பதும, பொய்யை மேற்கொளவ தாய சூதாடுமிடத்திற் சேர்வதும் அறவழி நில்லாதார் தொழில களாம.

புலைமயக்கம்-புலையோடு மயக்கம், புலையை மயங்கும் மயக் கம், புலையினது மயக்கம் என்று மூன்று பொருளிலும மயங்கும். பொருட் பெண்டிர என்பதும-பொருளை விரும்பும் பெண்டிர், பொருளுக்கு முயங்கும் பெண்டிர, பொருளால் முயலுகும் பெண் டிர் என முப்பொருளில் மயங்கினவாறு காண்க. கள்ளுண் டென்ற குறிப்பால் வாழ்தல கெடுதலை யுணர்த்தியது பெண்டிர்த் தோய்தல் என்பதில் நிலைமொழி உயர்திணைப் பெயராதலாலும், இரண்டாம் வேற்றுமைத் தொகையாதலாலும், இயல்பில விகார மாயிற்று. சொல்-ஈண்டு மெய் சூது தன்னையாகும் ஆட்டத்தை யுணர்த்தியது, கருவியாகு பெயர. நன்மையிலாளர் என்பதை - நன்மை + இன்மை + ஆளர என்று முறையே ஆறும் வேற்றுமைத் தொகையாகவும் இரண்டாம் வேற்றுமைத் தொகையாகவும் கொளக. (39)

வெகுளி நுணுக்கம் விறலு மகளிர்கட்(கு)
ஒத்த வொழுக்க முடைமையும்—பாத்துண்ணும்
நல்லறி வாண்மை தலைப்படலும் இம்மூன்றுந்
தொல்லறி வாளர் தொழில்.

(இ-ள்.) வெருளி-(தம் இடத்து எழுந்த) சினத்தை, நுணுக்கும - கருங்கச் செய்யும், விறனும் - வலிமையும், மகளிர்கட்கு - பெண்கட்கு, ஒக்க-இசைந்த, ஒழுக்கம்-நடைமையை, உடைமையும் - உடையராய் பிரிந்தகலும, பாகு உண்ணலும் - யாழ்த்து உண்ணலுக்கு காரணமாகிய, நல்அறிவு ஆன்மை-நல்லறிவை ஆளுந்தன்மையில், கீலிப்படலும்-கடிதலும், இம் மூன்றுமை-ஆகிய இம்மூன்றும், தொல் அறிவு ஆள-பழமையாகிய தூலறிவை ஆளுந அடையவர், தொழில்-செயலகனாம்; (எ-று)

(க-ரை) எழுந்த சினத்தைத் அடக்குதலும், பெண்களுக்கு வியப்படாமையும அவர்களால் வெறுக்கப்படாமையும் நடத்தலாம்; தக்கார்களுக்கு கொடுத்தலும் உண்கின்ற நன்மையோ டிருத்தலும் இன்றியமையாதன

நுணுக்கும்-நுணுக்கு எனனும விகாயபடியாகப் பிறந்த பிறவினைப் பெயரெச்சம் தன்வினைப்பாருகி-நுணுகு. பிறல்-தொழிற் பெயர்; விற - பருதி, அல - விருதி தொல்லறிவு - தொன்மை + அறிவு தொன்மை-பழமை ஒத்த ஒழுக்கமவது தன்சொற்கு இசைந்த நடக்கும்படி சொய்தலா அவரோடு இசைதது இன்புற நிருத்தலுமாம். (40)

**அலந்தார்க்கொன் றீந்த புகழுந் துளங்கிறுந்
தன்குடிமை குன்றுந் தகைமையும்—அன்போடி
நள்நாளு நட்டார்ப் பெருக்கலும் இம்மூன்றுங்
கேள்வியு ளெல்லாந் தலை.**

(இ-ள்) ,அலந்தார்க்கு-(வறுமையால்) அன்பப்பட்டு வருந்தவர் கட்கு, ஒன்று-(அவர விரும்பும) ஒரு பொருளை, ஈந்த புகழும் - ஈதலாலுளவாகிய இசையும், துளங்கிறுந்-(வறுமை முதலியவற்றால்) தளாந்த காலத்தும், தன் குடிமை - தன் குடிப்பிறப்புக்குத் தகுந்த ஒழுக்கம், குன்றுந் தன்மையும் - குறையாத இயலபும, அன்பு ஓடி-அன்பு மிகுந்து, நாள் நாளும்-நாடோறும், நடாவா-நட்புச் செய்த வரை, பெருக்கலும்-பெருகச் செய்தலும், இ மூன்றும்- ஆகிய இம் மூன்றும், கேள்வியுள் எல்லாம்-கேட்கப்படும் அறவகள் பலவற்றி னும், தலை-முதன்மையானவையாம; (எ-று.)

(க-ரை) வறுமையால் வருந்துவோர்க்கு ஈதலும், வறுமை யுற்ற விடத்தும் தன் குடிப்பிறப்புக்குத் தாழ்வானவற்றைச் செய் யாமையும், நட்புச் செய்தவரை மேன்மேலும் பெருக்குவதும் சிறந்த அறம்.

அலந்தார்க்கு-அலனென்ற பகுதியடியாகப் பிறந்த விகுதியா ல்லீறும் பெயர். எந்த புகழ் - எந்நலத்தையுடைய புகழ்; காரணப் பொருளில் வந்த பெயரெச்சம் இன்மைக்கு இன்மைமைக்கு வந்துவகியை தகைமை; காரணப்பொருள் தரும் பெயரெச்சம். கேள்வி-கேட்டலை யுண்டாகிய அறிவு, காரணவாகுபெயர் (41)

கழகத்தால் வந்த பொருள்கா முருமை
மழகினும் பார்ப்பாரைத் தீப்போல்—ஒழுகல்
உழவின்கட் காமுற்ற வாழ்தலிம் மூன்றும்
அழகென்ற வேளாண் குடிக்கு.

(இ-ள்) கழகத்தால்- சூதாட்டத்தினால், வந்த - கிடைத்த, பொருள - பொருட்கள், காமுறுமை - விரும்பாமையும், பழகினும் - (பல நாள்) பழகினாலும், பார்ப்பாரை - பிராமணரை, தீப்போல - தீக்கு அஞ்சி விடப்படுதல்போல், ஒழுகல்- அஞ்சி விடுதலும், உழவின் கண்-பயிர் செய்தலில், காமுற்ற - விருப்பம் கொண்டு, வாழ்தல்- வாழ்தலும், இ மூன்றும்- ஆகிய இம்மூன்றும், வேளாண்குடிக்கு- வேளாண்மையையுடைய குலத்துக்கு, அழகு என்ப - (பெரியோர்) அழகு என்று சொல்வர், (ஈ- ம்)

(க-ரை) சூதாடிப் பொருள் சம்பாதித்திருந்தாலும், பிறர் மனைவி கொடுப்பதற்கு ஒப்பினாலும் விடவும், உழுது பயிர் செய்து வாழ்தலும் வேளாளர்க்கு பிறர்க்கு அழகு ஆகும்

காமுறுமை, ஒழுகல், வாழ்தல் என்பன பெயரெச்சவினை வந்தலால், ஆண் பால் எண்ணும் திரண்டபோதி ராறனில் மூன்றுமை பெற்றது காமுறுமை-காதிமையற்ற திரிபுபெயர் பழகினும் - உடம னதிமையற்ற கழகம்- சூதாடுமிடம், இடவாகுபெயராய் சூதை யுணர்த்திற்று. தீப்போல ஒழுகலாவது- குளிர்காய்வார் தெருப்பை மிக நெருங்காமலும் நீங்காமலும் ஒழிந்த இடத்து இருப்பது போல, பார்ப்பார இடத்தும் கின்று நடந்தல் பார்ப்பார - ஈறைநாலை பார்ப்பார, காரண இடுகுறிப் பெயர் (42)

வாயின் அடங்குதல் தூய்புரவாம் மாசற்ற
செய்கை யடங்குதல் தீப்பியமாம்—பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள்.

(இ-ள்) வாயின் அடங்குதல் - தீவழிச் செல்லாமல் காக்குதலால், துப்புரவு ஆம - இப்பிறப்பில் அனுபவிக்கப்படும் செல்வம் உண்டாகும, செய்கை - உடலின் செய்கை, அடங்கல - அடங்குதலால், மாசு அற்ற - குற்றம் அற்ற, திப்பியம் ஆம - (மறுமையில்) தெய்வப் பிறப்பு உளதாகும், பொய் இன்றி - உண்மையாக, நெஞ்சம் - மனம, அடங்குதல - அடங்குதலால, வீடு ஆகும் - முத்தி உளதாகும், இ மூன்றும - இம்மூன்று அடக்கமும், வஞ்சத்தின் - பொய்யினின்றும, நீங்க - நீங்கிய, பொருள - பொருள்களாகும்; (எ-று)

(க-ரை) உளம், உரை, செயல் ஆகிய மூன்றும் அடக்கமாயிருப்பவர முத்தியடைவர

துப்புரவு - உறுதியான அநுபவம்; இங்கு செலவம். திப்பியம இவ்விடயம் என்ற வடசொற்றிரிபு; சொர்க்கத்தில் பிறப்பது என்பது பொருள வீடு - அவர முதலியவற்றை விடுதலால உளதாகும் முத்தி; காரணவாகுபெயர. நெஞ்சம் - இடவாகுபெயர வஞ்சத்தின் - இன் ஐந்தனுருபு, நீக்கப் பொருள (43)

விருந்தின்றி யுண்ட பகலுந் திருந்திழையார்
புல்லப் புடைபெயராக் கங்குலும்—இல்லார்க்கொன்(று)
ஈயா தொழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்
நோயே யுரனுடை யார்க்கு.

(இ-ள) விருந்து இன்றி - விருந்தினரை இல்லாமல, உண்ட - தனித்து உண்ணக் கழிந்த, பகலும - பகற்பொழுதும், திருந்து இழையார - திருந்திய அணிகலன அணிந்த மகளிரின, புல்ல - பொருந்துவதால, புடை பெயரா - கழிதல இல்லாத, கங்குலும் - இரவும், இல்லார்க்கு - வறியவர்க்கு, ஒன்று - ஒன்றை, ஈயாது - கொடாமையினல், ஒழிந்து அகன்ற - கழிந்த, காலையும் - நாளும், இ மூன்றும் - ஆகிய இம்மூன்றும், உரன் உடையார்க்கு - அறிவுடையார்க்கு, நோயே - (நினைக்குந்தோறும) நோய்களாம, (எ-று.)

(க-ரை) விருந்தில்லாப் பகலும், மனைவியில்லா இரவும், வறியார்க் கியாக் காலேவேளையும் அறிவுடையோர்க்கு நோய் செய்வன என்றபடி.

பகல் - தொழிலாகுபெயர். ஈயாது - விலையெச்சம ஒழிந்தது அகன்ற - ஒரு பொருட் பன்மொழி. நோயைத் தருபவற்றை நோய் என்றது காரணத்தைக் காரியமாகக் கூறுவதோர உபசார

வழக்கு. உரன்-உரம் என்பதன் போலி. உடையார்-உடைமை என்னும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். கிருத்திழையார் என்பதற்கு மேற் பொருளின்றி, கிருந்து என் பதை இழைக்கு அடையாகக் கொள்ளாது பொருள் சிறப்புக் கருதி இழையார் என்பதற்கு அடையாகக் கொள்வதும் ஆம். இழை - அணி, தொழிலாகுபெயர். (44)

ஆற்ருனே யாற்றென் றலைப்பானும் அன்பின்றி
யேற்ருர்க் கியைவ கரப்பானும்—கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானுமிம் மூவர்
நிரயத்துச் சென்றுவீழ் வார்.

(இ-ள்.) ஆற்ருனை - (தான் ருறிந்த தொழிலை) செய்யத் திற மையற்ற ஏவலாளனை, ஆற்று என்று - செய் என்று ஏவி, அலைப் பானும் - வருத்துகின்றவனும், ஏற்ருர்க்கு - தன்னிடத்தில் வந்து இரந்தவர்க்கு, இயைவ - (கொடுப்பதற்கு) இசையும் பொருளை, அன்பு இன்றி - அன்பு இல்லாதவனுகி, கரப்பானும் - மறைத்து இல்லையென்று சொல்லுமை செல்வனும், கூற்றம் - யமன், வரவு ணண்மை - வருதலை உண்மையை, சிந்தியாதானும - நினையாமல் தீமையைச் செய்தோனும், இ மூவர் - ஆகிய இம்மூவரும், சென்று - உடல அற்று வீங்கி, நிரயத்து - நரகத்தில், வீழ்வார் - விழுவார்; (எ-று)

(க-ரை.) செயல்வகை அற்ற ஏவலாளனை வேலை வாங்கு வோனும், இரந்தவர்க்கு இயைந்ததில்லையென்று சொல்லுவோனும், இறப்பை நினையாது தீந்தொழில் புரிவோனும நரகத்து வீழுவர்.

ஆற்ருன் - வினையாலணையும் பெயர்; ஆற்று - ஆய் விருதி புணர்ந்து கெட்டு நின்ற ஏவலொருமை வினைமுற்று. ஏற்ருர், இயைவ - வினையாலணையும் பெயர்கள்; வல், இயை - முதனிலை கள். நிரயம்-வடசொல. (45)

கால்தூய்மை யில்லாக் கலிமாவுங் காழ்கடிந்து
மேல்தூய்மை யில்லாத வெங்கலிறுஞ்—சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளிமூன் றும்ம
குறுகார் அறிவுடை யார்.

(இ-ள்.) கால் - நடையில், தூய்மை - தூய்மை ஆருந்தன்மை, இல்லா - இல்லாத, கலிமாவும் - குதிரையும், காழ்-கட்டுத்தறியை, கடிந்து - முறித்து, மேல்தூய்மை - (வீரனிருப்பதற்கேற்ற) மேலி

டம் தூய்தாம் தன்மை; இல்லாத-உடையதாயிராத, வெங்களிறும்-கொடிய யானையும், கறுவி - (மாறுக்கன மேல்) வைர மடைந்து, சீறி-சீற்றமிகொண்டு, வெருணடு-சினந்து, உரைப்பான்-(பாடம்) சொல்லுவோனுடைய, பள்ளி - கல்விச்சாலையும், இ மூன்றும் - ஆகிய இம்மூன்றையும், அறிவு உடையார் - (அவற்றின் பயனிற் கமைந்ய) உணர்வுடையார், பு்கார - சேர, (எ-று.)

(க-ரை) நடத்திராப் பாற்ற குதிரையும், ஏறிச்செல்ல உதவாத யானையும், முகமலராதிடன் கூறுதான் பள்ளியும் ஈரல் எனபது.

கால - எல்லாவினையையும் பாருவியாராகிய காலஎன்பது முதலாருவியாராய மனம் மாறுபடுத்தியது இங்கனட ஜுவகாபதிம் அனை. மென்னடை, விலா நடை, ஆதி நடை, சுறுறு நடை, ஓட்ட, நடை கலிமா-கலிங்கமா எனபது ஒகாரம் தொக்கி மருவியதுபோலும். கலிங்கம் - கடிவாளம், கலிங்கமென்பதை எல்லாம்மாக கலிக்கள் - கூனுக்கள் காழ - பல்லாருவியா சீர்மை - சிறிதுபொழுது கிகழும் சினம். பள்ளி - மாணாக்கரு குழுமுகா - எதிர்மறை வினைமுற்று (46)

சில்சொற் பெருந்தேன் மகளிர் பல்வகையுந்
தானிறைந்த விழுநிதியம்—நாடோறும
நாத்தளிர்ப்ப வாக்கிய வுண்டியும் மூன்றும்
காப்பிகழ லாகாப் பொருள்.

(இ-ள்) சில்லிதாகிய-மெலலிய தொனியையுடைய, பெரும தேனை யொத்த தேன மொழியையுடைய, மகளிரும - பெண்டிரும, பலவகையும - பலவகைகளையும், தானிறைந்த-முயற்சியினால, நல்ல - தேடிய, விழுநிதியம - சிறப்பாகிய பொருளும, நாடோறும - எவ்வேளையும், நா-நுனிக்கு, தளிர்ப்ப - மீண அருசுவையபடி, ஆக்கிய - சமைத்த உண்டியுமாகிய வையும, இ மூன்றும - ஆகிய இம்மூன்றும, காப்பு - காத்தலினி, இகழல ஆகா - தாழ்த்திக கூறுதலாகாத, பொருள - பொருளகளாம; (எ-று)

(க-ரை) பெண்டிரும, பொருளும, உண்டியும் காப்பாற்று முறையில காபபாற்றப்படாமற போனால கெடுத்தேபோம எனற படி.

சிறு சொல எனபது சில் சொல் எனறுமிற்று. சிறுமை - கிரம்பாமை தேன் - இடைமுழுமையாகி விழுநிதி - பண்புத்தொகை

கிலேஷக்கொடர். தோறு-ஏழாம் வேற் றுமை இடப்பொருண்மையை யும் பன்மையையும் உணர்த்தும் இடைச்சொல். உண்டி - தொழி லடியாகப் பிறந்த பெயர். (47)

வைதகனை யின்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்த
சோறென்று கூழை மதிப்பானும்—ஊரிய
தைப்பதனைக் கட்டிபென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார்.

(இ-ள்) வைதகனை - பூருவர் வைதகரை, இன்சொலால் ஆ - இனிய சொல்லால், தொகையா னும் - தொகையினானும், நெய் பெய்த - நெய் வார்க்க, சோறு எனும் - சோறு இது நம் எனும், கூழை மதிப்பானும் - கூழை நினைக்கின்றவனும், வதகை அதனை - வதக்கின்ற பொருளை, கட்டி எனும் - கெல்லல் கட்டி எனும், ஊரிய - நன் னாளில் ஊ றுவித்த, ஐ யானானும் - ஐயனென்றவனும், இ மூவர் - ஆகிய இம்மூவரும், மெய்ப்பொருள் - உலகமெய்ம்மை யாகிய பொருளை, கண்டு வாழ்வார் - நினைந்து வாழ்பவர் ஆவர்.

(கருத்து) வைர கெல்லில் மென்சொல்லாகவும், கூ ழைப் போற் சோறாகவும், வதகப்பண்டமாகவும் இனிப்புணவாகவும் கருதுகின்ற வர் மெய்ப்பொருளை நினைந்து வாழ்பவர் ஆவர்.

வைதகர்-பாலி கொலை புரிந்து நீதி நூல் கெரியபடி விசையாலேயாயும் பெயர். ஆ - ஆக எனப்படுகின் ற ஊறிய - கெரிவிரி எனும் வார்த்தை பி னிதொகை விசையெனும் மெய்ப்பொருளை ஐ யானுக்கு வடசொ ற் பகுதியும் உரிமைக்கு ரூபவ ருணை வேறுபாடுமாக் கி, தெரிவிரி தலால் வைதகர் ஐ யானென்றி ன் ற வாசகச் சேரமரிதன் எனும், வதகமும் இனிப்பும் மண்ணின் இல்லை யென்றி ன் ஊன்மையால் தொகை அறிவில் வேறு ற மைபெறலேபென்று தோன்றி ன் ஐ யானென்றது பிறரு ம் பாறியி அவ்வாறே பாராட்டாதவர் எனினு கூழ் - புலனறிதி கூறிய வகையாற்றானே எனினு தொகை, ஊறிய எனப்பாற்ற ரு மிருத்த எனினு மெய்ப்பொருளை கூறலாமே, இவ்வாறு பெயரிற்றாக. (48)

ஏவாது மாற்றும் இளங்கிளையும் காவாது
வைதெள்ளிச் சொல்லும் தலைமகனும்—பொய்தெள்ளி
அம்மனை தேய்க்கும் மகளையாரும் இம்மூவர்
இம்மைக் குறுதியில் லார்.

(இ-ள்.) ஏவு - (பெற்றோரால்) ஏவப்பட்ட, ஆதும் - எந்தக் காரியத்தையும், மாற்றும் - தன்னால் முடியாதென மறுக்கின்ற, இளங்கிளையும் - புதல்வனும், காவாது - மனைவியைக் காவாமல், வைது-திட்டி, எள்ளி-இகழ்ந்து, சொல்லும் - பேசுகின்ற, தலைமகனும்-கணவனும், பொய்-பொய்யும் மொழியை, தெள்ளி-ஆராய்ந்து சொல்லி, அம்மனை - தான் வாழ்கின்ற வீட்டின் செல்வத்தை, தேய்க்கும் - அழிக்கும், மனையாளும் - மனைவியும், இ மூவரும் - ஆகிய இம்மூவரும், இம்மைக்கு - இப்பிறப்பில், உறுதியில்லார் - எவருக்கும் பயனிலலாதவர் ஆவர்; (எ-று.)

(க-ரை.) ஏவிய சொற் கேளா மக்களும், மனைவியைப் போற்றாக் கணவனும், வீட்டுப் பொருளை வீணே அழிக்கின்ற மனைவியும் இம்மையில எவருக்கும் பயனற்றவர.

ஏவாதும் ஆற்றும் இளங்கிளை என்று கொண்டு சொல்லாத காரியத்தையும் தன் விருப்பம்போல செய்கின்ற புதல்வன் எனலாம்., ஆது-யாது என்பதன் மரூஉ; உம் - இழிவு சிறப்பும், மூற்றுப்பொருளும் தருகின்றது எள்ளி-எள என்னும் முதனிலையடியாகப் பிறந்த வினையெச்சம். தலைமகன்-கணவன் இம்மைக்கு என்பதில் இழிவு சிறப்பு உம் தொக்கது; கு-உருபு மயக்கம். மனை தன்னிடத்திலுள்ள செல்வத்தை யுணர்த்தலால் இடவாகு பெயர். தேய்க்கும்-பிறவினைப் பெயரெச்சம். தெய் - தன்வினை பிறவினை இரண்டுக்கும் பொது. உறுதி - தொழிலாகு பெயர். (49)

கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருண் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லே கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள்.

(இ-ள்.) கொள்பொருள்-தான் கொள்ளுதற்குரிய பொருளை, வெஃகி - விரும்பி, குடி அலைக்கும் - குடிகளை வருத்துகின்ற, வேந்தனும்-அரசனும், உள்பொருள்-உண்மை நிகழ்ச்சியை,சொல்லா-சொல்லாமல், சலம் மொழி-பொய் சொல்லுகின்ற, மாந்தரும் - மனிதரும், இல் இருந்து-(ஒருவனுக்கு) மனையாளாய் வீட்டிலிருந்து, எல்லே - (அவன் சொல், மனை என்னும் இரண்டின்) எல்லையை, கடப்பாளும் - கடந்து நடப்பவளும், இ மூவர்- ஆகிய இம்மூவரும், வல்லே - விரைந்து, மழை அருக்கும் - மழையைக் குறைக்கின்ற, கோள் - கோள்களாம்; (எ-று.)

(க-ரை.) குடி கொன்று இறை கொள்ளும் கொடுங்கோல மன்னனும், பொய் பேசுகின்றவனும், பெண் தன்மை மீறி நடக்கின்ற பெண்ணும் இருக்கும் நாட்டில் மழை பெய்யாதென்பது.

கொள் பொருள் - வினைத்தொகை. இறை - வரி, உள் பொருள் - பண்புத்தொகை. தொலலா - மல் ஈறு தொக்க வினையெச்சம். வல்லே - இடைச்சொல். அருக்கும் - பிறவினைப் பெயரெச்சம். அருகு - தன் வினைப் பகுதி. கோள் - வலி; தங்கள் இயக்கத்தால் ஒருவனுக்கு நன்மையேனும் தீமையேனும் வருவிக்கும் கிரகங்களுக்கு ஆகலால், பன்பாகுபெயர். (50)

தூர்ந்தொழுகிக் கண்ணும் துணைகள் துணைகளே
சார்ந்தொழுகிக் கண்ணும் சலவர் சலவரே
ஈர்ந்தகல் இன்னுக் கயவர் இவர்மூவர்
தேர்ந்தக்கால் தோன்றும் பொருள்.

(இ.வி.) தூர்ந்து-(பொருள் வருவாய்) அடைபட்டு, ஒழுகிக் கண்ணும்-(இல்லாமல்) வாழுமிடத்தும், துணைகள்-உறவாவோர், துணைகளே - உறவினரே யாவர், சார்ந்து - கருத்துக்கு இணங்கி, ஒழுகிக் கண்ணும் - நடந்துவிடத்தும், சலவர்-பகைவர், சலவரே-பகைவரே, இன்னு-துன்பந் செய்யும் குணமுள்ள, கயவர் - கீழ மக்கள், ஈர்ந்த - பிளக்கப்பட்ட, கல்-கல்லை ஒப்பாவார், இவர் மூவர் - இவர் மூவரும், தேர்ந்தக்கால்-(அறிவுடையோர்) ஆராயுமிடத்து, தோன்றும்-வெளிப்படும், பொருள - பொருள்களாவர். (வி-று.)

(க-ரை.) வறுமைக் காலத்தும் உறவினர்களே உதவிபுரிபவர்; எவ்வளவு நெருங்கிப் பழகினும் பகைவர் பகைவரே; கற பிளப்பைப்போல் என்றும் ஒன்று கூடாதவர் அற்பர்; இவர்களை தன்மை ஆராய்ந்து சொல்லப்பட வேண்டுபவை.

ஒழுகியக்கண் என்பதில் அகரம் தொக்கு ஒழுகிக் கண் என்று வந்தது; கண் ஈற்று வினையெச்சம். தேர்ந்தக்கால் - இது கால ஈற்று வினையெச்சம். உம் இரண்டும் இறந்தது தழீஇயதனால் உயர்வு சிறப்பில் வந்தன. ஏ இரண்டும் தேற்றம். துணை - பண்பாகுபெயர். கல், பொருள்-இரண்டும் உவமையாகுபெயர்கள். தேர்ந்தக்கால் தோன்றும் பொருள் எனவே, தேராதவிடத்து இத் தன்மையது எனத் தோன்றுப் பொருளாவார்.

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் காழுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை — நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்வியிம் மூன்றும்
குறியுடையார் கண்ணே யுள.

(இ-ள்.) கண்ணுக்கு - கண்களுக்கு, அணிகலம் - அணியத் தக்க பூணாவது, கண்ணோட்டம்-கண்ணோடுதல், காழுற்ற - (கணவனால்) விரும்பப்பட்ட, பெண்ணுக்கு - குலமகளுக்கு, அணிகலம்-அணிகலனாவது, நாண் உடைமை - நாணம் உடையவளாயிருத்தல், நண்ணும் - பொருந்துகின்ற, மறுமைக்கு - மறு பிறப்புக்கு, அணிகலம் - அணிகலனாவது, கல்வி - கல்வி ஆராய்வு, இ மூன்றும் - ஆகிய இம்மூன்றும், குறி உடையார் கண்ணே - ஆராயும் இயல்புடையாரிடத்தே, உள - உள்ளன, (எ-று)

(க-ரை) கண்ணோட்டமுடைய கண்ணையும், நாணமுடைய பெண்ணையும், கல்வியால் மறுமையும் அழகு பெறுமாம் எனல்.

அணிகலம் - விசேடத்தினால் கண்ணோட்டமாவது கண்ணோடு பழகினவர் சொன்னவற்றை மறுக்கமாட்டாமை, அஃது அவர் மேல் கண் சென்ற பின்பே வேண்டாவாதலால். கண்ணோட்டம் - காரண ஆகுபெயர். நாணம் - பெண்கட்குரிய நற்குணங்களில் முதன்மையானது மற்றையவை யாவும் அச்சம் பயிர்ப்பு எனல். ஓட்டம்-அம், கருவிப் பொருளுணர்த்தும். உலையாமை-இடைநிலைத் தீவகவணி. சிறுமையிற்கூற மறுமை துணையாகிய கல்வி ஒருவனுக்கு இமையமாயின் நன்மையாயிற் சொல்ல மறுமையிற்றும இவ்வாங் கருதல் மறுமைக்கு அணிகலம் எனற்கு உள - உண்மை எனற்றும பண்படியாகப் பிறந்த பயனின்மையால் விரிக்கப்பட்டது. (52)

குருடன் மலையாள் அழகும் இருள்நீரக்
கற்றறி வில்லான் கதழ்ந்துரையும் — பற்றிய
பண்ணின் தெரியாதான் யாழ்கேட்பும் இம்மூன்றும்
எண்ணின் தெரியாப் பொருள்.

(இ-ள்.) குருடன் - குருடனுடைய, மலையாள - மனைவியினது, அழகு-அழகும், இருள் நீர-மயக்கம நீங்க, கற்று-(உண்மை நூலைக்) கற்று, அறிவில்லான் - அதன் பொருளை அறியாதவன், கதழ்ந்து - விரைந்து, உரையும் - சொல்லுகின்ற சொல்லும், பற

லிய - பொருந்திய, பண்ணினின்-பண்களை, தெரியாதான்-அறியாதவன், யாழ - யாழின் இசையை, கேட்பும்-கேட்டலும், இம்மூன்றும்-ஆகிய இம்மூன்றும், எண்ணினின்- ஆராயின், தெரியா-மூவர்க்கும் முறையே தெரியாத, பொருள - பொருளாகுமாம்; (எ-று)

(க-ரை) ஞருடையுக்கு அவன் மரியாதையும், படிப்பில்லாதவன் அவையிற் பேசும் பேச்சை, இசையில்லாதவன் கேட்கும் பாட்டும் பயனற்றனவாம்படி

இருள் - பேதைக்குணமாம்; ஈண்டைப்பொருட் பெயர் கருப்பஞ்சாறு முதலிய வன்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த விசேடவெச்சமாதலை முதனிலைத் தொழிற்பெயராகிய யாழ் - கருவியாகுபெயராம். கேட்பு - முதனிலைத் தொழிற்பெயராகிய கேள் - விரும்பப்பட்டவனாலுமாம் பண்ணினின் - கருவியாகுபெயர்

தன்பயம் தூக்காரைச் சார்தலும் தாம்பயவா
நன்பயம் காய்வின்கண் கூறலும்—பின்பயவாக்
குற்றம் பிறர்மேல் உரைத்தலும் இம்மூன்றும்
தெற்றென வில்லார் தொழில்.

(இ-ள்.) தன்பயம் - தனக்கு வரும் பயனை, தூக்காரை - ஆராய்ந்து அதற்கு ஏதுவை செய்யாதாரை, சார்தலும் - அடுத்தலும், காய்வின்கண் - ஒருவன் கினமுற்ற காலத்து, தாம் பயவாதாம் பயன்படாமல் போவனவாகிய, நல் பயம் - நன்மையாகிய பயனைத் தரும் மொழிகளை, கூறலும் - சொல்லுதலும், பின் பயவா - பின்னே பயன்படுதலில்லாத, குற்றம் - குற்றங்களை, பிறர்மேல் - மற்றவர்களுமேல், ஊரைத்தலும் - சொல்லுதலும், இம்மூன்றும்-ஆகிய இம் மூன்றும், தெற்றெனவு - (இன்னது இன்ன பயனைத் தரும் என்பதனை) தேறுதல, இலலார் - இல்லாதவருடைய, தொழில் - செய்கையாம் - (எ-று)

(க-ரை.) தனக்கு உதவியற்றவரைச் சேர்தலும், கினமுற்ற காலத்தில் பயனற்ற மொழிகளைப் பேசுதலும், மனவருத்தத்துடன் வீணைகளைச் சாட்டுதலும் அறிவின்மை என்றபடி.

பயம்-பயப்பு. தூக்கார் - வினையாலணையும் பெயர். தெற்றெனவு - தெற்று என்னும் முதனிலை யடியாகப் பிறந்த தொழிற் பெயர். காய்வு - தொழிற்பெயர். (54)

அருமறை காவாத நட்பும் பெருமையை
வேண்டாது விட்டொழிந்த பெண்பாலும் யாண்டானும்
செற்றங்கொண் டாடுஞ் சிறுதொழும்பும் இம்மூவர்
ஒற்றுள் எனப்படு வார்.

(இ-ள்.) அருமறை - பிறர்க்கு வெளிப்படுத்தக்கூடாத மறை மொழியை, காவாத - காப்பாற்றாத, நட்பும்-நட்பாளனும், பெருமையை - பெருமைக் குணத்தை, வேண்டாது - விரும்பாமல், விட்டு - தலைவன் குறைகளை வெளிப்படுத்தி, ஒழிந்த - தருமத்தினின்றும் நீங்கிய, பெண்பாலும் - பெண்ணும், யாண்டானும்-எங்காயினும், செற்றம கொண்டு - கோபங்கொண்டு, ஆடும் - அவன் மேல் குற்றங் கூறுகின்ற, சிறு தொழும்பும் - குற்றேவலாளனும், இம்மூவர் - ஆகிய இம்மூவரும், ஒற்றுள் எனப்படுவார் - ஒற்றர் களென்று சொல்லப்படுவார்; (எ-று)

(க-பை.) ஒருவன் மறைமொழியை வெளிப்படுத்தும் ஆண் பனும், உளள பெருமையும் ஒழிக்கக் கருதும் பெண்ணும், தலைவரிடம் பகை பாராட்டும் வேலையாளனும ஒற்றரை ஒக்கவர் என்பது.

அருமறை - அருமை மறை. அருமை - சொல்லக்கூடாமை. மறை - மறைக்கப்படுவது; செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டது. நட்பு, தொழும்பு அவற்றையுடையவர்க்கு ஆகுபெயர். பெருமை - ஒரு பெண்ணுக்குக் கற்பால் உண்டாகும் பெருமை. அறத்தின் நீங்கிய பெண் உருவில்மட்டும் பெண்ணே என்பார் பெண்பால் என்றார். யாண்டு என்பது தன் தலைவனுக்குப் பகைவர் அயலார் நட்பினராகிய இடம். ஆன் ஆயின் என்பதன் மரூஉ. ஆடுதல் - பேசுதல். ஒற்றுள-இருபெயரொட்டுப் பண்புத் தொகை. ஒற்று - துறந்தார் முதலிய மாற்றுருக்கொண்டு பகைவரிடஞ் சென்று ஒன்றுபட்டு அங்கு நடப்பனவற்றை அறிந்துவந்து உரைப்பவர். ஒற்று - முதனிலைத் தொழிலாகுபெயர். (55)

முந்தை எழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையுந் தாயும் வழிபட்டு—வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்தலிம் மூன்றும்
விழுப்ப நெறி தூரா வாறு.

(இ-ள்.) முந்தை - (முன்னதாகிய) இளமைப் பருவத்தில், எழுத்தின் வரவு-கல்வியறிவுஉண்டாதலும்,பிற்பாடு-அதன்பின்பு,

உணர்ந்து - கல்விப்பொருள உணர்ந்து, தங்தையும் தாயும்-தங்தை யையும் தாயையும், வழிபட்டுவந்த - போற்றிவந்த, ஒழுக்கம் - ஒழுக்கமும், பெருநெறி - பெரியோரது வழியை, சேர்தல் - சேர் தலும், இம்மூன்றும் - ஆகிய இம்மூன்றும், விழுப்ப நெறி - உயா வாகிய நெறியை, தூய ஆறு - தூக்கார்த வழியாம்; (எ-று.)

(க-ரை.) இளமையில் கல்வி கற்றுப் பெற்றோர்களின வழிபட் டுப் போற்றிச் சான்றோர் செல்லும் நெறியிற் செல்லுதல் ஒரு வனுக்கு உயர்வாம்.

முந்தை - பண்புப் பெயர் இஃது இளமையின்மேல் நின்றது. எழுந்தின் வரவு - எழுந்தினது வரவு. ஆறுவது வினைமுதற பொருண்மையில் வந்த காரகம். தூய என்ற ஈறுகெட்ட எதிர் மறைப் பெயரெச்சத்தின் முதனிலையாகிய தூ எனபது தன்னினை பிறவினை யிரண்டுக்கும் பொது விழுப்ப நெறி - விழுப்பத்தை யுடைய நெறி எனின் இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும உடன் தொக்க தொகை (56)

கொட்டி யளந்தமையாப் பாடலும் தட்டித்துப்
பிச்சைபுக் குண்பான் பிளிற்றலும்—துச்சிருந்தான்
ஆளுங் கலங்கா முறுதலும் இம்மூன்றும்
கேள்வியுள் இன்ற தன.

(இ-ள்.) கொட்டி - தாளவோசையால், அளந்து - அளவிட்டு, அமையாப்பாடலும் - அதற்குக் குறுந்தபடி பாடாத பாடலும், தட்டி - கைதட்டி, துப்பிச்சை - சோற்றுப் பிச்சைக்கு, புக்கு - போய், உண்பான் - வாங்கி உண்பவனுடைய, பிளிற்றலும - இரைதலும், துச்சு இருந்தான்-ஒதுக்குக்குடி பிறந்தவன், ஆளும கலம் (அவ்வில்லத்தான்) ஆளும் பண்டங்களின, காமுறுதலும் - விரும்புதலும், இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், கேள்வியுள் - கேட்கப்படுபவைகளுள், இன்றுதன-இன்பத்தைத் தராதனவாம்; (எ-று.)

(க-ரை) தாளத்துக்கு ஒவ்வாப் பாட்டும், பிச்சையெடுத்துண் பான் பேரிரைச்சலும், ஒட்டுக்குடியன் பெருவீட்டின் பொருளைக் கருதுதலும் இன்பத்தைத் தராதவை

கொட்டி - தொழிலடியாகப் பிறந்த பெயர்; இ - செயப்படு பொருள் விகுதி: ஓசையை யுணர்த்தின் கருவியாகு பெயர். து - உணவு; முதனிலைத் தொழிலாகுபெயர். துச்சு - சிறிதுபொழுது தங்குமிடம். (57)

பழமையை நோக்கி அளித்தல் கிழமையால்
கேளிர் உவப்பத் தழுவுதல்—கேளிராய்த்
துன்னிய சொல்லால் இனம்திரட்டல் இம்மூன்றும்
மன்னற் கினியான் தொழில்.

(இ-ள்.) பழமையை-(நண்பரின்) பழமையாகும் தன்மையை, நோக்கி-பாராட்டி, அளித்தல்-(அவருக்கு வேண்டுவன கொடுத்து) காப்பாற்றுதலும், கேளிர் - சுற்றத்தார், உவப்ப - மகிழும்படி, கிழமையால் - உரிமையால், தழுவுதல் - அணைத்தலும், கேளிர் ஆய் - உறவினராய், துன்னிய - சூழும்படி, சொல்லால் - இன் சொற்களால், இனம் திரட்டல் - நல்லினத்தைக் கூட்டலும், இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், மன்னற்கு இனியான் - இள வரசனுடைய, தொழில் - தொழில்களாம்; (எ-று.)

(க-ரை.) இளவரசனுக்கு பிருப்பவன் முன்னோரோடு பழகிவந்த அமைச்சர் முதலியோரைப் பேணுதலும், இனத்தாரை உரிமை யுடன் காப்பாற்றுதலும், நல்லவரைத் தனக்கு நட்பாக்குதலும் செய்யவேண்டும் என்பது.

பழமையாவது பழமையோர் உரிமையால்செய்வனவற்றைச் சிறிதும் சிதையாது அவர்க்கு உடன்படும் நட்பு. துன்னிய - செய் யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம். அமைச்சன் அரசனுக்கு இணையாயிருத்தல்பற்றி மன்னற் கினியான் அமைச்சன் எனலு மாம். திரட்டல் - பிறவினைத் தொழிற் பெயர். (58)

கினைஞர்க் குதவாதான் செல்வமும் பைங்கூழ்
விளைவின்கண் போற்றுன் உழவும்—இளையனுய்க்
கள்ளுண்டு வாழ்வான் குடிமையும் இம்மூன்றும்
உள்ளன போலக் கெடும்.

(இ-ள்.) கினைஞர்க்கு-சுற்றத்தார்க்கு, உதவாதான்-உதவாத வனுடைய, செல்வமும் - பொருளும், பைங்கூழ் - பசிய பயிர், விளைவின்கண்-தனக்குப் பயன் கொடுக்குங்காலத்து, போற்றுன்-அதனைக் காக்கும் இயல்பில்லாதவனுடைய, உழவும் - உழவுத் தொழிலும், இளையனுய் - இளையனுயிருந்து, கள் உண்டு -கள்ளைக் குடித்து, வாழ்வான் - வாழ்கின்றவனுடைய, குடிமையும் - குடிப் பிறப்பும், இ மூன்றும் - ஆகிய இம்மூன்றும், உள்ளனபோல - இல்லை நிற்பனபோலத் தோன்றி, கெடும் - அழியும்; (எ-று.)

(க-ரை.) செழுங்கிளை தாங்காதான் செல்வமும், விளையுங் காலத்திற் காவாதான் பயிரும், இளமை கொட்டே கள்ளுண்கின்றவன் நற்குடி வாழ்க்கையும் கெட்டுப்போம் என்பது.

கிளைஞர் - சுற்றத்தார். இளையன் - அறிவில் சிறியவன் எனலுமாம். தோன்றி - செலலெசசம். மையங்கூழ் - பசுமை + கூழ்; பசுமை - இளமை. (59)

பேஎய்ப் பிறப்பிற் பெரும்பசியும் பாஅய்
விலங்கின் பிறப்பின் வெருவும்—புலந்தெரியா
மக்கள் பிறப்பின் நிரப்பிடும்பை இம்மூன்றும்
துக்கப் பிறப்பாய் விடும்.

(இ-ள்) பேஎய் பிறப்பில் - பேயினது பிறப்புடையவர்களில், பெரு பசியும் - மிகுத பசியும், பா அய் விலங்கின் - பாயும் இயல்புடைய மிருகப்பிறப்படைந்த உயிர்களில், வெருவும் - அச்சமும், புலம் தெரியா - அறிவாகிய பொருளை உணராத, மக்கள பிறப்பின் - மனிதப் பிறப்படைந்த உயிர்களில், நிரப்பு - வறுமையும், இடும்பை - துன்பத தருவனவாம, இ மூன்றும - இம்மூன்று பிறப்புகளும், துக்கப் பிறப்பு ஆய்விடும - துன்பமாகிய பிறப்புளள உயிர்களாய்விடும (ர - று)

(க-ரை) பேய்ப்பிறப்பில் பசி வருந்தலும், விலங்குப்பிறப்பில் கொலைப் பயமும, மக்கட்பிறப்பில வறுமைத்துன்பமும மிருந்திருக்கின்றமையால எப்பிறப்பும கலமுடைய தன்று. பிறப்பு நீங்க முயலவேண்டும் எனபது

பேஎய், பா அய்-செய்யு ளிசைகின்றஅளபெடைகள். வெருவு-தொழிற் பெயர். நிரப்பு - மங்கல வழக்கு; எதிர்மறை இலக்கணையால் நிரம்பாமையை யுணர்த்தி அதன் காரணமாகிய வறுமைக்கு ஆகுபெய ராயிற்று. (60)

ஐயறிவும் தம்மை அடைய ஒழுகுதல்
எய்துவ தெய்தாமை முற்காத்தல்—வைகலும்
மாறேற்கும் மன்னர் நிலையறிதல் இம்மூன்றும்
சீரேற்ற பேரமைச்சர் கோள்.

(இ-ள்.) ஐ அறிவும் - ஐம்பொறிகளின் அறிவும், தம்மை அடைய-(தீய வழியில் செல்லாது) தம்மிடத்து அடங்கி நிற்கும்படி, ஒழுகுதல் - நடந்ததும், எய்துவது - அரசனுக்கு வருவதாகிய தீங்கை, எய்தாமை - வராதபடி, முன்காத்தல் - முன் அறிந்து தடுத்தலும், வைகலும - நாடோறும், மாறு - (தம்முடைய) பகைமையை, ஏற்கும் - ஏற்றுக்கொள்ளுதற்குரிய, மன்னர நிலை - அரசருடைய இருப்பை, அறிதல் - ஒற்றர்களால அறிந்து அதற்குத் தக்கபடி செய்தல், இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், சீர் ஏற்ற-புகழை மேற்கொண்ட, பேர் அமைச்சர - பெருமையாகிய அமைச்சர்களின், கோள் - தூணிவுகளாம் (எ-று)

(க-ரை.) பேரமைசசர்கள் ஐம்பொறிகளை அடக்கி நடந்தலும், அரசனுக்குத் தீங்கு வராமல் காக்கவும், பகைவருடைய நிலைமையை அறிந்து நடக்கவும் வல்லவர்களாயிருக்கவேண்டும.

ஐமபொறிகள -மெய், வாய், கண், மூக்கு, செவி எய்துவது-எய்து என்னும் வினையினடியாகப் பிறந்த எதிர்கால வினையாலணையும் பெயர். மாறு - முதனிலைத் தொழிற்பெயர். நிலை - தொழிற்பெயர (61)

நன்றிப் பயன்தூக்கா நாணிலியும் சான்றோர்முன்
மன்றில் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த அடைக்கலங் கொள்வானும் இம்மூவர்
எச்சம் இழந்துவாழ் வார்.

(இ-ள்.) நன்றிப்பயன் - ஒருவன் தனக்குச் செய்த நன்றியின் பயனை, தூக்கா - அளந்தறியாத, நாண் இலியும் -நாணமிலாதவனும், சான்றோர முன் - பெரியவர முன்னே, மன்றில் - அறவிலையத்தில், கொடும்பாடு-பொய்ச் சொல்லை, உரைப்பானும்-சொல்லுகின்றவனும், நன்று இன்றி-நற்செய்கை இல்லாதவனும், வைத்த - ஒருவன் வைத்த, அடைக்கலம்- அடைக்கலப்பொருளை, கொளவானும் - கைப்பற்றிக் கொளபவனும், இ மூவர் - ஆகிய இந்த மூவரும், எச்சம் இழந்து - தம் மகனை இழந்து வருந்தி, வாழ்வார் - உயிர வாழுவார் (எ-று.)

(க-ரை.) நன்றி மறந்த நாணிலியும், மன்றிற் பொய்ச்சாட்சி யுகன்றவனும், அடைக்கலப் பொருளை வௌவியவனும் மக்கட்பேறற்று வருந்துபவர் என்பது.

கொடும்பாடு-பண்புத்தொகை. கொடுமை - வலிவு, எச்சம்-எஞ்சுவது, தொழிற் பெயர்; ஒருவன் இறந்த பின் மிகுந்து நிற்பது மக்களும் புகழும் ஆதலால இரண்டும் கூறலாம். நாணிலி என் பதில இகரம் ஆண்பாலை யுணர்த்தியது. வாழவார் - வாழார் என உடன்பாட்டில் வந்த எதிர்மறை. அடைக்கலம் - பண்பாகு பெயர். (62)

நோவஞ்சா தாரோடு நட்பும் விருந்தஞ்சும்
ஈர்வளையை யில்லத் திருத்தலும்—சீர்பயவாத்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்த லில.

(இ-ள்.) நோ - (தமக்கு வரும) துன்பத்துக்கு, அஞ்சாதார் ரோடு - பயப்படாதவரிடத்து, நட்பும - கொண்ட நட்பும, விருந்து அஞ்சும - விருந்தினராக்கு உண்டி கொடுக்க அஞ்சுகின்ற, ஈர் வளையை - மனைவியை, இல்லத்து-மனையிடத்தில, இருத்தலும் - இருக்கச் செய்தலும, சீர் பயவா - சிறப்பைத் தரா த, தன்மை - தன்மையையுடைய, இல் ஆளர் - இல் வாழ்வோருக்கு, அயல் இருப்பும - அயலில குடிபிருத்தலும, இ மூன்றும - ஆகிய இம் மூன்றும், நன்மை - நன்மையை, பயத்தல இல - தருதலிலலன வாம் (ஈ - று)

(க-ரை) வரும துன்பத்துக்கு அஞ்சா நண்பரின் நட்பும், விருந்தோம்பாத மனைவியோடிருப்பும, நற்குணமில்லாதவர் அய லிற் குடியிருப்பும பயனற்றவை என்பது.

நோ - முதனிலை திரிந்த தொழிற்பெயர். ஈர்வளை - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை; பைந்தொடி என்னும் பொருளது. ஈர் - மிருதுத்தொகையாயிர் அறுக்கப்பட்ட என்னும் பொருட்டு. வளை - பண்பாகு பெயர். (63)

நல்விருந் தோம்பலின் நட்டாளாம் வைகலும்
இல்புறஞ் செய்தலின் ஈன்றதாய்—தொல்குடியின்
மக்கள் பெறலின் மனைக்கிழத்தி இம்மூன்றும்
கற்புடையாள் பூண்ட கடன்.

(இ-ள்.) நல் விருந்து - நன்மையான விருந்தினரை, ஓம்பலின் - பாதுகாத்தலால், நட்டாள் ஆம் - கணவனுக்கு நட்பினளாம், வைகலும் - நாடோறும், இல் - இல்லத்தை, புறஞ்செய்தலின் -

(வழுவாது) காத்தலால், ஈன்ற தாய் (ஆம்) - பெற்ற தாயாம், தொல் குடியின் - தன் பழைய குடும்பத்துக்குரிய, மக்கள் பெறலின்-மக்களைப் பெறுதலால், மனைக் கிழத்தி (ஆம்)-மனையாளாம், இ மூன்றும் - (விருந்தோம்பல் முதலிய) இம்மூன்று செயலும், கற்பு உடையாள் - கற்பையுடைய பெண், பூண்ட-மேற்கொண்ட, கடன் - கடமைகளாம் (எ - று.)

(க-ரை) விருந்தோம்பல், மனையறம் போற்றல், மக்கட் பெறுதல் இவற்றைச் செய்யும் பெண்ணே கற்புடைய பெண் என்பது.

மனைக் கிழத்தி - மனைவி. கிழத்தி - கிழமையுடையவள். புறஞ் செய்தல் என்பதில் புறஞ்செய் ஒரு சொல். விருந்தினர்க்கு நன்மையாவது, இல்வாழ்வானுலை இயன்றவளவு தந்து உண்டி முதலிய வற்றை ஏற்று மகிழ்தல். ஆம் என்பதனை தாய், கிழத்தி என்பவற்றோடும் கூட்டுக. தொன்மை குடி - தொல குடி தொன்மை, பழமை ; அஃதாவது தொன்று தொட்டு வருவது (64)

அச்சம் அலைகடலின் தோன்றலும் ஆர்வுற்ற
விட்டகல கில்லாத வேட்கையும்—கட்டிய
மெய்ந்நிலை காணு வெருளியும் இம்மூன்றும்
தந்நெய்யில் தாம்பொரியு மாறு.

(இ-ள) அலை கடலின் - அலைகின்ற கடலைப்போல, அச்சம் தோன்றலும் - மாறி மாறிப் பெரும்பயம (ஒருவர் உளளத்தில்) தோன்றுதலும், ஆர்வு உற்ற - அனுபவித்தவற்றை, விட்டு அகல கிலலாத - விட்டு நீங்கமாட்டாத, வேட்கையும - விருப்பமும், கட்டிய - (அறிவுடையோரால்) யாக்கப்பட்ட செய்யுளகளின், மெய்ந் நிலை-பொருளின் உண்மை நிலையை, காணு வெருளியும்-அறியாத தினமும், இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், தம் நெய்யில - (ஆடு முதலானவை) தம்மிடத்துப் பிறந்த நெய்யிலே, தாம பொரியும் ஆறு - தாம் பொரிந்துற்ற வகைபோல எவரிடத்துப் பிறந்தனவோ அவரைத் தம்மில் வேவச் செய்வனவாம (எ - று.)

(க-ரை.) நெஞ்சில் எஞ்சா அச்சமும், நீக்கமாட்டாத வேட்கையும், உண்மை யுணராமையா லுண்டாகும் தினமும் ஒருவனுக்கு மிகுந்த வருத்தத்தைச் செய்வனவாம் என்றபடி.

அலைகடல் - விணைத்தொகை. கடலின் : இன் - ஐந்தனுருபு ; ஒப்புப்பொருள். ஆர்வு-தொழிலாகுபெயர். கட்டியமெய்ந்நிலை என்

பதற்குப் பெரியோரால் உறுதியாகத் தழுவப்பட்ட மெய்யினது நிலை எனினுமாம். ஆடு முதலானவை - இசை யெச்சம். அகலகில்லாத - இதில கில் ஆற்றலுணர்த்தும் இடைநிலை. (65)

கொழுநனை இல்லாள் கறையும் வழிநிற்கும்
சிற்ருளில் லாதான்கைம் மோதிரமும்—பற்றிய
கோல்கோடி வாழும் அரசனும் இம்மூன்றும்
சால்போடு பட்ட தில.

(இ - ள்.) கொழுநனை - கணவனை, இல்லாள் - இல்லாத வளது, கறையும் - மாதவிடாயும், வழிநிற்கும் - தன் ஏவலின் வழியில் நிற்கின்ற, சிறு ஆள - சிற்ருளை, இலலாதான் - இல்லாத வனுடைய, கை மோதிரமும் - கைவிரலில் அணிக்க மோதிரமும், பற்றிய - தான் மேற்கொண்ட, கோல - ஆளும் முறைமை, கோடி - தப்பி, வாழும் அரசனும் - வாழுகின்ற அரசனும், இம்மூன்றும் - ஆகிய இம் மூன்றும், சால்போடு - நிறையோடு, பட்டது இல - பொருந்திய சிறப்புடையன அலலவாம் (எ - று)

(க-ரை.) புருடன் இல்லாதவள பூப்பும், சிற்ருளிலலான் செங்கையாழியும், கொடுங்கோல் அரசும் சிறப்பற்றவை என்பது.

கொழுநன் - மனையாளுக்கு உறுதியாகிய துணையாயுளள வன். கறை - கறுப்பு. கோடி: கோடு முதனிலை, இகரம் வினை யெச்ச விகுதி, சால்பு - நிறைவு, அஃதாவது அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையாகிய ஐந்து நற்குணங்களும் நிறைந்தது. கொழுநனையிலலாள கலனும் எனறு பாடங்கொளளினும், கலன் என்பது அழகாம் (66)

எதிர்நிற்கும் பெண்ணும் இயல்பில் தொழும்பும்
செயிர்நிற்குஞ் சுற்றமும் ஆகி—மயிர்நரைப்ப
முந்தைப் பழவினையாய்த் தின்னும் இவைமூன்றும்
நொந்தார் செயக்கிடந்த தில.

(இ-ள்.) எதிர் நிற்கும் - (தாம் சினந்தால்) நம் எதிர் நின்று பேசும், பெண்ணும் - மனையாளும், இயல்பு இல்-ஒழுக்கமில்லாத, தொழும்பும் - ஏவலாளும், செயிர் - பகை, நிற்கும் - கெடாது நிற்கும், சுற்றமும் - உறவினரும், ஆகி - ஆய் நின்று,

மூங்கை - மூம்பிறப்பிற் செய்த, பழவினை - பழைய வினை, ஆய் - ஆகும்படி, மயிர் நரைப்ப - முதுமைப் பருவம் வரைக்கும், தின்னும் - மெலியச் செய்யும், இவை மூன்றும் - இந்த மூன்றுக்கும், நொந்தார - வருந்திஞர், செயக்கிடந்தது - செய்யக்கூடியதாகிய பரிகாரம், இல - இலலை (எ-று.)

(க-ரை) கணவினை எதிர்ந்து நிற்கும் மனைவியும், நன்னடக்கையில்லா அடிமையும், பகை பாராட்டும் உறவினரும பழவினைப் பயன்போற் பரிகரிக்கப்படாதவர் என்பது.

தொழும்பு - தொழிலாரு பெயர் செயிர் - சூற்றம் ; ஈண்டுப் பகை. மயிர் நரைப்ப என்பது முதுமைப் பருவத்தை யுணர்த்த வந்த குறிப்புச் சொல் (67)

இல்லார்க்கோன் றீயும் உடைமையும் இவ்வுலகில்
நில்லாமை யுள்ளும் நெறிப்பாடும்—எவ்வுயிர்க்கும்
துன்புறுவ செய்யாத தூய்மையும் இம்மூன்றும்
நன்றறியும் மாந்தர்க் குள.

(இ-ள) இல்லார்க்கு - வறியவர்க்கு, ஒன்று- ஒரு பொருளை, ஈயும் - கொடுக்கும, உடைமையும் - செல்வமும், இவ்வுலகில் - இவ்வுலகத்துப் பொருளகளின், நிலலாமை -நிலையாமையை, உள்ளும் - ஆராய்ந்து அறியும், நெறிப்பாடும் - வழியில் பொருந்துதலும், எவ்வுயிர்க்கும் - எல்லா உயிர்க்கும், துன்பு உறுவ-துன்பம் அடைவதற்கு ஏதுவாகிய செய்கைகளை, செய்யாத தூய்மையும் - செய்யாத தூய தன்மையும், இ மூன்றும - ஆகிய இம்மூன்றும், நன்றி - அறத்தை, அறியும்-அறியக்கூடிய, மாந்தர்க்கு - மக்கட்கு, உள - உண்டு (எ-று)

(க-ரை.) வறியோரைக் காக்கும் செல்வமும், பொருள்களின் நிலையாமையை யறிந்து நடக்கும் தன்மையும், எவ்வுயிர்க்கும் இன்பம்அளிக்கும் செம்மையும் அறமுணர்ந்தவர்களிடத்திலேயே உண்டு என்பது.

ஒன்று - எண்ணல் அளவை யாகுபெயர். உடைமை - பண்பாகு பெயர் உலகு - இடவாகு பெயர். நில்லாமை - நிலையாமை; நில்லாதவற்றை நிலையின வென்றுணாவது புல்லறிவாண்மை எனப்படும். உறுவ-பலவின்பால் வினையாலணையும் பெயர். (68)

அருந்தொழில் ஆற்றும் பகடும் திருந்திய
மெய்நிறைந்து நீடிருந்த கன்னியும்—நொந்து

நெறிமாறி வந்த விருந்து மிம்மூன்றும்
பெறுமா றரிய பொருள்.

(இ-ள்.) அரும் தொழில்-(உழுதல் பெருஞ்சுமை தாங்குதல் முதலிய) அரிய தொழிலை, ஆறறும் பகடும்-செய்யவல்ல கடாவும், திருந்திய - சூற்றமற்ற, மெய் நிறைந்து - உடலிலக்கணம் நிரம்பி, நீடு இருந்த - நெடுநாள (மணமின்றி) இருந்த, கன்னியும் - இளம் பெண்ணும், நெறி மாறி - வழிதப்பி, தொந்து வந்த-பழித்து வந்த, விருந்தும் - விருந்தினரும், இ மூன்றும - ஆகிய இம்மூன்றும், பெறும் ஆறு - பெறுகின்ற வழியில், அரிய பொருள - அரிய பொருளாகும் (எ-று)

(க-ரை) நிலத்தை யுழுவலல பாரமாகக் கருதும், உடல் ஆறுபதிலக்கணம அமைந்த கன்னியும், வழிதப்பிப் பழிதது வருதலும் விருந்தும் கிடைத்தறகரிய பொருளாகும் என்பது.

மெய் - மெய்யின் இயல் : பொருளாகு பெயராய்த் தன் இலக்கணதைத் யுணர்த்திற்று வந்த இடவழுவமைதி உயர் திணையாகிய கன்னி மிருதி பற்றி மூன்றும் என்றும் அஃறிணை முடி பேறாயது. (69)

காவோ டுறக்குளந் தோட்டாறும் நாவினுல்
வேதம் கரைகண்ட பார்ப்பாறும் — தீதிகந்
தொல்வதுபாத் துண்ணும் ஒருவறும் இம்மூவர்
செல்வ ரெனப்படு வார்.

(இ-ள) காவோடு-சோலையை உண்டாக்குதலுடன், அறக் குளம் - அறந்துக்குரிய குளதையும், தொட்டாறும-தோண்டுவித்த வறும், நாவினால - நாவினால் ஓதி, வேதம் - வேததை, கரை கண்ட - முடிவு கண்ட, பார்ப்பாறும் - அநதணறும், தீது - தீய வழியை, இகந்து - கடநது, ஒலவது - (தனகது) இசையும் பொருளை, பாதது - பகுத்து, உண்ணும - உண்கின்ற, ஒருவறும்-ஒப்பற்ற இல்லறதானும், இ மூவர் - ஆகிய இம்மூவரும், செல்வர் எனப் படுவர - செல்வத்தை யுடையரென்று சொல்லப்படுவார் (எ-று.)

(க-ரை.) தோப்பும் குளமும் அமைத்தவனும், மறைநூலோதி யுணர்ந்தவனும், பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துண்ணும் இல் வாழ்வானும் உண்மைச் செல்வராவர் என்பது.

காவோடு குளந்தொட்டான் என்பதில் மூன்றனுருபு வேறு வினை உடனிகழ்ச்சி யாதலால், கா என்றதற் கேற்ப உண்டாக்குதல் என்னும் தொழில் வருவிக்கப்பட்டது. கமரகாண் என்பது ஒரு சொல்லின் தன்மையது. (70)

உடுத்தாடை யில்லாதார் நீராட்டும் பெண்டிர்
தொடுத்தாண்ட வைப்போர் புகலும் — கொடுத்தளிக்கும்
ஆண்மை யுடையவர் நல்குரவும் இம்மூன்றும்
காண அரியவென் கண்.

(இ-ள்) உடுத்த ஆடை-உடுக்கப்பட்ட ஆடை, இல்லாதார்-இலலாதவர, நீர் ஆட்டும் - நீராடுதலும், பெண்டிர் - பெண்கள, தொடுத்து - (பிறரோடு) வழக்குத் தொடுத்து, ஆண்டு-அங்குள்ள, அவை - சபைகளிடத்தில, போர் புகலும் - போர்க்குப் புகுதலும், கொடுத்து-பிறர்க்குக் கொடுத்து, அளிக்கும்-காக்கின்ற, ஆண்மை யுடையவர்-ஆண் தன்மையுடையவரது, நல்குரவும்-வறுமையும, இம்மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், என் கண் - என் கண்களால், காண அரிய - பார்க்கத் தகுவன வலலவாம் (எ-று)

(கு-ரை) ஆடையின்றி நீரில் இறங்கிக் குளிப்பதும, பெண்களை வழக்குத் தொடுத்து மன்றேறுதலும், கொடையாளர்களை வறுமை யுறலும் காணக்கூடிய வலல என்பது.

உடுத்தாடை என்பதில் உடுத்த என்ற பெயரெச்சத்து ஈறு தொகுத்தல். ஆட்டு-பிறவினை முதனிலி தொழிற் பெயர் நல்குரவு என்ற தொழிற்பெயரில் நலகூர் முதனிலி "உடுத்தலால் நீராடார், ஒன்றுடுத் துண்ணார, உடுத்தாடை நீருட் பிழியார - விழுத்தக்கார், ஒன்றுடுத் தென்றும் அவைபுகா என்பதே முந்தையோர் கண்ட முறை" என்ற ஆசாரக்கோவை யடிகளும காண்க. (71)

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை அல்பொருள் அஞ்சும்
மறவனை யெவ்வுயிரும் அஞ்சுமிம் மூன்றும்
திறவதில் தீர்ந்த பொருள்.

(இ-ள்.) நிறை - புலன்கள்மேற் போகாமல் நிறுத்தப்படும், நெஞ்சு உடையானை - நெஞ்சுடையவனுக்கு, நல்குரவு அஞ்சும் -

வறுமை பயப்படும், அறனை - அறத்தையே, கினைப்பானை-கினைக் கின்றவனுக்கு, அல்பொருள - பாவம், அஞ்சும்-பயப்படும், மற வனை - கொலையாளிக்கு, எவ்வுயிரும்-எல்லா உயிர்களும், அஞ் சும்-பயப்படும், இ மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், கிறவதில-வன்மைகளுள், தீர்ந்த பொருள - சிறப்பாக முடிந்த பொருளாக ளாம் (எ-று.)

(க-ரை) வறுமை நிறைகெஞ்சுடையானைச் சேரவும், மறம் அறனினைப்பானை யணுகவும், எவ்வுயிரும் கொலையாளியைக் காணவும் அஞ்சும என்பது

நிறை - நிறுத்தல்; தொழிற் பெயர். மூன்னர் அறம் என்ற மையால் அல்பொருள, பாவம் அலலது மறம எனப்பட்டது. கிறவது - பண்புப் பெயர. கிறவதிற நீங்கிய பொருள என்ப தற்கு வேறுபாட்டில நீங்கிக் கமமுட் சிறந்த பொருளாகளாம் என்க. (72)

இரந்துகொண் டொண்பொருள் செய்வலென் பானும்
பரந்தொழுகும் பெண்பாலைப் பாசமென் பானும்
விரிகட லோடுசெல் வானுமிம் மூவர்
அரிய துணிந்துவாழ் வார்.

(இ-ள்.) இரந்து கொண்டு-(இல்லாமையால் பிறரிடம) கெஞ் சிப் பெற்று, ஒண் பொருள-ஒளிய பொருளை, செய்வல என்பா னும்-ஈட்டுவல் என்று கூறும இரப்போரும, பரந்து - (பலரிடத் தும) சென்று, ஒழுகும - நடக்கின்ற, பெண்பாலை - பெண்களுப் பைச் சேர்ந்த வேசையை, பாசம் என்பானும - அன்புடையா ளெனக் கருதும் காமுகனும, விரி கடல ஓடு - பரந்த கடலினரு வில், செல்வானும்-(தக்க கருவியிருந்தி) பொருளீட்டச் செலலும வாணிகனும், இ மூவர் - ஆகிய இம மூவரும், அரிய-செயவதறகு அரிய பொருளகளை, துணிந்து-பின்வாங்கலின்றி மேறகொண்டு, வாழுவார்-வாழபவர போலத் தாழபவரானார் (எ-று.)

(க-ரை.) பிச்சை யெடுத்துப் பெரும்பொருளை ஈட்டுதலும், வேசை தன்னிடம் மெய்யன்புடையவளென்று நமபுதலும், வேண் டிய கருவிக ளில்லாமல் திரைகட லோடித் திரவியம் தேட முயலு தலும் முடியாத செயல என்பது.

ஒண்பொருள் - ஒருவனைப் பலருளரும் ஒண்மையுடையவ னாகச் செய்யவல்ல செல்வம்; செய்வல - அல் ஈற்றுத் தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று. பரந்தொழுகுதலாவது - உள்

ளம் ஒருவனைப் பற்றி நில்லாது பொருளவளம் மிக்க பலரிடத்தும் செல்லுதல் பாசம்-பற்று; பண்பாகுபெயர் கடலோடு:ஊடு ஏழனுருபு. (73)

கோலேநின்று தின்றெழுகு வானும் பெரியவர்
புல்லுங்கால் தான்புல்லும் பேதையும் — இல்லைனைக்கொன்
றீகென் பவனே நகுவானும் இம்மூவர்
யாதுங் கடைப்பிடியா தார்.

(இ-ள்) கோலேநின்று-கோலஞ்செய்தழிவில் நீங்காது நிலை பெற்று, தின்று ஒழுகுவதனும் - (ஒருபிழை வகைதவறு) அதன் இறைச்சியைத் தின்பவனும், பெரியவர்-பெரியோர், புல்லுங்கால்-தன்னைத் தழுவும்போது, தான் புல்லும்-(அவரோ டொப்பவனைத் தன்னை மதித்துத்) தானும் அவரை எதிர் தழுவுகின்ற, பேதையும்-அறிவில்லாதவனும், எனக்கு இல்-எனக்கு இல்லை, ஒன்று ஈக - ஒன்றை (ஒரு பொருளை) யாசக் கடவாய், என்பவனை - என்று இரக்கின்றவனை, நகுவானும்-இகழ்வானும், இம்மூவர் (ஆகிய) இம் மூவரும், யாதும் - யாதேனும் அறத்தையும், கடைப்பிடியாதார் - உறுதியாகக் கொள்ளாதவரா வர் (எ-று)

(க-ரை) கோலேரெய் அண்டாமை, பெரியோர் தழுவிஞல் அவர்க்கு வணக்கஞ் செய்யாது தானும் அவரைத் தழுவுவதுமை, இல்லை என்று இரப்பவனைப் பார்த்து இகழ்தலும் நல்லொழுக்கத்தை மேற்கொள்ளாதவர் செயலாகுமை.

ஈக எனப்படுவது தொகுத்தல் விகாரம் பெற்றது. (74)

வள்ளன்மை பூண்டான்கண் செல்வமும் உள்ளத்
துணர்வுடையா னேய நூலும் — புணர்வின்கண்
தக்க தறியுந் தலைமகனும் இம்மூவர்
பொத்தின்றிக் காழ்த்த மரம்.

(இ-ள்.) வள்ளன்மை-வரையாது கொடுத்தலை, பூண்டான் கண்-அணியாக மேற்கொண்டவனிடத்துள்ள, செல்வமும்-பொருளும், உள்ளத்து - உள்ளத்தில், உணர்வு உடையான் - (கேட்ட தனை) நினைத்துப் பார்க்கும் இயல்புடையவன், ஓதிய நூலும்-கற்ற நூற் புலமையும், புணர்வின்கண்-(பிறர்தன்னைச்) சார்ந்தவிடத்து, தக்கது-(அவர்க்குச் செய்யத்) தக்க காரியத்தை, அறியும் தலைமகனும்-அறியும் தலைவனும், இம்மூவர் - ஆகிய இம்மூவரும், பொத்து

இன்றி - பொருந்தில்லாமல், காழ்த்த - வைரம் பற்றிய, மரம்-மரம் போல அசைவற்றவராவர் (எ-று)

(க-ரை) கொடையாளனிடத்துமுள்ள செல்வமும், அறிவோடு கூடிய அருநூல்களும், தன்னை யடுத்தவர்க்குச் செய்யத்தக்கதைத் தெரிந்தவனும் உறுதியான பொருளுகள் என்பது.

வளனென்னும - பண்புப் பெயர்; 'வள்' முதனிலை; 'ன' சாரியை. நூல - காரண வாகுபெயர். செல்வமும் நூலும் தலைமகனும் எனத் திணைவிரவிச் சிறப்பினால் அஃறிணையோடு பலதிணை முடிபேற்றது. பொதுது - பொருது என்பதின் விகாரம். (75)

மாரிநாள் வந்த விருந்தும் மனம்பிரிதாய்க்
காரியத்திற் சூன்றுக் கனிகையும்—வீரியத்து
மாற்றம் மறுத்துரைக்குஞ் சேவகனும் இம்மூவர்
போற்றற் கரியார் புரிந்து.

(இ-ள) மாரிநாள - மழைக்காலத்தில், வந்த விருந்தும - வந்த விருந்தினரும், மனம பிரிதாய் - தன் மனம் வேறொன்றிற சென்றும், காரியத்தில - பொருள வருவாயினை மேற்கொளளுதலில, சூன்று - சூழ்ந்வுபடாத, கனிகையும - வேசையும், வீரியத்து - (போரில் கட்டப்புருந்த) வெறிகதிறமையில், மாற்றம்-தலைவன் பகைவர மேல (அருளாற் கூறிய) சொலலில, மறுத்து உரைக்கும - மறுத்துச் சொலலிச் செலகின்ற, சேவகனும் - வீரனும், இமமூவர - ஆகிய இம மூவருமட, புரிந்து - விரும்பி, போற்றற்கு - காத்தற்கு, அரியார - அருமையானவரவர் (எ-று)

(க-ரை.) மழைக்காலத்தில் வந்த விருந்தினரும், காமமயக்கமில்லாத வேசையும், வெற்றியையே சிறப்பாகக கருதும் வீரனும் பாதுகாத்தற்கு அரியரவர

பிரிது-பிரிந என்னும் இடைச்சொல் விகுதியாகப் பிறந்த பெயர. சேவகன் - சேவகம் என்னும பண்பாகுபெயராய் பிறந்த பெயர. (76)

கயவரைக் கையிகந்து வாழ்தல் நயவரை
நள்ளிருளுங் கைவிடா நட்டொழுகல்—தெள்ளி
வடுவான வாராமல் காத்தலிம் மூன்றும்
குடிமாசி லார்க்கே யுள.

(இ-ள்.) கயவரை - கீழ்மக்களை, கையிகந்து-கைவிட்டு (சேராமல்), வாழ்தல் - வாழுதலும், நயவரை - நீதியுடையவரை, நட்டு - நட்புச் செய்து, நள் இருளும் - நடு இரவிலும், கைவிடா-கைவிடாமல், ஒழுகல்-(அவருக்கு இணங்க)நடத்தலும், தெள்ளி- ஆராய்ந்து, வடுவான-தனக்குப் பழிப்பான காரியங்களை,வாராமல-வரவொட்டாமல, காத்தல் - காத்துக்கொளலுதலும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும், குடி - குடிப்பிறப்பிலே, மாசு இலார்க்கே - குற்றம் இல்லாதவர்க்கே, உள - உண்டாகும் (எ - று)

(க-ரை) கீழ மக்கள் கூட்டுறவை விட்டிருப்பதும, மேன்மக்களை எப்பொழுதும் பிரியாதிருப்பதும், தனக்குப் பழி வராமற் காப்பதும் நல்லோர்க்கு உரியன என்பது.

கயவர் - கய என்னும் பண்படியாகப் பிறந்த பெயர. நயம் - நீதி. நள - நடுக்கம; இப்பொருளில் நள்ளிரா அச்சத்தைத் தரும் நடு இரா எனக் கொள்க இருள - பண்பாகுபெயர். உம்-உயர்வு சிறப்பு. வடுவான - பலின்பாற் பெயர். (77)

தூய்மை யுடைமை துணிவுந் தொழிலகற்றும்
வாய்மை யுடைமை வனப்பாகுந்—தீமை
மனத்தினும் வாயினுஞ் சொல்லாமை மூன்றும்
தவத்தில் தருக்கினர் கோள்.

(இ-ள) தூய்மை உடைமை - மனத்தூய்மை யுடையராயிருத்தலும், துணிவு-யும-(மெய்ந் நூல்களாலே)துணியப்பட்ட, தொழில்-நற்செய்கையை, அகற்றும் - விரிக்கின்ற, வாய்மை யுடைமை - உண்மையுடையவனாயிருத்தலும், வனப்பு ஆகும-மயக்கையுருடைய அழகாகிய, தீமை - தீமையைத் தருவதனை, மனத்தினும் - மனத்தால் நினையாமையும, வாயினும் - வாயால், சொல்லாமை-சொல்லாமையும், மூன்றும் - ஆகிய இம் மூன்றும், தவத்தில - தவத்திலே, தருக்கினர் - செருக்கி நின்றவர்களுடைய, கோள் - கொள்கையாம் (எ-று.)

(க-ரை) தூய்மையும், வாய்மையாயிருப்பதுவும், தீமையை நினையாமலும் சொல்லாமலு மிருப்பதும் நற்றவமுடையார செயல் என்பது.

துணிவு - துணியப்பட்டது; தொழிலாகுபெயர் அகற்றும் - அகல் என்னும் முதனிலை யடியாகப் பிறந்த பிறவினைப் பெயரெச்சம். தவத்தினரை நோக்கினமையின் வனப்பு பெண்ணின் வனப்

புக் காயிற்று. மனத்தினைற் சொல்லாமையாவது இலக்கணையால் கிணையாமையாம். தீமை - தீமையைத் தருவது. காரணம்-காரிய மாகச் சொல்லப்பட்டது. (78)

பழியஞ்சான் வாழும் பசுவும் அழிவினுல்
கொண்ட அருந்தவம் விட்டானும்—கொண்டிருந்
தில்லஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்
நெல்லுண்டல் நெஞ்சிற்கோர் நோய்.

(இ - ள்) பழி அஞ்சான் - (உலகம் பழிக்கும்) பழிப்புக்குப் பயப்படாமல், வாழும் - உயிர் வாழுகின்ற, பசுவும் - பசுப்போல வானும், அழிவினால் - கேடு வந்தபோது, கொண்ட - (தனக்கு உரித்தாகக்) கொண்ட, அருந்தவம்-அரிய தவத்தினை, விட்டானும்-விட்டவனும், கொண்டிருந்தும - (தனக்கு உட்பட்டவளாகக்) கொண்டிருந்தும், இல் - மனைவிக்கு, அஞ்சி - பயந்து, வாழும் - நடக்கின்ற, எருதும் - எருது போலவானும், இவர் மூவர் - ஆகிய இம்மூவரும், நெல் உண்டல் - (மக்கள உண்ணக் கடவதாகிய) சோற்றை யுண்ணுதல், நெஞ்சினுக்கு-(அறிவுடையார) நெஞ்சுக்கு, ஓர் நோய் - ஒரு நோயாம் (எ-று)

(க-ரை) பழிக் கஞ்சாதவனும், கேடுற்றதென்று தவத்தை விட்டவனும், மனையாளுக்குப் பயந்து நடக்கும் கணவனும் உண்ணுது ஒழியத் தக்கவர் என்பது

அஞ்சான் - முற்றெச்சம். பசு, எருது - ஒவ்வமை யாகுபெயர் கள் நெல் அரிசிக்கு, இது சோற்றுக்கு ஆயினமையின் இரு மடி யாகுபெயர். 'நெல்லுண்ட நெஞ்சிற்கோர் நோய்' எனப் பாடங்கொளினும் நெல்லீத் தின்ன நெஞ்சுக் குண்டாகும் துன்பத் தோடு ஒத்தவா எனப் பொருள கொளக (79)

முறைசெய்யான் பெற்ற தலைமையும் நெஞ்சில்
நிறையிலான் கொண்ட தவமும்—நிறையொழுக்கம்
தோற்றுதான் பெற்ற வனப்பும் இவைமூன்றும்
தூற்றின்கண் தூவிய வித்து.

(இ - ள்.) முறை செய்யான் - முறையறிந்து செய்யமாட்டாத வன், பெற்ற - அடைந்த, தலைமையும்-தலைமைத்தன்மையும், நெஞ் சில - மனத்தில், நிறை இலான் - உறுதிப்பாடு இல்லாதவன்,

கொண்ட - மேற்கொண்ட, தவமும் - தவமும், நிறை ஒழுக்கம் - குறைவற்ற ஒழுக்கத்தை, தேற்றுதான் - தெளிந்து நடவாதவன், பெற்ற வனப்பும் - பெற்ற அழகும், இவை மூன்றும் - ஆகிய இம் மூன்றும், தூற்றின்கண் - புகலிடத்து, தூவிய - விதைத்த, விதது - விதையை யொக்கும் (எ - று.)

(க-ரை) முறை புரியமாட்டாதவன் கூலிவழியிருப்பதும்,மன வலி யில்லாதவன் தவஞ் செய்வதும், நன்னடக்கை யில்லாதவன் அழகும் வீண் என்பது

நிறை இரண்டனுள முன்னது தொழிற்பெயர் ; பின்னது காலங் கரந்த பெயரெச்சம். தேற்றுதான் - நன்னிலை வினையா லணையும் பெயர். தேறு - முதனிலை (80)

தோள்வழங்கி வாழும் துறைபோல் கணிகையும்
நாள்கழகம் பார்க்கும் நயமிலாச் சூதனும்
வாசிகொண் டொண்பொருள் செய்வானும் இம்மூவர்
ஆசைக் கடலுளாழ் வார்.

(இ - ள்.) துறைபோல் - (பலர்க்கும் பொதுவாய நின்று தன் னிடத்து நீரைக் கொடுக்கும்)துறையினைப் போல, நாள எ வழங்கி-(பலருக்கும் பொதுவாய்நின்று)தனதுதேகனைக்கொடுத்து,வாழும்-வாழ்கின்ற, கணிகையும் - வேசையும், நாள - ஒவ்வொரு நாளும, கழகம் பார்க்கும் - சூதாடும் இடத்தைத தேடி ஆடுகின்ற, நயம இலாச் சூதனும் - நீதியில்லாத சூதாடியும், வாசி கொண்டு - மிக்க வட்டம் வாங்கி, ஒள பொருள-ஒளிய பொருளை, செய்வானும - தேடுவானும், இ மூவர - ஆகிய இந்த மூவரும், ஆசைக் கடலுள - ஆசையாகிய கடலில், ஆழ்வார் - அழுந்துவாரவர (எ-று.)

(க-ரை.) பொருட் பெண்டிர் ஆகிய வேசையும, சூதாடியும், மிகுந்த வட்டி வாங்கிப் பொருள ஈட்டுவாரும் பேராசை பிடித்த வர் என்பது.

ஆசைக்கு மூடிவில்லை யாதலால் அதனைக் கடலென உருவகித் துள்ளார். கணிகை துறை போலுதலாவது வேண்டினோர் யாரும் அடைந்து இன்பங்கொள்ள இசைதல். நாள்-நாளும்; உம் முற்றுப் பொருள் ; தொக்கது. வாசி - வட்டம், வட்டி: திசைச்சொல். (81)

சான்றருள் சான்றன் எனப்படுதல் எஞ்ஞான்றும்
தோய்ந்தாருள் தோய்ந்தான் எனப்படுதல்-பாய்ந்தெழுந்து
கொள்ளாருள் கொள்ளாத கூருமை இம்மூன்றும்
நல்லாள் வழங்கும் நெறி.

(இ-ள்) சான்றருள - (நற்குணங்களால) நிறைந்தவரிடத்தில, சான்றோர் எனப்படுதல - நற்குணங்களால நிறைந்தவன் என்று கருதப்பட நடந்தலும், எஞ்ஞான்றும் -செல்வம் உற்ற காலத்தும் அற்ற காலத்தும், தோய்ந்தாருள் - (ஒரு தன்மையராய்) நட்புக் கொண்டு கலந்தவரிடத்து, தோய்ந்தான் - நட்புக்கொண்டு கலந்தவன், எனப்படுதல் - என்று கருதப்பட நடத்தலும், பாய்ந்து எழுந்து-(தம்மேல கோபத்தோடு) பாய்ந்தெழுந்து, கொள்ளாருள - தமது நற்சொல்லை ஏற்றுக் கொள்ளாதவரிடத்து, கொள்ளாத - அவா ஒப்புக்கொள்ளாத சொற்களை, கூருமை - சொலலாதிருத்தலும், இமூன்றும - ஆகிய இம்மூன்றும், நல ஆள் - யாவர்க்கும நல்லவனும் தன்மையை ஆளுவோன், வழங்கும்-மேற்கொள்ளுமை, நெறி - நெறியாம (எ-று)

(க-ரை) நல்லாருள நல்லா ரெனப்படுதலும, நண்பரோடு நட்புக்கொள்ள வல்லா ரெனப்படுதலும, தன் பேச்சு செல்லா இடத்திற் சொல்லாதிருத்தலும் நல்லவா குணம் என்பது

கொள்ளாத - பலவின்பால் வினையாலணையும் பெயா உள் உருபு மூன்றனுள முன்னிரண்டும உருபு மயக்கம ஆள - தொழிலாகு பெயா. **(82)**

உப்பின் பெருங்குப்பை நீர்படியின் இல்லாகும்
நட்பின் கொழுமூலை பொய்வழங்கின் இல்லாகும்
செப்பம் உடையார் மழையனையர் இம்மூன்றும்
செப்ப நெறிதூரா வாறு.

(இ-ள) உப்பின் - உப்பினது, பெருங் குப்பை - பெரிய குவியல, நீர் படியின் - தன்னில் நீர்படிந்தால், இல ஆகும-இலலாமற் போகும், நட்பின் கொழு மூலை - நட்பினது செழித்த மூலையானது, பொய் வழங்கின் - பொய்யாகிய நெருப்பைப் பெய்தால், இல் ஆகும் - அழிந்து போம், செப்பம் உடையார்-நடுவு நிலைமையுடையார், மழை அனையர் - மழைபோல எல்லார்க்கும் ஒப்ப உபகரிப்பார், இ மூன்றும் - நீர் படியாமையும் பொய் வழங்கா

மையும் மழையை ஒத்தலும் ஆகிய மூன்றும், செப்பமெறி - நல் வழியை, தூராத ஆறு - தூராமைக்குக் காரணமாகிய சாதனங் களாம் (எ-று.)

(க-ரை.) உப்பின் குணியல நீர படியாமையும், நட்டினர் பொய் வழங்காமையும், மழையேயாயார் செப்ப முடைமையும் நல வழியைக் கெடுக்கா முறைகள் என்பது.

படியின் - விரோயெச்சம்; படிதல் - தோய்தல், பொருந்தல். செப்பம இரண்டனுள் முன்னது பண்பாரு பெயர்; பின்னது பண் புப் பெயர். (83)

வாய்நன் கமையாக் குளனும் வயிறுரத்
தாய்முலை யுண்ணாக் குழவியும் சேய்மரபில்
கல்விமாண் பில்லாத மாந்தரும் இம்மூவர்
நல்குரவு சேரப்பட் டார்.

(இ-ள்) வாய் - நீர வரும் வழி, நன்கு அமையாக் குளனும் - நன்றாக அமைந்திராத குளமும், வயிறு ஆர - தன் வயிறு நிரம்பும் படி, தாய் முலை உண்ணா - தாயின் முலைப்பாலை உண்ணாத, குழவி யும் - குழந்தையும், சேய் மரபில் - உயர்ந்த முறைமையில், கல்வி மாண்பு - நூல்களைக் கற்றலினது மாட்சிமைப்பட்ட அறிவு, இல லாத மாந்தரும் - இல்லாத மனிதரும், இ மூவர - ஆகிய இம் மூவ ரும, நல்குரவு சேரப்பட்டார - வறுமையால பீடிக்கப்படடவரா வர் (எ-று)

(க-ரை.) குளத்துக்கு நீர் இன்மையும், குழவிக்குப் பா லின் மையும், மாந்தருக்கு அறி வின்மையும நல்குரவு எனப்பட்டன என்பது

வாய் - வழி. குளன் - குளம் என்பதன் போலி. சேய் மர பில் - உயர்ந்த குலத்தில் எனவும், உயர்ந்த முறையில் எனவும் பொருள் கொள்ளலாம். இம்மூவரும் நல்குரவு அடைந்து வருந்து தல் உறுதியாதலால், துணிவு பற்றி நல்குரவு சேரப்பட்டார் என இறந்த காலத்தாற் கூறினர். சேய் மரபில் என்றதாவது நல்லா சிரியரிடத்து அவர் சூறிப்பின்வழி ஒழுகி முன்னர் கிகண்டு கற்றுச்

ஆராய்ச்சி செய்து இலக்கண நூல் முதலியவற்றைக் கற்பது என்பதாம். (84)

எள்ளப் படுமரபிற் ருகலும் உள்பொருளைக்
கேட்டு மறவாத கூர்மையும் முட்டின்றி
உள்பொருள் சொல்லும உணர்ச்சியும் இம்மூன்றும்
ஒள்ளிய ஒற்ருள் குணம்.

(இ-ள.) எளளப்படும் - (தன் செய்கை பகைவரால) நன்ரு மதிக்கப்படாத, மரபிற்று ஆகலும் - முறைமையை உடையதாகலும, உள் பொருளை - (அப் பகைவரிடத்து) நடந்துள்ள காரியத்தை, கேட்டு மறவாத - கேட்டுப் பின் மறவாத, கூர்மையும் - கூரிய புடைமையும், உள் பொருள - அப் பொருளை, முட்டு இன்றி - தடையின்றி, சொலலும் உணர்ச்சியும்-(தன் அரசனுக்குச் சொல் லுகின்ற தெளிவுடைமையும், இ மூன்றும் - ஆகிய இமமூன்றும், ஒளளிய - அறிவுளள, ஒற்று ஆள - வேவுகாரனது, குணம்-தன் மையாம (ஈ-று.)

(க-ரை.) பகைவன் நாட்டில் தான் இருந்து செய்யும் செய்கை பிறர் கருதத் தக்கது ஆகாதபடி செயதலும், அவன் கருத்தறிந்து மறவாதிருத்தலும், அக் கருதலை அரசாகளுச் செவ் வையாகத் தெரிவிக்கும வலிமை பெறறிருதலும் வேவுகாரர்க் குரிய குணங்களாம் என்பது.

மரபிற்று - ரூறிப்பு விணைமுற்று ; ரூறிப்பு விணையாலணையும் பெயருமாம். உள பொருள - உண்மையாகிய பொருள் ; பண் புத்தொகை. முட்டு - முட்டுதல்; முதனிலைத் தொழிற்பெயர். (85)

அற்புப் பெருந்தளை யாப்பு நெகிழ்ந்தொழிதல்
கற்புப் பெரும்புணை காதலின் கைவிடுதல்
நட்பின் நயநீர்மை நீங்கல் இவைமூன்றும்
குற்றந் தருஉம் பகை.

(இ-ள்.) அன்பு பெருந்தளை - அன்பிணைலாகிய பெருந்தளையி னது, யாப்பு-கட்டு, நெகிழ்ந்து ஒழிதல் - தன்னை விட்டுத் தளர்ந்து நீங்குதலும், கற்பு-கல்வியாகிய, பெரும் புணை-பெரிய தெப்பத்தை, காதலின் - பொருள் முதலியவற்றின் விருப்பினால், கை விடுதல் - முற்றும் விட்டுவிடுதலும், நட்பின் - ஒருவரிடத்தில் வைத்த நட்பி னால், நயம் நீர்மை - நீதித் தன்மையினின்று, நீங்கல்-நீங்குதலும், இவை மூன்றும் - ஆகிய இவை மூன்றும், குற்றம் தருஉம்-(ஒருவ னுக்குக்) குற்றங்களை விளைக்கின்ற, பகை-பகைகளாம் (ஈ-று.)

(க-ரை.) உயிரிடத்தில் அன்பற்றிருப்பதும், பொருட்பற்றுல் கல்வியை விற்றலும், நட்பிலில் ஒருபாற் கோடுதலும் பகைபோற் குற்றந் தருவன என்பது.

அற்புத் தளை - மூன்றும் வேற்றுமை உருபும் பயனுமுடன் றொக்க தொகை; அன்பாகிய தளை யெனின் பண்புத் தொகையாம். தளை - முதனிலைத் தொழிலாகு பெயர். கலவி, ஒருவனை அறிவு நூல்களை யுணர்ந்து பொருளியல்றிந்து பிறவிக் கடலைக் கடந்து வீடுபெறச் செய்வதால், பெரும் புணை யென உருவகிக்கப்பட்டது. குற்றம்-இருமைப் பயனு மிழந்தல். தருஉம்-செய்யுளிசைநிறை யளபெடை. (86)

கொல்வது தானஞ்சான் வேண்டலும் கல்விக்
ககன்ற இனம்புகு வானும் இருந்து
விழுநிதி குன்றுவிப் பானுமிம் மூவர்
முழுமக்க ளாகற்பா லார்.

(இ-ள்.) கொல்வது - (ஓருயிரைக்) கொல்வதற்கு, தான் அஞ்சான்-தான் அஞ்சாதவனாகி; வேண்டலும் - அதனைச் செய்ய விரும்புதலும், கல்விக்கு—, அகன்ற - நீக்கமாகிய, இனம் - கூட்டத்திலே, புகுவானும்-நுழைகின்றவனும், இருந்து - (ஒரு முயற்சியும்) செய்யாத வனுயிருந்து, விழு நிதி - (முன்னுளள) பெருஞ் செல்வத்தை, குன்றுவிப்பானும் - (செலவு செய்து) குறைவிப்பவனும், இ மூவர் - ஆகிய இம்மூவரும்; முழுமக்கள - மூடர்கள, ஆகல்பாலார்-ஆகுதலாகிய தன்மையை யுடையார் (எ-று.)

(க-ரை.) அஞ்சாது ஒருயிரைக் கொலை புரியக் கருதுவதும், படிப்பிற் பற்றறவரோடு சேர்வதும், முன்னோர் பொருளைப் பெருக்காமல் செலவழிப்பதும் மூடர் செய்கை என்பதாம்.

கொல்வது - தொழிற் பெயர். அஞ்சான் - முற்றெச்சம். கல்விக்கு - கு உருபு நீக்கப் பொருளில் வந்தது. அறிவின்மையால் மக்கட்டன்மையில் குறைந்தவரை முழுமக்கள் என்றது மங்கல வழக்கு. இந்த இலக்கணமுடையதாகக் கொண்டு அறிவு நுழையப் புகையில்லாத மக்கள எனப் பொருள் கூறுவாருமுண்டு. பாலார் - பண்படியாகப் பிறந்த பெயர். (87)

பிணிதன்னைத் தின்னுங்கால் தான்வருந்து மாறும்
தணிவில் பெருங்கூற்று யிருண்ணு மாறும்

பிணிசெல்வ மாண்பின் றியங்கலிவை மூன்றும
புணையின் நிலைகலக்கும் ஆறு.

(இ-ள்) பிணி - நோயானது, தன்னை—, கின்னுங்கால் - வருத்தும்போது, தான் வருந்தும ஆறும் - (ஒருவன்) தான் (அதற்கு) வருத்தப்படும் வகையும, பெரும்கூற்று-பெரிய எமன், உயிர் உண்ணும ஆறும - உயிரைக் கொண்டுபோக வருத்தும் வகையும், பிணை-(சுற்றத் தோ முதலியோ) வந்து சேர்வதற்குக் காரணமாகிய, செலவம் - செல்வமானது, மாண்பு இன்று - நிலை யிலலாமல, இயங்கல ஆறும் - செலலும் வகையும், இவை மூன் றும் - ஆகிய இ மூன்றும, புணையின் - (ஒருவனுக்குப் பிறவிப் பெருங்கடற்கு) மரக்கலமாயுள்ள மனத்தின், நிலை - நிலையை, கலக்கும் - கலக்குகின்ற, ஆறு-வழிகளாம (எ.று.)

(க-ரை) நோயால் வருந்துவதும், உயிர் போக நோவதும், செல்வம அழிவதும் மனவுறுதியைக் கலக்குவன என்பது.

பிணி-கருத்தாப்பொருள் உணர்த்தும் இகர விகுதி புணர்ந்து கெட்ட தொழிற்பெயர். மாண்பு-நிலைமை இயங்கல என்பதன் இறுதியில் உம தொக்கது. ஆறு என்பதை இயங்கலோடும் கூட்டுக. (88)

அருளினை நெஞ்சத் தடைகொடா தானும்
பொருளினைத் துவ்வான் புதைத்துவைப் பானும்
இறந்தின்ன சொல்லகிற் பானுமிம்மூவர்
பிறந்தும் பிறந்திலா தார்.

(இ ள்) அருளினை - அருளை, நெஞ்சத்து - மனத்தினிடத்து, அடை கொடாதானும் - நிறைத்து வையாதவனும, பொருளினை-செல்வத்தை, துவ்வான் - (தானும்) நுகராது, புதைத்து - (பிறர்க் குங கொடாமல) பூமியில் மறைத்து, வைப்பானும்-வைக்கின்றவ னும், இறந்து-தன்னிலை கடந்து, இன்ன-பிறர்க்குத் துன்பந் தருஞ் சொற்களை, சொல்லகிற்பானும்-சொலல வல்லவனும், இ மூவர்-ஆகிய இம்மூவரும், பிறந்தும் - மக்கட் பிறப்பிற் பிறந்திருந்தும், பிறந்து இலாதார் - பிறவாதவராவர் (எ-று.)

(க-ரை) அருளில்லாதவனும், பொருளை வீணாய்ப் புதைத்து வைக்கின்றவனும், பிறர்க்கு மனம் மிகவும் வருந்தும்படி பேசு கின்றவனும் மக்கட் பிறப்பைச் சார்ந்தவராகக் கருதப்படார் என்பது.

அடை - அடைக்கப்படுவது. துவ்வான் - முற்றெச்சம்; து - முதனிலை. இறந்து-கடந்து, இற - கட இறந்து இன்ன சொல்ல இற்பான் என்பதறஞ் நன பயகவன் இறக்க அதன் பின்னும் தீய சொல் சொல்லவல்லவன் என்றுரைத்தலுமாம். (89)

ஈதற்குச் செய்க பொருளை அறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை — யாதும்
அருள்புரிந்து சொல்லுக சொல்லிலும் மூன்றும்
இருளுலகம் சேராத ஆறு.

(இ.ள்.) பொருளை - செல்வத்தை, ஈதற்கு - பிறருக்குக் கொடுக்கும் பொருட்டு, செய்க-தேடக்கடவன், அறம் நெறி-அறத்தின் வழியில், சேர்தற்கு - சேரும பொருட்டு, பெரும் நூலைச் செய்க - பெருமையாகிய நூற்பொருளைக் கற்கக் கடவன், யாது சொல்லியும் - எதனால்மைத்தாகிய சொல்லியும், அருள புரிந்து - அருளை விரும்பி, சொலலுக - சொல்லக் கடவன், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும, இருள உலகம் - நரக உலகை, சேராத ஆறு-சேராமைக்குக் காரணமாகிய வழிகளாம் (எ-று.)

(க-பை.) அறஞ செயற்காகப் பொருளையும், அறநெறியில் ஒழுகுவதற்காகப் படிப்பையும, அருள விளங்கும்படி பேச்சையும ஒருவர் கொளவேண்டு மென்பது.

ஈதற்கு—ஈ, பொருட்டுப் பொருள். நூலைச் செயல் என்பது இங்குத் தருதியால் கறபதன்மேற் கூறப்பட்டது. யாதும் - உம் உயாவு சிறப்பு. யாதும் என்பதன் உம்மையைச் சொல்லையென்பதனோடு கூட்டுக. (90)

பெறுதிக்கண் பொச்சாந் துரைத்தல் உயிரை
இறுதிக்கண் யாமிழந்தேம் என்றல் — மறுவந்து
தன்னுடம்பு கன்றுங்கால் நாணுதல் இம்மூன்றும்
மன்னு உடம்பின் குரி.

(இ-ள்.) உயிரை - (தாய்தந்தை முதலிய) உயிர்க்கினை, பெறுதிக்கண் - பெற்றவிடத்து, பொச்சாந்து - (பெற்றோர் தமக்குச் செய்த உதவியையும், தாம் அவர்க்குச் செய்ய வேண்டிய உதவியையும்) மறந்து, உரைத்தல் - இகழ்ந்து சொல்லுதலும், இறுதிக்

கண் - அவர் தம் கால முடிவில், நாம் இழந்தோம் - நாம் எல்லா வற்றையும் இழந்துவிட்டோம், என்றல் - என்று இரங்குதலும், மறு - நோய், வந்து - வருதலினை, தன் உடம்பு - தன்னுடைய உடல், கன்றுங்கால் - மெலியுங் காலத்தில், நாணுதல் - (முன் அறஞ்செய்திலோமே யென்று தனக்குளளே) நாணப்படுதலும், இ மூன்றும் - ஆகிய இம் மூன்றும், மன்ற - நிலைபெறுதலில்லாத, உடம்பின் சுறி - உடம்பை யுடையார்மிடத்துத் தோன்றும் அடை யாளங்களாம் (எ-று)

(க-ரை.) தாய்தந்தையர் இருக்குமபோது அவரை இகழ்ந்து நடப்பதும், அவர்கள இறந்தபோது மீளைப்பத் துன்பப்படுவதும், துன்பம் நோந்தபோது அறஞ செய்யாது போனேமே யென்று நாணுவதும் உடறபற்று மிக்க மூடர்கள செய்கை என்பது.

பெறுதி, இறுதி - இவிருதிபெறற தொழிற் பெயர்கள். நடு நின்ற 'உயிரை' என்னுஞ் சொல பெறுதிக்கண் என முன்னும், இறுதிக்கண் எனப் பின்னும் சென்றடைதலால் தாப்பிசைப் பொருள்கோள். செய்யும் கடமைகளைச் செய்த சிறப்புப்பற்றித் தாய்தநதை முதலியோரை அறிவுப் பொருளாகிய உயிரென்றும், செய்ந்நன்றி யறிதல் முதலிய உயிர்க்குணம் இவனிடத்துத் தோன் றுமையாகிய இழிவுபற்றி இவனை உடம்பு என்றுங் கூறினமை யால், அவ் விரண்டும் முறையே அவ் வுயிரவு இழிவுகளைப் பற்றி வந்த கிளை வழுவமைதி. பொச்சாறது : பொச்சா, பகு.(91-)

விழுத்திணைத் தோன்று தவனும் எழுத்திலை
யொன்றும் உணராத ஏழையும் — என்றும்
இறந்துரை காமுறு வானுமிம் மூவர்
பிறந்தும் பிறவா தவர்.

(இ-ள்.) விழுத்திணை - (அற ஒழுக்கங்களைப் பெறுதற்குரிய) சிறந்த குலத்தில, தோன்றுதவனும் - பிறவாதவனும், எழுத்திணை - இலக்கண நூலில, ஒன்றும் உணராத-எவ்வளவு சிறிதும் அறிந்து கொள்ளாத, ஏழையும் - பேதையும், என்றும் - எப்பொழுதும், இறந்து - முறைதப்பி, உரை - சொற்களை, காமுறுவானும் - பேச விரும்புகின்றவனும், இ மூவர் - ஆகிய இம்மூவரும், பிறந்தும் - மக்கட் பிறப்பிற் பிறந்தும் - பிறவாதவர் - (பிறப்பின் பயனை யடையாமையால்) பிறவாதவராவார் (எ-று.)

(க - ரை.) நற்குலத்திற் பிறவாதவனும், படிப்பில்லாதவனும், மரியாதை தப்பிப் பேச முயல்கின்றவனும மனிதர் என்று சொல்லத் தகாதவர் என்பது.

விழுத்திணை - விழுப்பமாகிய திணை; பண்புந தொகை. எழுத்து - தன்னை யுணர்த்தும் இலக்கண நூலுக் காதலால காரியவாகுபெயர். ஒன்றும் - உம் முற்றுப் பொருளுடன் இழிவு சிறப்புப் பொருளிலும் வந்தது. (92)

இருளாய்க் கழியும் உலகமும் யாதும்
தெரியா துரைக்கும் வெகுள்வும் — பொருளல்ல
காதல் படுக்கும் விழைவும் இவைமூன்றும்
பேதைமை வாழும் உயிர்க்கு.

(இ - ள்.) இருளாய் - (அறிவில்லாதவாக்கிடமாய் அதனால்) இருட்டாய், கழியும் - நாள கழிக்கின்ற, உலகமும் —, யாதும - (நன்மை தீமைகளில) ஒன்றும, தெரியாது - தெரியாமல், உரைக்கும் - சொல்கின்ற, வெகுளவும் - கோபமும, பொருள அலல-நற் பொருள் அல்லாதவற்றில, காதல் படுக்கும் - அன்பு வைக்கச் செய்யும், விழைவும் - விருப்பமும், இவை மூன்றும் - ஆகிய இம் மூன்றும், வாழும் உயிாக்கு - உடலோடு கூடி வாழுகின்ற உயிர்கட்கு, பேதைமை-அறியாமையைத் தருவனவாம (எ-று.)

(க-ரை.) அறிவில்லாதவர் இருக்கும் இடமும், நன்மை தீமை தெரியாது கோபித்துரைப்பதும, தீயவைகளில செலலும் விருப்பமும் மேன்மேலும் அறியாமைக்கு ஏதுவாகிய காரியங்களாம என்பது.

இருள் அறியாமைக்கு உவமை யாகுபெயா. இடத்தின் கிகழும உயிர்களின் தன்மையை அவ்விடத்தின்மே லேறறி இலக்கணையால் இருளாய்க் கழியும் உலகம் என்றார். அலல - பண்படியாகப் பிறந்த பெயா. (93)

நண்பில்லார் மாட்டு நசைக்கிழமை செய்வானும்
பெண்பாலைக் காப்பிகழும் பேதையும் — பண்பில்
இழுக்கான சொல்லாடு வானுமிம் மூவர்
ஒழுக்கம் கடைப்பிடியா தார்.

(இ - ள்.) நண்பு-நட்புக் குணம், இல்லார் மாட்டு-இல்லாதவரிடத்து, நசைக்கிழமை - அன்புரிமையை, செய்வானும் - செய்

கின்றவனும், பெண்பாலை - மனைவியை, காப்பு - காப்பதை, இகழும்-இகழுகின்ற, பேதையும் - அறிவில்லாதவனும், பண்பு இல்-குணமில்லாத, இழுக்கு ஆன - வழுவுதலான, சொல ஆடுவானும்-சொல்லைச் சொலபவனும், இ மூவர் - ஆகிய இம் மூவரும், ஒழுக்கம் - தமக்குரிய ஒழுகுகதனை, கடைப்பிடியாதார் - உறுதியாகக் கொள்ளாதவராவர் (எ-று)

(க-ரை.) நண்பராகத் தகாதவரை நட்புச் செய்கின்றவனும், மனைவியைக் காவாதவனும, இழிமொழி பேசுகின்றவனும் நல்லொழுக்கமில்லாதவா என்பது.

மாட்டு - ஏழனுருபு நரைக்கிழமையாவது, நண்பர்கட்குச் செய்யவேண்டிய கடமை. இழுக்கு - முதனிலைத் தொழிற் பெயர். (94)

அறிவழுங்கத் தின்னும் பசிநோயும் மாந்தர்
செறிவழுங்கத் தோன்றும் விழைவும் — செறுநரின்
வெவ்வுரை நோன வெகுள்வும் இவைமூன்றும்
நல்வினை நீக்கும் படை.

(இ-ள்) அறிவு அழுங்க - நல்லறிவு கெடும்படி, தின்னும்-வருத்துகின்ற, பசிநோயும - பசியாகிய நோயும், மாந்தர் - கல்லோர், செறிவு அழுங்க - நெருங்குதல் கெடும்படி, தோன்றும் விழைவும் - உண்டாகும் விருப்பமும, செறுநரின் - பகைவரிடத்துண்டாகும், வெவ்வுரை-கொடிய மொழிகளை, நோன-பொறுக்காத, வெகுள்வும் - கோபமும, இவை மூன்றும் - ஆகிய இந்த மூன்றும், நல்வினை - நல்ல வினையை, நீர்க்கும் - நீக்குகின்ற, படை - படைக்கருவிகளாம் (எ-று.)

(க-ரை.) கொடும்பசியாலும், பெருவிருப்பாலும், கொடுமொழி பொறுக்காத கோபதாலும் அறமுறை கெடும் என்பது.

செறிவு - தொழிற்பெயர். செறுநர் - வினையாலணையும் பெயர். நோன : நோன், பகுதி. வெவ்வுரை - வெம்மை+உரை. பசிநோய்-இருபெயரொட்டுப் பண்புத் தொகை. (95)

கொண்டான் குறிப்பறிவான் பெண்டாட்டி கொண்டான
செய்வகை செய்வான் தவசி கொடிதோரி
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை.

(இ-ள்.) கொண்டான் - கொண்ட கணவனுடைய, குறிப்பு அறிவாள் - குறிப்பறிந்து நடக்கின்றவள், பெண்டாட்டி - மனைவியாவாள, கொண்டன - தான் மேற்கொண்ட விரதங்களை, செய்வகை - செய்யும் முறைப்படி, செய்வான் - செய்பவன், தவசி - தவசியாவான், கொடிது - தீங்கினை, ஓரீஇ - நீக்கி, நல்லவை - (குடிகளுக்கு) நன்மையானவற்றை, செய்வான் - செய்பவன், அரசன் - அரசனுவான், இ மூவர் - ஆகிய இவர் மூவரும், பெய் என - (மழையைப்) பெய் என்று சொல்ல, மழை பெய்யும்-மழை பொழியும (எ-று.)

(க-ரை.) குறிப்பறிந்து நடக்கும் பெண்டாட்டியும், நோன்புகளை முறைப்படி நடத்துகின்ற தவசியும், குடிகளுக்குத் தீமையை விலக்கி நன்மையைச் செய்கின்ற அரசனும உளள இடத்தில மழை தவறாது பெய்யும் என்பது.

பெண்டு ஆட்டி - பெண்டு ஆம் தன்மையை ஆளுபவள. தவசி செய்வகையாவன, மனம் பொறிவழியிற் போகாமல் நிற்றற் பொருட்டு நோன்புகளால் உண்டி சுருக்குதல், மழை பனி கீர்களை வெயில் இவற்றில நிற்றல் முதலியவைகளை மேறகொண்டு அவற்றால தமக்கு வரும் துன்பங்களைப் பொறுத்தல. (96)

ஐங்குரவ ராணை மறுத்தலும் ஆர்வுற்ற
எஞ்சாத நட்பினுள் பொய்வழக்கும் — நெஞ்சமர்ந்த
கற்புடை யாளைத் துறத்தலும் இம்மூன்றும்
நற்புடையி னானர் தொழில்.

(இ-ள்.) ஐங்குரவர் - ஐந்து பெரியோர்களுடைய, ஆணை - கட்டளையை, மறுத்தலும் - மறுத்து நடத்தலும், ஆர்வு உற்ற - விரும்பிய, எஞ்சாத - குறையாமல் வளர்கின்ற, நட்பினுள் - நட்புச் செய்வாரிடத்து, பொய் வழக்கும்-பொய் பேசுதலும், நெஞ்சு அமர்ந்த - (தன்னை) மனத்தால் விரும்பிய, கற்பு உடையாளை - கற்புடைய மனைவியை, துறத்தலும்-விடுதலும், இ மூன்றும்-ஆகிய இம்மூன்றும், நல்புடை - அறந்தினது, இல் ஆளர் - இன்மையை ஆளுதலுடையாரது, தொழில் - தொழில்களாம் (எ-று.)

(க - ரை.) ஐங்குரவர் ஆணைப்படி நடவாமையும், நண்பனிடத்துப் பொய் சொல்லுதலும், கற்புடை மனைவியைத் துறத்தலும் பாவச்செய்கைகள் என்பது.

ஐங்குரவா - அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமமூன். நெஞ்சு - இடவாகுபெயர். வழகரு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். துறத்தல் - முற்றும் நீக்கிவிடுதல் (97)

செந்தீ முதல்வர் அறம்நினைந்து வாழ்தலும்
வெஞ்சின வேந்தன் முறைநெரியில் சேர்தலும்
பெண்பால் கொழுநன் வழிச்செலவும் இம்மூன்றும்
திங்கள்மும் மாரிக்கு வித்து.

(இ-ள்.) செந்தீ - வேள்வித் தீ, முதல்வர் - வளர்க்கின்ற அந்தணாகள், அறம்-தமக்குரிய அறத்தை, நினைந்து வாழ்தலும் - மற்றவாது வாழ்தலும், வெம சின வேந்தன் - கொடுமையாகிய கோபத்தைக் காட்டுகின்ற அரசன், முறை நெரியில் - முறையாக ஆளாம வழியில், சேர்தலும் - சேர்ந்து நடத்தலும், பெண்பால - பெண்ணுக்கு உரிய குணம அமைந்தவள், கொழுநன் வழி - தன் கணவனுடைய குறிப்பின் வழியில், செலவும - நடத்தலும், இ மூன்றும - ஆகிய இம்மூன்றும, திங்கள் - மாதம் தோறும் பெயயவேண்டிய, மும்மாரிக்கு - மூன்று மழைக்கும, வித்து - காரணங்களாம (எ-று)

(க-ரை.) அந்தணர் மறைவழி நடத்தலாலும், அரசன் செங்கோல் நெறி பிறழாதாலும, மனைவி கணவனுக்கு இசைந்து நடப்பதாலும் திங்கள மும்மாரி பொழிந்து நாடு செழிக்கும என்பது.

தீக்களில வேளவித்தீ சிறந்தகாலால் வேள்வித் தீயைச் செந்தீ என்றார. செலவு, தொழிற்பெயர். முறை : காலியாகு பெயர். (98)

கற்றுரைக் கைவிட்டு வாழ்தலும் காமுற்ற
பெட்டாங்கு செய்தொழுகும் பேதையும் — முட்டின்றி
அல்லவை செய்யும் அலவலையும் இம்மூவர்
நல்லுலகம் சேரா தவர்.

(இ-ள்.) கற்றுரை - கற்றறிவுடையாரை, கைவிட்டு - முற்றும் விட்டு நீங்கி, வாழ்தலும் - வாழ்பவனும், காமுற்ற - தான் விரும்பியவற்றை, பெட்டாங்கு - விரும்பியதற்போல, செய்து ஒழுகும் - செய்து நடக்கும், பேதையும் - அறிவில்லாதவனும், முட்டு இன்றி - தடையில்லாமல், அல்லவை செய்யும் - தீங்குகளைச் செய்

யும், அலவலையும் - பேச்சுக்காரனும், இ மூவா - ஆகிய இம்மூவ ரும், நல் உலகம் - நல்ல உலகங்களை, சேராதவர் - சேராதவ ராவர் (எ-று)

(க.ரை.) கற்றவரைக் கைவிட்டிருப்பதும், வேண்டியவற்றை ஆராயாமல் செய்யத் துணிதலும், தீங்குகளைச் செய்து அவற றைப் பற்றிப் பேசுதலும் நல்ல உலகம் சேரக் காரணமாக மாட்டா என்பது.

வாழ்தல் என்பது வாழ்வானுடைய தற்கிழமையாகி நிற்ற லால் சேராதவர் என்ற குறிப்பால அவ்வாழ்வோனை உணர்த்தி யது; பெட்டாங்கு - பெட்ட ஆங்கு. (99)

பத்திமை சான்ற படையும் பலர்தொகினும்
எத்துணையும் அஞ்சா எயிலரணும் — வைத்தமைந்த
எண்ணின் உலவா விழுநிதியும் இம்மூன்றும்
மண்ணுளும் வேந்தர்க் குறுப்பு.

(இ-ள்.) பத்திமை சான்ற - (தம்மேல்) அன்பு நிறைந்த படையும் - சேனையும், பலர் தொகினும் - பகைவர் பலர் கூடி எதிர்ப்பினும், எத்துணையும - எவ்வளவும், அஞ்சா - பயப்பட வேண்டாத, எயில அரணும் - மதிலரணும், வைத்து - வைக்கப் பட்டு, அமைந்து - நிறைந்துள்ள, எண்ணின் - எண்ணப்புகின், உலவா - முற்றுப்பெறுத, விழு நிதியும் - சிறப்பாகிய பொருள் வைப்பும், இ மூன்றும்-ஆகிய இமமூன்றும், மண் ஆளும்-பூமியை ஆளுகின்ற, வேந்தர்க்கு - அரசர்க்கு, உறுப்பு - உறுப்புகளா (எ-று.)

(க-ரை.) படையும், மதிலரணும், மிக்க செல்வமும் நன் கமையப்பெற்றுள்ள அரசனே சிறந்தவன் என்பது

படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆகிய ஆறும் அர சர்க்கு உறுப் பென்று வள்ளுவர் கூறியிருக்கவும் இவர் படை அரண் செல்வம் ஆகிய மூன்றைமட்டும் குறித்தது அமைச்சை யும் நட்பையும் படையுள்ளும், நாட்டை அரணுள்ளும் அடக்கிய தலை லென்க. எயிலரண் என்றது மற்றை மலை நீர் காடு அரண் களையும் கருதியதாம். உறுப்பு-தொழிலாகுபெயர். மண்-கருவி யாகுபெயர். (100)

திருக்குறள்

செய்யுள் முதற் குறிப்பு அகராதி

[எண் - பக்கவெண்]

அச்ச அமலே	52	கண்ணகல	1
அருந்ததிக்	3	கண்ணுக்கணி	44
அருநதொழில்	54	கயவரைக்	59
அருமறை	46	கல்லாக்	4
அருளீனை	67	கழகத்தால	37
அலந்தார்க்	36	கற்றலைக்	73
அறிவழுங்கத்	71	காண்டகு	22
அறபுப்பெருந்தலை	65	காவோடறக்	55
ஆசைபிறன்	19	காலதூய்மை	39
ஆற்றலீன	39	கிளைஞர்க்	48
இரந்துகொண்	57	குருடன்மலை	44
இருளாய்க்	70	குறளையுள	33
இல்லார்க்கொன்	54	கொட்டியளந்	47
இழுக்கல்	13	கொண்டான்	71
ஈதற்குச்	68	கொலிகின்று	58
உடுத்தாடை	56	கொலயாளனைக்	18
உண்பொழுது	25	கொல்வது	66
உப்பின்	63	கொழுவலீன	53
ஊனுண்டு	32	கொளபொருள்	42
எதிர்நிற்கும்	53	கோலஞ்சி	30
எள்ளப்படு	65	சான்றருள்	62
ஏவாது	41	சில்சொற்	40
ஐங்குரவரா	72	சீலம் அறிவான்	13
ஐயறிவும்	49	செந்தீமுத	73
ஒருதலையான்	17	செருக்கினல்	23
ஒல்வதறியும்	24	தன்குணம்	4
கணக்காயர்	10	தன்பயம்	45

தன்னச்சிச்	28	பெருமையுடை	9
தன்னை வியந்து	34	பெறுகிக்கண்	68
தாளாளன்	12	பேளய்ப்	49
தானங்கொடுக்	22	பொய்வழங்கி	14
தூய்மை	60	மண்ணின்மேல்	15
தூர்ந்தொழுகிக்	43	மாரிநாள்	59
தொல்லவையுள்	8	முந்தை எழுத்	46
நோன் வழங்கி	62	முகநீர்த்	32
நண்பில்லார்	70	முறைசெய்யான்	61
நல்லிருந்	51	மூர்பின்கண்	16
நன்றிப்பயன்	50	மூன்றுகடன்	31
நிறைநெஞ்	56	வருவாயுட்	20
நுண்மொழி	29	வழங்காத்	6
நோவஞ்சா	51	வளனன்மை	58
பகைமுன்னா	5	வாய்நன்கமை	64
பத்திமை	74	வாயின் அடங்குதல	37
பல்லவையுள்	28	வாளோடீன்	7
பழமையை	48	விருந்தின்றி	38
பழியஞ்சான்	61	விளியாதான்	11
பற்றென்னும்	21	விழுத்தினை	69
பிணிதன்னை	66	வெகுளி	35
பிறர்தன்னைப்	6	வெல்வது	26
புலைமயக்கம்	35	வைததனை	41
பெண்விழைந்து	27		

திரிகடுகம்

அருஞ்சொற் பொருள் அநாதி

[எண். செய்யுள் எண்]

அகறல்-நீங்குதல் 9
அரில - குற்றம் 1
அருக்கும் - குறைக்கின்ற 50
அலந்தார்க்கு-துன்பப்பட்ட வர்க்கு 41
அலவலை - கவலைகொள்ளு தலை 37
அல்சூல - நிதம்பம் 25
அல்பொருள - பாவம் 72
அவாத்தேர் - ஆசையாகிய தேர 22
அவையுள - சபையில் 8
அழுக்காறு - பொருமை 30
அழுங்க - கெடும்படி 95
அளறு - நரகம் 24
ஆய் - ஆராய்ந்தெடுத்த 25
ஆர்க்கும் - கட்டுகின்ற 23
ஆர்த்த - நிறைத்த 8
ஆற்றும்பகடும்-செய்யவல்ல கடாவும் 69
இகந்து - கடந்து 70
இடும்பை - துன்பம் 60
இயங்கல் ஆறு - செல்லும் வகை 88
இரந்து - கெஞ்சி 68
இருதலையும் - இரண்டிடத் தும் 18
இருளலகம் - நரகம 91
இருளாநீர - மயக்கம நீங்க 56
இலயம் - வீடு 3
இழிந்து - இறங்கி 5
இழுக்கல் - வழுவுதல் 14
இறை - அணி 44
இறைதுயர - முறைதப்பிச் சொலலும் சொல் 92
ஈர்ந்த - பிளக்கப்பட்ட 51
உர்வளை - குளிர்ந்த வளைய லணிந்தவள 63
உரு - உடம்பு 18
உளளல் - உளளான் எனறும் சிறு பாலவை 7
ஊராண்மை - பிறர்மேற் செல்லுகின்ற ஆண்மை யாகிய செருக்கு 6
ஊழ் - முறை 15
ஊறிய - ஊறும்படி 48
ஊன் - மாமிசம் 36
எச்சம் - மக்கள் 62
எண்ணின் உலவா - எண் ணிக்கைகடில் அகப்படாத 100
எயில் - மதில் 100
எள்ளா - இகழ 20
ஏலா - தகாத 32
ஏற்றார்க்கு - இரந்தவர்க்கு 45

ஐங்குரவர் - ஐந்து பெரியார் 97
ஒருதலை - உறுதி 18
ஒல்வது - செய்யக்கூடியது 26
ஒற்றுள் - வேவுகாரர் 55
ஓரீஇ - நீக்கி 96
கங்குல் - இரவு 4
கடிந்த - நீக்கிய 23
கடைமணி - பூண் 33
கணக்காயர் - நூலாய்ந்தவர், ஆசிரியர் 10
கணிகை - வேசை 24
கயவர் - கீழ்மக்கள 51
கலிமா - குதிரை 46
கழகத்தால - சூதாட்டத்தால் 42
கறுவி - வயிர மடைந்து 46
கறை - மாதவிடாய் 66
கன்றுங்கால் - மெலியுங் காலத்து 91
காய்தல் - வெறுத்தல் ,,
கால் - நடை 46
காழ்த்த - வயிரம்பற்றிய 75
கிழத்தி - கிழமையுடையவள் 64
கிழமை - உரிமை 58
குறளை - கோட்சொல் 37
குறுகார் - சேரார் 47
கூத்து - ஆட்டு, நாடகம் 11
கூவல் - கிணறு 16
கூற்றம் - எமன் 45
கேளிர் - உறவினர் 58
கைத்து - கையிலுள்ளது, பொருள் 25
கைப்பது - கைக்கின்ற பொருள் 48
கொட்டி - தாளவோசை 57
கொழுநன் - கணவன 66
கொன்னே - வீணாக 38
கோடி - தப்பி 67
கோளாளன் - கொள்ளுத லுடையவன் 12
கோள - கொள்கை 21
சகடம் - வண்டி ,,
சலம் - பொய் 50
சலவர் - பகைவர் 51
சாயினும் - அழிவதாயிருந் தாலும 27
சால - மிகவும் 13
சால்பு - நிறைவு 37
சிற்றினம் - கீழ்க்குலம் 32
சீலம் - குணம் 13
செந்தீ - வேளவித் தீ 7
செபிர - பகை 67
செலவு - நடக்கை 29
செறுநர் - பகைவர் 95
செறுவோடு - சினத்தோடு 13
செற்றம் - கோபம் 55
சேய்மரபு - உயர்ந்த முறைமை 84
சேவகன் - வீரன் 76
சேறல் - செல்லுதல் 4,11
ஞாலம் - பூமி, உலகு 26
தகைமை - பெருமை 23
தட்டை - மூங்கில் 15
தருக்கல் - செருக்குதல் 38
தலைப்படல் - கூடுதல் 40
தாவில் - அழிவில்லாத் 2
தாழ்வு - அடக்கம் 38
தாளின் - முயற்சியால் 31
திண்ணியன் - திட்பமுடை யவன் 33
திப்பியம் - தெய்வப் பிறப்பு 43
திரிகடுகம், சுக்கு, திப்பிலி, மிளகு 1

திருந்திய - குற்றமற்ற 1
திரை - அலை 39
துச்சு - ஒதுக்குக்குடி 57
துஞ்சு - தூங்குகின்ற 7
துப்பிச்சை - சோறறுப் பிச்சை 57
துப்புரவு - அனுபவிக்கப்படும் செல்வம 43
துவ்வான் - நுகராது 89
துளங்கினும் - தளர்ந்தாலும் 49
தூஉயம் - குற்றமற்றவாகளா யிருக்கின்றேம் 19
தூக்கா - அளந்தறியாத 62
தூரா - தூக்காத 56
தூற்றின்கண் - புதரினிடத்து 80
தெற்றென - தெளிவாக 22
தொக்கு - கூடி 8
தொட்டான் - தோண்டினவன் 16
தொழும்பு - ஏவலாள் 55
தோய்தல - கூடுதல 39
நகுவான் - இகழுவான் 74
நச்சி - விரும்பி 30
நசை - விருப்பம் 94
நட்டான் - நிலைநிறுத்தினவன் 16
நயவர் - நீதியுடையவர் 77
நல்குரவு - வறுமை 71
நற்புடை - அறம் 97
நன்மை - துறவறம் 17
நாடுங்கால - ஆராயுமிடத்து 19
நிரப்பு - வறுமை 60
நிறை - உறுதிப்பாடு 80
நெறிப்பாடு - வழியிற் பொருந்தல் 68
நொந்தார் - வருந்தினர் 67
நோக்கு - கருத்து 29
நோன - பொறுத 95
நோன்பிலியும் - தவமில்லாதவனும 28
படியின் - படிந்தால 83
பயவா - பயன்படுதலில்லாத 54
பளளி - கல்விச்சாலை 46
பாசதரளை - கயிற்றுவிலங்கு 22
பாத்தது - பருகுதது 31
பால் - பக்கம் 31
பிணக்கு - மாறுபாடு 7
பிரமாணம் - அளவு 37
பிளிற்றல் - இரைதல் 57
பூணை - தோணி 17
புரிதது - விரும்பி 76
புலம் - அறிவு 60
புலை - இழிதன்மை 39
புலவுங்கால - தழுவும்போது 74
புறஞ்செய்தல - காத்தல் 64
பூண்ட - மேற்கொண்ட 32
பூப்பு - மகளிர் சூதகம் 17
பூவை - காயாம பூ ,,
பெட்டாங்கு - விரும்பினற் போல 69
பெறுநிக்கண் - பெற்ற இடத்து 91
பெற்றம - மாடு 4
பேணுங்கால்-விரும்புமிடத்து 6
பைங்கூழ - பசிய பயிர் 59
பைத்து - படத்தைப்போன்றது 25
பொச்சாந்து - மறந்து 19
பொதிந்த - மறைத்துவைக்கப்பட்ட 24
பொத்து - பொந்து 75

மடி - சோம்பல் 20
மதியாமை - எண்ணுமை 29
மயக்கம் - கலத்தல் 39
மயல - மனக்கலக்கம் 35
மறம் - கொடுமை 19
மறுமை - மறுபிறப்பு 52
மறுவந்து - நோயடைந்து 91
மன்று - அறநிலையம் 92
மாசு - குற்றம் 16
மாட்சி - பெருமை 21
மாறு - பகைமை 61
மாற்றம் - சொல் 76
மானஞ்சார் - பழிக்குநாணுந
இயல்புடையவர 23
மூட்டாது - குறையுபடாது 31
முந்தை - இளம்பருவம் 56
முந்நீர் - கடல் 35
முழுமக்கள் - மூடர்கள் 87
முனிந்து - வெறுத்து 39
மேதை - அறிவுடையவன் 35
மைநீர்மை - குற்றத்தன்மை 35
யாண்டானும் - எங்காயினும்55
யாப்பு - கட்டு 89
வடு - குற்றம் 13
வல்லே - விரைந்து 50
வள்ளன்மை - வரையாது
கொடுத்தல் 75
வற்றது - வல்லது 14
வனப்பு - அழகு 78
வாசி - வட்டம் 81
வான் புகழ் - பெரிய புகழ் 16
விந்தது - முளை 22
வியந்து - நன்கு மதித்து 38
விருந்து - புதுமை 26
விழுமியம் - சிறப்பான
பொருள் 47
விழைவு - விருப்பம் 3
விறல் - வலிமை 40
வீடும் - அழியும் 22
வெஃகும் - விரும்புகின்ற 38
வெகுளி - சினம் 40
வெண்மொழி-பயனிலாச்
சொல 32
வெருவும் - அச்சமும் 60
வேள்வி - யாகம 36
வைகலும் - நாடோறும் 61

கழக வெளியீடு—எண் ○

விளம்பி நாகனார்

இயற்றிய

நான்மணிக்கடிகை

Nan Manikkadigai

(By Vlambi Nakanar)

மறைமலையடிகள் மாணவரும் கழகத்த தமிழ்ப் புலவருமான

திரு. தி. சு. பாலசுந்தரம் பிள்ளையவர்கள்

(இலவழகர்) எழுதிய

உரையுடன்

T. S. BalaSundaram pillai

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

திருநெல்வேலி & சென்னை.

FIRST EDITION DEC. 1934
SECOND EDITION APRIL 1941

(All Right Reserved)

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
: : PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., : :
TIRUNELVELI & MADRAS

Printed at Free Printers, 147, Coral Merchant Street,
Madras, M S. 252—Nov. '46, copies 500.

முகவுரை

நான்மணிக் கடிகை என்று, கடைச்சங்கப்பு புலவர்களால் இயற்றப்பட்ட கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள் ஒன்றாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டாவன :— நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை யைம்பது, திணைமொழி யைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரகோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், இன்னிலை, முதுமொழிக்காஞ்சி, ஏலாதி என்பன.

இனி நான்மணிகடிகை என்னும் இந் நூலை இயற்றினோர் விளம்பிநாகனார் எனப்படும் நல்லிசைப் புலவராவர். நாகனார் என்னும் பெயருடைய இவர் விளம்பி என்னும் பெயருடைய ஊரிலே பிறந்தமையாலோ, இருந்தமையாலோ விளம்பி நாகனார் என்று வழங்கப்பட்டனரெனக் கொள்ளல் வேண்டும். இவர் கடைச்சங்கப் புலவர் எனக் கொள்ளப்படுதலின் இவரது காலம் கி. பி. 200-க்கு முற்பட்டதெனக் கருதலாம்.

இவர் இயற்றிய இந் நூலின் காப்புச் செய்யுளான் இவரது சமயம் வைணவம் என்பது தேற்றம்.

நான்மணிக்கடிகை என்னும் இந் நூற் பெயர், நந்நான்குவகையான் நீதி மணிகளாற் கோக்கப் பட்ட ஒருவகை அணிகலன் என விரியும். கடவுள் வாழ்த்து உட்பட நூற்றுநான்கு வெண்பாக்களால் இந் நூல் யாக்கப்பெற்றுள்ளது. இது கடைச் சங்க நூலாகலின் இதன் நடைச் சிறப்பினைப்பற் றிக் கூறல்வேண்டா.

இந் நூற்குப் பழைய உரை ஒன்று உள தேனும் அது குறிப்புரையா யிருகின்றமையின், மாணவர்க்கும் பிறர்க்கும் தெளிவான முறையிற் பயன்படுமாறு திருவாளர் நி. சு. பாலசுந்தரம் பிள்ளை யவர் களால் எழுதப்பட்ட பதவுரை கருத்துரை விளக்க வுரைகளோடு இந் நூலை வெளியிட்டுளளோம்.

மாணவர் தம் பருவத்திற்கேற்ற நீதிகளும், உண்மைகளும் இந் நூலின்கண் மிளிர்வதனல், இது பள்ளிகூடங்களிலும் பாடமாக வைக்கப்படு கின்றது. தமிழகம் இதனை ஆதரிப்பதாக!

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

நான்மணிக்கடிகை

மூலமும்—உரையும்

——:(o):——

கடவுள் வாழ்த்து

க. மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணெக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

(இதன் பொருள்) மதி-திங்கள், மன்னும் மாயவன்-அழிதலில்லாத திருமாலினது, வாள்முகம் ஒக்கும் - ஒளியையுடைய திருமுகத்தை ஒத்திருக்கும் ; கதிர்சேர்ந்த ஞாயிறு - ஒளிசிறந்த ஞாயிறு, சக்கரம் ஒக்கும் - அவனது சக்கரப்படையை ஒத்திருக்கும் முதுநீர்ப் பழனத்து - வற்றாத நீரையுடைய கழனிகளில முளைத்த, தாமரைத்தாளின் - செந்தாமரைத் தண்டினின்றும், எதிர் மலர் - தோன்றுஞ் செந்தாமரைப் பூ, அவன் கண் ஒக்கும் - அவன்றன் கண்களை ஒத்திருக்கும் ; பூவைப் புதுமலர்-காயாமரத்தின் புதுப் பூ, நிறம் ஒக்கும் - அவனது திருமேனியின் நிறத்தை ஒத்திருக்கும்.

மன்னுதல்-நிலைபெறுதல். மாயவன் - வியக்கத்தக்க ஆற்றலுடையவன் ; திருமால். ஒக்கும் - செய்யுமென்னு முற்று. என்றும் உள்ள நீரென்பார், 'முதுநீ' ரென்றார். முதுமை - பழமை ; தொன்றுதொட்டு என்றும் வற்றாதவந்த நீரென்பது பொருள். எதிர்தல் - தோன்றல் ; 'எதிர்பூஞ் செல்வி' என்னுஞ் சிலப்பதிகாரத்திலும் (வேனிற்காதை, சஅ) இப் பொருளுண்மை காண்க. எதிர்மலர் - செவ்வி மலர் எனினுமாம். 'மதிமுக

மொக்கு' மென்று கூறிய உவமையை 'முகம் மதி யொக்கு' மென்னுங் கருத்திற் கொள்க; பிறவும் அன்ன. இதனை 'மாறிய வுவமை'யென ஓரணியாகக் கொள்ளுப. 'நான் மணிக் கடிகை'யென்னு நூல் ஒவ்வொரு பாட்டிலும் நந்நான்கு பொருள் வைத்துக் கூறுதலின், அக் குறிப்பினை இக் கடவுள் வாழ்த்துச் செய்யுளும் நான்கு பொருளே கூறிக் குறிப்ப தாயிற்று. இக் குறிப்பினை மேற்பாட்டினும் காண்க. இது பஃறொடை வெண்பா. மற்று, அசை.

உ. படியை மடியகத் திட்டான் அடியினல்
மூக்காற் கடந்தான் முழுநிலம்—அகாலத்
தாப்பனித் தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.

(இ - ள்.) படியை - உலகத்தை, மடியகத்து இட்டான் - வயிற்றில் வைத்தான்; அடியினல் - தன் திருவடிகளால, முழு நிலம்—உலகங்கள முழுமையும், மூக்கால கடந்தான்—மூன்று முறைகளில் தாவியளந்தான்; அக்காலத்து—இந்திரன் மழை பெய்வித்தபோது, ஆ பனி—ஆனிரைகளின் குளிர் நடுக்கத்தை, தாங்கிய—தாங்கும்பொருட்டு, குன்று எடுத்தான்—'கோவர்த் தன'மென்னும் மலையைக் குடையாகத் தூக்கினன்; சோவின் அருமை—பாணாசுரனது நெருப்பு மதிலின் பெருமையை, அழித்த மகன்—அழித்த பெருமானை திருமால்.

யசோதைக்குக் கண்ணன் எல்லா உலகங்களையும் தன் வயிற்றகத்திற் காட்டினனுதலின், 'படியை மடியகத்திட்டா னென்றார். மடியகத்து, உருபின்மேற் சாரியை நின்றது. மடி - வயிறு; மடியகத் திட்டான் மகனை' (களவு, உக) என்னுஞ் சிலப்பதிகார வடிக்கு அடியார்க்கு நல்லாருரைக்கும் உரையைக் காண்க. 'மூக்கா' லென்றது, ஒருகால் நிலவுலகத்தையும் மற்றொருகால் விண்ணுலகத்தையும் கடந்து பின்னொருகால் மாபலியின் தலைமேல் வைத்துக் கீழுலகத்தையும் அளந்த னென்றற்கு. தாங்கிய, செய்யிய வென்னும் வாய்பாட்டு வினை யெச்சம்; தாங்குதல் - துயர் கெடுத்தல். ஆயர்பாடியினர் தேவேந்திரனுக்குத் தைப் பொங்கலில இட்ட பொங்கலுணவைத் தான் ஏற்றுக்கொண்டமையால், இந்திரன் சினந்து மழை பெய்வித்தபோது பசுக்கள் குளிரால் நடுங்குதல் கண்டு கண் ணன், 'கோவர்த்தன' மலையைக் குடையாகத் தூக்கிப் பிடித்து

அவற்றைப் பாதுகாத்தமையால், ஈண்டுக் 'குன்றெடுத்தா' னென்றார். 'உஷா'வினிடத்திருந்த 'அநிருத்தனை' மீட்டற்குச் சென்றபோது ஆங்கெதிர்த்துப் பொருத பாணசுரனை அவன் மதிற் கோட்டையோடு அழித்தமையே சோ அழித்த வரலாறு. அம் மதில் நெருப்பினு னியன்றதாகலின், 'சோவின் அருமை' என்றார். மகன் - இங்கே பெரியோன் என்னும் பொருட்டு.

நூல்

க. எள்ளற்க என்று மெளியாரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேலவா - உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

(இ - ள்.) என்றும் - எக்காலத்திலும், எளியார் என்று - பொருளவலிகளாற் குறைந்தவரென்று, எள்ளற்க - பிறரை இகழாதொழிக; என் பெறினும் - மிகச் சிறந்த தொன்றைப் பெறுவதாலும், கொள்ளார் கை-கொள்ளத் தகாதவருடைய கைகளை, மேல ஆ - தன் கைகளுக்கு மேற்பட்டன ஆகும்படி, கொள்ளற்க - அவர்பால் ஒன்றும் ஏற்றுக்கொள்ளாதொழிக; சிறு இல் பிறந்தாரை - வறுமை மிக்க குடியிற் பிறந்தவர்களை, உள சுடினும் - அவர் செய்கை தனதுள்ளத்தை வருத்துவதாயினும், சீறற்க - சினவாதொழிக; கூறு அல்லவற்றை-சொல்லத் தகாத சொற்களை, விரைந்து - பதைத்து, கூறற்க - சொல்லா தொழிக.

(கருத்து) எவரையும் எளியரென்று இகழாதே; சிறந்த பொருளாயினும் தகாதவர் கொடுக்க வாங்காதே; தகாதன செய்தாலும் ஏழை மக்களைச் சீறாதே; தகாத சொற்களைப் பதைத்துச் சொல்லிவிடாதே.

தன்னிடத்தில் ஒன்றை ஈச்சி ஈட்பாய் வருங்காலத்திலும், அல்லது தனக்கு ஆக்கம் வந்த காலத்திலும் பிறரை எள்ளற்க வென்பார், 'என்றும்' என்றார். என் பெறினும் - உம்மை உயர்வு சிறப்பு. மேல - பலவின் பால் முற்று. ஆ - ஈறு தொகுத்தல். சுடினும் - உம்மை எதிர்மறை. சிற்றில் என்புழி, சிறுமை வறுமைமேல் நின்றது.

உ பறைபட வாழா வசுணமா உள்ளங்
குறைபட வாழா ரூரவோர் * —நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாம் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு.

(இ - ள்.) அசுணமா - கேகயப் பறவைகள், பறை பட வாழா - பறையின் ஓசை தஞ் செவியிற்பட்டால் உயிர்வாழ மாட்டா; உரவோர் - அறிவுடையோர், உளளம் குறைபட வாழார் - தமது பெருமிலே குறைபட்டால் உயிர்தாங்கமாட்டார்; நிறைவனத்து-மரங்கள் நிறைந்த காட்டில், வெதிர்-மூங்கில்கள்; நெல் பட்ட கண்ணே - நெல்முண்டானபோதே, சாம் - பட்டுப் போகும்; சால்பு - நிறையுடைய சான்றோர், தனக்கு ஒவ்வாச் சொல்பட வாழாது - தமது நிறைவுக்குக் குறைவான இழி வுரைகள உண்டானல் உயிர்வாழமாட்டார்.

(க - து.) சான்றோர்கள் தமக்கு மானக்கேடு உண்டாகும் படி உயிர்வாழமாட்டார்.

பறை - ஒருமுகக் கருவி. அசுணமா பறையோசை கேட் கின் இறந்துபடு மென்பதனை 'மறையிற்றன யாழகேட்ட மானினயருளா, தறை கொன்று மற்றதனருயி ரெஞ்சப் பறை யறைந்தாங்கு' என்னும் நெய்தற் கலியா (உசு) னுணர்க. 'உள்ள' மென்றது ஈண்டு ஊக்கத்தை, 'உள்ளத்தனைய துயர்வு' (திருக்குறள், ஊக்கமுடைமை, இ) என்பதுங் காண்க. தமது ஊக்கங் குறையும்படி ஏதேனும் அலர்மொழி ஏற்படு மாலல், உரவோர் உயிர்தாங்காரென்பது கருத்து. நெற்பட்ட கண் - கண் விளையச்ச விருதி; ஈண்டு விகாரத்து இயல்பு. சாம் - ஈற்று மிசை யுகரம் மெய்யொடுங் கெட்டது. பெரியோர் செயல் அவரியல்பின் மேலேற்றிச் 'சால்பு வாழாதா' மெனப் பட்டது. ஆம் - அசை. இச் செய்யுளிற் கூறப்பட்ட கருத்து கள் நான்கும் ஒன்றேயாயினும், நூன்முறைமைபற்றி நாற் பொருளாய்க் கூறி விளக்கினர்; மேல்வருமிடங்களிலும் இங்ன னங் கொள்க.

உ மண்ணீ யறிய மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிய மாகல மாசறச்

* பெரியோர்—எனவும் பாடம்.

சுட்டறிய பொன்னினலங்காண்பார் கெட்டறிப
கேளிரா னுய பயன்.

(இ - ள்.) மணி நலம் - மாணிக்கம் முதலான மணிகளின் நல்லியல்பை, மண்ணி அறிப - கழுவியறிவார்கள்; மா நலம் - குதிரையின் நலலியலபை, பண் அமைத்து - அதன்மேற் சேண மமைத்து, ஏறியபின் அறிப - ஏறியபின் அறிவார்கள்; பொன் னின் நலம் காண்பார் - பொன்னின் மாற்றை யறிவார், மாசு அற - குற்றங்கெட, சுட்டு அறிப - அதனை உருக்கியறிவார்கள்; கேளிரான் ஆய பயன் - உறவினரால் உண்டாகும் பயனை, கெட்டு அறிப - செலவமெலலாங் கெட அறிவார்கள்.

(க - து.) மக்கள செலவம கெட்டு வலுமையுறும்போது தான் அவர உறவினரால அவர்க்கு உண்டாகும பயன் நன்கறி யப்படும.

மண்ணல - கழுவல். பண் - சேணத்தை யுணர்த்துதல் 'பண்ணெண்ப பரிமாவின் கலனீணயும் பேர்' (கக : ணகர, கக) என்னுஞ் சூடாமணி நிகண்டிலும் காண்க. பொன்னின் நல மென்பது, வெள்ளி முதலியன கலவாமை. காண்பார், இதனை மற்றவற்றிற்குக் கூட்டியுரைத்தலுமாம். கேளிர் - 'கேண்மை' யென்னும பண்படியாகப் பிறநத பல்லோர் படர்க்கைப் பெயர். செலவ மிக்கா லெருவன் தான் வலுமையுற்ற காலத்துக் கேளி ரின் நன்றி யறிவை நன்கறிவா லுதலின், 'கெட்டறிப...பயன்' என்றார.

சு. கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறககு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

(இ - ள.) அகில - அகிற்கட்டை, கள்ளிவயிற்றின் பிறக் கும் - கள்ளிமரத்தின் கடலில் உண்டாகும்; ஒள் அரிதாரம் - ஒளி யுள்ள அரிதாரம, மான் வயிற்றின் பிறக்கும் - மான்வயிற்றில் உண்டாகுமை; பல் விலைய முத்தம் - மிக்க விலையுடைய முத்துக் கள், பெரு கடலுள பிறக்கும் - பெரிய கடலினுள் பிறக்கும்; நல் ஆள் - நல்ல மக்களை, பிறக்கும் குடி - பிறக்குங் குடியை, அறிவார் யார் - முன்பே அறியவல்லவர யாவர ? (யாருமில்லை).

(க - து.) எக்குடியினும் நன்மக்கள் தோன்றுவர்.

கள்ளி - சதுரக்கள்ளி; அகின்மரம் வேறே யிருப்பினும், இக் கள்ளியினுள் உண்டாகும் ஊள்ளீடு அகில்போல் மண முடைமையின், இதனையும் 'அகி'லெனக் கொள்வர். விலைய - குறிப்புப் பெயரெச்சம். பல்விலைய என்பதிற் பன்மை மிகுதி மேற்று. ஆள் - நல்லியல்புகளை ஆளும் நன்மக்கட்குப் பெய ராய் வந்தமையின் தொழிலாகுபெயராம். எக் குடியினும் கல்லார் பிறத்தலைப் பண்டும் இன்றும் காண்கின்றமையின், அவர் பிறக்குங் குடி இதுதானென்று துணிந்தறிதல் கூடாமை யின் 'அறிவார் யார்' என்றார்.

இ. கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மதம்—மெல்லென்
றருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்.

(இ - ள்.) கதிர்மணி - ஒளியுள்ள மணிகள், கல்லில் பிறக் கும் - மலையில் உண்டாகும்; உயர் மதம்-மிக்க களிப்பு, காதலி சொல்லில் பிறக்கும் - காதலியினது இன்சொல்லினல் தோன் றும்; அறநெறி - அறவழிகள், மெல் என்ற அருளில் பிறக்கும் - மென்மை பொருந்திய அருளினிடம் உண்டாகும்; எல்லாம் - அவ் வறத்தோடு ஏனைய இன்பம் முதலியவெல்லாமும், பொரு ளில் பிறந்துவிடும் - செல்வத்தினல் உண்டாய்விடும்.

(க-து.) மணிகள மலையிலும், இன்பம் காதலியின் சொல்லி லும், அறநெறி அருளிலும், அவ் வறமும் இன்பமும் முதலான ஏனை எல்லாப் பேறுகளுஞ் செல்வத்திலும் உண்டாகும்.

கல்-கருவியாகுபெயராய் மலையை யுணர்த்தும். கற்புடைய மனைவியின் சொலலில இன்பம் பயக்குமென்பார் 'காதலி சொல்லில' என்றார். மெல்லென்ற அருள், அகரம் தொக்கது. அறநெறிக்கு அருளெண்ணமே ஏதுவென்பதற்கு 'அருளிற் பிறக்கு மறநெறி' எனப்பட்டது. 'அறனு மருளுடையான் கண்ணதேயாகும்' என்பது சிறுபஞ்சமூலம். அறமும் இன்பமு மெல்லாம் பொருளிற் பிறந்துவிடுதலைப் 'பொருளாஞ் மெல் லாம்' (ஈக : உ) என்னுங் திருக்குறளாற் தெளிக.

ஈ. திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
அறனெக்கு மாற்றி னெழுகல் பிறனிக்

கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றுதார் முன்னர்ச் செலவு.

(இ - ள்.) தீது இல் ஒழுக்கம் - தீமை கலவாத நல்லொழுக்கம், திரு ஒக்கும் - செல்வத்தையொக்கும்; ஆற்றின் ஒழுகல் - முறைப்படி ஒழுகுதல், பெரிய அறன் ஒக்கும் - சிறந்த அறச் செய்கையோடு ஒக்கும்; பிறனை - பிறனெருவனை, கொண்டு - நட்பாகக் கொண்டு, கண்மாறல் - பின்பு அந் நட்பு மாறிப் புறங் கூறுதல், கொலை ஒக்கும் - அவனைக் கொலை செய்தலைப் போன்றதாகும்; போற்றுதார் முன்னர் - தம்மை மதியாதாரிடத்தில், செலவு - சென்று ஒன்றை நயத்தல், புலை ஒக்கும் - இழி தகைமையை ஒப்பதாகும்.

(க - து.) நல்லொழுக்கம் செல்வம்போன்றது; முறையான இலலறவொழுக்கம் துறவறத்தைப்போன்றது; பிறரைப் புறங் கூறல் அவரைக் கொலைசெய்தல போல்வதாம்; தம்மை மதியாரைத் தாம் மதித்தல் இழிதகைமையாகும்.

நல்லொழுக்க முடையார் செலவரைப்போல் நன்மதிப்பும், வாழ்க்கையில் இடுக்கணின்மையும், உயர்வும், புகழுமான இம்மை நலங்களையும் பெற்றிடுதல திண்ணமாதலின், 'திரு வொக்கு' மென்றார். முறையான உலக வாழ்க்கை துறவற வாழ்க்கையை யொத்தலின், 'பெரிய அறன் ஒக்கு' மெனப் பட்டது. பெரிய அறன் - துறவறம். ஆற்றின் - இல்லற ஆறு:

"அறந்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவ தெவன்." (இல்வாழ்க்கை, சு). என்பதுங் காண்க. கண்மாறல் - ஒரு சொல். கருத்து மாறலென்பது பொருள். புலை - தன்மையின் மேலது. முன்னர் - ஏழாவதன் இடப்பொருளில் வந்தது.

எ. கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லையப்பொருள்
காப்பார்க்கு மில்லை துயில்.

(இ - ள்.) கள்வம் என்பார்க்கும் - திருடுவமென்று சோர்வு நேரம் பார்ப்பார்க்கும், காதலிமாட்டு - காதலியினிடத்தில்,

உள்ளம் வைப்பார்க்கும் - விருப்பம் வைத்திருப்பார்க்கும், ஒண் பொருள் - சிறந்த செல்வப்பொருளை, செய்வம் என்பார்க்கும் - பெருக்குவமென்று கருதி யுழைப்பார்க்கும், அப் பொருள - தேடிய அப் பொருளை, காப்பார்க்கும் - களவாடும் பிறவாற்றானுங் கெடாதபடி பாதுகாப்பவர்கட்கும, தூயில் இல்லை - தூக்கம பிடிப்பதில்லை.

(க - து.) திருடர்க்கும், தலைவிமாட்டு விருப்புற்ற தலைமகனுக்கும், பொருள் தேடுவார்க்கும், அப் பொருளைப் பாதுகாப் பார்க்கும் தூக்கம் இராது.

கள்வம், செய்வம் - தன்மைப் பன்மை எதிர்கால வினை முற்றுகள். என்பார், வைப்பா, காப்பார் - வினையாலணையும் பெயர்கள். உம்மை - எச்சவும்மைகள. உளளம் - விருப்பத்தின் மேலது. பொருள - தன்னையுடையார்க்கு ஏனையோரிடையில் விளக்கலதலின், ஒண்பொரு ளெனப்பட்டது. தூயில - மூதனிலைத் தொழிற் பெயர்.

அ. கற்றார்மூற் றோன்ற கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்மூற் றோன்ற வுருமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்ற வெல்லாம்
வெகுண்டார்மூற் றோன்ற கெடும்.

(இ - ள்.) கழிவு இரக்கம்-இழந்த பொருள்களுக்கு இரங்குதல், கற்றாமுன் தோன்ற - கற்றுணாதத பெரியோபால தோன்றுது ; காதலித்து - ஊக்கங்கொண்டு, ஒன்று உற்றார்முன்- ஒரு நன்முயற்சியைத் தொடங்கி ஆற்றுபவர்பால், உருமுதல் - விரைவிற் கிட்டாமையாலாகிய முயற்சித் துன்பம், தோன்ற - தோன்றுது ; தெற்றென - தெளிவாய், அல்ல புரிதார்க்கு - தீயவை செய்தார்க்கு, அறம் தோன்ற - நல்லவை தோன்ற மாட்டா ; எல்லாம் - எல்லா நன்மைகளும், வெகுண்டார்முன் - சினந்துகொள்வோரிடத்தில், தோன்ற கெடும் - தோன்றுவாய்க் கெட்டொழியும்.

(க - து.) கழிந்துவிட்ட பொருள்களைப்பற்றிய துன்பம் கற்றுத் தெளிந்தாரிடத்தும், முயற்சித் துன்பம் ஊக்கமுடையாரிடத்தும், அறத்தின் உண்மைகள் தீயவை செய்வாரிடத்தும், எல்லா நன்மைகளுஞ் சினந்தாரிடத்தும் தோன்ற.

அவரவர் உள்ளப் போக்குக்கு அவ்வவை எதிர்மாறாய் நிற்றலின், 'தோன்று' வெனப்பட்டது. கழிவு, முதல் - ஆகு பெயர்கள். முதல் மூன்றிடங்களிலும் 'தோன்று' வென்பது துவவீறு தொக்க ஒன்றன் படர்க்கை எதிர்மறை வினைமுற்று. ஈற்றிலுள்ளது 'தோன்றுக் கெடு'மென ஒற்று மிகாமையின், மூற்றெச்சமென்க. முதல் - ஒரு செயலில் முடித்தற்கு ஏதுவாய் முதலில் நிகழும் முயற்சிப் பெருமையை யுணர்த்திற்று. அல்ல - குறிப்பு வினைப்பெயர். 'தெற்றென' வென்றது, அறிதலுந் தீயவை புரிந்தா ரென்றற்கு.

கூ. நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியெல்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணியாம்
தான்செல் லுலகத் தறம்.

(இ - ள்.) நெல்லும் கரும்பும் - நெற்பயிரும் கரும்பின் பயிரும், நிலத்துக்கு அணி என்ப - வயலுக்கு அழகென்று சொல்லுவர்; தாமரை - செந்தாமரைக் காடுகள், குளத்துக்கு அணி என்ப - குளங்களுக்கு அழகு என்று சொல்லுவர்; நாணம் - நாணுமியல்பு, பெண்மை நலத்துக்கு - (பெண் தன்மைக் குரிய) கற்பாகிய நன்மைக்கு, அணி என்ப - அழகென்று சொல்லுவர்; தான் செல உலகத்து அறம் - தான் செலலும் மறுமை யுலகத்துக்குத் துணையாகச் செய்யப்படும் அறங்கள், தனக்கு அணி ஆம் - ஒருவனுக்கு அழகாகும்.

(க - து.) நெல்லும் கரும்பும் கழனிக்கு அழகு; தாமரை குளத்துக்கு அழகு; நாணம் பெண்மைக்கு அழகு; அறங்கள் ஆண்மைக்கு அழகாகும்.

நெல்லையும் கருமபையு நோக்கி நிலம் மருத நிலமாகிய வயல எனப்பட்டது. என்ப - பகர மென்னும் பல்லோர் படர்க்கை விகுதிபெற்ற எதிர்கால வினைமுற்று. பெண்மை நலம் - இருபெயரொட்டு; பெண்மை - பெண்டிரின் றன்மை; பெண்மை நலம் - கற்பு.

கo. கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி

இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் ரோரை நயத்திற் பிணித்து விடல்.

(இ - ள்.) களிற்றை-யானையை, கந்தின் பிணிப்பர் - கட்டுத் தறியினால் வயப்படுத்துவர் (பாகர்); மா நாகம் - நல்ல பாம்பை, கதம் தவிர - அதன் சீற்றம் தவிரும்படி, மந்திரத்தால் பிணிப்பர் - மந்திரத்தினால் வயப்படுத்துவர் (மாந்திரிகர்); கயத்தை - கீழ் மகனை, கொந்தி - உடம்பை ஒறுத்து, இரும்பின் பிணிப்பர் - விலங்கினால் வயப்படுத்துவர் (அரசர்); சான்ரோரை - பெரியோரை, நயத்தின் - இன்சொல் முதலியவற்றால், பிணித்து விடல் - வயப்படுத்திவிடுக (அறிவுடையோர்).

(க - து.) யானையைத் தறியாலும், பாம்பை மந்திர மொழியாலும், கீழ்மக்களை விலங்காலும் மக்கள் வயப்படுத்துவர்; ஆனால், சான்ரோரை இன்சொற்களால் வயப்படுத்தவேண்டும்.

மாவென்னும் அடைமொழி, ஒரு சாதியை யுணர்த்திற்று - "கொந்தி"யென்றது, இங்குத் துன்புறுத்துதலை யுணர்த்தும்; "கொல்லச் சுரப்பதாங் கீழ்" (ஈயாமை, க) என்னும் நாலடியாரை நினைவுகூர்க. இரும்பு - கருவியாகு பெயர். கயம் - கயவர்; கீழ்மக்கள். 'நய'மென்றது, நினைவினிமை, சொல்லினிமை, செயலினிமையாகிய எல்லா இனிமைகளையுமென்க. பிணித்துவிடல் - வியங்கோள; அல - விகுதி.

ஙக. கன்ரூமை வேண்டுங் கடிய பிறர்செய்த நன்றியை நன்ரூக் * கொளல்வேண்டு—மென்றும் விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டும் ஆக்கஞ் சிதைக்கும் வினை.

(இ - ள்.) கடிய - பிறர் செய்கின்ற அஞ்சத்தக்க கடுஞ் செயல்களை, கன்ரூமை வேண்டும் - நினைந்து நினைந்து கறுவாமை வேண்டும்; பிறர் செய்த நன்றியை - பிறர் செய்யும் நன்மைகளை, நன்ரு - பெரிதும், கொளல்வேண்டும் - நினைவிலிருத்தல்வேண்டும்; தங்கண் வெகுளி - தம்மிடம் உண்டாகும் பெருஞ் சினத்தை, என்றும் - எப்பொழுதும், விடல் வேண்டும்-

* கொல்லாக் - எனவும் பாடம்.

நீக்குதல் வேண்டும்; ஆக்கம்-முற்போக்கை, சிதைக்கும் வினை - கெடுக்குந் தொழிலை, அடல் வேண்டும் - ஒழித்தல் வேண்டும்.

(க - து.) பிறர் செய்த தீமைகட்காக அவரைக் கறுவாமை வேண்டும்; ஆனால் அவர் செய்த நன்மைகளை மறவாமை வேண்டும்; சினத்தை விடல்வேண்டும்; முற்போக்கைத் தடுக்குந் தவருன செயல்களைக் கெடுத்தல்வேண்டும்.

கன்றல்-ஒன்றையே நினைத்து நினைத்துப் புழுங்குதல்; இங்குப் புழுங்கிச் செய்தவன்மேல் வயிரங் கொள்ளாமைவேண்டுமென்னுங் கருத்துப்பட வந்தது. 'கன்றிக் கறுத்தெழுந்து' (அவையறிதல், ஙி) என்னும் நாலடியார் திருமொழியை உற்றுக் காண்க. கடிய - பலவின்பாற் படர்க்கைப் பெயர். ஆக்க மென்பது ஆதல் என்னும் பொருளது; செல்வம், கல்வி, நலலொழுக்கம், புகழ், இம்மை மறுமைப் பயன்களாகிய இவை யெல்லாவற்றினும் மேலாதலே ஈண்டு 'ஆக்க' மெனவும் அதற்குத் தடையாய்ச் சோம்பல் ஒழுங்கின்மை முதலியவற்றால் வினையுந் தீய செயல்களே 'சிதைக்கும் வினை' யெனவும் கூறப் பட்டன. கொல்லா - என்னும் பாடதத்துக்கு, ஒருவன் செய்த நன்றியை மறந்து அவனுக்கே தீங்கு செய்யாமல் என்க.

கூ. *பலவினு னேய்செய்யும் பாம்பெலாங்—கொல்லேறு*[1]
கோட்டானேய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானேய் செல்வர் மகளிர் முனிவர்
தவத்தாற் றருகுவர்[2] *நோய்.*

(இ - ள்.) பாம்பு எலாம் - எவ்லாப் பாம்புகளும், பல்லினால் நோய் செய்யும் - பிறர்க்குப் பல்லினால் துன்பந் தரும்; கொல் ஏறு - கொலை பயிலுங் காளை மாடு, குறித்தாரை - தன்னால் குறித்துக்கொளளப்பட்டவர்க்கு. கோட்டால் - கொம்புகளால், நோய் செய்யும் - துன்பந்தரும்; மகளிர் - பெண்மக்கள், ஊடி - பிணங்கி, முகத்தால் - தம் முகக்குறிப்பினால், நோய் செய்வர் - துன்பந் தருவர்; முனிவர் - தவமுடையார், தவத்தால் - தமது தவ வலிமையால், நோய் தருகுவர் - துன்பந் தருவர்.

---

1 கொல்களிறு; 2 தருக்குவர் - எனவும் பாடம்.

(க - து.) பாம்பு பல்லாலும், ஏறு கொம்பாலும், மகளிர் முகத்தாலும் பிறர்க்குத் துன்பஞ் செய்வர்; முனிவர் தவத்தாற் துன்பந் தருவர்.

நோய்செயல் - ஒருசொற் றன்மைத்து; நோய் - துன்பம்; இதற்கு கொ - பகுதி; இனி, 'கொல்களிறு கோட்டால் நோய் செய்யு'மென்னும் பாடம், களிற்றுக்குக் கோட்டானையே செய் தலேயன்றிப் பிறவாறு முண்மையின், சிறவாமை காண்க.

'தருக்குவர்' பாடமாயின் 'மிகுவிப்பர்' என்பது பொருள். முனிவர் எல்லா உயிர்களையும தம்மோடொக்க நோக்குபவராத லால் 'தருகுவர்' என்றார். 'பையவே சென்று பாண்டியற் காகவே' எனும் ஞானசம்பந்தப் பெருமான் திருமொழியை நோக்குக. தருகுவர் - கு, சாரியை.

கஉ. பறைநன்று பண்ணமையா யாழி—னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்–பண்ணழிந்
தாயினு னன்று பசித்தல் பசைசந்தாரின்
தீர்தலிற் றீப்புகுத னன்று.

(இ - ள்.) பண் அமையா-பண்ணிசை யமையாத, யாழின்-'யாழ்' என்னும் இன்னிசைக் கருவியினும, பறைநன்று - 'பறை' யென்னும் பேரோசைக் கருவி நன்றும்; பீடு இலா - பெருந்தன்மை அமையாத, மாந்தரின் - ஆண் மக்களினும், நிறை நின்ற - கற்பில் நின்று அடக்கமுடைய, பெண் நன்று - பெண் மக்கள் நல்லர்; பண் அழிந்து-பதங் கெட்டு, ஆர்தலின்-உண்டலினும், பசித்தல் நன்று - பசியுடன் வருந்துதல் நன்று; பசைந்தாரின் - தம்மை விரும்பினரினின்றும், தீர்தலின் - நீங்கி உயிர்வாழ்தலினிட, தீப் புகுதல் நன்று - எரியில் வீழ்ந்து உயிர் விடுதல் நல்லது.

(க - து.) பறை, இசை யமையா யாழினும் மேல்; கற் பமைந்த பெண்டிர், விதேத்திறன் அறியா ஆடவரினும் மேல; பசித்தல், பண்டங்களைப் பதங்கெட உண்ணலினும் மேல்; தீப்புகுதல் விரும்பினரை நீங்கி வாழதலினும் மேல என்க.

எனவே 'யாழ இசை யமைதல் வேண்டும்' என்பது முதலாக இந் நான்கிற்கும் உடம்பாட்டிற் பொருளுரைத்துக் கொள்க. பண் - இசைவான ஒலியமைப்பு, நிறை தொழிற் பெயர். நினைவையுஞ் சொல்லையுஞ்செயலையும் ஒருவழி நிறுத்தல்

தல் என்பது பொருள். நிறை நின்று - ஏழுன் தொகை, பெண் நன்று என்புழி, நன்றென்பதை உயர்திணையாகக் கொள்க. நன்று நான்கும் குறிப்பு வினைமுற்று. பீடு - ஆள்வினைத்திறத் தின்மேலும், மாந்தர் - ஆடவர்மேலும் குறிப்பால் நின்றன. ஆள்வினைத்திறத்திற் பெண்மக்கள் ஆடவரினும் ஆற்றல் குறைந் தவராகலின், அத் நிறமமையா ஆடவரினும் பேண்டிர் நல்ல ரென்றார். பண் அழிவு - இங்குப் பண்டங்களின் பதனழிவை யுணர்த்நிற்று. 'அழிந்த ஆர்கலின்' என்றுரைப்பினுமாம். பசைதல் - நெஞ்சு நெகிழ்ந்து அன்பு கொள்ளல்; 'பசைதல் பரியாதா மேல்' (தொல், கo) என்னும் நாடியாயினும் இஃது இப் பொருட்டாயது காண்க. 'இன்' என்னும் ஐந்தனுருபுகள் எல்லீப் பொருளன.

கச. வளப்பாத்தி யுள்வளரும் வண்மை - கிளைக்குழாம்
இன்சொற் குழியு ளினிதெழுஉம்-வன்சொல்
கரவெழுஉங் கண்ணில் குழியு - ளிரவெழுஉம்
இன்மைக் குழியுள் விரைந்து.

(இ - ள்.) வண்மை - 'ஈகை' யென்னும் பயிர், வளப் பாத்தியுள வளரும - செல்வமென்னும் பாத்தியுள் விளையும்; கிளைக்குழாம் - உறவினர் கூட்டம், இன்சொல குழியுள் - 'இன்சொ'லென்னும் பாத்தியுள, இனிது எழுஉம் - செழுமை யாய் வளரும்; வன்சொல கரவு - வன்சொல்லோடு கூடிய வஞ்சனை யென்னும பயிர், கண் இல் குழியுள் - கண்ணோட்ட மின்மையென்னும் பாத்தியுள், எழுஉம் - வளராநிற்கும்; இரவு- 'இரத்த'லென்னும் பயிர், இன்மைக் குழியுள் - 'வறுமை' யாகிய பாத்தியுள, விரைந்து எழுஉம் - உடனே வளரும்.

(க - து.) ஈகை செல்வத்தா லுண்டாகும்; உறவினர்க்கு மகிழ்ச்சி இன்சொல்லா லுண்டாகும்; வன்சொல்லும் வஞ்சனை யுங் கண்ணோடாமையா லுண்டாகும்; இரத்தல் வறுமையா லுண்டாகும்.

பாத்தியென்றுங் குழி யென்றுங் கூறினமை யெல்லாம் உருவகம். வளம - செல்வத்தை யுணர்த்துதல் 'வையை சூழ்ந்த வளம்கெழு வைப்பு' (எக) என்னும் புறநானூற் றுரையிற் காண்க. கிளை - உவமை யாகுபெயர். கண் - காரண வாகுபெயர். அளபெடைகள் மூன்றும் இன்னிசை நிறைப்பன.

இரவை விரைந்தெழூஉ மென்ரூர், உணவு இன்றிச் சின்னேரந் தானும் வறியார் தம்மைக் காத்துக்கோடல ஏலாமையின்.

கடி. இன்னுமை வேண்டி னிரவெழுக - விந்நிலத்து மன்னுதல் வேண்டி னிசைநடுக - தன்னெடு செல்வது வேண்டி னறஞ்செய்க - வெல்வது வேண்டின் வெகுளி விடல்.

(இ - ள.) இன்னுமை வேண்டின் - இழிவை ஒருவன் விரும்பினால், இரவு எழுக - இரத்தலே மேற்கொள்க; இந்நிலத்து - இவ்வுலகத்தில், மன்னுதல் வேண்டின் - எஞ்ஞான்றும் நிலை பெறுதலே விரும்பினால், இசை நடுக - புகழ நிறுத்துக. தன்னெடு செல்வது வேண்டின் - தன்னுடன் துணையாகச் செல்வ தொன்றை விரும்பினால், அறம் செய்க - அறங்களைச் செய்க; வெல்வதுவேண்டின் - பிறரை வெலல்ல வேண்டினால், வெகுளி விடல் - சினத்தை விடுக.

(க - து.) இழிவை விரும்பினால இரக்க; அழியாமை வேண்டினால புகழ புரிக, உறுதுணையை வேண்டினால அறஞ் செய்க; வெல்லல விரும்பினால் வெகுளியை விடுக.

இன்னுமை - துன்பம். இங்கு இழிவு என்னுந் துன்பத்தை யுணர்த்திற்று. புகழ செய்தாரே உலகில இறவாது நிற்பர் என்பதனை, 'மன்னு வுலகத்து மன்னுதல சூறிததோர தம புகழ நிறீஇத் தாமாய்ந்தனர' என்னும புறநானூற்று லறிக. 'நடுக' வென்றது, நிறுத்துக வென்றதற்கு. செலவது - தொழிலாகு பெயர். வெல்வது - தொழிற் பெயர். விடல - வியங்கோள வினை, 'அல' விகுதி.

கசு. கடற்குட்டம் போழ்வர் கலவர் - படைக்குட்டம் பாய்மா வுடையா னுடைக்கிற்குந் - தோமில் தவக்குட்டந் தன்னுடையா னீந்து-மவைக்குட்டங் கற்றூன் கடந்து விடும்.

(இ - ள்.) கலவர் - மரக்கல முடையார், கடல்குட்டம் - கடலின் ஆழமான நீரை, போழவர் - பிளந்து செல்வர; பாய்மா உடையான்-விரைந்த செலவைப்பொருந்திய படைக்குதிரையை

யுடையான், படைக்குட்டம் - பகைவரது படையென்னும் ஆழ் கடலின் கரையை, உடைக்கிற்கும் - பொருது உடைத்துவிடு வான்; தன் உடையான் - தன் மனத்தைத் தன்வயப்படுத்தின வன். தோம் இல் - குற்றமில்லாத, தவக்குட்டம் - தவமென் னுங் கடலில், நீநதும் - நீநதிக் கரையேறுவான்; கற்ருன் - தெளி யக் கற்றவன், அவைக்குட்டம் - கறறறிவுடையார் நிரம்பிய அவைக்கடலில், கடந்துவிடும - தாண்டிவிடுவான்.

(க - து.) மாலுமிகள் நீர்க்கடலிலும், மறவர் படைக் கடலில யும், தற்காப்புடையான் தவக்கடலிலும், கற்ருன் அவைக் கடலிலும் கடத்தல் எளிது.

குட்டமென்னும் பண்பு கடலுக்கு வந்தமையின் ஆகு பெயர். தன்னுடையான் - தன்னைத் தன் வயத்திலுடையா னென்பது. நினைவுஞ் சொல்லுஞ் செயலும் நல்லவை விழையுந் தன்வழி நிற்குமாறு அடக்கும ஆள்வினையுடையானென்று கொளக. 'போழவர்' முதலாயின உருவக வினைகள். உடைக் கிற்கும், நடந்துவிடுமென்பவற்றில் கில் ஆற்றற்பொருண்மை இடைநிலையெனவும், விடு துணிவுப்பொருண்மை விகுதியெனவுங் கொளக. அவைக்குட்டங் கடத்தலாவது, ஐயந்திரிபுகளிலலாக் கலவியறிவுடன் நின்று செவிக்கினிமையும் பயனும் உண்டா மாறு சுருங்கச்சொல்லி விளங்கவைத்துத் தெளிவுதேற்றி அவை யினரை மகிழுவித்த லென்க.

கள. பொய்த்த லிறுவாய நட்புகளண் - மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளநலந் - தூக்கில்
மிகுதி யிறுவாய செல்வங் கடத்தம்.
தகுதி யிறுவாய்த் துயிர்.

(இ - ள.) தூக்கில் - ஆராய்ந்து பார்த்தால், நட்புகள் - நேசங்கள, பொய்த்தல் இறுவாய - பொய்யொழுக்கமாகிய இறுதியையுடையன; இளநலம்-இளமையின் அழகு, மெய்த் தாக - கண்ணுக்கு நேராக, மூத்தல் இறுவாய்த்து - மூப்பாகிய இறுதியையுடையது; செல்வங்கள - செல்வாக்குகள், மிகுதி இறுவாய - மிகையான செயல்களே இறுதியாக உடையன; உயிர் - மக்கள உயிர், தத்தம் தகுதி இறுவாய்த்து - தத்தமது வாழ்நா ளெல்லையை யிறுதியாக உடையது.

(க - து.) நண்பர்தமக்குள் பொய்யொழுக்கம் நேர்ந்த தாயின், அவர் கட்புக் கெடும்; மூப்புத் தோன்றியதும் இளமை கல்வி கெடும்; மீறிய செயல்களைத் தொடங்கியதுஞ் செல்வங் கெடும்; வாழ்நாள் எல்லைகண்டதும் உயிர் சாம்.

நட்புக்கொள்ளும் இடம் பலவாதல்பற்றிப் பன்மையாகக் கூறப்பட்டது. இளமை - ஈறுகெட்டுப் பகுதிப்பொருள் விகுதி ஐகாரஞ் சேர்ந்து இளையென நின்றது. மிகுதி - மிகையான செயல்களையும், தகுதி - அளவாய வாழ்நாளையுங் குறிப்பா லுணர்த்தின. 'மிகுதிக்கண், மேற்சென் றிடித்தற்பொருட்டு' (தொல்காப்பியம், உரியியல், சூ) என்பதனுரையில் பரிமேலழகர் "பழியும் பாவமுந தருஞ் செய்கை வேண்டப்படுவதன்மையின் அதனை மிகுதியென்றும்.....கூறினார்" என்று கூறும் உரை நினைவு கூர்தற்குரியது.

கஅ. மனைக்காக்க மாண்ட மகளிர் ரொருவன்
வினைக்காக்குஞ் செவ்விய ரதல்-சினச்செவ்வேல்
நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் - கேட்டாக்கம்
கேளிர் ரொரீஇ விடல்.

(இ - ள.) மாண்ட மகளிர் - நல்லியல்பு நற்செயல்களில் மாட்சிமைப்பட்ட பெண்மக்களிருந்தால், மனைக்கு ஆக்கம் - மனை வாழ்க்கைக்கு உயர்வைத்தரும்; ஒருவன் - வீரனொருவன், சினச்செவ்வேல் - சினக்குறிப்புடைய சிவந்த படையினது பயிற்சிக்கண், செவ்வியனதல் - தேர்ச்சியுடையனு யிருத்தல். வினைக்கு ஆக்கம் - போர்வினை முதலான ஆளவினைகட்கு உயர் வாம்; இவ் வேந்து - இவ்வரசன், நல்லன் என்றல் - நல்லவ னென்று குடிமக்களாற பாராட்டப்படுதல், நாடு ஆக்கம் - நாட் டுக்கு உயர்வாம்; கேளிர் - சுற்றத்தாரை, ஓரீஇ விடல் - நீக்கி விடுதல், கேடு ஆக்கம் - கேட்டுக்குப் பெருக்கந்தரும்.

(க - து.) நன்மகளிர் மனைவாழ்க்கையையும், படைப் பயிற்சி யுடையான் போர்வினை வெற்றியையும், செங்கோலர சன் நாட்டினையும் உயர்வாக்குவார்; உறவினரை யொதுக்குதல் கேட்டினைப் பெருக்கும்.

'சினவேல்' உடையான் பண்பு உடைமைமே லேற்றப்பட் டது. வேலுக்குச் செம்மையானது, பகைவருடம்பிற் புகுந்து

குருதிக்கறை படிதலாலாகுஞ் செந்நிறம். என்றல-செயப்பாட்டு வினைப்பெயர். கேடு - முதனீண்ட முதனிலைத் தொழிற்பெயர். காட்டாக்கம், கேட்டாக்கம் - நான்கண்டுரைகை. காட்டாக்கமாவது, குடிகள், செல்வம் கல்வி முதலியவற்றில் மேலோங்கி இன்பவாழ்வில் வைகுதல். ஓரீஇ யென்னும் அளபெடை செய்யுளோசை நிறைத்துப் பிறவினைக்கண் வந்தது. 'கினச் செவ்வேல்' என்பதனை வேந்தனுக்கு அடையாக்குவாரு முளர்.

கசு, பெற்ரு னதிர்ப்பிற் பிணையன்னு டானதிர்க்கும்
கற்ரு னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்-*பற்றிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும்-பண்ணை
பாட லதிர்ந்து விடும். [திர்ப்பின்

(இ - ள.) பெற்ருன் - கணவன், அதிர்ப்பின் - ஒழுக்கத்திற் கலங்குவானாயின், பிணை அன்னாள - பெண்மான்போலும் மருண்ட பார்வையையுடைய அவன் மனைவியும், அதிர்க்கும் - தன் கடமையிற் கலங்குவாள்; கற்ருன் அதிர்ப்பின் - புலவன் அறிவு கலங்கினால, பொருள் அதிர்க்கும் - அவன் கற்ற கருத்துக்களும் நிலை கலங்கும்; பற்றிய - தான் கைப்பற்றிய, மண் - உலகத்திலுள்ள சூடிமக்கள், அதிர்ப்பின் - நிலைகலங்குவாராஞல், மன்னவன் - அரசனது, கோல் அதிர்க்கும் - ஆட்சியுங் கலங்கும்; பண் அதிர்ப்பின் - யாழின் நரம்புக் கட்டுகள் அதிர்ந்துவிட்டால், பாடல அதிர்ந்து விடும் - அதிற் பிறக்கும் பாட்டுக்களும் அதிர்ந்துபோம்.

(க - து.) கணவன் கலங்கினால் மனைவி கலங்குவள்; கற்ருன் கலங்கிற் கருத்துகள் கலங்கும்; சூடி நடுங்கினுற் கோன் நடுங்குவன்; பண்ணதிர்ந்தாற் பாடலதிர்ந்துவிடும்.

பெற்ருன் - கொண்டவன், (கணவன்). 'பெற்ருற் பிழையாத பெண்டிரு' மென்பது **பரிபாடல்.** பிணை - தொழிலுவமம். தான் - அசை. 'பொருளதிர்க்கு' மென்றது நற் கருத்துக்கள் அவன்மாட்டுப் பிறவாமையும் தெளிவுபெருமையு மென்க. பண் - இசையுமாம்; அற்ருயின், இசைகெட்டாற் செய்யுளுங் கெடுமென்றுரைக்க. மண் - இடவாகு பெயர்.

---

* பாரிய-எனவும் பாடம்.

உ0. மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுங்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

(இ - ள்.) மனைக்குப் பாழ - மனைக்குப் பாழாவது. வாள் நுதல் இன்மை - மனையாளையிலலாமை ; தான் செல்லும் - தான் போகும், திசைக்குப் பாழ் - ஊர்ப்புறங்கட்குப் பாழாவது, நட்டோரை இன்மை - அவ்விடங்களில் நண்பர்க ளில்லாமை ; இருந்த அவைக்குப் பாழ் - பலரும் கூடியிருந்த அவைக்குப் பாழாவது, மூத்தோரை இன்மை - கல்வி கேளவி முதலியவற்றும் சிறந்த சான்றோரை இலலாமை ; தனக்குப் பாழ - பிறவியெடுத்த தனக்குப் பாழாவது, கற்றறிவு இல்லா உடம்பு - கலவியறிவு பெறுத வெறும் புலாலுடம்பு உளளமையாம்.

(க - து.) மனைவியில்லா மனை பாழ் ; நண்பரில்லாப் பக்கம் பாழ் ; ஆன்றோரில்லா அவை பாழ் ; கற்றறிவில்லா வுடம்பு பாழ்.

வாள் நுதல் - இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர் ; ஒளியைப் பொருந்திய நெற்றியையுடைய மனையாளென்பது பொருள். இன்மை - குறிப்புத் தொழிற்பெயர். மூத்தோர் - மூ பகுதி. உடம்பென்றது இங்குப் பிறவியை. கற்றறிவிலலாப் பிறப்புப் பாழென்பது கருத்து. 'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' (அப்பர், திருவாவடு, திருவேயென் செல்வமே, க0) என்பது, தேவாரம். திசை - ஆகுபெயர்.

உக. மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப் - பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக்-குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின்.

(இ - ள்.) ஒற்றுமை இன்மை - தக்காரோடு ஒற்றுமையில்லாமை, ஒருவனை மொய் சிதைக்கும் - ஒருவனது வலிமையை ஒழிக்கும் ; பொய் - பொய்மையான ஒழுக்கம், பொன்போலும் மேனியை, பொன்னிறத்தைப் போன்ற அழகிய உடம்பை

சிதைக்கும் - வாடச்செய்யும்; பெய்த கலம் - நிரப்பி வைக்கப் பட்ட பாண்டம், பாலின் சுவையை - பாலின் இனிய சுவையை, சிதைக்கும் - கெடுக்கும்; கூடார்கண் - கூடத் தகாதாரிடத்தில், கூடிவிடின் - நட்புக்கொண்டு கூடிவிட்டால், குலம சிதைக்கும் - அச் செய்கை தன் குலத்தை யழிக்கும்.

(க - து.) ஒற்றுமை யின்மை வலியையும், பொய்ம்மை உடம்பையும், பால் பெய்த பொருந்தாப் பாண்டம் பாலின் இன்சுவையையும், தீ நட்பு குலத்தையும் கெடுத்துவிடும்.

ஒற்றுமை - ஒன்றுந்தன்மை; அதாவது வேற்றுமை காணு மல் அளவளாவுந தன்மை. மொய் - வலிமை; செல்வாக்கு முதலிய வலிமைகளும் இதன்கண் அடங்கும். பொன்போலு மேனி - மிகுதியும வெண்மை கலவாத தளிர் நிறமான மேனி. 'பொய்த்த பின் தன்னெஞ்சே தன்னைச் சுடும்' எனபவாத லால, பொய்மையினற் பின்பு துன்பந் தோன்றி உடம்பு நிறங் கெட்டு மெலிதலின், சிதைக்கு மெனப்பட்டது. பெய்த, செயப் பாட்டு விணைப்பொருளது. கலம் - குறிப்பினற் பொருந்தாக் கலமென்றுரைத்துக் கொளக.

உஉ. புகழ்செய்யும் பொய்யா விளக்க-*மிகந்தொருவர்ப்
பேணாது செய்வது பேதைமை - காணாக்
குருடனைச் செய்வது மம்ம - ரிருடீர்ந்த
கண்ணராச் செய்வது கற்பு.

(இ - ள்.) பொய்யா விளக்கம் - பொய்யாமையாகிய ஒளி, புகழ செய்யும் - எங்கும் புகழை உண்டாக்கும்; பேதைமை - அறியாமை, இகந்து - முறைகடந்து, ஒருவர்ப் பேணாது - ஒரு வரையும் மதியாமல், செய்வது - தீயவை செய்வதாம்; மம்மர் - கற்றறிவில்லா மயக்கம, காணா - வழிகாணாத, குருடனைச் செய் வது - குருடனைச் செய்வதாம்; கறபு - கல்வியறிவு, இருண் தீர்ந்த - குருடு நீங்கிய, கண்ணராச் செய்வது - கண்ணினரி யுடையராகச் செய்வதாம்.

---

* இகழ்ந்தொருவன் பேணாமை - எனவும் பாடம்.

(க - து.) பொய்யாமை புகழையும், அறியாமை தீயவை செய்தலையும், கல்லாமை அறியாமையையும், கல்வியானது அறிவையும் உண்டாக்கும்.

'பொய்யா விளக்கம்'-பொய் கூறாமையாகிய விளக்கம்; இனி நிலையாமையும செய்யாமையும் அடக்கிக்கொள்க. பொய்யாத விளக்கமென்பது பெயரெச்சவீறு தொக்கது 'விளக்க'மென்றார்: அறியாமை யிருளை விலக்கி அறிவு விளக்கந் தரலின். 'பொய்யா விளக்கே விளக் கென்றார் திருவள்ளுவனும். (வாய்மை, கு). 'பொய்யாமை யன்ன புகழில்லை'-என்றார் பிறரும். ஒருவரென்பதற்கு முற்றும்மை விரித்துக் கொள்க. இகத்தல் - கடத்தல. கற்பு - காரணவாகுபெயர். பேணுமை, ஈண்டு மதியாமை மேனின்றது; பேணுதல-போற்றுதல். செய்வது, தொழிலாகு பெயர். இருளென்றது இங்குக் குருட்டுத் தன்மையை. மம்மர் கல்லாமையால் வரும் மயக்கத்தை யுணர்த்தலின், அறியாமையென்று கொள்க.

உங. மலைப்பினும் வாரணந் தாங்கு - மலைப்பினும்
அன்னையென் றோடுங் குழவி சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யா - ரொட்டார்
உடனுறையுங் காலமு மில்.

(இ - ள்.) மலைப்பினும் - பாகன் தன்னோடு பொருதாலும், வாரணம் தாங்கும - யானை அவனைச் சுமந்து நிற்கும்; அலைப்பினும் - தன்னை அடித்தது வருத்தினாலும், குழவி - குழந்தை, அன்னை என்று ஓடும் - அம்மா என்று சொல்லிக்கொண்டே அவளருகில் ஓடும; சிலைப்பினும் - தவறு கண்டு சினந்துரைத்தாலும், நட்டார - நண்பர், நடுங்கும் வினை செய்யார் - நடுங்கும் படி தீயவை செய்யமாட்டார்; ஒட்டார் - பகைவர்கள், உடன் உறையும் காலமும் - தம்மூர் ஒன்று கூடி நீங்காமல் வாழுங் காலமும், இல்-ஒருபோதும் இல்லை.

(க - து.) யானையையுங் குழந்தையையும் நண்பரையும், முறையே பாகனுந் தாயும் நண்பரும் வருத்தினாலும் ஒருவரை யொருவர் தாவியே நிற்பர்; ஆனால் பகைவரோ எக்காலத்தி லும் ஒன்று பொருந்துதலில்லை.

அலைத்தலை - அடித்தலென் றுரைப்பினு மமையும், அன்னே - விளி. குழவி - பண்படியாய்ப் பிறந்த பெயர். குழவு - இளமை; இளமையானதென்பது பொருள். குழவி தாய் நாடு மியல்பு என்பது 'தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட் டன்ன யென்னுங் குழவி' என்னுங் குறுந்தொகையினும் (உகஎ) வெளிப்படும். சிலைத்தல் - ஒலித்தல்; சினக்குறிப்புடன் உரத் துப்பேசுதலை யுணர்த்திற்று. 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண் மேற்சென் றிடித்தற் பொருட்' டாதலின் (தொல். குறி, நட்பு, ச) இச்சிற்றம் நண்பராற் பாராட்டப்படற்குரி யதேயாம்; ஆதலாற்றான் 'நடுங்கும் விணைசெய்யா' ரென்றார்; என்றது, ஒருவென்றபடி. ஒட்டார் - எதிர்மறை விணையாலணை யும் பெயர்; நெஞ்சொட்டாரென்பது. முதன் மூன்று உம்மை களும் 'உயர்வுசிறப்' பென்றும், பின்னது எச்சமென்றுங் கொளக. உடனுறைதல் - பிரியாமல் வாழதல்.

உசு. *நகைநல நட்டார்க ணைந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர்நலம் பாகனாற் பாடெய்து - மூர்நலம்
உள்ளாஅ லுள்ளப் படும்.

(இ - ள.) நகை நலம் - முகமலர்ச்சியின் நன்மை, நட்டார் கண் - நட்புச் செய்தார்பால, நந்தும் - சிறக்கும்; சிறந்த - மேலான, அவை நலம - அவையின் நன்மை, அன்பின் விளங் கும் - அன்பினாற் சிறக்கும்: விசை மாண்ட - வேகம் மிகுந்த, தேர் நலம் - தேரின் நன்மை, பாகனால்-ஓட்டுபவனால், பாடு எய் தும் - பெருமையடையும்; ஊர நலம் - குடிமக்களின் நன்மை, உள்ளாஅல - அவ்வூரிலுள்ள அரசனால், உளளப்படும்-மதிக்கப் படும்.

(க - து.) முகமலர்ச்சியின் நன்மை நண்பர்கள்பாற் சிறந்து தோன்றுமம; அவைகளின் நன்மை அன்பினால் விளங்கும்; விரைந்த செலவையுடைய தேரின் நன்மை பாகனாற் பெருமை பெறும்; ஊரின் நன்மை அரசனுடைய நற்செயல்களால் மதிக்கப்படும்.

நகைநலமாவது, நேசரைக் கண்டவிடத்தே தம் முகத்திற் றோன்றும் புன்னகையுங் குளிர்ந்த பார்வையுங் கூடிய முக மலர்ச்சி. இஃது, உளளங் கலந்த உண்மை நண்பர்மாட்டன் றி

* நசை நலம் - எனவும் பாடம்.

மற்றவர்பால் வேறுபட்டுப் பொலிவு குன்றும். சிறந்த வென்பதை நலத்துக்குங் கூட்டுக. 'அவைநல' மென்பது கற்றவர்கள் மற்றவராகளமேல் வைத்த அன்பிலும் அரிய கருத்துக்களை எளியவாம்படி உளங்கொளக் கூறி யறிவித்தல். மாண்டமிகுதிமேனின்றது. 'ஊர்நலம்' என்பதை 'நாட்டாக்க' மென்புழிக் (நான்மணிக்கடிகை, கஅ) கூறினமைகொண்டறிக. உள்ளான் - குறிப்பால் அரசனுக்காயிற்று. உள்ளல் - நன்கு மதித்தல்; அறிவுடையோராால என்க. நசைநலம் - என்னும் பாடத்துக்கு விருப்பத்தின் நன்மை நண்பர் பாற் சிறக்கு மென்க; அவர்களே அதனை நிறைவேற்றுபவராதலால்.

உநி. அஞ்சாமை யஞ்சுதி யொன்றிற் றனகொத்த
எஞ்சாமை யெஞ்ச லளவெல்லா-நெஞ்சறியக்
கோடாமை கோடி பொருள்பெறினு-நாடாதி
நட்டார்கண் விட்ட வினை.

(இ - ள்.) அஞ்சாமை - அஞ்சுதற்குரிய செயலகளில் அஞ்சாமலிருக்கும் ஒழுக்கத்தை, அஞ்சுதி - நீ அஞ்சுவாய்; ஒன்றில்-ஒரு செயலில், தனக்கு ஒத்த - தனக்குக் கூடுமான, அளவு எல்லாம் - செயலளவுகளி லெல்லாம், எஞ்சாமை - பிறர்க்கு உதவி செய்தலிற் குறையாமையாகிய ஒழுக்கத்தை, எஞ்சல் - குறையவிடாதே; நெஞ்சு அறிய - உளளமறிய, கோடாமை - ஒருபக்கங் கோணுமையாகிய ஒழுக்கத்தை, கோடி - கொளளுவாய்; பொருள பெறினும் - பெரும்பொருள் பெறுவதானாலும், நட்டார்கண் - நண்பரது பொறுப்பில், விட்ட வினை - செய்ய விட்ட தொழிலை, நாடாதி - ஆராயாதே.

(க - து.) அஞ்சுவது—அஞ்சுக; இயன்றளவு உதவிசெய்வதிற் குறையாதே; ஒரு பக்கங் கோணுதே; நண்பர்களபால் விட்டதொழிலை ஆராயாதே.

அஞ்சாமை - பழிபாவங்கட்கு அஞ்சாமை; இவ்வியல்பு ஓராண்மையாகாமையின், இன்றைன்னவற்றில அஞ்சுதலே வேண்டற்பாலது. 'தனக்கொத்த அளவெல்லா' மென்று கூட்டுக. எஞ்சல் - ஏவலொருமை எதிர்மறை வினைமுற்று: 'நாடாதி'யென்பது மது; 'கோடி' உடம்பாட்டேவல். கோடாமையென்றது ஈண்டு நடுவு நிலைமை. நட்டார்கண் விட்ட வினையை நாடின், அவர் வினையை நெகிழவிடுவர்; விடவே, இட

ருண்டாம். 'தேர்ந்த பிற் றேறுக தேறும் பொருள்', 'தெளிந் தான்கணையுறவுந் தீராவிடும்பை தரும்' (திருக்குறள், தெரிந்து தெளிதல், கூ, க0), கோடி - கொள + த் + இ, எழுத்துப்பேறாக வந்த தகரம் டகரமாயது.

உசு. அலைப்பான் பிறவுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டுன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

(இ - ள.) அலைப்பான் - வருத்துவதற்காக, பிற உயிரை - பிற உயிர்களை, ஆக்கலும் குறறம - வளர்த்தலும் பிழையாகும்; விலைப்பாலின் - விலைகொள்ளும் வகையால், ஊன்கொண்டு - ஊனைப் பெற்று, மிசைதலும் குற்றம - உண்ணலும் பிழை யாகும; சொலறபால அலலாத - சொலலும வகையினவலலா தனவாகிய சொற்களை, சொலலுதலும குறறம - சொலலிவிடுத லும பிழையாகும; கொலைப்பாலும - கொலைவகைகளும், குற் றமே ஆம் - பிழையேயாகும்.

(க - து.) பிறவுயிர்களைப் பிடித்து, வருத்துதற்காக வளர்த்த லுங்குற்றம் அங்ஙனங் கொல்லாமல அவறறின் ஊனை விலைக்கு வாங்கி உண்ணலுங குற்றம்; சொலலத்தகாதவற்றைச் சொல்ல லுங் குற்றம்; கொலலலுங் குறறமேயாம.

அலைத்தல - ஈண்டுக் கொலைமேனின்றது. பான், வினை யெச்ச விகுதி. பால் - வகை; சொற்பாலவல்லாத - தீயனவுங் தகுதியற்றனவுமான சொற்கூறுகள. பால, அல்லாத - குறிப்பு வினையாலணையும் பெயர்கள. கொலைக்கு நிகரான இச் செயல் களும் அடங்குதலின், முதன்மூன்றுமமைகளும் எண்ணுப் பொருளன. இறுதியிலுளளது அவ்வெண்ணுப் பொருளோடு இறந்தது தழீஇய எச்சப்பொருளுமாம். இச் செய்யுள் அடி மறிமாற்றுப் பொருளகோளின் பாற்பட்டது.

உஎ. கோலைக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலைப்
பாலைக்கி வாழுங் குழவிகள் - வானத்
துளிலைக்கி வாழு முலக முலகின்
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

(இ - ள்.) குடி எல்லாம் - குடிமக்க ளெல்லாரும், கோல் நோக்கி - அரசனது ஆட்சியை நோக்கி, வாழும் - உயிர் வாழ்வர்; குழவிகள் - குழந்தைகளெல்லாரும், தாய் முலைப்பால் நோக்கி - தாயின் முலைப்பாலை நோக்கி, வாழும் - உயிர் பிழைக்கும்; உலகம் - உலகத்துயிர்கள், வானத் துளி நோக்கி - வானத்தினின்றும் விழும் மழைத்துளியை நோக்கி, வாழும் - உயிர் வாழும்; கூற்று - நமன், உலகின் விளி நோக்கி - உயிர்களின் சாவை நோக்கி, இன்புறூஉம் - மகிழ்வான்.

(க - து.) குடிகள அரசனது ஆட்சியால் உயிர் வாழும்; குழந்தைகள தாயினது முலைப்பாலால் உயிர்வாழும்; உயிர்கள் மழைத்துளியால் உயிர்வாழும்; கூற்றுவன் உயிர்களின் சாக்காட்டை எதிர்நோக்கியிருப்பன்.

கோல் - ஆட்சிக்கு வந்தது; அடைமொழி புண்ணாமையின், அது செங்கோலரசையே குறிப்பதாயிற்று. 'இயல்'பென்ற வளவில் அது நல்லியல்பையே குறிதலபோல வென்க; வாழுங் குடி - என்பதனலும் அப் பொருள காணலாம. வானத்துளி - அ, சாரியை. 'குடி' 'உலகம' முதலியன அஃறிணைச் சொல்லால் வந்தமையின், அவை தமகேறற அஃறிணை வினை முடிபைக் கொண்டன. 'நோக்கி வாழுதத, லென்றது, இன்றியமையாமை கருதி. துளி, விளி, முதனிலைத் தொழிற்பெயர். அளபெடை இன்னிசை நிறைக்க வந்தது.

உஅ. கற்பக் கழிமடமஃகு மடமஃகப்
*புற்கந்தீர்ந் திவ்வுலகின் கோளுணரும் கோளுணர்ந்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி (தால்
இப்பா லுலகி னிசைநிறீ இ - யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்.

(இ - ள்.) கற்ப - ஒருவன் அறிவு நூலகளைக் கற்பதனல, கழிமடம் - மிக்க அறியாமை, அஃகும் - குறையப்பெறுவான்; மட்டும் அஃக - அறியாமை குறைய, புற்கம் தீர்ந்து - புல்லறிவு நீங்கி, இவ்வுலகின் - இவ்வுலகத்தின், கோள் உணரும் - இயற்கையை யறிவான்; கோள் உணர்ந்தால் - அவ் வியற்கையை

---

* புற்பந்-எனவும் பாடம்.

யறிந்துகொண்டால், தத்துவமான - உண்மையான, நெறி படரும் - அருணெறியிற் செல்வான்; அந் நெறி - அந் நெறியினால், இப்பால் உலகின் - இவ்வுலகின்கண், இசை நிறீஇ - புகழ் நிறுத்தி, உப்பால - மறுமையில், உயர்ந்த உலகம் புகும் - உயர்ந்த வீட்டுலகத்திற் புகுவான்.

(க - து.) ஒருவன் அறிவு நூல்களைக் கற்றல் அறியாமை குறையப்பெறுவான்; அறியாமை குறையப் புல்லறிவு நீங்கி உலக வியற்கையையறிவான்; அறிய, மெய்ந்நெறியாகிய வீட்டு நெறி செல்வான்; செலல, இவ்வுலகத்திற் புகழை நிறுத்தி மறுமையில வீட்டுலகம் புகுவான்.

'கழிமட' மென்றது, 'அறியாமையின் பெரும்பகுதி' யென்றற்கு. கோள் - இங்குக் கொள்ளப்படுவதான உலக நிகழ்ச்சிகளின் கருத்து. 'இப்பாலுலகின்' என்பதை இம்மையில் இவ்வுலகத்திலென உரைப்பினுமாம். உப்பால், அகரச் சுட்டின் சேய்மைப் பொருளது; 'உப்பக்கங் காண்பர்' (திருக்குறள், ஆள்வினையுடைமை கo) என்புழிப்போல. உயர்ந்த உலகம் - வீடு. இச் செய்யுள ஐந்தடியான் வந்த பஃறொடை வெண்பா; காரண மாலையணி.

உக. குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம் - அழித்துச்
செறிவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

(இ - ள்.) நீர் குழித்துழி நிற்பது - தண்ணீர் குழிக்கப்பட்ட இடத்தில் நிற்கு மியல்புடையது; பல்லோர் - சான்றோர் பலரும், தன்னைப் பழித்துழி - தன்னைப் பழித்தவிடத்தில், பாவம் - தீவினையென்பது, நிற்பது - நிற்கு மியல்புடையது; அழித்து - தவநெறியைக் கெடுத்து, செறிவுழி - தீய நெறியில் வயப்பட்ட விடத்து, காமம் - காம வியலபு, நிற்பது-நிற்பதாகும்; தனக்கு - அறிஞ ரொருவனுக்கு, ஒன்று உறுவுழி - ஓரிடர் உண்டான காலத்தில், அறிவு - அவனது கல்வியறிவு, நிற்பது - துணையாய் நிற்கு மியலபினது.

(க - து.) பள்ளமுள்ளவிடத்தில் நீர் நிற்கும்; பலரும் பழிக்கும் தீயோரிடத்திற் பாவம் நிற்கும; தவவொழுக்க மில்லான் பாற் காமம் நிற்கும்; இடர்வந்தபோழ்து கற்றறிவு துணை நிற்கும்.

குழித்துழி - பள்ளம்; குழித்த உழியென்க. பழித்துழி - தீயோர். 'அழித்து' 'செறிவுழி' என்பன குறிப்பாற் றவக் கேட்டையும் மலச்செறிவையுமே உணர்த்தின. முதன்மூன்றடி களில் வந்த 'உழி'யென்னு மிடைச்சொல் இடப்பொருளையும், ஈற்றடியில் வந்தது காலத்தையுங் குறித்தன. 'செறிவுழி' யென்பதில் வகரமெய் உடம்படுமெய்யன்று; ஏனையவற்றைப் போன்றதொரு சந்தியெழுத்து. இறைவன் திருவருளியல்பு களிற் பழகாதார்க்கு மலத்தினியல்புகளே அடிக்கடி துன் புறுத்தாநிற்குமாதலின், 'அழித்துச் செறிவுழி நிற்பது காம' மெனப்பட்டது.

கூ0. திருவிற் றிறலுடைய தில்லை - யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை - எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லை*யில் லென்னாத
வன்மையின் வன்பாட்ட தில்.

(இ - ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, திருவின்-செல்வத்தைப் போல், திறல் உடையது - வலிமையுடையது, இல்லை - பிறி தில்லை; கற்றலின் - கல்வி யறிவைப்போல், வாய்த்த - உற்ற நேரத்திற் பயனுவன, பிற இல்லை - வேறு இல்லை; எற்றுள்ளும - எதனுள்ளும், இன்மையின் - வறுமையைப்போல், இன்னாதது - துன்பமுடையது, இல்லை - வேறு யாதுமில்லை! இல் என்னாத - இரப்பார்க்கு இலலையென்னாத, வன்மையின் - மனவுறுதியைப் போல, வன்பாட்டது - வேறு திட்பமானது, இல்-இல்லை.

(க - து.) செல்வத்தைப்போல் ஒருவனுக்கு வலிமையுடை யது வேறில்லை; கலவியைப்போல துணையாவது பிறிதில்லை; வறுமையைப்போற் றுன்பமானது வேறில்லை; இல்லையென்ன மல் ஈதலைப்போல் திட்பமானது வேறில்லை.

'இன்' உருபுகளை எல்லைப் பொருளில உரைத்தலுமாம். வாய்த்த - பெயரெச்சப்பொருள சிறவாமையின், பலவின்பாற் படர்க்கை வினையாலணையும பெயரென்க. எற்று - குறிப்பு வினைப்பெயர். வறுமையுடையான் இம்மை மறுமை நலங்களிற் சிறிதும் நன்மையுடையனாகாமையின், 'இன்மையி னின்னாத தில்லை' யெனப்பட்டது. "இன்மையி னின்னாத தியாதெனி

---

*இலமென்னும், வன்மையின் வன்பாட்டதில் - எனவும் பாடம்.

னின்மையி னின்மையே யின்னைதது'' (நல்குரவு, க) என்று **திரு வள்ளுவனாரும்** கருதுகின்றமை காண்க. வன்மை - ஈண்டுமனத் திட்பம். வன்பாட்டது - வன்மையானது; கோட்பாடு இலம்பாடு என்பவற்றைப்போல வன்பாட்டென்பதும்பாடென்னுந்தொழிற் பெயர் விகுதிபெற்ற முதனிலை திரிந்த தொழிற்பெயர், ஈண்டுக் குறிப்பு வினைப்பெயராயுரைத்தற்குப் பொருளியையாமையின்; அது - பகுதிப்பொருள் விகுதி. எக்காலத்திலும இல்லையென் னுமை அரியவற்றுள அரிதானமையின் அதனை யொப்பதொரு வன்மை பிறிதிலலையென்றார். ஒப்பாவன வின்மை கூறப்பட் டமையின், மிக்க வின்மை கூறவேண்டாவாயிற்று.

கூக. புகைவித்தாப் பொங்கழ றோன்றுஞ் சிறந்த
நகைவித்தாத் தோன்று முவகை - பகையொருவன்
முன்னம்வித் தாக முளாக்கும் முளாத்தபின்
இன்னைவித் தாகி விடும்.

(இ - ள்.) புகைவித்து ஆ - புகைச்சல் ஏதுவாக, பொங்கு அழல - எரிகின்ற நெருப்பினது இருப்பு, தோன்றும் - காண்ப வாகட்கு விளங்கும்; சிறந்த நகைவித்தா-மேலான முகமலர்ச்சி ஏதுவாக, உவகை தோன்றும - மனமகிழ்ச்சி விளங்கும்; பகை-உளளதின் பகைமை, ஒருவன்-ஒருவனது, முன்னம் வித்தாக - குறிப்புச் செயலகள ஏதுவாக, முளாக்கும-வெளியே தெரியும்; முளாத்தபின் - தெரிந்தபின், இன்னை - துன்பங்கட்கு, வித்து ஆகி விடும் - அப் பகைமை ஏதுவாய்விடும்.

(க-து.) புகையின் ஏதுவாக நெருப்பு உணரப்படும்; முக மலர்ச்சியின் ஏதுவாக மனமகிழசசி யுணரப்படும்; குறிப்புச் சொற்செயலகளின் வாயிலாக உட்பகை தெரியும், தெரிநதபின் அப் பகைமை ஏதுவாகத் துன்பங்களுண்டாகும்.

'விநது' - ஏதுவுக்கு வநதது. ஒருவன் என்பதைப் பிறவற் றிறகுக் கூட்டலுமாம. முன்னம் - குறிப்பு; 'முன்னம் முகத்தி னுணாநதவா' (கூ) என்னும் **புறநானூற்றிலும்** இப் பொருண்மை காண்க. 'முன்னம முகம்போல முனனுரைப்ப தில்' என்று இஃது இப் பொருளில் மேலும வரும். 'முளாக்கு'மென்னுஞ் சொற்கொடுத்துக் கூறினார், மறைவு வெளிப்படலின். இன்னை, பெயர். இன்னை வித்து - நான்காவது விரிக்க. உவகை - அக மகிழச்சி; நகை - முகமலர்ச்சி.

கூஉ. பிணியன்னர் பின்னேக்காப் பெண்டிர் குலகிற்
கணியன்ன ரன்புடை மாக்கள்-*பிணிபயிரின்
புல்லன்னர் புல்லறிவி னுடவர்-கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

(இ - ள்.) பின் - மேல வருவதை, நோக்காப் பெண்டிர் - கருதிப்பாராத மகளிர், பிணி அன்னர் - கொண்டானுக்கு ஒரு நோயை யொப்பர்; அன்பு உடை மாக்கள் - எல்லா உயிர்களிடத்திலும் அன்புடைய நன்மக்கள, உலகிற்கு - உலகத்திற்கு, அணி அன்னர் - ஓர் அணிகலத்தையொப்பர்; புல் அறிவின் - சிற்றறிவுடைய, ஆடவர் - ஆண் மக்கள், பயிரின் - வளரும் பயிரினைச் சூழ்ந்த, பிணி புல் அன்னர் - வளர்ச்சியைத் தடுக்கும் களைப்புல்லோடு ஒப்பாவார்; வல் என்ற - வன்மையான, நெஞ்சத்தவர் - நெஞ்சத்தையுடையவர், கல் அன்னர் - கலலுக்கு ஒப்பாவார்.

(க - து.) வருவதறியாத பெண்டிர் நோய்க்கு ஒப்பாவார்; அன்புடைய மக்கள் அணிகலனுக்கு நிகராவார்; புல்லறிவையுடைய ஆடவர்கள் புல்லுக்கு நேராவார்; வன்னெஞ்சமுடையவர் கல்லுக்கு இணையாவார்.

'பின்னேக்கா' வென்றது, கணவனது வரவுக்குமேல முதலிற் செலவுசெய்து பின்வரும வறுமை கருதாமையை. 'பயி'என்றதைப் புல்லாற் பிணிக்கப்படும் பயிரென்று கொள்க. புல் - களை. பிணித்தல - வளர்ச்சியைக் கட்டுப்படுத்தல். ஆடவர் தமது புலலறிவினுற் றம்மைச் சூழ்ந்த சுற்றங் களையுங் கெடுத்தலின், இங்ஙனங் கூறினர். அன்னர் - குறிப்பு வினைமுற்று.

கூஉ. அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை - யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில்.

---

* பிணிபயிலும், பிணிபேணும் - எனவும் பாடங்கள்.

(இ. ள்.) அந்தணரின் - அந்தண்மையுடையார் பிறவியைப் போல, நல்ல பிறப்பு இல்லை - உயர்ந்த பிறவி வேறில்லை; என் செயினும் - தனக்கு என்ன தீமையைச் செய்தாலும், தாயின் - தாயைப்போல, சிறந்த தமர் இல்லை - மேலான உறவினர் எவரு மிலர்; வளமையோடு - செல்வ வாழ்க்கையோடு, ஒக்கும் வனப்பு - ஒப்பான அழகு, யாதும இலலை - மற்றெதுவுமில்லை; எண்ணின் - ஆராய்ந்து பார்த்தால், இளமையோடு ஒப்பதும - இளமைப் பருவத்தோடு ஒப்பாவதும, இல் - பிறிதொன்றில்லை.

(க - து.) அந்தணர் பிறப்பே உயர்பிறப்பு; தாயே சிறந்த தமர்; செல்வமே அழகு; இளமையே இன்பம்.

'அந்தணர்' இனிய அருளெண்ணமுடையார்; அவ் வியல் புடையராய்ப் பிறக்கும் பிறவியே உயர் பிறவி யென்க. எனவே இது காரணப்பெயர்; மற்றிதனைக் காரண விடுகுறி யெனக் கூறிப் பிறப்பை வருபுமேலேற்றி யுரைப்பாரு முளர். தாயே, மக்களபால் அணுக்கமும எஞ்ஞான்றும் இனிய உள் ளெண்ணமு முடையவளாதலின், 'தாயிற் சிறந்த தமரிலலை' யென்றார். என்செயினும் - உமமை உயர்வு சிறப்பினேடு எதிர் மறைக்கண் வநதது. உயர்வு சிறப்பொன்றே கொண்டு, தமர்மேலேற்றி 'என்ன நன்மை செய்தாலும்' எனவும் உரைக்கலாம். ஏனை யழகுகள் குறைபட்டாலும் வளமை அவற்றை நிறைவுசெய் துயர்த்துமாகலின், 'வளமையோ டொக்கும் வனப்பில்லை' யெனவும, இளமை எல்லா வின்பங் களையும் நுகர்தற்கும, கல்வி முதலியவற்றைப் பெறுதற்கும், உடல்வலியுடைமைக்கும், நன்மைகளைச் செய்தற்கும் உரியதாக லின் 'இளமையோடொப்பதூஉ மில'லெனவும் கூறப்பட்டன. 'வளமை' செல்வமென்னும் பொருடரல் 'வளப்பாத்தியுள' (14) என முன்வந்ததனுளளுங் காண்க. அளபெடை இன் னிசை நிறைப்பது. ஓடு - இரண்டும் ஒப்புப் பொருளன.

நச. இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ் சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப - தேரின்
அரிய வரியவற்றுற் கொள்ப பெரிய
பெரியரா னெய்தப் படும்.

(இ - ள்.) இரும்பின் - இரும்பினற் செய்யப்பட்ட கருவிக ளால், இரும்பு - இரும்பை, இடைபோழப-குறுக்கே வெட்டுவர்;

பெரும் சிறப்பின் - மிக்க சிறப்புடைய, நீர் உண்டார் - பாயசம் முதலிய நீருணவுகளை யுண்டவர்கள், நீரால் - நீர்கொண்டே, வாய் பூசுப - வாய் கழுவுவர்; தேரின் - ஆராய்ந்தால், அரிய அரிய செயல்கள், அரியவற்றுள்-அருமையான முயற்சிகளால், கொள்ப - முடித்துக்கொள்வர்; பெரிய - பெரிய பேறுகள், பெரியாரான் - கல்வி கேளவிகளையுடைய தவப் பெரியோரால், எய்தப்படும் - அடையப்படும்.

(க - து.) இரும்புக் கருவிகளால் இரும்பை வெட்டுவர்; சிறந்த நீருணவுகளை யுண்டார் நீரினால வாய் கழுவுவர்; அரிய செயல்களை அரிய முயற்சிகளாற் கொளவர்; பெரிய பேறுகளைப் பெரியோர எய்துவர்.

முதல் வந்த இரும்பு கருவியாகுபெயர். நீரென்றது, நீருடன் கூடிய சிறந்த உணவை யுணர்த்துகின்றமையின், 'பெருஞ் சிறப்பி'னென்று அடைமொழி புணர்த்தார். அவ் வுணவு, மிகுதிபற்றி நீரெனவே கூறப்பட்டது. பெருஞ்சிறப்பின் நீர் என்பது பாற்சோறுமாம். 'வாய் பூசுப': இன்னோரன்ன வற்றை 'இடக்கரடக்க'லென்ப. அரிய அரியவறறுள் எய்தப் படுமுண்மையை நிகழ்ச்சியிற் கண்டு தெளிக. அரிய, பெரிய - பண்படியாகப் பிறந்த பலவின்பாற் படாக்கைப் பெயர்கள். பெரிய பேறுகள பெரியோருதவியினல் அடையப்படும் என்றும் உரைத்துக்கொள்க.

கூடி. மறக்களி மன்னர்முற் ரேன்றுஞ் சிறந்த
அறக்களி யில்லாதார்க் கீயுமுற் ரேன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்ரூங் கயகளி
ஊரிற் பிளிற்றி விடும்.

(இ - ள்.) மறக்களி - வீரக் களிப்பு, மன்னர்முன் - அரசர் கட்குமுன்னல், தோன்றுமை - வீரர்கட்கு உண்டாகும்; சிறந்த அறக்களி - மிக்க ஈகைக் களிப்பு, இல்லாதார்க்கு - வறியவர் கட்கு, ஈயும் முன் - ஒன்று கொடுக்குமிடத்து, தோன்றும் - கொடுப்பார்க்கு உண்டாகும்; வியக்களி - யாதானும் ஒன்றைப் பெற்று வியத்தல் செய்யுங் களிப்பு, நல்கூர்ந்தார் மேற்றும் - வறிஞர்கள்பா லுண்டாகும்; கயக் களி - கீழமையியல்பாலுண் டாகுங் களிப்பு, ஊரில் - இருக்கும் ஊரில், பிளிற்றிவிடும்-பலரும் அறிய ஆரவாரித்தலா லுண்டாகும்.

(க-து.) அரசனுக்கு முன்னைப் பொரும்போழ்து வீரர்கட்கு வீரக்களிப் புண்டாகும்; வறியார்க்கு ஒன்றீவதே செல்வர்கட்கு உண்மையான ஈகைக் களிப்பாம்; ஒன்றைப் பெற்று வியக்கும் களிப்பு ஏழைகட் குண்டு; கீழ்மகனது கீழ்மையாலான களிப்பு ஊரெல்லாந் தெரிவித்து ஆரவாரஞ் செய்தலேயாகும்.

களி - முதனிலித் தொழிற்பெயர்; அறம், உயர்வி லை ஈகைமே னின்றது. ஈயுமுன் - முன் ஏழாவதன் இடப் பொருளது. விய - முதனிலித தொழிற்பெயராக வந்தது. 'நல்கூர்ந்தா மேற்று': மேல, ஏழனுருபு. கயவு - இங்குக் கீழமை. பிளிற்றிவிடும - இரைச்சலிட்டுவிடும்; கீழமகன் தனது புன்செயலைப் பெரியதாய்க் கருதி ஊரெங்குஞ் சொல்லிச் சொல்லி மகிழ்தலே, 'கீழமைக் களிப்'பெனப்பட்டது.

கூசு. மையாற் றளிர்க்கு மலர்க்கண்கள் மாலிருள்
நெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர் - *பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

(இ - ள.) மலர்க் கண்கள -குவளைமலரைப்போன்ற கண் கள், மையால் - மையிலை, தளிர்க்கும - எடுத்துக்காட்டும்; மால் இருள் - மிக்க இருட்டில, நிமிர்சுடா - நிமிர்ந்தெரியு நெருப்பு, நெய்யால - விளக்கெண்ணெயால், தளிர்க்கும் - விளங்கி யெரியும்; பெய்யல் - மேகம், முழங்க - பெய்தற்குக் குமுற, குருகு - குருக்கத்திமரம, இலை தளிர்க்கும் - இலைகள் துளிர்விடும்; மேல - மேலோர்கள, நட்டார் வழங்க - உறவாயி னர்க்குக் கொடுத்தலால், தளிர்க்கும் - மேலும் பொருளிற் பெருகுவர்.

(க - து.) கண்கள் மையிடுதலால் விளங்கும்; விளக்கு நெய்யா லெரியும்; குருக்கத்தி மழை முழக்கத்தால் இலை தளிர்க்கும்; அடுத்தார்க்கு வழங்குதலால ஆன்றோர் தளிர்ப்பர்.

நிமிர்சுடர் - கொழுந்தோடி யெரியுந் தீச்சுடர். பெய்யல் - மேகத்துக் கானமையின் தொழிலாகுபெயர். ஈற்றடிக்கு, நண்ப ராயினர் பொருளுதவி செய்தலாற் கல்வி கேள்விகளிற் சிறந்த சான்றோர் தமது தொண்டில் மேலும் மேம்படுவரென உரைப் பினுமாம். மேல் பண்பாகு பெயர். ஆம் - அசைநிலை.

* பெய்ய - எனவும் பாடம்.

கூஎ. நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின்-1வகையுடைப்
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

(இ-ள்.) நகை-மகிழ்ச்சி, நட்டார் நடுவண்-நண்பரிடையில், இனிது - இன்பமானது; பொருளின் தொகை - செல்வக் குவியல், தொட்டு வழங்கின் - எடுத்து ஏழைகட்கு வழங்கப்பட்டால், இனிது - இன்பம் தருவதாம்; வகை உடைப் பெண் - வகையான பெண், பேணி வழிபடின் - கணவனைப் போற்றி அவன்வழி நின்றால், இனிது - இன்பந்தருபவளாவள்; பண் - இசை, பாடல் உணர்வார் அகத்து - பாட்டை யுணரவல்லாரிடத்து, இனிது - இனிதாம்.

(க - து.) நண்பரிடத்தில் முகமலர்ச்சி துளும்பும்; வறியோர்களுக்கு வழங்குமிடத்துப் பொருட்டிரள இன்பந்தரும்; கணவனைப் போற்றி அவன்வழியி னிற்றலாற் பெண்டிர் இனியவராவர்; பாட லுணர்வாரிடத்துப் பண் இனிமை தரும்.

'நகை'யுந் 'தொகை'யுந் தொழிற்பெயர். பொருளின் தொகை பொருட்கூட்டு. 'வகை' யென்பது, நினைவு சொற் செயல்களின் நலவகையை; அதாவது சிறப்பை யுணர்த்துகிற்று; அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என நால்வகைக் குணமுடைமையுமாம். பேணுதல், உண்டி முதலிய வேண்டுவ கொடுத்துக் காத்தல்; வழிபடல் கணவன் கருத்துவழி நிற்றல். பாடல் - தொழிற்பெயராதலின், ஈண்டுப் பாடுதற் றொழிலென்று கொளக. இனிது, குறிப்பு வினைமுற்று. 'பொருளின் தொகையினிது தொட்டு வழங்கின்' என்பதனை 'உப்புக் குவட்டின் மிசை யிருந்து உண்ணினும் இட்டுண்ணுக்கா லது கூராதாம்' என்னும் உவமானத்தாற் கண்டு தெளிக.

கூஅ. கரப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் 2செல்சாரொன் றீவார்-பரப்பமைந்த

---

1 தகையுடைய - எனவும் பாடம். 2 செல்சார்வொன் றீவோர் என்றும் பாடம்.

தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
*செய்யாமை * செல்சா ருயிர்க்கு.*

(இ - ள.) கரப்பவர்க்கு - ஏதும் இல்லையென்று ஒளிப்பவர்களுக்கு, செல்சார் - அவா மேற்கொளளுஞ் சார்பு, கவிழ்தல் - இரந்து வருவாரைக் கண்டவிடத்து முகங்கவிழ்ந்து நிற்றலாம்; எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், இரப்பவர்க்கு-இல்லையென்று இரக்கின்றவர்களுக்கு, செலசார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஒன்று ஈவார் - தாம வேண்டுவதொன்றை ஈத்துவக்குஞ் செல்வராவர்; பரப்பு அமைந்த - போரிற் சுறுசுறுப்புடைய, தானைக்கு - சேனைகளுக்கு, செலசார் - பற்றுக்கோடு, தறுகண்மை - வீரமாம்; உயிர்க்கு - ஒருவனது உயிர்க்கு, செல்சார்-செல்லுதற்குரிய பறறுக்கோடு, ஊன் உண்டல் செய்யாமை - பிற வுயிர்களின் ஊனுண்ணலைச் செய்யாதிருத்தலாம்.

(க-து.) இலலையென்று பொருள்களை ஒளிப்பவர்கள் இரப்பாரைக் கண்டக்கால் முகங்கவிழுதலே அவா செயலா யிருக்கின்றது; இரப்பவாகட்கு ஈகையறமுடைய செல்வரே பற்றுக்கோடாவர்; பரபரப்புள்ள சேனைகட்கு வீரமே ஒரு பற்றுக்கோடு; ஊனுணவு கொளளாமல் அருளொழுக்கத்தோடிருத்தலே உயிர்கட்கு ஒரு பறறுக்கோடான நிலையாம.

சார - முதனிலைத் தொழிற்பெயர்; 'சார்பு' என்பது பொருள்; அதாவது சார்ந்து நிற்றற்குரிய நிலை அல்லது பற்றுக்கோடென்க. 'செல்' என்பதைக் கருத்து நோக்கிப் பொருளுரைததுக்கொளக. கரப்பவர் செல்லுதலாவது மேற்கொள்ளுதல்; இரப்பவர் செல்லல் அடுத்தல்; தானைக்குச் செல்லல் - இடருதரல்; உயிர்க்குச் செலல லென்பதும் மேற்கோடலாம். தறுகண்மை இரங்காமைக்கு ஏதுவான மறம. செலசார் - விணைத்தொகை.

ஈகூ. கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார் - வேட்ட
இனியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னிய செய்யுந் திரு.

* செல்சார் வுயிர்க்கு என்றும் பாடம்.

(இ - ள்.) கம்மியர் - கம்மாளர், கண்டதே செய்ப - தாங் கண்ட பொருள்போன்றவற்றையே செய்வர்; புலன் ஆள்வார் - அறிவை ஆளும் பேரறிஞர், உண்டு எனக் கேட்டதே - பய னுண்டு எனக் கேள்வியாற் றெளிந்த வறையே, செய்ப - செய்வர்; அமைந்தார் - நல்லியல்புகளமைந்த சான்றோர், வேட்ட - பிறர் விரும்பிய, இனியவே செய்ப - இனிமையாயின வற்றையே செய்வர்; திரு - திருமகள், முனியாதார் - எளியாரை யுஞ் சினவாத பெரியோர்கள, முன்னிய செய்யும் - எண்ணிய வற்றையே முடித்துவைக்கும.

(க - து.) கம்மாளர் தாங் கண்ணுற்றகண்ட பொருள் போன்றவற்றையே செய்வா; அறிஞர் பயனுளளவையெனக் கல்வி கேள்விகளாற் தெளிந்தவற்றையே செய்வர்; சான்றோர் பிறர் விரும்பியவறறுள இனிமையாயினவற்றையே செய்வர்; திருமகள் எவரையுஞ சினவாத பெரியோர்கள் கருதிய வற்றையே செய்யா நிற்பள்.

கண்டது கேட்டது முதலியவை செயப்பாட்டு வினைப் பொருளன. ஆம் - அசை. கமமியர் - தொழிலசெய்வோர்; அவர் கன்னர், கொலலர், சிறபா, தச்ச ர், தட்டார் எனப் பலவகைப்படுவர். புலன் - ஈண்டு அறிவு. 'முன்னிய' வென் பதற்கும் தேற்றேகாரம் கூட்டிப் பொருளுரைத்துக்கொள்க.

சo. திருவுந் திணிவகையா னில்லா பெருவலிக்
கூற்றமுங் கூறுவ செய்துண்ணு - தாற்ற
மறைக்க மறையாதாங் காம முறையும்
இறைவகையா னின்று விடும்.

(இ - ள்.) திருவும் - செல்வமும், திணிவகையால் - குடிப் பிறப்பு வகையால், நில்லா - பொருந்தி நில்லாவாம்; பெரு வலி - மிக்க வலிமையுடைய, கூற்றமும் - நமனும், கூறுவ - தானுண் ணப்படுகின்றவன் சொல்வனவற்றை, செய்து உண்ணுது - செய்து உண்ணான்; ஆற்ற - மிகவும், மறைக்க - மறைவாக்க, காமம் - காமவியல்பு, மறையாது - மறைபடாது; முறையும் - ஆட்சி முறைமையும், இறை வகையான் - அரசனது போக்குக் கேற்றபடி, நின்றுவிடும் - அமைந்துவிடும்.

(க - து.) குடிவகைக் கேற்பச் செல்வம் நில்லா; கூற்றுவன் தன்னு லுண்ணப்படுகின்றவன் சொல்வனவற்றைக் கேளான்; மறைததாலும காமம் மறையாது; அரசனது போக்குக்கேற்றபடி ஆட்சிமுறை அமைந்துவிடும்.

திணை - ாண்டுக் குடி; வசையில் விழுத்திணைப் பிறந்த' (புறம், கடுகை) என்புழிப்போல; குடியின் உயாவு தாழ்வுக் கேற்பச் செல்வமும மிகும்துங் குறைந்தும் நில்லா வென்றற்குத் 'திணைவகையா னிலலா' வெனப்பட்டது. செலவம், செல்வாக்கு, செல்வ நுகர்ச்சி யெனத் திரு பலவாகலின் நில்லா வெனப் பன்மையிற் கூறினர். எவா வலிமையுங் கூற்றுவன் முன் செலலாமையின், அவனுக்குப் பெருவலிமை யுரைக்கப் பட்டது. கூற்றம், பொருளா லுயர்திணைப் பெயர். 'கூறுவ' வென்றது, 'துன்பஞ் செய்யாது கொடுபோ; இன்று திரும்பிப்போய்ப் பின்னெருகால் வா' என்பவற்றிறகு. 'காம' மென்பதற்கும் எண்ணுமமை கூட்டுக. ஆம் - அசைநிலை. செலவம், கூற்றம், காமம், அரசு என்பன தத்தம் இயற்கைப் படியே நடைபெறுமென்பது கருதது.

சக. பிறக்குங்காற் பேரெனவும் போ இறக்குங்கால்
நில்லெனவு நில்லா வுயிரெனினத்து - நல்லாள்
உடம்படிற் றானே பெருகுங் - கெடும்பொழுதில்
கண்டனவுங் காணு கெடும்.

(இ - ள.) உயிர் எனினத்தும் - உயிரெல்லாம், பிறக்குங்கால் - பிறக்கும்போது, பேர் எனவும் பேரா - உடலைவிட்டு நீங்கென்ரு லும் நீங்கா; இறக்குங்கால் - அவை இறக்கும்போது, நில் எனவும் நில்லா - இவ்வுடலிலேயே நில்லென்ரு லும் நில்லா; நல்லாள் - திருமகள, உடமபடின் - கூடின், தானே பெருகும் - செல்வம தானே பெருகும்; கெடும பொழுதில் - அவள நீங்கிப் போங்காலத்தில், கண்டனவும் - மூன்பு காணப்பட்ட பொருள் கள்கூட, காணு - காணப்படாதனவாய், கெடும்-அழிந்துபோம்.

(க - து.) உயிர்கள் பிறக்கும்போது நீஙகென நீங்கா. இறக்கும்போது நில்லென நில்லா; திருமகள கூடினுற் செல்வம் கூடும்; அவள் நீங்கினுல் அச் செலவம் நீங்கும்.

'எனவு'மென வந்த இரண்டும்மைகளும் எச்சம். 'கண்டனவு' மென்றதும் அது; என்னை? மேன்மேற் பெருகுதல்

கெடுதலேயன்றி, முன்னுற் பெருகிக் கண்டனவுங் கெடுமென்றவின். 'எனைத்து' மென்பது முற்றும்மை; முழுமையுமென்னும் பொருளுணர்த்திற்று. உடம்படின் - உடம்பட்டுச் சேரினென்க. காண, முற்றெச்சம். எனை - எத்தனை என்பதன் மரூஉ.

சஉ. * போரின்றி வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரின்றி வாடு மரமெல்லா - நீர்பாய்
மடையின்றி நீணெய்தல் வாடும்படையின்றி
மன்னர்சீர் வாடி விடும்.

(இ-ள்.) பொருநர் சீர் - போர்வீரரின் சிறப்பு, போர் இன்றி - போரிலலாவிடின், வாடும் - குன்றும்; மரம் எல்லாம் - எல்லா மரங்களும, கீழ வீழ்ந்த - நிலத்துள இறங்கிய, வேர் இன்றி - வேர் அறுந்துவிடின், வாடும - பட்டுப்போம; நீள் நெய்தல் - நீண்ட நெய்தல மலாகள, நீர பாய் மடை - நீர் பாயும மடையில, இன்றி - நீர் அற்றுவிட்டால், வாடும-உலரும்; மன்னர் சீர் - அரசரது செலவம, படையின்றி - படைப்பில்லாவிடின், வாடிவிடும - அழிந்துபோம.

(க - து.) போரிலலாவிடின் வீரரின் சிறப்புக்கெடும், வேரறறுவிடின் மரங்கள படும; நீரற்றுவிடின் நெய்தல உலரும்; படையிலலாவிடின் வேந்தனது சீரமை அழியும.

மடை - தொழிலடியாகப் பிறந்த பெயர். மடு - பருகி, 'ஐ' விணமுதற் பொருண்மை விருகி. நீரை நிறைதது நிற்பது என்பது பொருள. மடையின்றி - மடைக்கண் நீரின்றியென விரிக்க. மன்னர்க்குச் சீரென்றது அவரது அரசாட்சிச் செல்வத்தையென்க. பொருநர் சீர் என்பதையும் அவர்க்குரிய வீரச் சிறப்பென்றே யுரைத்துக்கொளக. மடை - வாய்க்கால்; குளமுமாம்.

சஊ. ஏதிலா ரென்பா ரியல்பில்லார் யார்யார்க்கும்
காதலா ரென்பார் தகவுடையார் - மேதக்க
தந்தை யெனப்படுவான் றன்னுவாத்தி தாயென்பாள்
மூந்துதான் செய்த வினை.

---

* 'இன்றி' என வரும் பாடங்கள் 'அறின்' எனவும் வரும்.

(இ - ள்.) ஏதிலார் என்பார் - அயலாரென்று கருதப்படுபவர்கள், இயல்பு இல்லார் - நல்லியல்பில்லாதவர்கள்; யார் யார்க்கும் - யாவர்க்கும், காதலார் என்பார் - அன்பரெனப்படுவார், தகவு உடையார் - நல்லியல்புடையவர்கள்; மேதக்க - மேன்மையான, தந்தையெனப்படுவான் - தந்தையென்று சொல்லப்படுபவன், தன் உவாத்தி - நன் ஆசிரியனுவான்; தாய் என்பாள் - மேன்மையான தாயென்று சொல்லப்படுபவள, முந்து - முற்பிறப்பில், தான் செய்த வினை - தான் செய்த நல்வினையாகும்.

(க - து.) ஒருவனுக்கு, நல்லியல பிலலாதவர் அயலார்; யார்க்கும் நல்லியல்புடையவரே அன்பர்; மேலான தந்தையெனப்படுபவன் ஆசிரியன், தாயெனப்படுபவள முன் செய்த நல்வினையாகும்.

ஏதிலார் - ஒறறுமைப்படுதறகுரிய ஏது இல்லாதவர்; அவர் பகைவருமலலர்; நண்பருமலலர்; அயலாரென்க. 'யார் யார்க்கும் ஏதிலார்' எனக கூட்டியுரைத்தலுமாம. உடம்பை வளர்க்கும் தந்தையைப்போலவே அறிவென்னு முடமபை ஆசிரியன் வளர்த்தலின் அவனுந் தநதையெனப்பட்டான்; அழிநதுபோம் ஊனுடமபை வளாப்பாரினவிட அழியாத அறிவுடம்பை வளர்க்கும் ஆசிரியன் மேலானவனுதலின், அவன் மேதக்க தநதையெனப்பட்டான்; தாயக்கும இதனைக் கூட்டிக் கூறுக. முன் செய்த நல்வினை இப் பிறப்பில இன்பங்களைச் சிறிதளவுந் தவருமல் உடனிருநது ஊட்டலின், அது தாயெனப்பட்டது. தாயென்னுங் குறிப்பால வினை நலவினைக்காயிற்றென்க. தாயென்பாள.....வினை' என்பது திணைவழுவமைதி. மேதக்க - மேன்மைதகு என்பதன் மருஉவாகிய 'மேதகு' பகுதி; ஒற்றிரட்டிக் காலங் காட்டி விகுதிபெற்றது; உகரக்கேடு சந்தி.

சச. பொறிகெடும் நாணற்றபோழ்தே நெறிபட்ட
ஐவராற் ரூனே வினைகெடும் பொய்யா
நலக்கெடும் நீரற்ற பைங்கூழ் நலமாறின்
நண்பினர் நண்பு கெடும்.

(இ, - ள.) நாண் அற்ற போழதே - ஒருவனுக்கு நாணமென்பது நீங்கினபோதே, பொறி கெடும் - செல்வம் அழியும்; நெறிபட்ட - தன்வழிப்பட்ட, ஐவரால் - ஐம்பொறிகளால், வினை

தானே கெடும் - தீவினைகள் தாமாகவே ஒழியும்; நீர் அற்ற - நீரைப் பெருத, பைங்கூழ் - பசும்பயிர்கள, பொய்யா - பொய்க்காத, நலம் கெடும் - விளைவின் நன்மை கெட்டொழியும்; நலம் மாறின் - நண்பின் நலம் மாறிஞல், நண்பிஞர் நண்பு - நண்பரின் நட்பியல்பு; கெடும் - கெட்டுப்போம்.

(க - து.) நாணம் நீங்கினுற் செல்வங் கெடும்: ஐம்பொறிகள் தன்வழிப்பட்டால் வினை கெடும்; நீரற்றுற் பசும் பயிர்களின் விளைவின் நலங்கெடும்; நன்மை மாறினுல் நட்புக்கெடும்.

'பொறி கெடும் நாணற்ற போழதே' என்பதைக் கயிறற்ற போதே பாவை கெடுமென் றுரைபபாரு முளர். நெறிபட்ட ஐவராலென்பதை ஐவா நெறிப்பட்டாலென மாறுக. நெறிபடல் - தன்வழிப்படல். எதுகை நோக்கிப் பகரவொற்றுத் தொக்கது. வினை, ஈண்டுப் பிறவிக்கு ஏதுவான தீவினை. தானே என்பதனுல் முயற்சியின்றியே கெடுமென்க. பயிர்க்குப் பொய்யா நலமென்பது, நீர பாய்ச்சி முறையாய்ப் பயிரிட்டால் அது சிறிதுந் தவருமற் றருங் கதிர் முதலிய விளைபொருட் பயன்க ளென்க. நண்பர்க்கு நலமாவது, உற்றுழியுதவலாம்; "உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே, யிடுக்கண் களைவதாம் நட்பு" (நட்பு, அ) என்னுங திருக்குறள திருமொழியை நினைவுகூர்க. போழது - பொழுது என்பதன் மரூஉ; போது எனவும வரும்.

சரு. நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சா மரும்புணர்ப்பிற்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சாம்
ஊட லுணரா ரகத்து.

(இ - ள்.) நன்று அறியாதார் முன்னர் - பிறர் செய்யும் நன்மைகளை ந ன் மை யெ ன த் தெரிந்துகொள்ளாதவர்பால், நன்றி சாம் - செய்ந்நன்றி கெடும்; விருப்பு இலார் முன் - அன்பில்லாதவரிடத்தில், சென்ற விருந்தும் - போன விருந்தினரும், சாம - வாடுவர்; பண் அறியாதார் முன்னர் - பண்ணிசையை யறியாதாரிடத்தில், அரும் புணர்ப்பின் - அரிய இசை நிரவல் களையுடைய, பாடல் சாம்-பாட்டுக்கள கெடும்; ஊடல் உணரா ரகத்து - ஊடுதலி னினிமையைத் தெரிதலில்லாத கணவரிடத்தில், ஊடல் சாம் - ஊடுதல் கெடும்.

(க - து.) நன்மையறியார்மாட்டுச் செய்ந்நன்றி கெடும்; அன்பில்லார்மாட்டுச் செல்லும் விருந்தினர் வாடுவர்; இசையறி யார்மாட்டு அரிய இசைப் பொருத்தங்களுடன் பாடும பாட்டுப் பயனின்றும்; புலவியுணரார் மாட்டுப் புலத்தல் கெடும.

'முன்' 'அகம்' என்பன ஏழாவதன் இடப்பொருளன. 'சாம்' என்பதில் ாற்றுமிசை யுகரம மெய்யொடுங் கெட்டது; 'சாகும்' என விரிக்க. அரும்புணர்ப்பென்றது மிடறறெலியும, யாழ் முதலிய இசைக்கருவிகளி லெலியும், பாடற்பண்ணும் ஒத்திசைகளும் பொருத்தமும், நுண்ணிய இசை நிரவல்களும், பிறவுமாம்; இவ் வியல்பு முதலியவற்றைக், 'கூடிய குயிலுவக் கருவிக ளெலலாங், குழல் வழி நின்றது யாழே, யாழவழித் தண்ணுமை நின்றது தகவே, தண்ணுமைப் பின்வழி நின்றது முழவே, முழவொடு கூடிநின் நிசைத்த தாமந திரிகை' யென வருஞ் சிலப்பதிகாரத்து அரங்கேற்று காதை யடிகள (கூஅ கசஉ) முதலியவறறினும், அவற்றி னுரைகளாலுங் கண்டு கொளக. 'பாடல் சாம் பண்ணறியாதார் முன்னர்' என்று ஈண்டுக் கூறியதுபோலவே, 'பண்ணிலாது பாடலுணர்வா ரகத்து' என உடம்பாட்டாலும் முன்னுங் (ஙஎ) கூறினர். நன்றிக்குச் சாமென்றது மறப்பை. ஊடலுணாதல - ஊடுதலின் அளவையும் மாட்சிமையையும அறிந்து ஒழுகுதல். ஊடல் - கலவியிற் பிணங்கல

சஙு. நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கின்
அகம்பொதிந்த தீமை மனமுரைக்கு முன்னம்
முகம்போல் முன்னுரைப்ப தில்.

(இ - ள்.) மலர் உண்மை - மலரின் இருப்பை, நாற்றம் உரைக்கும்-அதன் மணமே அறிவிக்கும்; வினை நலம்-ஒருவனது செய்கைத் திறத்தை, கூறிய மாற்றம் உரைக்கும் - அவன் சொன்ன சொல்லே அறிவிக்கும்; தூக்கின்- ஆராய்ந்தால், அகம் பொதிந்த தீமை - நெஞ்சிற் செறிந்த தீமைகளை, மனம் உரைக் கும் - அவனது நெஞ்சமே அவனுக்கு அறிவிக்கும்; முன்னம்- ஒருவன் உள்ளக் குறிப்பை, முகம்போல - அவன் முகத்தைப் போல, முன் உரைப்பது இல்-முற்படத் தெரிவிப்பது வேறில்லை.

(க - து.) மழையின் உண்மையை அதன் மணமும், ஒருவன் செயற்றிறனை அவன் சொலலும், நெஞசிற் செறிந்த தீமையை அவன் நெஞ்சமும், உளளக் குறிப்பை முகமும் அறிவித்துவிடும்.

பிரிநிலை யேகாரம் விரிதலுக்கொள்க. உண்மை - குறிப்புத் தொழிற்பெயர். அகம பொதிந்தவென்பது பொருட்பெருக் குடையது. மனமுரைக்கு மென்னா, 'தன்னெஞசே தன்னைச் சுடலின்;' 'நெஞசத்திற் குறுகிய காரியில்லையாகலி' னென்பது கலித்தொகை (நெய்தல், அ.). 'முன்னுரைப்ப' தென்னா, நெஞசுற்றதைப் பிறர்க்கறிவிப்பதில அஃதொன்றே முற்பட வறிவித்தலி னென்பது; நாயனாரு 'தான் முந்துறு' மென்றதனையே சுட்டினா (திருக்குறள, எக; எ). 'இலலை'யென்பதன் ஐ தொக்கு 'இல' என்று நின்றது.

ளை. மழையின்றி மாநிலத்தார்க கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரச னிலாவழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

(இ - ள.) மழையின்றி - மழையிலலாமல், மாநிலத்தார்க்கு - இப் பேருலகத்தில் மக்கட்கு, இலலை - நலமிலலை; மழையும் - அம் மழையு நானும, தவம இலா - தவஞசெய்த லிலலாதவாகள், இலவழி - இருபபிடங்களில, இலலை - பெய்தலில்லை; தவமும் - அவ் வியல்பினதான தவஞ்செய்தலும், அரசன் இலாவழி - செங்கோலரசன் இல்லாதவிடத்து, இலலை - நிகழ்தலில்லை: அரசனும் - அச் செங்கோலரசனும, இல்வாழவார்-குடிமக்கள், இல்வழி-இல்லாதவிடத்து, இல - இலலாவான்.

(க - து.) மழையில்லாவிட்டால் உலகத்து மக்கட்கு, நலமில்லை; அம் மழையுந் தவமுடையா ரில்லாதவிடத்துப் பெய்தலிலலை; அத் தவஞ் செய்தலும் முறையான அரசனில்லாத நாட்டில் நிகழதலில்லை: அவ் வரசனுங் குடிகளில்லாத விடத்தில் இருப்பதில்லை.

'தவமிலா' ரென்பதைத் தவமுடையாரென் றுரைப்பாரு முளர். 'தவமிலா ரில்வழி' யென்பதில், இல், இருப்பிடத்தை யுணர்த்திற்று; 'இல்வழிப் படுஉம் காக்கை' (அகம - 313) என்புழிப்போல. உலகத்திலுள்ள எல்லா நலங்களுங் குடிமக்க

ளான இல்வாழ்வாரால் விரும்தலின், ஏனைய மூன்று கருத்துகட்கும் அவரை ஏதுவாக உரைத்தார். 'வாழ்க்கை' என்பதே உலகத்தில் இல்வாழ்வார்க்கே உரியதாதல் நினைவுகூர்தற் குரியது.

சஅ. பூவினை நந்தும் புனைதண்டார் மற்றதன்
தாதினை நந்துஞ் சுரும்பெல்லாம் - தீதில்
வினையினை நந்துவர் மக்களுந் தத்தம்
நனையினை நந்து நரு.

(இ - ள.) புனை தண் தார் - தொடுக்கப்படுங் குளிர்ந்த மாலை, பூவினை - பூக்களால், நந்தும - மிக்கு விளங்கும்; சுரும்பு எல்லாம் - வண்டுகளெல்லாம், அதன் தாதினை - அப் பூக்களின் தேனை, நந்தும் - மிக்குப் பொலியும; மக்களும் - உலகத்து மக்களும், தீது இல் வினையினை - குற்றமில்லாத நற்செய்கைகளால், நந்துவர் - உயர்வடைவர்; நரு - தேன் வகைகள், தத்தம - தாந்தா மிருக்கும், நனையினை - பூவருமபின் வகையினால், நந்தும - பெருகி நல்லனவாம.

(க - து.) மாலை பூவினால் விளங்கும்; வண்டுகள அப் பூவிலுள்ள தேனைப் பொலியும்; மக்கள நற்செய்கைகளால் உயர்வர்; தேன் தாந்தா மிருக்கும மலர்வகைக கேற்பப் பெருகி இனியவாம்.

நந்துதல் உயர்தலையும் விளங்குதலையும் உணர்த்தின. இதற்கு இவ் விருபொரு ளுண்மைகளையு முறையே 'கான நந்திய செந்நிலப் பெருவழி' (98) என்னும் முல்லைப்பாட்டினாலும் - 'பொன்செய் பாண்டிற் பொலங்கல நந்த' (316) என்னும் ஐங்குறுநூற்றினாலு மறிந்துகொள்க. தாது, தேன் என்னும் பொருட்டாதலை ஓங்குவரை மருங்கின் நுண்தா துறைக்குங் காந்தள்' (152) என்னும் பட்டினப்பாலையிற் காண்க. தாது - மகரந்தமுமாம். வினை - ஈண்டுச் செயல்; தத்தம் 'நனையி'னா லென்றது, தேன் தானிருக்கும் பூவின் செழுமைக்கும் வகைக்கும் ஏற்பப் பெருகி இனிதாதலின். மற்று - அசை.

சகூ. சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூ ணிரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது.

(இ - ள்.) சிறந்தார்க்கு - நட்பிற் சிறந்தவர்களுக்கு, செறுதல் - தம் நண்பரைப் பிழை செய்தவழியுஞ் சினந்து நீக்குஞ் செயல்கள், அரிய - இலவாம; பிறந்தார்க்கு - உயர்குடியிற் பிறந்த மேலோர்க்கு, எஞ்ஞான்றும - எக்காலத்திலும், துணை துறந்து வாழுதல் - தமக்குத் துணையான சுற்றங்களை நீங்கி இன்ப வாழுவில் வைகும் வகைகள, அரிய - இல; வரைந்தார்க்கு - உணவின் பொருட் செலவைத் தமக்கென்றே அளவு செய்து வாழுகின்றவர்களுக்கு, வகுத்து ஊண் - பிறர்க்குப் பகுததளிதது உண்ணு நிகழ்ச்சிகள, அரிய - இல; யார்க்கும் - ஈரநெஞ்சமுடையா ரெவர்க்கும், இரந்தார்க்கு - தம்பால வந்து இரநது கேட்பவாகட்கு, ஒன்று - ஒரு பொருள், இல் என்றல் - இலலை யென்று மறுத்துக் கூறுதல், அரிது - இல்லை.

(க - து.) சிறந்த நண்பர்கள் தம்மு ளொருவரையொருவர் சினந்துகொளளா; உயர்குடிப் பிறப்பினர் தம் இனத்தாரை நீங்கி வாழார்; தமக்கே செலவு செய்கின்றவாகள் பிறர்க்குப் பகுத்துண்டல் செய்வாரல்லர்; அருளுடையவரெல்லாரும் இரந்தார்க்கு இல்லையென்று சொல்லார்.

'அரிய' வென்பது பலவின் முற்றுனமையின், 'செறுதல்' 'வாழ்தல்', 'உண்டல்' என்பவற்றிற்குப் பன்மைப் பொருள் உரைத்துக்கொள்க. 'எஞ்ஞான்று' மென்பதை ஏனையவற்றிற் குங் கூட்டிய பிழைசெய்த காலத்தும், இடுக்கான காலத்தும், செல்வம் மிக்க காலத்தும், வறுமையுற்ற காலத்துமெனக் கருத்துரைததுக் கொள்ளல் சிறப்பாகும். ஊண், முதனீண்ட முத னிலைத தொழிற் பெயா. அருமை, ஈண்டு இன்மைமேல. ஞான்று - காலப்பொருளதாகிய இடைச்சொல்.

நிம. இரைசுடு மின்புறு யாக்கையுட் பட்டால்
உரைசுடு மொண்மை யிலாரை-வரைகொள்ளா
மூன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையுந்
தன்னடைந்த சேனை சுடும்.

(இ - ள்.) இரை - உணவு, இன்பு உரு - பிணியினற் றுன்பமுறும், யாக்கையுள் பட்டால - வயிற்றிற் சேர்ந்தால், சுடும்-வருத்தும்; ஒண்மை இலாரை - அறிவு விளக்கம் இல்லாத வர்களை, உரை சுடும் - அவர் வாய்மொழியே அவரைத் துன் புறுத்தும்; ஒருவன் - ஒருவனது, வரைகொள்ளா - அறத்தின்

எல்லையிற்படாத, முன்னைவினை - முன்செய்த தீவினை, சுடும் - இப்பிறப்பில் வந்து வருத்தும்; வரை கொள்ளா - அறத்தின் எல்லையிற் படாத, வேந்தனையும் - அரசனையும், தன் அடைந்த - தன்னைச் சேர்ந்த, சேனை - படைகளே, சுடும - கொல்லும்.

(க-து.)பிணியுள்ள உடம்பிற சேரும் உணவு செரியாமை யாற் துன்புறுத்தும்; அறிவிலாரை அவர் வாய்ச்சொல்லே வருத்தும்; முன்செய்த தீவினைகள இம்மையில் வந்து துன் புறுத்தும்; அறதகின் வரையறையில் நிலலாத அரசனை அவன் சேனைகளே கொல்லும்.

அறிவென்பது விளக்கமுடைமையின் 'ஒண்மை' யெனப் பட்டது. 'ஒண்மை யுடையம்யா மென்னுஞ் செருக்கு' (புல் லறி, ச) என்பது திருக்குறள். வரைகொளளாவென்னுய குறிப் பால் வினை தீவினைக்காயிற்று. வரைகொள்ளா வென்பதை அரசனுக்குங் கூட்டுக. நீதிவழியில நடத்தப்படாத சேனை அரசர்க்குத் தீங்கிழைக்குமென்பது. உம்மை, இறந்தது தழீஇய எச்சம். 'சேனையே' எனத தேற்றேகாரம் விரித்துக்கொளக. யாக்கை - 'யா' பகுதி, 'க்' சந்தி, 'கு' சாரியை, 'ஐ' செயப் படு பொருண்மை விகுதி; கட்டப்பட்டது என்பது பொருள்.

நிக. எள்ளற் பொருள திகழ்த லொருவனை
யுள்ளற் பொருள துறுதிச்சொ-லுள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலுந்
தேர்தற் பொருள பொருள்.

(இ - ள்.) ஒருவனை - பிறனொருவனை, இகழ்தல் - இகழுஞ் செயல், எள்ளற் பொருளது - பிறரால் இகழ்தற்குரியது; உறுதிச்சொல் - ஒருவன் கூறும் உறுதிச்சொல், உள்ளற் பொருளது - அவனை நண்பனெனக் கருதுதற்குரியது; அறநெறி- அறவழி, உள் அறிந்து-ஒருவன் உள்ளத்தில் தெளிந்து, சேர்தற் பொருளது - அடைதற்குரியது; பொருள் - மெய்ப்பொருள்கள், பல்நூலும் - அமைவுடைய பல நூல்களையும், தேர்தற் பொருள- ஆராய்ந்து தெளிதற்குரியன.

(க - து.) ஒருவனுக்கு இகழ்தற் குரியது அவன் பிறரை இகழுஞ் செயல்; ஒருவனை நண்பனென்று தேர்தற்குரியது

அவனது உறுதிச் சொல்: உண்மையறிந்து தெளிந்து கடைப்பிடித்தற் குரியது அறவழி; பல நூற்களையும் ஆராய்ந்து தேர்தற்குரிய பொருள்கள் மெய்ப்பொருள்களாம்.

உள் - உள்ளம். நூலும்: இரண்டாவது விரிக்க; உம்மை, முற்று. உறுதிச்சொல் - அடையப்படும் நன்மையைத் தருஞ் சொல். உறு - பகுதி, த் - எழுத்துப்பேறு, இ - செயப்படு பொருளுண்மை விகுதி.

நிஉ. யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள - தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

(இ - ள்,) யாறு - ஆற்றுவெள்ளம், உள் அடங்கும் - தம்முட் புகுந்து அடங்கத்தக்க, குளம் உள - குளங்களும் நாட்டில் உள்ளன; வீறு சால் - சிறப்பு அமைந்த, மன்னர் விழையும் - அரசர்களான் விரும்பப்படும், குடி உள - குடிமக்களும் உள்ளன; தொல் மரபின் - பழைய முறைமையினையுடைய, வேதம் உறுவன - வேதக் கருத்துக்களைப் பொருந்துவனவாகிய, பாட்டு உள - சில தனிப்பாட்டுகளும் உளளன; வேள்வியோடு ஒப்ப - வேள்விகளுக்கு நிகராவனவாகிய, வேளாண்மை உள - ஈகைகள் உள்ளன.

(க - து.) ஆறுகள் தம்முள் அடங்கத்தக்க குளங்களும் உள்ளன; அரசர்களால் விரும்பப்படும் குடிகளும உள்ளன; வேதக் கருத்துக்களையுடைய பழைய தனிப் பாட்டுகளும் உள்ளன; வேள்விக்கு நிகரான ஈகைகளும் உள்ளன.

'யாறு ளடங்குங் குள' மென்றது, ஆற்று வெள்ளங்களும் புகுந்தடங்கத்தக்க அவ்வளவு அகலமும் ஆழமும் கரை வலிமையு முடைய குளங்களாகு மென்றற்கு. மன்னர் விழையுங் குடியாதல் - திருவிலும் உருவிலும் பெருந்தகைமையிலு மென்க. தொன்மரபினென்றது மேன்மையாகக் கருதப்பட்ட பழந்தமிழ் நான்மறைகளின் கருத்தமைந்த பழந்தமிழ்த் தனிப் பாட்டுகளும் இஞ்ஞான்றுள்ளனவென்பது. வேள் ஆண்மை இரப்போரது விருப்பத்தை ஆளுத லென்க; வேள் - விருப்பம், உறுவன - முற்றெச்சம். வேள்வியோ டொத்த வேளாண்மையாவது - கைம்மாறு செய்ய வலியில்லாத நல்லோர்க்கு ஒருவன் தேடிச் சென்று கொடுக்கும் ஈகை.

நாக. எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி-யுருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்ப சேணீ
செறிவுடையான் சேரு பதி.

(இ - ள்.) எருது உடையான் - உழவு மாடுகளை யுடை யவன், வேளாளன்-வேளாளனுவான்; ஒரு தொடையான்-ஒரு காலால், வெல்வது - பெடையை வயப்படுத்துவதான, கோழி-சேவற் கோழியைப்போல, ஏலாதான் - எவர் பகையையும் ஏற்றுக் கொள்ளலின்றி யாவரையும் வயப்படுத்தி ஒற்றுமை யுடன் வாழ்பவன், பார்ப்பான் - பார்ப்பனனுவான்; உரு வோடு - உருவழகோடு, அறிவுடையாள் - வாழ்க்கையை நடத் தும் நல்லறிவு உடையவள், இல்வாழ்க்கைப் பெண் - இல்வாழ்க் கைக்கு உரிய துணைவி; சேணீ - தனது சேணீயோடு, செறி வுடையான் - எஞ்ஞான்றும் ஒன்று பட்டு உடனுறைத லுடை யவன், சேருபதி - சேணைத் தலைவனுவான்; என்ப - என்று பெரியோர் கூறுவர்.

(க - து.) உழவுமாடுடையவன் வேளாளன்; ஒருகாலால் பெடையை வயப்படுத்துவதான கோழியைப் போல எவரோடும் மாறுபடாது ஒற்றுமையுடன் வாழ்பவன் பார்ப்பனன்; அழகும் அறிவுமுடையவள் வாழக்கைத்துணை; சேணீயோடு ஒன்று பட்டு உடனுறைபவன் சேருபதி.

வேளாளனுக்கு உழவு இன்றியமையாதன வாதலால் எருதுடையான் என்றார். கோழி ஒரு காலாற் பெடையை நணுகி வயப்படுத்துவதென்பது நயங் காட்டுமாறும்; அதை யொப்பவே பார்ப்பானும் எவரோடும் பகையாமல் நயமாதவே தன் செய்கையை முடித்து வெற்றி பெறுவா னென்க. சேணீ செறிவுடையானென்றது, சேணீயைவிட்டு விலகா னென்றபடி; உடையான் முதலியன விணையாலணையும் பெயர்கள். உரு வோடு, ஒடு உடனிகழச்சிப் பொருளது. சேணைச் செறிவுடை யான் என்ற பாடத்துக்கு ஒற்றுமையுடைய மிக்க பெரிய சேணீ என்க. ஏலாதான் என்பதற்கு மிக்க பொருளாசையால் மானங்கெட ஏற்காதவன் என வுரைப்பினுமாம்.

நிச. யாணை யுடையார் கதணுவப்பர் மன்னர்
கடும்பரிமாக் காதலித் தூர்வர்-கொடுங்குழை

நல்லாரை நல்லவர் நாணுவப்ப - ரல்லாரை
அல்லா ருவப்பது கேடு.

(இ - ள்.) யானை உடையார் - யானையையுடைய போர்த் தலைவர், கதன் உவப்பர் - அதன் சினத்தை விரும்புவர்; மன்னர் - அரசர், கடும் பரிமா - விரைந்த ஓட்டத்தினையுடைய குதிரையை, காதலித்து - விரும்பி, ஊர்வர் - அதன் மேலேறிச் செல்வர்; கொடுங் குழை - வளைவான காதணியை யணிந்த, நல்லாரை - மங்கையர்பால், நாண் - நாணத்தை, நல்லவர் - நல்லியல் புடையவர்கள், உவப்பர் - விரும்புவார்கள்; அல் லாரை - நாணுடைய நல்லாத மகளிர்பால், அல்லார் - தீயோர், உவப்பது - விரும்புவது, கேடு - தீய ஒழுக்கமேயாம்.

(க - து.) யானையை யுடையவர்கள் அதன் சினத்தை விரும்புவார்கள்; அரசர்கள விரைந்த செலவையுடைய குதிரையை விரும்புவார்கள்; நல்லியலபுடைய ஆடவர்கள் நன் மங்கையரின் நாணத்தை விரும்புவார்கள; தீய ஆடவர்கள் தீய பெண்டிர்பால் தீதையே விரும்புவர்.

கதன், ஈற்றுப் போலி. கடுமை, இங்கு விரைவின் மேலது. பரிமா, இருபெயரொட்டு. பெண்மக்களிடத்தில் உள்ள தீயவை புரியாத நாணத்தை நல்லவர்கள் விரும்புவா கள்; ஆனல் தீயவர்கள் அந்நாணத்தை விரும்பாது தீயவை புரியும் நாணங் கெட்ட தன்மையையே விரும்புவ ரென்க. 'செய்யத் தகாதனவற்றின்கண் உளள மொடுங்குதலே' நாண மென்பார் **நச்சினார்க்கினியர்**. நல்லாரை, அல்லாரை - உருபு மயக்கம்.

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை - கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளோ
டெண்ணக் கடவுளு மில்.

(இ - ள்.) கண்ணின் - கண்ணைப்போல், சிறந்த உறுப்பு - மேலான உறுப்பு, இல்லை - ஒருவனுக்கு வேறில்லை; கொண்டா னின் - தன்னைத் திருமணஞ் செய்துகொண்ட கணவனைப் போல, துன்னிய கேளிர் - நெருங்கிய உறவினர், பிறர் இல்லை - (குல மகளிர்க்கு) வேறெருவருமில்லை; மக்களின் - தம் மக்

கீரைப்போல், ஒண்மையவாய் - ஒளியுடையவாய், சான்ற - அமைந்த, பொருள் - வேறு பொருள், இல்லை - பெற்றோர்க் கில்லை ; ஈன்றாளோடு - தாய்க்கு நிகராக. எண்ண - மதிப்பதற் குரிய ; கடவுளும் இல - எக்கடவுளும் வேறில்லை.

(க - து.) ஒருவனுக்குக் கண்ணைப்போல மேலான உறுப்பு வேறில்லை ; குலமகளுக்குக் கணவனைப்போல நெருங்கிய உற வினர் வேறில்லை ; பெற்றோர்க்கு மக்களைப்போல ஒளியுள்ள பொருள்கள் வேறில்லை ; குழந்தைகட்குத் தாயைப்போல மேலான கடவுள் வேறெதுவுமில்லை.

இன்னும் ஓடும் ஒப்புமைக்கு வந்தன. கொண்டான், விலை யாலளையும் பெயர். 'ஒண்மையவாய்ச் சான்ற பொரு' ளென்றது ஏனை எல்லாப் பொருள்களினும் அறிவொளியுடைய பொருளாய்ப், பெற்றோக்கு இம்மை மறுமைப் பயன்களை விளைப்பதாய்ப், பிறவி முழுதும உரியதாய் அமைந்து நிற்றலி னென்பது ; 'தம் பொருளென்ப தம் மக்கள்' (மக்கட்பேறு,5) என்னும் **வள்ளுவர் திருமொழியை** இங்கு உற்று நோக்குக. கேளிர் - கேண்மை யென்னும் பண்படியாய்ப் பிறந்த பலாபாற் படர்க்கைப் பெயர். உம்மை, உயர்வு சிறப்பு. 'கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை, கலவியின் நுண்ணிய வாய பொருளில்லை. கொண்டானின் துன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளோ டென்ன கடவுளு மில்' - என்பது **பரிபாடல் வையைப்பாடு.**

நிகு. கற்றன்னர் கற்றுரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றுரைச் சேர்ந்தவர் - தெற்றென
உற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னர்.

(இ - ள்.) கற்றுரை - கல்வியறிவுடையவர்களை, காதலர் - அன்பால் விரும்புகின்றவர்கள், கற்றன்னர் - அக்கல்வியறிவு உடையவர்களை ஒப்பர் ; கண் ஓடார் - பிறர்பாற் கண்ணோட்ட மில்லாதவர்கள், செற்றன்னர் - துன்பஞ் செய்தாரை ஒப்பர் ; தெற்றென - தெளிவாக, உற்றது - உண்மையை, உரையா தார் - சொல்லாதவர்கள், செற்றுரைச் சேர்ந்தவர் - பகைவரை ஒப்பர் ; புல்லறிவினர் - கீழ்மையறிவுடையவர்கள், பாம்பு

உள் கரந்து உறையும் - பாம்பு உள்ளே மறைந்து வாழும், புற்று அன்னர் - புற்றை ஒப்பர்.

(க - து.) கல்வியறிவுடையவர்களே விரும்பி உடனிருப்பவர்கள், அக்கல்வியறிவுடையவர்களுக்கு ஒப்பாவர்; கண் ணோட்டமில்லாதவர்கள் இடர் செய்வாரை ஒப்பர்; உண்மையைத் தெளிவாகச் சொல்லாதவர்கள் பகைவருக்கு நிகராவார்கள்; சிற்றறிவுடையார் பாம்புப் புற்றுக்கு ஒப்பாவர்.

கற்றன்னர் - கற்றல் அன்னர்; கற்றல் என்பது ஈறு தொகுத்தலாய் நின்றது; செற்றன்ன என்பதும் அது. காதலர் - வினைக்குறிப்புப் பெயர். உற்றது - நெஞ்சத்துட்பட்டது, அல்லது நிகழ்ந்தது என்க. புல்லறிவினர்பால் உட்கிடக்கும் தீமைகள் பல விருக்குமாகலின், உள் கரந்து பாம்புறையும் புற்றன்னராயினர். 'கற்றன்னர் கற்றலைக் காதல்' என்பதைக் 'கற்றன்னர் கற்றலைக் காதலவ' (எசை) என்று மேலும் கூறுவர்.

நிஎ. மாண்டவர் மாண்ட வினைபெறுப - வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே - யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

(இ - ள.) மாண்டவர் - அறிவால் மாட்சிமைப்பட்டவர்கள், மாண்ட வினை - மாட்சிமைப்பட்ட செயல்களை, பெறுப - செய்யப்பெறுவர்; வேண்டாதார் - அவ்வறிவு மாட்சிமையை வேண்டாதவர்களை, வேண்டா வினையும் - தம்மால் வேண்டப் படாத தீவினைகளையும், பெறுப - இம்மை மறுமைகளிற் பெறுவார்கள்: யாண்டும் - எப்பொழுதும், பிறப்பார் - மேற் பிறப் பிற் பிறப்பவர்கள், பிறப்பு ஆர் - அப்பிறப்பிற் பொருந்தும், அறன் - அறத்தையே, இன்புறுவர் - இருமையினும் விரும்பி யின்புறுவர்; துறப்பார் - யான் எனதென்னும் பற்றைத் துறப் பவர்கள், துறக்கத்தவர் - வீட்டுலகத்திற்குரியவ ராவார்கள்.

(க - து.) அறிவான் மாட்சிமைப்பட்டவர்கள் மாட்சிமைப் பட்ட செயல்களையே செய்வார்கள்; அவ்வறிவு மாட்சிமையை வேண்டாதவர்கள் தீவினைச் செயல்களையும் பெறுவார்கள்; உயர்ந்த பிறப்பிற் பிறப்பவர்கள் அப் பிறப்பின் அறத்தை

விரும்பி இருமையும் இன்புறுவர்; பற்றைத் துறப்பவர்கள் வீட்டின் பத்துக்குரியராவார்கள்.

மாண்டவர் - ஈறு திரிந்த விணையாலணையும் பெயர். பெறுப, பல்லோர் படர்க்கை எதிர்கால விணைமுற்று. யாண்டும் - இடை நிலை விளக்காதலின் மற்றவற்றோடும் ஒட்டிப் பொருளுரைத்துக் கொள்க. துறக்கத்தவ ரென்றே உரிமைப்படக் கூறினர், அது திண்ணமாதலின்.

நிஅ. என்றும் மூளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கு-மென்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னா பிறபடாருஞ்
சாவாரு மென்று மூளர்.

(இ - ள்.) என்றும் - எக்காலத்தும், நாளும் - விண்மீன் களும், இரு சுடரும் - திங்களுஞ் சூரியனும், உளவாகும் - உள் ளனவாகும்; என்றும் - எக்காலத்திலும், பிணியும் - செயலுக்கு இடையூறான நோயும், தொழில் - உழவு முதலிய தொழில்களும், ஒக்கும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்திலும், கொடுப் பாரும் - இல்லை யென்னுமல் ஈவாரும், கொளவாரும் - ஏற் பாரும், அன்னர் - உளராவர்; என்றும - எக்காலத்திலும், பிறப் பாரும் - பிறப்பவர்களும், சாவாரும் - இறக்கின்றவர்களும், உளர் - உளராவர்.

(க - து.) விண்மீன்களும் திங்களுஞ சூரியனும என்றும் உள்ளன; நோயும் முயற்சியும் என்றும் உள்ளன; ஈவாரும் ஏற் பாரும் என்றும் உளர்; பிறப்பாரும் இறப்பாரும் என்றும் உளர்.

எனவே இச்செய்யுள் உலகத்தின் இடையருமை குறித்த வாரும். 'ஒக்கு' மென்பதை என்றும் உளவாத லொக்கு மென் றும், அன்னரென்பதை என்றும உளவாகும் நாண்மீன் முதலா யின போல்வரென்றுங் கொள்க. தொழில் தலைமையால் உழு தொழில் முதலர்யினவற்றைக் குறிக்கும். சுடர் - பண்பாகு பெயர். தொழில் என்பதன் ஈற்றில் எண்ணும்மை தொக்கது, பிணி - பிணித்தல் என்னும் தொழிலடியாகப் பிறந்த பெயர்; முயற்சி செய்யவொட்டாமற் கட்டுப்படுத்துவது என்பது பொருள்.

59. இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனெழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்
இனிய னெனப்படுவான் யார்யார்க்கேயானும்
*முனியா வொழுக்கத் தவன்.

(இ - ள்.) இனிது உண்பான் என்பான் - இனிதாக உண்பவன் என்று சொல்லப்படுபவன், உயிர் கொல்லாது - ஒருயிரையுங் கொல்லாது, உண்பான் - காய்கறி யுணவுகளையே உண்பவனுவான்; முனிதக்கான் என்பான் - எல்லாராலும் வெறுக்கத்தக்கவனென்று சொல்லப்படுபவன், முகன் ஒழிந்து—முகமலர்ச்சியில்லாமல், வாழுவான் - கடுகடுப்பாய் வாழ்பவனுவான்; தனியன் எனப்படுவான் - துணையில்லாதவனென்று சொல்லப்படுபவன், செய்தநன்று இலலான் - தன்னுற செய்யப்பட்ட நன்மையொன்று மில்லாதவனுவான்; இனியன் எனப்படுவான் - இனிமையானவனென்று சொல்லப்படுபவன், யார்யார்க்கேயானும்-எவரெவரிடத்திலானுலும் முனியா ஒழுக்கத்தவன் - வெறுக்கப்படாத ஒழுக்கத்தை யுடையவனுவான்.

(க. து.) ஒருயிரையுங் கொல்லாமற் காய்கறி யுணவுகளையுண்பவனே இனிதாக உண்பவனுவான்; முகமலர்ச்சியில்லாமற் கடுகடுப்பாய் உயிர்வாழ்வோன் எல்லோரானும் வெறுக்கப்படுவான்; யார்க்கும் உதவி செய்யாதவன் துணையில்லாதவனுவான்; எவரிடத்திலும் வெறுக்கத்தகாத ஒழுக்கத்தை யுடையவன் இனியவனென்று சொல்லப்படுவான்.

இனிது - குறிப்பு முற்றெச்சம். முனியத்தக்கான் என்பது முனிதக்கான் என நின்றது. செய்த நன்றில்லா னென்பது நன்மை செய்தலில்லா னென்னும் கருத்துடையதாகலின் அதற் கேற்பப் பொருளுரைத்துக்கொளக. அடுக்குப் பன்மைப் பொருளது; குவ்வுருபு இடப்பொருளில் வந்தது. ஆன் - ஆயின் என்பதன் மருஉ. இது பஃறொடை வெண்பா.

60. ஈத்துண்பா னென்பா னினைசநடுவான் மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான் தெற்ற

---

* முனியாத வுள்ளத் தவன் -எனவும் பாடம்.

நகையாகு நண்ணார்முற் சேறல் - பகையாகும்
பாடறியா தானே யிரவு.

(இ - ள்.) ஈத்து உண்பான் என்பான் - பிறாக்குக் கொடுத்துண்பவ னெனப்படுவான், இசை நடுவான் - உலகத்திற் புகழை நிறுத்துவான்; அவன் கைத்து உண்பான் - அங்ஙனம் கொடுத்துண்பவனது கைப்பொருளையும் பறித்துண்பவன், காங்கி எனப்படுவான் - அவாவுடையவனெனப்படுவான்; நண்ணார்முன்-விரும் பாதவர்முன், சேறல்-ஒன்றை விரும்பியடைவது, தெற்ற நகையாகும் - தெளிவாகவே இகழ்ச்சியுண்டாகும்; பாடு அறியாதானே - தனது தகுதியறியாதவனே, இரவு - இரந்துசெல்லல், பகையாகும் - பகைமைக்கே இடமாகும்.

(க - து.) பிறாக்குக் கொடுத்துண்பவன் புகழுடையவனவான்: அங்ஙனங் கொடுத்துண்பவனது கைப்பொருளையே பறித்துண்பவன் அவாவுடையவனவான், தன்னை விரும்பாதார் முன் தான் விரும்பிச் செல்லல் தெளிவான இகழ்ச்சிக்கு இடமாகும்; தகுதி யறியாதவனை ஒன்று வேண்டிச் செல்லல் பகைக்கிடமாகும்.

ஈந்தென்பது ஈதென வலித்தது. மற்று பிறிதென்னும் பொருளது. 'மற்றவன்' என்பதற்குப் 'பிறனது' எனப் பொருளுரைப்பினும் ஆம். கைத்து-கையிலுள்ள பொருளென்க. காங்கி யென்பது வெப்பத்தை உணர்த்துவதொரு சொல்லாகலின், இங்கு அவ்வியல்பினையுடைய அவாவினையுடையா னென்னும் பொருட்டாயிற்று. யாதொரு முயற்சியுமின்றிப் பிறர் பொருளை அவாவி உயிர் வாழ்பவ னென்பது பொருள். நகை - இங்கு இகழ்ச்சிப்பொருட்டு. பகை - தொழிற்பெயர்; பகு - பகுதி, ஐ-விகுதி, உகரக்கேடு சந்தி. பாடு - முதனிலை திரிந்த தொழிலாகு பெயர்.

சுக. நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழல் சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் நாகர் - தொழுத்திறந்து
கன்றூட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றூட்ட நந்தும் விருந்து.

(இ - ள்.) நெருப்பு அழல் - வேள்வித் தீயின் சுடர், நெய் விதிர்ப்ப - நெய்யைச் சிந்த, நந்தும் - ஓங்கும்; நாகர் - தேவர்கள், சேர்ந்து வழுத்த - தம்மைப் பிறர் அணுகி ஏத்த, வரம் கொடுப்

பர் - வேண்டும் நன்மைகளை அளிப்பர் ; கறவை - ஆக்கள், தொழுத் திறத்து - கொட்டிலைத் திறந்து, கன்று ஊட்ட - கன்று களை உண்பிக்க, நந்தும் - பால் பெருக்கெடுக்கும்; கலம் பரப்பி - இலையை விரித்து, நன்று ஊட்ட - இனிமையாக உண்பிக்க, விருந்து நந்தும் - விருந்தினர் மனங் களிப்பர்.

(க - து.) நெய்யைச் சொரிய அழல் வளர்ந்தெரியும்; தம்மை வழுத்தினால் தேவர் நன்மை தருவர் ;கன்றை உண்பிக்க ஆன் பால் பெருகும்; இனிமையாய் விருந்தளிக்க விருந்தினர் மகிழ்வர்.

விதிர்ப்ப - சிந்த; இஃதிப்பொருட்டாதல் ' நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்து ' (கஅஅ) என்னும் **புறநானூற்** றடியிற் காண்க. நெய்யென்னுங் குறிப்பினால் நெருப்பு வேள்வித் தீயை யுணர்த்திற்று. நாகர், ஈண்டுத் தேவர் மேற்று. பரப்பி யென்னுங் குறிப்பினாற் கலம் இலைக்கலத்துக்காயிற்று. நந்தல் - மிகுதல்; இப்பொருள் கொண்டு தொடர்க்கேற்பக் கருத்துரைத்துக் கொள்க. அழல் - எழுவாயாதலால் லகரம் திரியாது நின்றது. விதிர்ப்ப முதலிய செய வெனெச்சங்கள் காரணப்பொருளன வாதலால் இறந்தகாலத்துக் குரியன. கறவை : கற - பகுதி, வ - சந்தி, ஐ-வினைமுதற் பொருண்மை விகுதி. விருந்து - பண்பாகு பெயர். விருந்து - புதுமை. நன்றூட்டலாவது - அளவளாவுதல் செய்து உண்பித்தல்.

கூ. பழியின்மை மகளாற் காண்க வொருவன்
*கெழியின்மை கேட்டா லறிக பொருளின்
நிகழ்ச்சியா னுக்க மறிக - புகழ்ச்சியாற்
போற்றுதார் போற்றப் படும்.

(இ - ள்.) பழி இன்மை - ஒருவன் தான் பழிக்கப்படுத வில்லாமையை, மக்களால் காண்க-தன் மக்கட்பேற்றுற் கண்டு கொள்க ; ஒருவன் கெழி இன்மை - ஒருவன் தனக்கு நட்புரிமை யில்லாமையை, கேட்டால் அறிக - தனக்குச் செல்வங் கெடு தலாற் கண்டுகொள்க ; பொருளின் நிகழ்ச்சியால் - பொருள் வரவினால், ஆக்கம் அறிக - ஒருவன் தனது வளர்ச்சியைக் கண்டு கொள்க ; புகழ்ச்சியால் - தான் பலராலும் புகழப்படும் புகழ்ச் சியினால் போற்றுதார் - பகைவராலும், போற்றப்படும் - ஒருவன் வணங்கப்படுவான்.

கெழுவின்மை - எனவும் பாடம்

(க - து.) ஒருவன் தனது நன்மக்கட் பேற்றினைப் பழிக்கப் படுத லில்லாதவனாவான் ; நட்பியல்புடையவனால் அவனுக்குப் பொருட்கேடு உண்டாகாது. ஒருவனுக்குச் செல்வம் மேலு மேலும் பெருகிக்கொண் டிருக்குமானால் அதனால் அவனது முற் போக்குண்மை அறியப்படும் ; பலரும் புகழும்படி ஒருவன் ஒழுகுவானாயின் அப பெரும் புகழினைப் பகைவரும் அவனை வணங்குவர்.

கேழ் - பண்புப் பெயர் ; கெழு - பகுதி, இ-பகுதிப்பொருள் விகுதி யென்க. இன்மை யிரண்டும் குறிப்புத் தொழிற் பெயர். 'பொருளின் நிகழ்ச்சி' யென்றது, பொருளின் வரவையும், வந்து நல்வினைகளிற் செலவாகும் அறச்செலவையும் குறிக்கும், ஆக்கம் - எல்லா வகையிலும மேலுமேலும் உயர்வதனால் நல் லூழ் எனினுமாம். போற்றுதாருமென எச்சவும்மை விரித்துக் கொள்க, பழி - நடுவுநிலை யின்மை ! முதனிலைத் தொழிலாகு பெயர்.

சுஙூ. கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றும்-பெண்ணின்
உருவின்றி மாண்ட வுளவா - மொருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள - பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட லுள.

(இ - ள்.) கண்ணுள்ளும-மக்களின் கண்களுளளும்,காண் புழி - ஆராயுமிடத்து, காதற்று ஆம் - விரும்பப்படுவதான கண் ணும் உண்டு ; பெண்ணின் - பெண் மக்களுள், உரு இன்றி - அழகில்லையாயினும, மாண்ட - மாட்சிமைப்பட்ட இயல்புகள், உள ஆம் - உள்ளனவாகும் ; நாட்டுளளும்-ஒரு நாட்டினுள்ளும், ஒரு வழி-எங்கேனும் ஒரு பகுதியில, நலல பதி உள - வளமான ஊர்களுள்ளன ; பாட்டுள்ளும-பாட்டுகளுளளும், பாடு எய்தும்- பெருமை மிக்க, பாடல் உள - பாட்டுகளிருக்கின்றன.

(க - து.) கண்களுளளும் விரும்பப்படும் கண்க ளுளளன ; அழகில்லாத பெண்டிருள்ளும் மாட்சிமைப்பட்ட நல்லியல் புடையோ ருண்டு. நாட்டினுள்ளும் ஒரு பாங்கர் வளமான ஊர்க ளுள்ளன. பாட்டுகளுள்ளுஞ் சிறப்பான பாட்டுக ளுள்ளன.

விரும்பப்படும் கண்களாவன கண்ணோட்டமுடைய கண்கள். உம்மைகள் எச்சம். காண்புழி ; காண் - பகுதி, ப் - எழுத்துப் பேறு, உழி - நிகழ்கால வினையெச்ச விகுதி. பெண்ணென்னு

மிடத்தும் உம்மை வருவித்துக்கொள்க. ஒருவழி யென்பதைச் சிறுபான்மையெனக் கொண்டு ஏனையவற்றோடு கூட்டி யுரைப் பினுமாம். நல்ல வென்றது ஈண்டு வளத்தின் மேற்று. பாட்டுக் குப்பாடென்றது, சொற்பொரு ளிசைகளி லென்க. இன்றி என்பத னீற்றில் இழிவுசிறப்பும்மை தொக்கது. பாடல்-தொழி லாகு பெயர்.

சுச. கிரியழற் காணிற் ரொழுப விறகின்
எரியழற் காணி னிகழ்ப - வொருகுடியிற்
கல்லா தூத்தாஅ கைவிட்டுக் கற்ரூன்
இளமைபா ராட்டு முலகு.

(இ - ள.) கிரி அழல காணின் - கிரியி னெரியுஞ் சுடரைக் கண்டால, ரொழுப - அது சிறிதாயிருப்பினும உலகத்தா கைகூப்பி வணங்குவா; விறகின்-விறகிலே, எரி அழல் காணின்-எரியுஞ் சுடரைக் கண்டால, இகழ்ப-அது பெரிதாயிருப்பினும உலகத்தார் மதியாதிகழுவா, ஒரு குடியில - ஒரே குடும்பத்தில், கல்லாது-படியாமல், மூத்தாஅ - ஆண்டு முதிர்ந்துவிட்டவஅ, கைவிட்டு - மதியாமல் விடுத்து, கற்ரூன்-படித்தவனது, இளமை-இளமைப் பருவத்தையே, உலகு பாராட்டும் - உலகத்தா பாராட்டுவர்.

(க - து.) கிரியி லெரியுஞ் சுடரைக் கண்டால் அது சிறிதா யிருப்பினும் உலகத்தார் தொழுவர்;விறகி லெரியுஞ் சுடரை அது பெரிதாயிருப்பினுந் தொழாது இகழுவா; ஒரு குடும்பத்திலேயே படியாதவன் மூத்தவனுயினும் மதியார்; படித்தவன் இளையவனு யினும் மதித்துப் பாராட்டுவா.

கிரி - தொழிலடியாகப் பிறந்த பெயர்; செயப்படு பொருண்மை விகுதி புணர்ந்து கெட்டது; கிரிக்கப்பட்ட தென்பது பொருள். கைவிட்டுப் பாராட்டு மென்பதைக் கைவிடும் பாராட்டுமென இரண்டாகப் பிரித்துக்கொள்க. நான்மணிக் கடிகையானமையின், ஒரு பொருளின் உருவத்தைப் பாராமல் மற்று அதன் இயல்பைக் கண்டே மதித்தல்வேண்டு மென்பது இப்பாட்டின் கருத்து. உலகு - ஆகுபெயர்.

சுரு. கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
முளைக்குழா நீருண்டே லுண்டாங் திருக்குழாம்
ஒண்செய்யாள் பார்த்துறி லுண்டாகு மற்றவள்
துன்புறுவா ளாகிக் கெடும்.

(இ - ள.) கைத்து உடையான் - கைப்பொருள உளள வன், காமுற்றது - விரும்பிய பொருள, உண்டாகும - கிடைக் கும்; நீர உண்டேல் - நீர்ப்பாய்ச்ச லுண்டாலல், வித்தின் முளைக்குழாம் - விதைகளின் முளைக்கூட்டம, உண்டாம் - தோன்றும்; ஒண் செய்யாள் - விளக்கமுடைய திருமகள், பார்த் துறின் - அருள் செய்யின், திருக் குழாம் உண்டாகும் - பொருட் டிரள பெருகும்; அவள - அத்திருமகள், துன்புறுவாளாகின் - அருவருப்பாளாலல், கெடும் - உள்ள செலவமும் அழியும்.

(க - து.) செலவ முடையானுக்கு விருமபிய பொருள் கிடைக்கும; நீருண்டாலல் விதைகள் முளை கிளமபும்; திருமகள் கூடினறற் செல்வம் பெருகும்; அவள நீங்கினறற் செலவம் அழியும்,

கைத்து - முதன்மைபற்றிச் செலவத்தின் மேற்று. காமுற் றது. காமுறு - பகுதி, அ - சாரியை, து - ஒன்றன் படர்க்கை விகுதி. பகுதி ஒற்றிரட்டி இறந்தகாலம காட்டிய விணைப்பெயர். செய்யாள - செமமை எனனும் பண்படியாகப் பிறந்த பெயர். செம்மை - பகுதி, ஆள எனனும் விகுதிப் புணர்ச்சியில் 'மை' விகுதி கெட்டு, மகரம யகரமாகி, அது தனிக்குரின் முனனொற் ருதலின் இரட்டி முடிந்தது. பொருள: நடுவுநிலைமையுடை யாள எனபது. வித்தின் முளை - ஆறன் தற்கிழமை. பார்த் துறி னென்றது உடையானது நல்லியல்பின் பொருட்டெனவும, துன்புறுவாளென்றது அவன்றன் தீமைக்கெனவுங் கொளக. மற்று - விணமாற்று

சுசு. ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினு னின்புறூஉங் காலேயம் - நெல்லின்
அரிசியா னின்புறூஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல்.

(இ - ள்.) ஊன் உண்டு - ஊனுணவை யுட்கொண்டு, உழுவை - புலி, நிறம் பெறூஉம் - மேனி யமையும்; நீர் நிலத்து-

ஈரம் பொருந்திய நிலத்திலுள்ள, புல்லினன் - புல்லிய மேய்ந்து, காலேயம் - ஆனிரைகள், இன்புறூஉம் - இன்புறும்; நெல்லின் அரிசியான் - நெல்லரிசிச் சோற்றினால், கீழ் எல்லாம் - கீழ்மக்க ளெல்லாரும், இன்புறூஉம் - இன்புறுவர்; மேல் - மேன்மக் கள், தத்தம் - தங்கள் தங்கள் தகுதிக்கேற்ற, வரிசையான் - மதிப்புச் செயல்களால், இன்புறூஉம் - இன்புறுவர்.

(க - து.) புலி ஊண் உண்டு இன்புறும்; ஆன் புல்லுண்டு இன்புறும்; கீழோர் சோறுண்டு இன்புறுவர்; மேலார் மதிப் புணர்ந்து இன்புறுவர்.

'நிறம்பெறூஉ' மென்னுங் குறிப்புக் கீழோர் விலங்கோ டொத்து உடம்பையே வளர்ப்ப ரென்ப துணர்த்தும்; 'வாயுணர் வின் மாக்கள' என்றார் வள்ளுவரும். அரிசி, கீழ, மேல - ஆகு பெயர். அளபெடைகள - இன்னிசை நிறைப்பன.

சூள. பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை-யென்பெறினும்
முன்னவா முன்ன மறிந்தார்கட் - கென்னும்
அவாவா மடைந்தார்கட் குள்ளந் - தவாவாம்
அவாவிலார் செய்யும் வினை.

(இ - ள.) பின் - தொடங்கிய பின்பு, அதிர்க்கும் - நடுங்கச் செய்யும்: செய்வினை - செய்தொழில்கள், பின்ன ஆம் - முன் ஆராயாதார்க்குப் பின் தோன்றுவனவாம்; என் பெறினும் - எப் பயனைப் பெறுவதானாலும், முன்னம் - தொடங்குவதற்கு முன்ன மேயே, அறிந்தார்கட்கு - பின் வருவனவற்றை ஆராய்வார்க்கு, முன்ன ஆம் - அவை முன் தோன்றுவனவாம்; அடைந்தார்க்கு - ஒரு பொருளை விரும்பி அடைந்தவர்கட்கு, உள்ளம் - அவர்கள உள்ளம், என்னும் - எப்படியாயினும, அவா ஆம் - மேலு மேலும் அவாவுடையதாகும். அவா இலார் - எப்பொருளினும் பற்றில்லாத பெரியோர்கள், செய்யும் வினை - செய்யும் அறச் செயல்கள், தவா ஆம் - கெடாவாம்.

(க - து.) ஒரு செயலைச் செய்யத் தொடங்குமுன் ஆராயாத வர்களுக்கு அதன் துன்பங்கள் தொடங்கியபின் தெரியும்; ஆராய்ந்தவர்களுக்கு அவை தொடங்கு முன்னமேயே தெரி யும்; ஒரு பொருளை விரும்பி அடைந்தவர்கட்கு அதன்கண் எப்

படியாயினும் பற்றுண்டாகும்; எப்பொருளினும் பற்றில்லாதவர் கள் செய்யுஞ் செயல்கள் ஒருபோதுங் கெடமாட்டா.

எனவே பற்றுள்ளவர்கள் செய்யும் அறச்செயல்கள் பயன் படா வென்பதாயிற்று. பின்ன, முன்ன வென்பன குறிப்புவினை முற்றுக்கள். அவாவா மென்பதில ஆம் செய்யு மென்னுமுற்று ; ஏனைய அசைகள். 'என்னும்' என்பது எப்படியாயினு மென் றற்கு; 'போமினென வென்னுமுரையீயான்' (சுரமஞ்சரியா உ0) என்றார் **சீத்தலைச்சாத்தனாரும்.** தவா - பலவின் படர்க்கை எதிர்மறை வினைமுற்று ; தவு ஆ, உகரங் கெட்டது சந்தி. அவா - முத னிலைத் தொழிற்பெயர்.

சுஅ. கைத்தில்லார் நல்லவர் * கைத்துண்டாய்க் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர் - பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் - செய்தாரின்
நல்லர் சிதையா தவர்.

(இ - ள்.) கைத்து உண்டாய் - செலவம் உள்ளவராய்.காப் பாரின்-அச் செல்வத்தை நுகராமற் சேர்த்துப் பாதுகாப்பவரை விட, கைத்து இலலார்-அச்செலவ மிலலாத மாந்தர், நல்லவர் - மிகவும் நல்லவரேயாவா, வைத்தாரின் - அப் பொருளை வைத் திழப்பாரைவிட, வறியவர் நலலர் - வறுமையுடையோர் நல்ல ராவர் ; பைத்து எழுந்து - சினந்தெழுந்து, வைதாரின் - பிறரை வைதவர்களைவிட, பொறுப்பவர் - அவ்வைதலுரையைப் பொறுப்பவர்கள, நலலர் - மிகவும் நல்லராவர் : செய்தாரின் - நன்மை செய்தவர்களைவிட, சிதையாதவர் - அந்நன்மையை மற வாதவர்கள், நல்லர் - மிகவும் நல்லராவார்கள்.

(க - து.) செல்வமிருந்தும் பயனடையாதவர்களைவிட அச் செல்வமில்லாதவர்கள் நல்லவர்கள ; செல்வத்தைச் சேர்த்து வைத்து இழப்பாரினும வறியவர் மிக நல்லவர் ; சினந்தெழுந்து வைவாரினும் அதனைப் பொறுப்பவர் மிகவும் நல்லவர்; ஒரு நன்றி செய்தாரினும் அச்செய்ந்நன்றியை மறவாதவர் மிக நல்லர்.

இன்னென்னும் ஐந்தனுருபுகள எல்லைப்பொருளன. பைத் தல் - சினத்தல். செல்வத்தைத் தேடுவதனலும் பாதுகாப்பதனலு

---

* கைத்திழந்த மாக்களின் - எனவும் பாடம்.

மான உழைப்புங் கவலையுமில்லாமையின், கைத்திலாரும் வறியவரும் நல்லராயினர். சினத்தலாலும் வைதலாலுமான தீமைகள் நிகழாமையானும் பொறுமைப்பழக்கம் விஞ்சுதலானும் பொறுப்பவரும், நன்று செய்தாரினும் அந்நன்றியை மறவாதவர்க்கு அவ்வுணர்ச்சி என்றும் உளத்திடை நிகழ்ந்து எண்ணத்தைத் தூய்மைப் படுத்துதலின் மறவாதவரும் நல்லராயினு ரென்க. பை - பாம்பின்படம்; பைத்தல் - படம் விரித்தல்; சினத்தல். பாம்பு சினத்தாற் படத்தை விரிக்கு மென்க.

சுகூ. மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முண்ணின்ற வேட்கை - யகனீர்ப்
*புலத்தியல்பு புக்கா னுரைக்கும்-நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

(இ - ள்.) மகன் - புதல்வன், தந்தை நலத்தை - தன் தந்தையின் நன்மையை, உரைக்கும்-தனது நல்லியல்பினுற் பிறர்க்கறிவிப்பான்; ஒருவன் முகம் - ஒருவனது முகம், உளநின்ற வேட்கை - நெஞ்சினுள் உள்ள விருப்பத்தை, உரைக்கும்-பிறர்க்குத் தனது குறிப்பினு லறிவிக்கும்; அகல் - அகன்ற, நீர்ப் புலத்து இயல்பு - நீரால் விளையும் வயலின் இயல்பை, புக்கான் உரைக்கும - அந்நிலத்துக்குரியான் அறிவிப்பான்; நிலத்து இயல்பு - உலகத்தா ரியல்பை, வானம் உரைத்துவிடும் - மழையின் நிலை அறிவித்து விடும்.

(க - து.) தந்தையின் நன்மையைப் புதல்வன் தனது இயல்பினால் அறிவிப்பான்; ஒருவனது நெஞ்சிலுள்ள விருப்பத்தை அவன் முகக் குறிப்பே அறிவித்துவிடும்; வயலின் தன்மையை நிலக்கிழவன் அறிவித்துவிடுவான்; நிலத்து மக்கள இயல்பை அந்நிலத்துப் பெய்யு மழையின் நிலை அறிவித்துவிடும்,

முகன், போலி. நிலக்கிழவன் அதன்கண் காடோறுஞ் சென்று பார்ப்பவனதலால், 'புக்கான்' எனப்பட்டான். நிலத்தியல்பு - நிலத்து மக்களி னியல்பு. முகனுரைக்கும், வானமுரைத்துவிடு மென்பன 'கேட்குந போலவு' மென்பதனுன் முடிக்க. 'புலத்தியல்பு' என்ற பாடத்துக்குப் பெரிய ஆழமுளள

* புலத்தியல்பு - எனவும் பாடம்.

மடுவென்க நிலம், வானம - ஆகுபெயர்கள். நிலத்தியல்பு-மக்கள் நல்லோர் தீயோர் என்பது. மகனுரைக்கும் தந்தை நலத்தை-பழியின்மை மக்களாற் காண்க என்றனர் கீழும். நல்லோர் பொருட்டே மழை பெய்யுமாதலின் வான முரைத்துவிடும் எனப் பட்டது.

எ0. பதிநன்று பல்லா ருறையியி னெருவன்
மதிநன்று மாசறக் கற்பி - னுதிமருப்பின்
ஏற்றுன்வீ றெய்து மினநிரை தான்கொடுக்குஞ்
சோற்றுன்வீ றெய்துங் குடி.

(இ - ள்.) பல்லார் உறையின் - பலரும் நிறைந்து ஒத்து வாழ்வார்களானால். பதி நன்று - ஊர் நன்றாகும்; மாசு அறக் கற்பின்-குற்றமறும்படி கற்பனையின், ஒருவன் மதி நன்று - ஒருவனது அறிவு தெளிவு பெறும்; இன நிரை - ஆனிரைகள், நுதி மருப்பின் -கூரிய கொம்புகளையுடைய, ஏற்றுன்-எருதுகளால், வீறு எய்தும் - சிறப்படையும்; தான் கொடுக்கும் - தான் ஏழை கட்குக் கொடுக்கும், சோற்றுன் - உணவினால், குடி-தான் பிறந்த குடி, வீறு எய்தும் - பெருமை யடையும்.

(க - து.) பலரும் நிறைந்து ஒத்து உறைவராலால் ஊர் நன்றாம்; ஒருவன் ஐயந்திரிபறக் கற்பானால் அவன் மதி நன்றாகும்; ஆனிரைகள் கூர்ங்கொம்புகளுடைய ஏறுகள் உடனிருத்தலால் சிறப்படையும்; ஏழைகட்கு உணவளிப்பதனால் ஒருவனது குடி மேலோங்கும்.

பல்லாரென்றதை, ஈண்டு முயற்சியு மொற்றுமையு முடைய நன்மக்கள் பல்லா ரென்று கொள்க; அவர் அல்லாராயின் ஊர் நன்றாகாது சோம்பும். கல்வி கற்றற்குக் குற்றமாவன ஐயந் திரிபுகள்; ஏற்றுக்கு நுதிமருப்பென்று அடை வந்தமையின், ஏற்றுன் வீறெய்து மென்றவிடத்து வீறு வெற்றியெனக் கொளக. பின் வந்த வீறு சிறப்பெனப் பொருள்படும். சோற்றோடு உடை யெனவும் கொள்க.

எக. ஊர்ந்தான் வகைய கலினமா-நேர்ந்தொருவன்
ஆற்றல் வகைய வறஞ்செய்கை தொட்ட
குளத்தினைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தினைய வாழ்வார் வழக்கு.

(இ - ள்.) கலின மா - கடிவாளம் பூண்ட குதிரைகள், ஊர்ந்தான் வகைய - அவற்றை ஏறிச் செலுத்துவானது நிறத்துக்கொத்தன ; அறம் செய்கை - அறச்செயல்கள், நேர்ந்த ஒருவன் - இசைந்த ஒருவனது, ஆற்றல் வகைய - ஆற்றலைப் பொறுத்தன ; தூம்பின் அகலங்கள் - நீர்க்காலின் பரப்புக்கள், தொட்ட - தோண்டப்பட்ட, குளத்து அனைய - குளங்களின் அளவின; வாழ்வார் வழக்கு - இல்வாழ்வாருடைய வாழ்க்கைச் செய்கைகள், தத்தம் வளத்து அனைய - அவரவரது வருவாய்ச் செழுமையை யொத்தன.

(க - து.) குதிரைகள, சவாரி செய்வானது நிறத்துக் கொத்தன ; ஒருவனுடைய அறச்செயல்கள அவன்றன் ஆற்றலைப் பொறுத்தன; நீர்க்காலின் அகலங்கள் குளத்தின் அளவின ; இல்வாழ்வார் வாழக்கைகள் அவரவர் வருவாய்ச் செழிப்பை ஒத்தன.

வகைய - தொழிற்பெயரடியாகப் பிறந்த குறிப்புவினை முற்று. நேர்ந்த வென்னும் பெயரெச்சம் ஈறு தொக்கு நேர்ந்தென நின்றது. அனை - அத்தனை யென்பதன் மரூஉவென்ப, குளங்களின் அளவுக் கேற்கவே நீர்செல்லும் நீர்க்கால்கள் அவற்றிற் கமைக்கப்பட்டிருக்கு மென்க. தூம்பு - நீர் வெளியே இழியும் நீர்க்கால் ; மதகு, கலங்கல் முதலியனவுமாம்: கலினம் - கடிவாளம். தொடுதல் - தோண்டுதல். தூம்பு - உட்டுளை.

எஉ. ஊழியும் யாண்டெண்ணி யாத்தன யாமமும்
நாழிகை யானே நடந்தன - *தாழியாத்
*தெற்றென்ரூர் கண்ணே தெளிந்தனர் வெட்கென்ரூர்
வெஞ்சொலா லின்புறு வார்.

(இ - ள்,) ஊழியும் - ஊழிக்காலமும், யாண்டு எண்ணி - ஆண்டுகளா லெண்ணி, யாத்தன - அளவு செய்யப்பட்டன; யாமமும் - யாமக்காலமும், நாழிகையானே - நாழிகைகளானே, நடந்தன - அளவு செய்யப்பட்டுக் கழிந்தன ; தாழியா - காலம் தாழாமல், தெற்றென்ரூர் கண்ணே - தெளிந்தவரிடத்தில், தெளிந்தனர் - அறிவுடையா ரெல்லாம் ஐயம் தெளிந்தனர் ; வெட்கென்ரூர் - அறிவிலாதார், வெம் சொலால் - பிறரைக் கொடுமை கூறும்

* தாழ்வியா ; வெற்றென்ரூர் - எனவும் பாடங்கள்.

வெவ்விய சொற்களாலேயே, இன்புறுவார் — செல்லிச் சொல்லி இன்புறுவார்கள்.

(க - து.) ஊழிகள் யாண்டுகளாற் கணக்கெண்ணி அளவு செய்யப்பட்டுக் கழிந்தன ; யாமமும் நாழிகையால் வரையறுக்கப்பட்டுக் கழிந்தன ; அறிஞர் தெளிந்தார்மாட்டுக் காலந்தாழாமல் ஐயந்தெளிந்தனர் ; அறியாதார் பிறரை வெஞ்சொற் கூறி மகிழ்ந்தனர்.

ஊழிகளும் யாமங்களுமாகக் கணக்குச் செய்து காலம் விரைந்து கழிதலால் அறிஞர்கள் காலந்தாழாமல் தெளிந்தாரை கண்ணி ஐயந தீர்ந்தனர் ; காலத்தினருமை யறியாதார் பிறரை நிந்தை கூறி வீண் காலங் கழிப்பரென்பது அறிதற்குரிய பொருள். வடுச்சொல் நயமிலார் வாய்த்தோன்றும் - என்பர் முன்னும். தாழீயா தென்பது தாழா தென்க. ஈண்டது ஈறு தொகுத்தலாய் எசசப்பொருள் பயந்து நின்றது ; 'நெடுங்கரசு துயிலீயாது' (உஉ) என்னும் பதிற்றுப்பத்தினும் உரையாசிரியர், 'துயிலீயா தென்பது துயிலா தென்னும் விணைத்திரி சொல ; துயிலாம லெனத் திரிக்க' வென்றுரைத்தமையுங் காண்க. ஆண்டு - யாண்டு என்பதன் மரூஉ. வெளிறு - அறிவின்மை. வெட்கு - வெளிறு.

எங. கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் கான்முரியு மெல்லாம்
ஒருமைத்தான் செய்த கருவி தெரிவெண்ணின்
*பொய்யாவித் தாகி விடும்.

(இ - ள்.) கற்றான் தளரின் - கல்வியறிவுடையவன் ஒன்றில் இழுக்கலுறுவானாயின், எழுந்திருக்கும் - அவன் எப்படியாயினும் உய்திபெறுவான் ; கல்லாத பேதையான் - படியாத அறிவிலான், வீழ்வானேல் இடையிற்றளருவானாயின், கால் முரியும் - முயற்சி கெட்டு அழிவான் ; ஒருமை - ஒரு பிறப்பில், தான் செய்த எல்லாம் - தான் செய்தன வெல்லாம், கருவி - மறு பிறப்பி னுகர்ச்சிக்கு ஏதுக்களாம் : எண்ணின் - ஆராயுமிடத்து தெரிவு-மெய்யுணர்வு, பொய்யா வித்து ஆகிவிடும்-வீடு பேற்றுக்குத் தவறுத ஏதுவாகும்.

---

* வியாவித்தாகி - எனவும் பாடம்.

(க - து.) கல்வி யறிவுடையவன் தளர்வானேல் எப்படி யானும் உய்வான் ; கல்லாத பேதை தளர்வானேல் மீள உய்வறி யாது வீழ்வான் ; எவர்க்கும் ஒரு பிறப்பின் செய்கைகள் மறு பிறப்பின் நுகர்ச்சிக்கு ஏதுக்களாம்; மெய்யுணர்வு வீடு பேற்றுக் குத் தவறுத ஏதுவாகும்.

கல்வியறிவினுற் கற்றன் மீள எழுவான் ; அஃதில்லாமை யாற் பேதை வீழ்வா னென்பது கொள்க. காலென்றது ஈண்டு வீழாமைக்குரிய முயற்சி ; வீழ்வா னென்னும் உருவக விளைக் கேற்பக் காலென்றும் மூரியுமென்றும் முயற்சி கெடுதல் கூறப் பட்ட தென்க. செய்த வெல்லா மென்று கூட்டிப் பொருளுரைத் துக்கொள்க. செய்த - பலவின் படர்க்கை இறந்தகால விளை யாலணையும் பெயர். ஆகிவிடும் என்பன துணிவுப்பொருட்டு. பொய்யாவித்து- எச்சத் தொடராகவும், பண்புத்தொகையாகவும் பொருள் கொள்ளலாம்.

எச. தேவ ரனையர் புலவரும் - தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் - தமருள்ளும்
பெற்றன்னர் பேணி வழிபடுவார் - கற்றன்னர்
கற்றுரைக் காத லவர்.

(இ - ள்.) புலவரும் - கல்வியறிவுடைய புலவர்களும், தேவர் அனையர் - தேவருக்கு ஒப்பாவார்கள், ஓர் ஊர் உறைவார்-அப்புல வர்கள் உள்ள ஊரில் வாழ்பவர்கள், தேவர் தமர் அனையர் - அத் தேவர்களின் உறவினருக்கு ஒப்பாவார்கள் ; தமருள்ளும் - அவ் வாறுறைந்து உறவாரருள்ளும், பேணி வழிபடுவார் - அப் புல வரை விரும்பி வழிபட்டவர்கள், பெற்றன்னர் - அவர்தம் அருள் பெற்றாரை யொப்பர்; கற்றுரைக் காதலவர் - புலவரைக் காதலித் தொழுகுவார், கறறன்னர் - அப்புலவரை யொப்பக் கற்றவரே யாவர்.

(க - து.) புலவர்கள் தேவரை யொப்பர் ; அவரூரிலுறை வார் அவருறவினரையொப்பர்; அவருள்ளும் பேணிவழிபடுவார். அவராருள் பெற்றாரை யொப்பர் ; காதலித் தொழுகுவார் அக்கற் றாரையே யொப்பர்.

புலவர் பண்படியாகப் பிறந்த பெயர் : தமர், பொருளடி யாகப் பிறந்த பெயர். பேணி வழிபாடுவார் பொதுவான மாந்த

ரெனவும், காதலவர் சிறப்பான மாணக்க ரெனவும் கொள்க. பெற்றன்னர் கற்றன்னர் என்பன பெற்றாலன்னர் கற்றாலன்ன ரென விரியும். கற்றனர் கற்றாரைக் காதலவர் (ரீசு) என முன்னும் வந்தது. காதலவர் - ஈறு திரிந்த குறிப்பு வினைப்பெயர். தமருள்ளும் - உம்மை உயர்வு சிறப்பு.

எடு. தூர்ந்தொழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்கென்ற போழ்தே பிணியுரைக்கும் - நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வுரியான்
தருகெனிற் ரூயம் வகுத்து.

(இ - ள்.) பொய் பிறந்த போழ்தே - கட்பினர்க்குட் பொய் யுண்டானபோதே, தூர்ந்து ஒழியும் - நட்புக் கெடும்; மருத்துவன் - மருந்து கொடுப்போன், சொல்க என்ற போழ்தே - சொல் என்று சொன்னபோதே, பிணி உரைக்கும் - நோயாளன் பிணியை யுரைப்பான்; நல்லார் - பெரியார், விடுக என்ற போழ்தே - ஒரு செயலை விடுக வென்றபொழுதே, விடுக - அச்செயலை விட்டிடுக; உரியான் - ஒரு பொருட்குரியான், தருக எனின் - கொடுவென்றால், தாயம் - அவன் பாகத்தை; வகுத்து (விடுக) - பங்கிட்டுக் கொடுத்துவிடுக.

(க - து.) பொய் பிறந்த போதே நட்புக் கெடும், மருத்துவன் சொல்லென்றபோதே பிணியாளன் நோய் சொல்வான்; பெரியார் ஒரு செயலை விடுகென்ற பொழுதே அற விட்டொழிக; உரியான் தருகென்ற பொழுதே அவன் பங்கை வகுத்துத் தந்து விடுக.

'தூர்ந்தொழியு' மென்றது, உருவகவினை. ஏகாரம், தேற்றம்; மருத்துவன் செ ரால் லென்றால்மட்டும் பிணியாளன் உண்மையைச் சொல்வானென்று கருத்துக் கொள்க. பிணியை அஃதுடையானென் றுரைப்பினுமாம். வகுத்தென்பதற்கும் விடுக வென்பது கூட்டுக. 'அதற்குரியான் தாவெனில் தாயம் வகுத்' தென்பதும் பாடம். சொல்க முதலியவற்றில் அகரம் தொகுத்தல். தாயம் பங்கிட்டுத் தாராளுயின் வழக்குண்டாகும்; அதனாற் பொருள் குறைந்துபோம்; ஆதலால் 'விடுக' என்றார். மருத்துவன் பொருளடியாகப் பிறந்தபெயர்; மருந்து + வ் + அன் வ் - பெயரிடைநிலை. மருந்து - பொருள்: மருந்திழைத்துக் கூட்டிக் கொடுப்போன்: போழ்தே - ஏ. தேற்றம்.

எசு. நாக்கி னறிப வினியதை - மூக்கினுன்
மோந்தறிப வெல்லா மலர்களு நோகளுள்ளுங்
கண்ணினுற் காண்க வணியவற்றைத் தொக்கிருந்
தெண்ணினு னெண்ணப் படும்.

(இ - ள்.) இனியதை - சுவைக்கினியதை, நாக்கின் அறிப - நாவாற் சுவைத் தறிவார்கள்; எல்லா மலர்களும் - எல்லா மலர்களையும், மூக்கினுன் - மூக்கினல், மோந்து அறிப - யாவரும் மோந்தறிவார்கள்; அணியவற்றை - காட்சிக்கு அழகான பொருள்களை, நோக்கு உள்ளும் - பார்வை யுண்டென்று கருதப்படும், கண்ணினல் காண்ப - கண்ணாற் பார்ப்பார்கள்; தொக்கு இருந்து - அறிஞர்கள் கூடியிருந்து, எண்ணினுன் - அறிவினல், எண்ணப்படும் - உணர்ச்சிகள் ஆராயப்படும்.

(க - து.) சுவைக்கினியதை யாவரும் நாவினாற் சுவைத் தறிப; மலர் மணங்களை மூக்கினல மோந்தறிப: அழகிய பொருள்களைக் கண்ணினாற் காண்ப; உணர்வருங் கருத்துக்களை அறிஞர் ஒன்று கூடியிருந்து அறிவானாராய்ப.

காட்சிப் பொருள்களைக் கண் முதலிய ஐம்பொறிகளாலும், கருத்துப் பொருள்களை அறிவின் ஆராய்ச்சியாலும் மக்கள் தெரிந்துகொள்வர் என்பது கருத்து. இன்னென்னும் ஐந்நூருபும், ஆனென்னும் மூன்ற னூருபுகளும் ஏதுவுங் கருவியு மாகும். நாப்பயன் முதலிய மூன்றுங் கூறினமையின் ஏனை மெய்ப்பயன் செவிப்பயன்களையுந் தழுவிக்கொள்க. தொக்கிருந் தென்பதன் உண்மை அறியற்பாற்று. எண்ணப்படு மென்பதற்கு உணர்வுகள் அவாய் நிலையான் வருவிக்கப்படும். தொக்கிருந்து இரு, பகுதிப் பொருள் விகுதி.

எள. சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாந்
தாவாத வில்லை வலிகளு—*மூவா
திளமை யிசைந்தாரு மில்லை - வளமையிற்
கேடின்றிச் சென்றாரு மில்.

(இ - ள்.) பிறந்த உயிரெல்லாம்-பிறந்த உயிர்களெல்லாவற் றுள்ளும், சாவாத இல்லை - இறவாதன இல்லை; வலிகளும் -

* மூவா விளமை - எனவும் பாடம்.

வலிமைகளும், தாவாத இல்லை - கெடாதன இல்லை; மூவாது - எஞ்ஞான்றும் மூத்திடாமல், இளமை - இளமையை, இசைந்தாரும் இல்லை - நிலையாய்ப் பொருந்தினரும் இல்லை; வளமையில் - செல்வத்தில, கேடின்றி - குறைதலிலலாமல், சென்றாரும் எஞ்ஞான்றுஞ் செல்வராய் ஓங்கினவரும், இல் - இல்லை.

(க - து.) உலகத்தில் இறவாத உயிர்களும் இல்லை; கெடாத வலிமைகளுமில்லை; மூவாத இளமைகளுமில்லை; குறையாதசெல்வங்களுமில்லை.

எனவே, உள்ளபோதே அறஞ்செய்க வென்பதாம். சாவாத, தாவாத என்பன பலவின் படர்க்கை வினையாலணையும பெயர்கள். தா-கெடு. உயிரெல்லாம், வலிகளு மென்றவற்றிற்கு ஏழாவது விரித்துக்கொளக. வலிக ளென்பதை அறிவுவழி முதலான எல்லாவற்றுக்கும் உரைக்க. கேடென்றது, இங்கே குன்றுதல். மூவாது - இது குச் சாரியை பெற்று 'மூக்காது' எனவும் வரும். கேடு - முதனிலை திரிந்த தொழிற் பெயர்.

எஅ. சொல்லா னறிபவொருவனை - மெல்லென்ற
நீரா னறிப மடுவினை - யார்கண்ணும்
ஒப்புரவி னானறிப சான்றாண்மை - மெய்க்கண்
மகிழா னறிப நரு.

(இ - ள.) ஒருவனை - ஒருவனுடைய நன்மை தீமைகளை, சொல்லான் - அவன கூறஞ் சொற்களாலேயே, அறிப - அறிஞர்கள் அறிந்துகொளவார்கள்; மடுவினை - மடுவின் மட்பொருளினிமையை, மெலலென்ற - மென்மையான, நீரான் அறிப - நீரிலலறிவார்கள்; சான்றாண்மை - ஒருவனது பெருந்தகைமையை, யார்கண்ணும் - யாரிடத்திலுங் காட்டும், ஒப்புரவின் - ஒருபடியானதன்மைத் தன்மையினால், அறிப - அறிவார்கள; நரு - கட்குடியை, மெய்க்கண் - (குடித்தானது) உடம்பின்கண், மகிழான் அறிப - களிப்புக் குறிகளானறிவார்கள்.

(க - து.) ஒருவன் நிலையை அறிஞர்கள் அவன் சொல்லினலேயே அறிப; மடுவின் மண்ணினிமையை அதன் தெளி நீரினனறிப; பெருந்தன்மையை யார்மட்டும் ஒப்பநடக்கும் நடுவு நிலைமையா னறிப; கட்குடியை மெய்க்களிப்பா னறிப.

மெல்லென்ற - ஒரு சொல்; அஃதீண்டுப் பண்புப் பொருண்மைக் குறித்தது; தெளிநீ ரென்பது கருத்து; தெளிநீரல்லாதது தடித்துக் குழம்பா யிருக்குமாதலி னென்க. மகிழ் - காரணவாகு பெயர். நரு - நருக்குடியை யுணர்த்திற்று. உம்மை - முற்று..

எசு. நாவன்றே நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றே வீங்கிப் பிணிப்பின் அவாஅப்
படுமன்றே பன்னூல்*வலியிற்-கெடுமன்றே
மாறு ணிறுக்குந் துணிபு.

(இ - ள்.) நா - பதறிப்பேசும் நாக்கு. நட்பு அறுக்குமன்றே - நேசத்தைக் கெடுக்குமன்றே; வீங்கிப் பிணிப்பின் - வற்புறுத்துக் கட்டாயப்படுத்தினால், தேற்றம் இல் பேதை - தெளிவில்லாத அறிவுவி, விடுமன்றே - நற்செய்கையையுங் கைவிடுமன்றே; பல்நூல் வலியின் - பல அறிவு நூல்களென்னும் வலியினால், அவா - அதன்கண் அகப்பட்ட நன்மாணாக்கரது தீய அவா, படுமன்றே - கெட்டொழியுமன்றே; மாறுள் - பகைமைக் கண், நிற்கும் துணிபு - ஒருவன் வைக்குந துணிவெண்ணத்தால், கெடுமன்றே - அவன் விரைவிற் கெட்டுவிடுவா னல்லனே ?

(க - து.) பதறிய நாக்கினால் நட்புக் கெடுமு; கட்டாயப்படுத்தினால் தெளிவில்லாத பேதை மக்கள் நற்செய்கைகளைக் கைவிடுப; நூல்களைப் பயிறலால் மாணாக்கர்க்கு அவாக்கெடும்; பகைமைக்கட்டுணிவு நிறுத்துதல் அங்ஙனம் நிறுத்துவானுக்கே கேடாம்.

வீங்கிப் பிணிப்பின், மிக்குக் கட்டாயப்படுத்தினால்; மாணாக்கன் அறிவுநூல் வலியி னகப்படுத்தலால், அவன் அவாக்கெடுமென்க. அளபடை. செய்யுளிசை நிறைக்க வந்தது. அவா, மாறு - மூதனிலைத் தொழிற் பெயர்கள். இனித் ' தேற்றமில் .....பிணிப்பின் ' என்பதற்குப் பேதை துன்புறுத்தி இறுகப் பிணிப்பின் கைப்பொருளைக் கைவிடுவான் எனவும் மிக்க நட்பினாற் கட்டின் பேதை நட்பை விடுவான் எனவும் பொருள் கொள்ளலாம். அவர்.....வலியில் என்பதற்கு நன்மாணாக்கனது விருப்பம் பலநூல் வலியில் உட்படும் என்றுரைப்பாரும் உளர்.

---

* வலியினடுமன்றே - எனவும் பாடம்.

அ0. கொடுப்பி னசனங் கொடுக்க - விடுப்பி
னுயிரிடை யீட்டை விடுக்க வெடுப்பிற்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்,

(இ - ள்.) கொடுப்பின் - ஒருவர்க்கு ஒன்று கொடுப்பதா னால், அசனம் கொடுக்க - சோறுகொடுத் துண்பிக்க; விடுப் பின் - ஒன்றைவிட்டு விடுவதானால், உயிர் இடையீட்டை - உயி ரைப் பற்றிய பற்றை, விடுக்க - விட்டுவிடுக; எடுப்பின் - ஒரு வரைத் தாங்கி மேலுயர்த்துவதானால், கிளையுள் - தன் சுற்றத் தாருள், கழிந்தார் - வாழ்நலங்களற்று ஏழைகளாயுள்ளவர் களை, எடுக்க - தாங்கி மேலுயர்த்துக; கெடுப்பின் - ஒன்றைக் கெடுப்பதானால், வெகுளி - சினத்தை, கெடுத்துவிடல் - கெடுத்து விடுக.

(க - து.) கொடுப்பதானால் ஏழைகட்கு உணவு கொடுக்க; விடுப்பதானாற் பற்றை விடுக்க; எடுப்பதானால் சுற்றத்தாருள் ஏழைகளை எடுக்க; கெடுப்பதானால் வெகுளியைக் கெடுக்க.

அசனம் - வடசொல்; உணவு கொடுத்தல், உடம்பில் உயிரை நிலைப்பித்தலன்றி வேறு தீயவற்றிற்கு நேராய்ப் பயன் படுதலின்மையின், 'அசனங் கொடுக்க' என்றார்; உயிரிடை யீடு உயிர்க்கண் பொருந்திய குற்றம்; அஃது பற்று. இடையீடு இங்கே குற்றங் குறித்தது. கெடுத்துவிடல் - அல்லீற்று வியங் கோள்.

அக. நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாம்
குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் - பரமல்லாப்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

(இ - ள்.) நலனும் - அழகும், இளமையும் - இளமை யியல் பும், நல்குரவின்கீழ் - வறுமைக்கண், சாம் - மங்கும்; குலனும்- குலத்தியர்வும், குடிமையும் - குலத்தொழுக்கமும், கல்லாமைக் கீழ - கல்லாமைக்கண், சாம் - கெடும்; வளம் இல் - நீர் வருவா யில்லாத, குளத்தின் கீழ் - ஏரியின் கீழ் விளையும், நெல் சாம் - நெற்பயிர் சாவியாம்; பரமல்லா - சுமத்தலாற்றாத, பண்டத்தின் கீழ் - சுமைப் பொருளின் கீழ்த் தாங்கும், பகடு சாம் - எருதுகள் சாகும்.

(க - து.) அழகும் இளமையும் வறுமையிற் கெடும்; குலத் துயர்வுங் குலத்தொழுக்கமுங் கல்லாமையிற் கெடும்; வருவா யற்ற �ளியின்கீழ் விளையும் நெற்பயிர் சாவியாம்; சுமத்தலாற் ருத சுமையைத் தாங்கும் எருதுகள் சாகும்.

'குடிமை' உயர் குடிப்பிறந்தாரது ஒழுக்கத்தை யுணர்த்து தல் 'குடிமை குடிசெய்ததற் றன்மை' (மடியின்மை, அ.) யென் றும், குடிமை - உயர்ந்த குடியின்கட் பிறந்தாரது தன்மை' (குடிமை) யென்றும் ஆசிரியர் பரிமேலழகர் திருக்குறளுரையி னுரைக்குமாற்ருனறிக. வளம் - ஈண்டு வருவாய், பரமல்லா - சுமக்கலாற்ருத வென்க; பரமல்லாப் பண்டம் - சுமக்குமள விற்கு விஞ்சிய பண்டம். கீழ் முதலிரண்டும் ஏழாம் வேற்றுமை இடப்பொருளன. சாகுமென்னுஞ் செய்யுமென் முற்று, ஈற்ற யல் மெய்யொடுங் கெட்டுச் சாமென நின்றது. பகடு - வண்டி யிழுக்கும் எருது.

அஉ. நல்லார்க்குந் தம்மூரென் ஞாரில்லை நன்னெறிச்
செல்வார்க்குந் தம்மூரென் ஞாரில்லை—யல்லாக்
கடைகட்குந் தம்மூரென் ஞாரில்லை தங்கைத்
துடையார்க்கு மெவ்வூரு மூர்.

(இ - ள்.) நல்லார்க்கும் - கல்வியறிவில் நல்லார்க்கும், தம் ஊர் என்று - தமக்குரிய ஊர் என்று, ஊரில்லை - ஒருருமில்லை, எல்லாம் அவருரேயாம்; நல் நெறி - தவநெறியில், செலவார்க் கும் - ஒழுகும் அருந்தவத்தோர்க்கும், தம் ஊரென்று - தமக் குரிய ஊரென்று, ஊர் இல்லை - ஓர் ஊர் இல்லை; அல்லா - மேலோரலலாத, கடைகட்கும் - கீழமக்களுக்கும், தம் ஊரென்று - தமக்குரிய ஊரென்று, ஊர் இல்லை - ஒருருமில்லை; தம் கைத்து - தமது கையில், உடையார்க்கும் - பொருளுடையவர்க்கும், எவ்வூரும் ஊர் - எவ்வூருந் தம்மூரே யாம்.

(க - து.) கற்ருர்க்கும் எவ்வூருந் தம்மூர்; தவத்தோர்க்கும் எவ்வூருந் தம்மூர்; கீழமக்கட்கும் எவ்வூருந் தம்மூர்; தன் கையிற் பொருளுடையார்க்கும் எவ்வூருந் தம்மூர்.

நல்லார், மிக்கவர்; ஆவது கல்வி மிக்காரென்பது. ஊரில்லை யென்றது, எவ்வூரும் அவர்க்குத் தம்மூராகப் பயன்படுமென் றது. கடை - பண்பாகுபெயர். கையகத்து என்பது கைத்தென

கின்றது. கற்றோரையும் தவத்தோரையும் எவரும் வழிபட்டு ஓம்புவாராதலினலும், பொருளுடையான் தனது பொருளால் யாண்டும் எதையும் பெறவலலானதலினலும், கீழ்மக்கட்குத் தம்மூரின் கண்ணும் மதிப்பின்மையானும இவர்கட்கு எவ்வூரும் தம்மூராயிற்று.

அஉ. கல்லா வொருவர்க்குத் தம்வாயிற் சொற்கூற்றம்
மெல்லிலை வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம்
அல்லவை செய்வார்க் கறங்கூற்றம் கூற்றமே
*இல்லத்துத் தீங்கொழுகு வாள்.

(இ - ள்.) கல்லா ஒருவர்க்கு - கல்வியறிவில்லாத ஒருவருக்கு தம் வாயின் சொல் - தமது வாயிலிருந்துவரும் சொல்லே, கூற்றம் - கூறறுவனுகும்; மெல் இலை - மெல்லிய இலைகளையுடைய, வாழைக்கு - வாழை மரத்துக்கு, தான் ன்ற காய் - தான்வெளி விட்ட குலையே, கூற்றம் - கூற்றுவனுகும்; அலலவை செய் வார்க்கு - தீயவை செய்யும் மக்கட்கு, அறம் கூற்றம்-அறக்கட வுளே கூற்றுவனும்; இல்லத்து - வீட்டிலிருந்துகொண்டு, தீங்கு ஒழுகுவாள்-கற்புக் கேடாக மறைவாயொழுகும் மனைவி, கூற் றமே - தன்னைக் கொண்ட கணவனுக்குக் கூற்றுவனே யாவாள்.

(க - து.) கல்வியறிவிலலாதவர்களுக்கு அவர்வாயிற் பிறக் கும் சொல்லே அவாகளுக்குக் கூற்றுவனும; வாழை மரத்துக்கு அஃதீனும் குலையே கூற்றுவனும்; தீயவை செய்வார்க்கு அறக் கடவுளே கூற்றுவனும்; இல்லத்திலிருந்துகொண்டு மறைவாய்க் கற்புக் கெடுபவள் கொண்டானுக்குக் கூற்றுவனேயாவாள்.

கல்லாப் பேதையர் பொய் குறளை முதலிய பொருத்தமில லனவே பேசுவ ராதலால் அவையே அவர்க்குக் குற்றந்தரும். அல்லவை செய்தார்க்கு அறங் கூறறமாதல், 'அல்லவை செய் தார்க் கறங்கூற்றமா மென்னும் பல்லவையோற் சொல்லும் பழு தன்றே' (வழக்குரைகாதை வெண்பா) என்று **சிலப்பதிகாரத்** திலும் **ஆசிரியர் இளங்கோவடிகள்** கூறுதலாலும் அறியப்படும். அறமென்னுந் தன்மையே கூற்றுவனுய் வந்து வருத்து மென் பது கருத்து. ஏனையோரெல்லாம் ஒருகாற் றிருந்தி தன்மை செய்தலுங் கூடுமாதல்போலக் கற்புக்கெட்ட பெண்டிர் ஆகா ராதலின். 'கூற்றமே' யென்று தேற்றேகாரங் கொடுத்தோதப் பட்டது.

* இல்லிருந்து - எனவும் பாடம்.

அசை. நீரான்வீ றெய்தும் விளைநிலம் நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினம்-கொண்டாளும்
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூதொருவன்
*ஆடலாற் பாடு பெறும்.

(இ - ள்.) நீரான் - தண்ணீரின் பாய்ச்சலால், விளைநிலம் - பயிர் விளையும் நிலம், வீறு எய்தும் - செழிப்படையும்; நீர் வழங்கும் - கடல்கொடுக்கும், பண்டத்தால் - முத்து முதலிய பொருள்களால், பட்டினம் - நகரம். பாடு எய்தும் - பெருமை பெறும்; கொண்டு - தங்கீழ்க் கைப்பற்றி, ஆளும் - அரசாளும் நாட்டான் - நாட்டினால், மன்னவர் - அரசர், வீறு எய்துவர் - சிறப்படைவர்; ஒருவன் - வல்லாளொருவன், ஆடலால் - ஆடுதலால், கூத்து - நாடகம், பாடு பெறும் - மேன்மையடையும்.

(க - து.) விளைநிலம் நீர் பாய்ச்சலாற் செழிப்படையும்; பட்டினங்கள் கடல்வளத்தாற் பெருமையுறும்; மன்னர் தாம் ஆளும் நாட்டினாற் சிறப்படைவர்: கூத்து வல்லாளொருவன் ஆடலால் மேம்படும்.

பட்டினமென்னுங் குறிப்பானும் பண்டமென்னுங் குறிப்பானும் இரண்டாவது நீர், கடலையுணர்த்தும்; தலைமையா லுணர்த்திற் றெனினுமாம்; இடத்து நிகழ்பொருளை இடத்தின்மேலேற்றி 'நீர் வழங்கும்' மெனப்பட்டது. நாட்டானென்பது நாட்டினுள்ள குடிமக்களின் நன்மையா னென்க. ஆடலென்றது ஈண்டு நடிப்பு.

அதி. ஒன்றாக்கல் பெண்டிர் தொழினலம்—என்றுமே
நன்றாக்கல் அந்தணர் உள்ளம் பிறனுளும்
நாடுக்கல் மன்னர் தொழினலம்-கேடுக்கல்
கேளிரொரீஇ விடல்.

(இ - ள்.) பெண்டிர் - பெண்மக்களின், தொழில் நலம் - தொழிற் சிறப்பு, என்றும் ஒன்று ஊக்கல்-எந்நாளும் தங் கணவரோடு ஒருமைப்பட்டு முயன்றெழுகலாம்; அந்தணர் உள்ளம் - அந்தணரின் கருத்து, என்றும் நன்று ஊக்கல்-இனிய எண்ணங்

* பாடலால் - எனவும் பாடம்.

களையே முயன்று எழுவித்துக் கொண்டிருத்தலாம்; மன்னர் - அரசரின், தொழில் நலம் - தொழிற் சிறப்பு, பிறன் ஆளும் - வேற்றரசன் அரசாள்கின்ற, நாடு ஊக்கல் - நாட்டினைக் கொள்ள முயன்றெழுகலாம்; கேளிர் - சுற்றத்தாரை, ஓரீஇ விடல் - நீக்கிவிடுதல், கேடு ஊக்கல் - கேட்டுக்கு முயறலாகும்.

(க - து.) கணவரோடு ஒருமைப்பட்டு நிற்க முயலுதலே பெண்டிர்க்கு நற்செய்கையாகும்; அற நினைவுகளை எழுப்பிக் கொண்டிருக்க முயலுதலே அந்தணருள்ளத்துக்குச் சிறப்பு. பிறன் ஆளும் நாட்டைப் பெற முயலுதலே மன்னர்க்கு உரிய செய்கையாம்; சுற்றத்தாரை நீக்கிவாழ்தல் கேட்டுக்கு முயலுதலேயாகும்.

ஊக்கல் - முயறல், தொழில் நலம் - தொழிலின் நன்மை; ஒன்றென்றது ஈண்டு ஒன்றுங் கருத்துடையது. தன்னோடொப்பது இல்லாமையால் 'ஒன்று' என்பது எண்ணலளவை யாகு பெயராய் ஒப்பற்ற 'கற்பு' எனினும் பொருந்தும். ஓரீஇவிடல் சொல்லிசை யளபெடை. பெண்டு - பெண்மை. நன்று அறத்தின் மேற்று. நாடுக்கல் - பிறவென்றொன்று அவாய் நிலையான் வருவித்துக்கொள்க. விடல் - தொழிற்பெயர். என்றும் என்பதை நடுநிலைத் தீவகமாக்கி என்றும் நன்றாக்கல் என்றுமியைக்க.

அசு. கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

(இ - ள்.) கடிய - அஞ்சற்பாலவான துன்பங்கள், வருதலால் - பின்பு வருதலால். கள்ளாமை வேணடும் - பிறர் பொருளைத் திருடாமை வேண்டும்; தகுதி உடையன - தமக்குத் தகுதியுடைய ஒழுக்கங்களை, தள்ளாமை வேண்டும்-தவிராமை வேண்டும்; சிறியாரோடு - சிற்றினத்தாரோடு, நள்ளாமை வேண்டும் - நட்புக்கொள்ளாமை வேண்டும்; யார்மாட்டும் - யாரிடத்திலும், பகை - பகைமை, கொள்ளாமை வேண்டும் - பாராட்டாமை வேண்டும்.

(க - து.) கொடுந் துன்பங்கள் பின்பு உண்டாதலால் என்றும் திருடாமை வேண்டும்; தகுதியுடைய ஒழுக்கங்களைத் தவிராமை வேண்டும்; சிற்றினத்தாரோடு சேராமை வேண்டும்; யார் மாட்டும் பகைகொள்ளாமை வேண்டும்.

கள்ளாமை முதலியன எதிர்மறைத் தொழிற்பெயர்கள். கடிய, பலவின் படர்க்கைக் குறிப்பு வினைப்பெயர். நள்ளாமை-நெருங்காமை ; யார்மாட்டுமென்பது இளைத்தார்மாட்டு மென்றற்கு.

அள. பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக வொட்டாரைக காலமறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி - சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

(இ - ள்.) நட்டாரை - ஒருவன் தனக்கு நண்பராலுரை, நன்றின்பால் உய்த்து . நன்மையிற் செலுத்தி, பெருக்குக-நல்வாழ்வில் உயர்த்துக ; ஒட்டாரை - பகைவர்களை, காலம் அறிந்து - உரிய காலந் தெரிந்து, கருக்குக - மறங்கொண்டு வெல்க ; யார்மாட்டும் - யாவரகத்தும், உண்டி-அடுத்துண்ணுதலை, அருக்குக-சுருக்கிக்கொள்க ; செல்லாவிடத்து - செல்லுந்தகுதி யில்லாவிடத்து, சினம் சுருக்க - சினத்தைத் தணித்துக்கொள்க.

(க - து.) நண்பரை நல்வாழ்வி லுயர்த்துக ; பகைவரைக் காலமறிந்து வலிசெய்க ; யாவரகத்தும அடுத்துண்ணுதலைக் குறைத்துக்கொள்க ; செல்லத்தகாத இடத்திற் சினத்தைத் தணித்துக்கொள்க.

நட்டார்க்கு நன்மை செய்யுநேரம் எப்போது வாய்க்குமென்று எவரும் எண்ணிக்கொண்டிருத்தலே நட்பின் சிறப்பென்றபடி. தருக்குதல் - வீரங்கொள்ளல் ; வெற்றிக்கென்று கொள்க. யார்மாட்டுமென்றார், நெருங்கிய நண்பர் உறவினர் வீட்டிலும் என்றற்கு. உண்டி, ஈண்டுத் தொழிற்பெயர். செல்லாவிட மென்றதை, இளைத்தார்மாட்டெனக் கொள்க. "செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக் காக்கினென் காவாக்கா லென்" (வெளுளாமை, க) என்று நாயனார் அருளிச் செய்தலின் வலியார்மாட்டெனக் கூறும் உரை உரையன்மை யறிக. ஆங்கு - அசை. அருக்குக - அருகு என்னும் பகுதி இரட்டித்தது.

அஅ. மடிமை கெடுவார்க ணில்லாகும் - கொடிமைதான்
பேணுமை செய்வார்க ணில்லாமாம் பேணிய

நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்க ணிற்குங் களிறு.

(இ - ள்.) மடிமை-முயற்சியின்மை, கெடுவார்கண்-கெடுவாரிடத்திலேயே, நிற்கும் - ஏற்படும்; கொடுமை - தீமை, பேணுமை செய்வார்கண் - மேலோர் விரும்பாமையைச் செய்வாரிடத்தில், நிற்கும் - உண்டாகும்; நற்பெண்டிர் - நன்மகளிர, பேணிய - விரும்பப்பட்ட, நாணின்வரை - நாணத்தின் எல்லையில், நிற்பர் - நிற்பார்கள்; களிறு - யானை, நட்டு அமைந்த - கீழே நட்டு வலிவமைந்த, தூணின்கண் - தூண் வலிவில்; நிற்கும் - நிலைபெறும்.

(க - து.) கெடுவாரிடத்திற் சோம்பலிருக்கும்; சான்றோர் விரும்பாதவற்றைச் செய்வாரிடத்தில் தீமை யேற்படும்; நல்லியல் புடைய மகளிர் நாண் எல்லையில நிற்பர்; யானை தூணெலையில் நிற்கும்.

கெடுவார் - பின்பு கெடுவார்; பேணுமை யென்னும் பண்பு அஃதுடைய செயல்களின்மே னின்றது. பேணுமை - காக்கத் தக்க குடிப்பிறப்பு கல்வி, ஒழுக்க முதலியவற்றைக் காவாமையுமாம்; அற்றுயின் எதிர்மறைத் தொழிற் பெயர். நாணின்வரை நிற்பரென்பது நாண்கெட்ட தொழிலகளைச் செய்யாரென்றபடி; தூண் - கட்டுத்தறி. தான், ஆம் அசைகள்.

அக. மறையறிப வந்தண் புலவர் - முறையொடு
வென்றி யறிப வரசர்கள் - என்றும்
வணங்கல் அணிகலஞ் சான்றோர்கஃ தன்றி
அணங்கல் வணங்கின்று பெண்.

(இ - ள்.) அந்தண் புலவர் - அந்தண்மையுடைய அறிஞர்கள், மறை அறிப - நான் மறைப் பொருளை அறிவார்கள்; அரசர்கள் - மன்னர்கள். முறையொடு - நடுவு நிலைமையோடு, வென்றி - வெற்றியும், அறிப - அறிவார்கள்; சான்றோர்க்கு - பெருந்தகைமை நிறைந்தவர்களுக்கு, என்றும் - எப்பொழுதும், வணங்கல்-வணங்குதலே, அணிகலம்-அணிகலம் போல்வதாம்; அஃது அன்றி - அது வேயுமல்லாமல், அணங்கல் - கணவரை யல்லாத வேறு தெய்வங்களை, பெண் வணங்கின்று - பெண்மக்கள் வணங்குதலில்லை.

(க - து.) அந்தணர் மறையறிப ; அரசர் முறையும் வெற்றியும் அறிப ; சான்றோர்க்கு அணிகலம், என்றும் வணக்கமுடையராயிருத்தல் ; பெண்டிர் கணவனையன்றி வேறு தெய்வந் தொழார்.

புலவருள் அந்தண்மையுடையோர் அந்தணரெனப்படுவராகலின், ' அந்தண் புலவ ' ரென்று விதந்துரைக்கப்பட்டது. முறை - குடிகளையாளும் அறமுறை ; வென்றி பகைப் புறங் காணும் வெற்றி. அஃதன்றி யென்றது - வாளா எண்ணுங் கருத்தில் வந்தது. அணங்கல் தொழிலாகு பெயராய்த் தெய்வத்தை யுணர்த்தா நின்றது ; அணங்குதல் - விரும்புதல், அஞ்சுதல் ; அணங்கை எனவும் பாடம்

கூ0. பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங் கொழுகும் பிணையிலி - முட்டினுஞ்
சென்றுங்கே சென்றொழுகும் காமம் கரப்பினுங்
கொன்றுன்மே னிற்குங் கொலை,

(இ - ள்.) பண்பு உடையாள் - நல்லியல்புடைய பெண், பட்டாங்கே - கற்புண்மைப்படியே, பட்டு - ஒத்து, ஒழுகும் - ஒழுகுவாள் ; பிணை இலி - மனம் பொருந்துதலில்லாதவள், காப்பினும் - கணவன் காவல் செய்யினும், பெட்டாங்கு - தான் விரும்பியபடியே, ஒழுகும் - பிறரோடு மருவி யொழுகுவாள் ; காமம் - காமவியல்பு, முட்டினும் - இடையூறு உண்டாயினும், சென்றுங்கே- முன்பு சென்றபடியே, சென்று ஒழுகும்-பின்புஞ் சென்று நிகழும் ; கொலை - கொலைப்பழி, கரப்பினும்-எவ்வளவு மறைத்தாலும், கொன்றுன்மேல்- கொலை செய்தவன் மேலேயே, நிற்கும் - நிலைபெறும்.

(க - து.) நல்ல பெண் காவலில்லாவிடினும் கற்பொழுக்கத்தையே மேற்கொண்டொழுகுவள் ; அன்பில்லாதவள் எத்தனைக் காவல் செய்யினுந் தான் விரும்பியவாறே பிறரைக் காதலித்தொழுகுவாள் ; காமவியல்பு எவ்வளவு இடையூறுகள் நேர்ந்தாலும் முன் நிகழ்ந்தபடியே நிகழும் ; கொலைப்பழி எவ்வளவு மறைப்பினும் கொன்றுன்மேலேயே வெளிப்படும்.

பட்டாங்கு - இயல்பு ; ஈண்டுக் கற்பியல்பு. பண்பு, காதலெனல் பொருந்தும் ; பிணையிலிக்குக் காப்பினுமென வந்தமையின், பண்புடையாளுக்குக் காவாவிடினுமென்றொன்று வரு

வித்துக்கொள்க. ஆங்கு, வினையெச்சப் பொருட்டு. உடையான் ஒழுகலை உடைமைமே லேற்றிக் காமமெனக் கூறப்பட்டது. கொலை - ஆகுபெயர்.

கூக. வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்
இன்கண் பெருகி னினம்பெருகும் சீர்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும்-வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

(இ - ள்.) வன்கண் பெருகின் - அஞ்சாமை மிகுந்தால், வலி பெருகும் - வலிமையும் ஒருவனுக்கு மிகும்; பால் மொழியார் - பால போலும் இனிய சொல்லையுடைய மனைவியர்பால், இன் கண் - இனிய கண்ணோட்டம், பெருகின் - பெருகுமானால், இனம் பெருகும் - சுற்றத்தார் பெருகுவர்; சீர் சான்ற - சிறப்பு மிக்க, மென் கண் - அருட்டன்மை, பெருகின் - மிகுமானால், அறம் பெருகும் - அறவினைகள் மிகும்; வன்கண்-கொடுமையையுடைய, கயம் பெருகின் - கீழ்மைத்தனம் மிகுமானால், பாவம் பெரிது - தீவினைச் செயல் மிகுதியாம்.

(க - து.) அஞ்சாமை மிகுந்தால் வலிமை மிகும்; மனையாள்மாட்டுக் கண்ணோட்டம் மிகுந்தால் இனம் பெருகும்; அருளிரக்கம் மிகுந்தால் அறம் மிகும்; கீழ்மைக்குணம் மிகுந்தால் தீவினை மிகும்.

வன்கண் அஞ்சாமைப் பொருட்டாதல் 'வன்கட் கான வன்' (கிள்ளைப்பத்து, ஈ) என்னும் [illegible] கொள்க. அஞ்சாமை யென்னும் உள்ளவலிமை உடம்புக்கு வலிமை தருதலின், இங்ஙனம் கூறப்பட்டது. கண் - கண்ணோட்டம்; கண்ணோட்டத்தினும் அருட்டன்மையென்பது இரக்கவியல்பு மிக்கதாகலின், அதனை 'மென்கண்' என விதந்தார். பெரிதென்றதை ஆக்கவினை கொடுத்து வினைப்படுத்திக் கொள்க. இன்கண், மென்கண் என்பவற்றில் 'கண்' கருவியாகுபெயர்.

கூஉ. இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்

இளஞரில் போழ்திற் சினங்குற்றம் குற்றந்
தமரல்லார் *கையகத் தூண்.

(இ - ள்.) இளமைப் பருவத்து - இளம்பருவத்தில், கல்லாமை குற்றம் - கல்லாதொழிதல் பிழையாம்; வளம் இலா - பொருள்வ்ருவாய் இல்லாத, போழுதத்து - காலத்தில், வள்ளன்மை - ஈகையியல்பு, குற்றம் - பிழையாம்; இளஞர் இல் போழ்தில் - உறவினர்கள் துணையில்லாத காலத்தில், சினம் குற்றம் - பிறரோடு சினத்தல குற்றமாம்; தமர் அல்லார் - தமக்கு உள்ளன்பில்லாதாரது, கையகத்து - இடத்தில், ஊண் - உண்ணுதல், குற்றம் - பிழையாம்.

(க - து.) இளம் பருவத்திற் கல்லாமை குற்றம்; பொருளில்லாத காலத்தில் ஈதல் குற்றம்; உறவினர் துணையில்லாத காலத்தில் பிறரைச் சினத்தல் குற்றம்; உள்ளன்பிலார்மாட்டு உண்ணுதல் குற்றம்.

'வளமில் குள' (அக) மென்றுற்போல ஈண்டு வள மென்பது வருவாயைக் குறித்தமை கண்டுகொள்க. தமர் - உள்ளன்புகலத்தலாற் றம்மவ ரென்க. 'தமர்தற் றப்பினது நோன்றல்லும்' என்னும் **புறநானூற்** றுரையில், தமரைத் தனக்குச் சிறந்தோ ரென் றுரைக்கப்பட்டது மிது. கையகத்து - வேற்றுமைமேற் சாரியை நின்றது. ஊண் - முதனீண்ட முதனிலைத் தொழிற் பெயர். போழ்தத்து - அத்துச்சாரியை ஏழாம் வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்கண் வந்தது.

கூடை: எல்லா விடத்துங் கொலலீது மக்களைக்
கல்லார் வளர விடலீது - நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் - குலந்தீது
கொள்கை யழிந்தக் கடை.

(இ - ள்.) எல்லா இடத்தும் - எவ்வகையினும், கொலலீது - ஒருயிரைக் கொலைசெய்தல் தீதாகும்; மக்களை - புதல்வரையும், புதல்வியரையும் கல்லா வளரவிடல் - கல்விகல்லாமல் வளரும்படி விடுதல், தீது - தீதாம்; நாண் அற்று நிற்பின் - நாணம்

* இல்லகத்து - எனவும் பாடம்.

இன்றி ஒழுகுவதாயின், நல்லார் நலம் நீது - பெண்களின் அழகு நீதாகும்; கொள்கை - தக்க கொள்கைகள், அழிந்தக்கடை - அழிந்த விடத்து, குலம் நீது - குலம் நீதாகும்.

(க - து.) எவ்வகையாலும் கொலை நீதாம்; மக்களைக் கல்லாமல் வளரவிடுதல் நீதாம்; நாணில்லையாயின் மகளிரின் அழகு நீதாம்; கொள்கை அழிந்து விட்டால் குலம் நீதாம.

'எல்லாவிடத்து மென்றது, வேள்விமுதலான இடங்களினு மென்க. கல்லா வினையெச்சவீறு தொகுத்தலாய் நின்றது. கிற்பின் - உறைதலின் மேற்று. கடை, வினையெச்சப் பொருளது. அழிந்தக்கடை - அழிந்தால்.

கூச. ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி யார்கண்ணும்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வான்
உண்ணாட்ட மின்மையு மில்.

(இ - ள்.) ஆசாரம் என்பது - நல்லொழுக்கம் என்பது, கல்வி - கல்வியறிவின் பயனாகும்; அறம் சேர்ந்த - அறவினைகளோடு சேர்ந்த, போகம் உடைமை - இன்பநுகர்ச்சி, பொருள் ஆட்சி - செல்வத்தைக் கையாளுதலின் பயனாகும்; யார்கண்ணும் - யாரிடத்திலும், கண்ணோட்டம் இன்மை - கண்ணோட்டம் இல்லாமை, முறைமை - நடுநிலையாக ஆளுமுறைமையாம்; தெரிந்து ஆளவான் - பிறரோடு ஆராய்ந்து அரசாளுபவன், உள்நாட்டம் இன்மையும் - தன்னுளத்தில் ஆராயாமையும், இல் - இல்லை.

(க - து.) நல்லொழுக்கமென்பது கல்வியின் பயன்; அறஞ் செய்தலோடு செல்வத்தாலான இன்பத்தை நுகர்த லென்பது செல்வத்தை முறையாக ஆளுதலின் பயன்; யாரிடத்திலும் கண்ணோட்டமில்லாமை நடுநிலையோடு அரசாளு முறையாம்; தன்னுளத்தேயுந் தனியாக ஆராய்வோன் தெரிந்து அரசாளு மியல்பினனென்.

தெரிந்தாள்வா னென்றது, அமைச்சர் முதலாயினரோடுந் தெரிந்தாளுதல். உள்நாட்டம் - தனக்குள் ஆராய்ச்சி; என்றது, அரசன் வெறுங் கேள்வியறிவினனேயே செய்வானல்லன்; அதனைத் தன்னுள்ளும் வைத்துத் தனியே ஆராய்ந்துஞ் செய்ய வேண்டுவது. நாட்டம் - தொழிற்பெயர்.

கூடி. கள்ளி னிடும்பை களியறியும் நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியும் நிரப்பிடும்பை
பல்பெண்டி ராள னறியும் கரப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

(இ - ள்.) கள்ளின் இடும்பை - களஞ்சுப் பெருமையால் வரும் துன்பத்தை, களி அறியும் - கள்ளுண்டு களிப்பவன் அறிவான்; நீர் இடும்பை - நீரைப் பெருமையால் வரும் துன்பத்தை, புள்ளினுள் - பறவைகளுள், ஓங்கல் அறியும் - வான்பாடிப் பறவை யறியும்; நிரப்பு இடும்பை - பொருளில்லாமையால் வரும் வறுமைத் துன்பத்தை, பல் பெண்டிராளன் - மனைவியர் பலரை யுடைய கணவன், அறியும் - அறிவான்; கரப்பு இடும்பை - ஒன்றை ஒளித்து ஒளித்துவைப்பதன் துன்பத்தை, கள்வன் - திருடன், அறிந்துவிடும் - அறிந்துகொள்வான்.

(க - து.) கள் பெருமையா லுண்டாகுந் துன்பத்தைக் கட் குடியன் அறிவான்; நீர் பெருமையா லுண்டாகுந் துன்பத்தை வானம்பாடிப் பறவை அறியும்; பொருளில்லாமையாலுண்டா கும் வறுமைத துன்பத்தை மனைவியர் பலரை யுடையவன் அறி வான்; ஒன்றை ஒளித்துவைப்பதிலுள்ள துன்பத்தைத் திருட னறிவான்.

களி, வினைமுதற் பொருண்மையாகிய இகரம் புணர்ந்து கெட்ட தென்க. புள்ளினுள் ஓங்கல், வானம்பாடிப் புள்; அது வானேங்கிப் பறத்தலால் வந்த பெயராதலின் ஈண்டு ஓங்கல் தொழிலாகுபெயர். வானம்பாடிப் புள் மழைத் துளியைப் பருகி உயிர் வாழுமியல்பின தாகலின், அத் துளி கிடைக்கப் பெறு விடத்து அது மிகவும் வருந்தும். இவ் வுண்மை "தற் பாடிய தளியுணவிற் புட்டேம்பப் புயன்மாரி" என்னும் பட்டி னப்பாலை யடிகளாலும் (கூ), "வானம் பாடி வறங்கூரத் தாழ, தழிதுளி தலைஇய புறவிற் காண்வர" என்னும் முல்லைப் பாட்டடிகளாலும் (சகஅ) பெறப்படும். நிரப்பும் கரப்பும் தொழிற் பெயர். நிரப்பு - குறைபாடு.

கூசு. வடுச்சொன் னயமில்லார் வாய்த்தோன்றும் கற்றூர்
சாயினுந் தோன்று கரப்புச்சொல் தீய [வாய்ச்

பரப்புச்சொல் சான்றோர்வாய்த் தோன்று கரப்புச்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும். [சொல்

(இ - ள்.) வடுச்சொல் - பழிச் சொற்கள், நயம் இல்லார் வாய் - அன்பில்லாதாரது வாயில், தோன்றும் - பிறக்கும்; கற்றூர் வாய் - அறிவு நூல்களைக் கற்றவரது வாயில், கரப்புச் சொல் - வஞ்சனைப் பேச்சுகள், சாயினும் தோன்று - அவர் கெடுவதாயினும் பிறவா; தீய பரப்புச் சொல் - தீயவற்றைப் பரப்புதலா லாகும் பேச்சுக்கள், சான்றோர்வாய் - மேன்மக்கள் வாயில், தோன்று - தோன்றமாட்டா; கரப்புச்சொல்-ஒன்றனை மறைத்தற் சொற்கள், கீழ்கள்வாய் - கீழ் மக்களது வாயில், தோன்றி விடும் - பிறந்து விடும்.

(க - து.) அன்பில்லாதார் வாயிற் பழிச்சொற்கள் தோன்றும்; கற்றூர் வாயில் வஞ்சனைச் சொற்கள் தோன்று; சான்றோர் வாயில் தீயவற்றைப் பரப்புஞ் சொற்கள் தோன்று; கீழ் மக்கள் வாயில் ஒளிப்புச் சொல் தோன்றிவிடும்.

வடு- பழி. சாயினும் - இறப்பினுமாம். தீய பரப்புஞ் சொல், கோட்சொல்; சான்றோர் - நல்லியல்புகள் நிறைந்தோர், கீழகள் - இழிவான வியல்புடையவர்கள்; இது பண்பாகு பெயர். நயம் - நட்புக் குணம், அன்பு; நண்பாற்று ராகி நய மில செய்வார் (குறள் - கூகூஅ) என்புழிக் காண்க. பரப்புச் சொல் - இல்லாத பழிச்சொற்களை ஏற்றிப் பலரறியக் கூறுதல்.

கூ. வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
கற்றூ ரெருவனும் பாடிலனே கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

(இ - ள்.) வால் இழையார் முன்னர், ஒள்ளிய நகைகளை யணிந்த அழகிய பெண்மக்களுக்கு முன், வனப்பு இல்லார் - அழகில்லாத ஆடவர், பாடு இலர் - பெருமை இலர்; சாலும் - கல்வி கேள்விகளான் நிறைந்த, அவைப் படின் - அவையிற் புகுந்தால், கல்லாதான் - கல்வியறிவில்லாதவன், பாடு இலன் - பெருமை இல்லாதவனுவன்; கற்றூன் ஒருவனும் - கற்றறி வுடையானெருவனும், கல்லாதார், (முன்னர்ப் படின்) படியாத வரிடஞ் சேர்ந்தால், பாடு இலனே - பெருமை இல்லாவன்,

பேதையார் முன்னர்ப் படின் - அறிவிலார்பாற் சேரினும்; பாடு இலனே - அறிஞன் பெருமையிலனேயாவன்.

(க - து.) அழகிய பெண்டிர்க்கு முன்னில் அழகில்லாத ஆடவர் பெருமையடைதலில்லை; கற்ற ரவையிற் கல்லாதான் பெருமையடைதலிலலை; கல்லாதார் முன்பு கற்றனும் பெருமை யடைத லில்லை; அறிவிலார் முன்பும் அறிஞர் பெருமை யடை தலில்லை.

வாலிழையா ரென்னுங் குறிப்பினால வனப்பிலார் ஆடவரா யினர். உம்மை இறந்தது தழீஇய எச்சம். ஏகாரம் இரக்கப் பொருளது. பேதையார் முன்னர்ப் படின்-உம்மை வருவித்துப் பொருளுரைக்கப்பட்டது. முன்னர்ப்படி னென்றதை முன்னுங் கூட்டி நான்காகக் கொள்க, செய்யு ளொவ்வொன்றும் நாற் பொருளுடைய தாகலின்.

கூஅ. மாசு படினு மணிதன்சீர் குன்றுதாம்
பூசிக் கொளினு மிரும்பின்கண் மாசொட்டும்
பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடமை காட்டி விடும்.

(இ - ள்.) மாசு படினும் - அழுக்குப் பட்டாலும், மணி தன் சீர் குன்றுது - நன்மணி தன் பெருமை குறையாது; பூசிக் கொளினும் - கழுவி எடுத்துக்கொண்டாலும். இரும்பின்கண் - இரும்பினிடத்தில், மாசு ஒட்டும் - அழுக்குச் சேரும்; கீழ்தன்னை கீழ் மகனை, பாசத்துள் இடினும - தலையிலிட்டு ஒறுத்தாலும், (மாசு உடைமை காட்டிவிடும்) - கீழ்மை யியல்பையே காட்டி விடுவான்; விளக்கினும் - அல்லது அறிவுகூறி விளக்கினாலும், மாசு உடைமை காட்டிவிடும - கீழமை யியல்பையே காட்டி விடு வான்.

(க - து.) அழுக்குச் சேர்ந்தாலும நன் மணியின் பெருமை குறையாது; கழுவி எடுத்துக் கொண்டாலும் இரும்பின்கண் மாசுண்டாகும்; கீழ் மக்களை ஒறுத்தாலும் அவாகள் தங் கீழ் மைத் தன்மையையே காட்டுவார்கள்; அன் றி அறிவுகூறி விலக்கினாலும் அக்கீழமையையே காட்டுவார்கள்.

மணிக்குச் சிறென்றது ஒளி; இரும்புக்கு மாசென்றது துரு. ஆம், அசை; பூசுதல், கழுவுதல். வாய் பூசுதலென்பதிற் போலவென்க. பாசத்துளிடினும் விளக்கினுமென இரண்டாய்ப் பிரித்துரைத்துக்கொள்க. அன்றி நான்மணிக்கடிகையில் ஒவ்

வொரு செய்யுளிலும் நான்கு பொருள்களே சொல்லவேண்டு மாயினும், ஒரோவொரு செய்யுளில் மூன்று பொருள்கள காணப்படுதலே நலிந்து பொருள் கொள்ளாது, தூற்பெயர், மிகுதிபற்றி யமைந்ததெனவுங் கொள்ளலாம். கீழ்க்கு மாசென்றது அறியாமை. உம்மை இழிவு சிறப்பு. உடைமை - செயப்படு பொருள் குன்றாத குறிப்புத் தொழிற் பெயர்.

கூசு. எண்ணெண்ணுக்குஞ் சான்றோர் மரீஇயாரிற் றீராமை
புண்ணெண்ணுக்கும் போற்றா ருடனுறைவு-பண்ணிய
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொல் பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை.

(இ - ள்.) மரீஇயாரின் - நெடுநாள் பழகினவரைப்போல, சான்றோர் - ஆன்றோர்களை, தீராமை - நீங்காம லிருத்தல், எண் ஒக்கும் - அறிவுடைமையை யொக்கும்; போற்றார் - தம்மைப் போற்றி இணங்காதவரோடு, உடன் உறைவு - உடனிருந்து வாழ்தல், புண் ஒக்கும் - புண்ணினை ஒக்கும்; நட்டார் - நட்பாயினர், கழறும் சொல் - இடித்துரைக்கும் வன்சொல், பண்ணிய - நரம்புகளால் இசைகூட்டப்பட்ட; யாழ் ஒக்கும - யாழிசையை ஒக்கும், பண்புடையாள் - மனைமாட்சியுடைய மனைவி, இல்லா மனை - இல்லாத வீடு, பாழ ஒக்கும் - பாழமனையை ஒக்கும்.

(க - து.) சான்றோரை நீங்காதுறைதல அறிவுடைமையாகும்; இணக்கமில்லாரோடு உடனுறைதல் புண்ணுக்கு நிகராகும்; நட்புடையார் இடித்துரைக்குஞ் சொல் வலிதாயினும் அது யாழோசையைப் போலும் இனிமையுடையதாகும்; மனை மாட்சியுடைய மனையாளில்லாத மனை பாழமனையை யொக்கும்.

எண் - அறிவு, 'தொக்கிருந் தெண்ணினு னெண்ணப்படும்' என்று மூன் வந்தமையும் கருதுக. 'சான்றோர் மரீஇயாரிற் றீராமை' யென்பதை, மருவியமைந்தாரை நீங்காமை யென்று பொருளுரைப்பினு மமையும். 'அரியராத் தீராமை' எனவும் பாடம். கழறல், தவறு கண்டவிடத்து இடித்துரைத்தல். யாழ - யாழினிசையையும், பாழ் - பாழ்மனையையும் உணர்த்தலால அவை முறையே கருவியானு பெயரும் பண்பாகு பெயருமாம். எண் - முதனிலைத் தொழிற் பெயர்.

ஈ. ஏரி சிறிதாயி னீரரும் இல்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணரும் மேலைத்

தவஞ்சிறி தாயின் வினையூரும் ஊரும்
உரன்சிறி தாயின் பகை.

(இ - ள்.) ஏரி சிறிதாயின் - குளம் சிறிதானால், நீர் ஊரும் - நீர் வழிந்துவிடும், இல்லத்து - வீட்டில், வாரி சிறிதாயின் - வருமானம் குறைவானால், பெண் ஊரும் - மனையாள் நிலை கடந்து பேசுவாள்; மேலைத் தவம் சிறிதாயின் - முற் பிறப்பின் நல் வினை குறைவானால், வினை ஊரும் - தீவினை பெருகும்; உரன் சிறிதாயின் - ஒருவன் வலிமை சிறிதானால், பகை ஊரும் - பகைவர் மேற்கொள்வர்

(க - து.) ஏரி சிறிதானால் நீர் வழிந்து போய்விடும்; வீட்டில் வருவாய் குறைவானால் மனையாள் வரம்பு கடந்து பேசுவள்; முன்னைத் தவம் சிறிதானால தீவினை மிகுந்து வருத்தும்; வலிமை சிறிதானால் பகைவர் மேற்போந்து வென்றிடுவர்.

வாரி, தொழிலடியாகப் பிறந்த பெயர். இடையரு தொழுகுத லென்னும் பொருளால் வருவாய்க் காயிற்று இ - வினை முதற் பொருண்மை விகுதி; பகை - பண்பாகுபெயர். தவமென்னுங் குறிப்பால வினையைத் தீவினையென் றுரைத்துக்கொள்க. மேலை - பண்படியாகப் பிறந்த பெயர்;

ஈக. வைதலை லாகும் வசையே வணக்கமது
செய்தலை லாகுஞ் செழுங்கிளை செய்த
பொருளி லாகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளி லாகு மறம்.

(இ - ள்.) வசை - நிந்தனை, வைதலால் ஆகும் - தான் பிறரை வைதலால ஒருவனுக்கு உண்டாகும்; செழும் கிளை - மிக்க உறவு. வணக்கமது செய்தலால் ஆகும் - எல்லார்க்கும் வணங்கி யொழுகினமையால் உண்டாகும்; போகம் - இன்ப வாழ்க்கை, செய்த பொருளினால் ஆகும் - தேடிப் பெருக்கிய பொருளினால் உண்டாகும்; அறம் - அறவினை, நெகிழ்ந்த அருளினால் ஆகும் - குழைந்த இரக்கத்தினால் உண்டாகும்.

(க - து.) பிறரை வைதலால் நமக்கு வசையுண்டாகும்; வணங்கி யொழுகுதலால் உறவினர் மிகுவர்; பொருளைத் தொகுத்தலால் இன்ப வாழ்க்கையுண்டாகும், குழைந்த இரக்கத்தினால் அறவினையுண்டாகும்.

வ, அலசை, வணகக்மது. அது பகுதிப் பொருள் விகுதி. செய்தவென்றது உண்டாக்குதலின் மேற்று; ''செய்க பொருளை'' (எதிக) என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகருரைக்கும் உரை ஈண்டு நிரோவு கூறதறகுரியது. நெகிழ்நத அருள், இயற்கை நவிற்சி. கிளை - உவமையாகு பெயா.

ரஉ. ஒருவ னறிவானு மெல்லாம யாதொன்றும்
ஒருவ னறியா தவனும ஒருவன்
குணனடங்கக குற்றமு ளானும் ஒருவன்
கணனடங்கக கற்ரு னும்மில்.

(இ - ள.) எலலாம - எல்லாக் கலைகளையும, அறிவான் ஒருவனும் இல் - தெரிநதவரெருவனும் இலலை; யாதொன்றும - எதனையும், அறியாதவன் ஒருவனும் இல - தெரியாதவரெருவனும் இலலை, குணன் அடங்க - ஒரு நலலியலபும இலதாக, குற்றம் உளளான் ஒருவனும் இல - பிழையேயுளளவரெருவனும் இலலை; கணன் அடங்க - அறியாமை சிறிதும் இலதாக, கற்ரு னும இல் - கற்றறிந்தவனும் இலலை.

(க - து.) எல்லாம் அறிந்தவனும் இலலை, ஒன்றும் அறியாதவனும இலலை; குற்றமே உளளவனும் இலலை; அறியாமையே இலலாதவனும இலலை.

பொருளுக்கேற்பச் செய்யுட் டொடரைப் பிரித்துரைத்துக் கொள்க கணன் - சிறுமை; ஈண்டு அறியாமை யென்னுஞ் சிறுமை யென்க. குணனும் கணனும், போலி. யாதொன்றும் - முறறும்மை; ஏனைய உம்மைகள் எண்ணுப் பொருளன.

ரஎ. மனைககு விளக்க மடவார் மடவார்
தமககுத் தகைசால் புதல்வர் மனககினிய
காதற் புதல்வர்ககுக கல்வியே கல்விக்கும்
ஓதிற் புகழ்சா லுணர்வு.

(இ - ள்.) மனைக்கு விளக்கம் - வீட்டுக்கு ஒளி, மடவார் - பெண்கள்; மடவார் தமக்கு - பெண்மக்களுக்கு, தகைசால் புதல்வர் - நல்லியல்புகள் நிறைந்த மக்கள் ஒளி; மனக்கு - இனிய - பெற்ரோர் மனத்திற்கு இனிமைதரும், காதல் புதல்வர்க்கு - அன்பிற் குரிய மக்கட்கு; கல்வியே - கல்வியறிவே

ஒளியாகும் ; கல்விக்கும் - அக் கல்வியறிவிற்கும், ஓதின் - சொலலுமிடத்து, புகழ சால் - புகழ் நிறைந்த, உணர்வு - மெய் யுணர்வே ஒளியாகும்.

(க - து.) மனைக்கு விளக்கம் நன் மனைவி ; நன் மனைவிக்கு விளக்கம் அறிவறிந்த மக்கள் ; அம் மக்கட்கு விளக்கம் கல்வி ; கல்விக்கு விளக்கம் மெய்யுணர்வு.

மனைக்கு அத்துச் சாரியை தொக்கது. புகழ்சாலுணர்வு, மெய்யுணர் வென்க. முதலில் நின்ற விளக்கம் என்னுஞ்சொல் ஏனை மூன்றிடத்தும் கூட்டப்படுதலால், முதனிலைத் தீவகமாகும். இச் செய்யுள் மாலாதீவகம்.

ஈச. இன்சொலா னுகுங் கிழமை இனிப்பிலா
வன்சொலா னுகும் வசைமனம்-மென்சொலின்
நாவினு னுகு மருண்மனம் அம்மனத்தான்
வீவிலா வீடாய் விடும்.

(இ - ள.) இன் சொலான் - இன்சொல்லால், கிழமை ஆகும் - ஒருவறகு நட்புரிமை யுண்டாகும் ; இனிப்பு இலார் - இன்பமில்லாத, வன் சொலான் - வன்சொல்லினால், வசை மனம் ஆகும் - கெட்ட கருத்து உண்டாகும் ; மென் சொலின் - நயமான சொல்லையுடைய, நாவினால - நாக்கினால், அருள்மனம் ஆகும் - இரக்க எண்ணம் உண்டாகும் ; அம் மனத்தான் - அவ் வருள் நெஞ்சத்தால், வீவு இலா - அழிதலிலலாத, வீடு ஆய் விடும் - வீடு பேறுண்டாகும்.

(க - து) இன்சொல்லால நட்புரிமையுண்டாகும் ; வன் சொல்லாற் கெடுநினைவு உண்டாகும ; நயமான சொற்களால் அருள்நெஞ்சம் உண்டாகும் ; அவ் வருள்நெஞ்சத்தால் அழிவி லாத வீடுபேறுண்டாகும்.

நல்லோர் நட்புரிமையால நீய நினைவுகள் நீங்கித் திருத்த மான நல்லெண்ணமும் அவ்வெண்ணத்தால் அருள் நெஞ்சமும், அதனால வீடுபேறு முண்டாகு மென்பது. வீவு, தொழிற்பெயர். ஆய்விடும்-ஒரு சொல். நா-என்றதனால் அதற்கினமாகிய மெய்ம் மனங்களின் அடக்கத்தையுங் கொள்க.

முற்றிற்று.

அருஞ்சொல்லகராதி

என்-பாட்டென்

அஃகுதல் - சுருங்குதல் 28
அசனம் - சோறு 80
அசுணமா - கேகயப்புள் 2
அடல் - ஒழிததல் 11
அணங்கு - தெய்வம் 89
அணி - அழகு 76
அதிர்தல் - நடுங்குதல் 19
அருக்குதல - சுருக்குதல 87
அலைத்தல்-அடிநதுவருத்தல் 23
அவை - சபை 20
அவைக்குட்டம் - சபை என்னும் கடல் 16
ஆக்கம் - சிறப்பு, முற்போக்கு 18, 11
ஆக்கல் - வளர்த்தல் 26
இகந்து - முறைகடந்து 22
இசை - புகழ 15, 28, 60
இடும்பை - துன்பம் 95
இடையீடு - பற்று 80
இழை - நகை 97
இளைநலம்-இளமையினழகு 17
இறுவாய் - முடிவு 17
இன்கண் - கனிந்த ஆதரவு 91
இன்சொல் - நயவுரை 14
இன்னாதது - துன்பந் தருவது 30
இன்னைமை-இழிவு, துன்பம் 15
உரவோர் - அறிவுடையோர் 2
உரன் - வலிமை 100
உழுவை - புலி 66
உள்ளப்படும்-மதிக்கப்படும 24
ஊடுதல் - பிணங்குதல் 12
ஊன் - இறைச்சி 26
எள்ளற்க - இகழாதே 1
ஒட்டார் - பகைவர் 23
ஒண்மை - அறிவுவிளக்கம் 50
ஒரீஇவிடல - நீக்கிவிடல 85
ஓங்கல்-வானம்பாடிப்புள் 95
கண் - கண்ணோட்டம் 14
கண்மாறல் - புறங்கூறல் 6
கணன் - சிறுமை 102
கதம் / கதன் } சிற்றம் 10, 54
கந்து - கட்டுத்தறி 10
கயம் - கீழமை 91
கரவு - வஞ்சனை 14
கலவர் - மரக்கலமுடையார் 16
கலினம் - கடிவாளம் 71
கழறல் - இடித்துரைத்தல் 99
கழிமடம்-மிக்க அறியாமை 28
கனலி-சதுரக்களளி 4
களி - கட்குடியன் 95
களிறு - ஆண்யானை 10
கன்றுதல் - சினத்தல் 11
காங்கி-பேராசைக்காரன் 60
காலேயம் - பசுக்கூட்டம் 66
குட்டம் - ஆழம 16
குழவி - குழந்தை 23
குழாம் - கூட்டம் 14
கூறறம் - கூறறுவன் 83
கெழு - நட்புரிமை 62
கேளிர் - சுற்றத்தார் 85
கொந்துதல் - ஒறுத்தல் 10
கோடு - கொம்பு 12
சிதைத்தல் - கெடுத்தல் 11
சிலைத்தல் - சினந்துரைத்தல் 23
சுரும்பு - வண்டு 48
செவ்வியன் - கைதேர்ந்தவன் 18
செறுதல் - சினத்தல் 49
தகை - நல்லியல்பு 103
தண்டார் - குளிர்பூமாலை 48
தமர் - சுற்றத்தார் 92

தருகுதல்-துன்பந்தருதல் 12
தாவுதல் - கெடுதல் 77
நிணை - குடிப்பிறப்பு 40
நீர்தல் - பிரிந்து வாழல் 13
துறக்கம் - வீட்டுலகம் 57
துன்னுதல் - நெருங்குதல் 55
தூம்பு - நீர்க்கால் 71
தோம் - குற்றம் 16
நந்துதல் - விளங்குதல் 48
நல்குரவு - வறுமை 81
நல்லாள் - நன்மக்கள் 6
நரு - தேன் 48
நிரப்பு - வறுமை 95
நிறை - கற்பு 13
நுகி - கூர்மை 70
பகடு - எருது 81
பசைதல் - விரும்புதல் 13
பட்டாங்கு - இயல்பு 90
படி - உலகம் 2
படைக்குட்டம் - பகைவரது படை என்னும் கடல் 16
பணபு - இயல்பு 90
பழனம் - வயல் 1
பறை - ஒருமுகக் கருவி 2
பாசம் - கட்டு 98
பாடு - பெருமை 97, 84
பாய்மா - தாவும் குதிரை 16
பிணித்தல் - கட்டுதல் 10
பிணை - காதல் 90
பிளிற்றுதல் - ஆரவாரித்தல் 35
பீடு - பெருமை 13
புலனுள்வர் - புலவர் 39
புள் - பறவை 95
புற்கம் - புல்லறிவு 28
பூசுதல் - கழுவுதல் 34
பூவைப்பூ - காயாம்பூ 1
பேட்டாங்கு - விரும்பியபடி 90
பேணுமை - மதியாமை 22
பேர்தல் - தவிர்தல் 41
பைங்கூழ் - பசும்பயிர் 44
பைத்தல் - சினத்தல் 68
பொருநர் - சண்டைவீரர் 42
பொறி-(செல்வம்) திருமகள் 44
போழவர் - பிளப்பர் 16
மடி - வயிறு 2
மடிமை - சோம்பல் 88
மண்ணி - கழுவி 3
மம்மர் - அறியாமை 22
மலைத்தல் - சண்டை செய்தல் 23
மன்னுதல - பொருந்துதல் 15
மாசு - அழுக்கு 98
மாண்ட - பெருமைப்பட்ட 18
மிசைதல் - தின்னல் 26
முனிதக்கான் - வெறுக்கத் தக்கவன் 59
முனியாதார் - சினவாதவர் 39
மொய் - வலிமை 21
யாக்கை - உடல் 50
யாத்தன - அளவு செய்யப் பட்டன 72
வசை - தூறு 101
வடுச்சொல் - பழிமொழி 96
வண்மை - வளம் 14
வரை - எல்லை 50
வளவன்மை - ஈகைத் தன்மை 92
வனப்பு - அழகு 97
வாண்முகம் - ஒளிமுகம் 1
வாரணம் - யானை 23
வாரி - வருமானம் 100
விசை - வேகம் 24
விதிர்த்தல் - சிந்துதல் 61
விளி - சாவு 27
வீவு - அழிவு 104
வீறு - சிறப்பு 52, 70, 84
வெகுளி - சினம் 11, 80
வெட்கென்றார் - அறிவிலார் 72
வென்றி - வெற்றி 89

செய்யுண் முதற்குறிப்பகராதி

எண்-பக்கவெண்

அஞ்சாமை	22	கற்றன்னர்	47
அந்தணரி	28	கற்ருர்	8
அலிப்பான்	23	கற்ருன்	61
ஆசார	77	கன்ருமை	10
இரும்பினி	29	குழித்துழி	25
இராசுடு	42	கைத்திலலார்	57
இளமைப்	75	கைத்துடை	55
இன்சொலா	84	கொடுப்பின	67
இன்ஞமை	14	கோஞக்கி	23
இனிதுண்பா	50	சாவாத	64
ஈத்துண்பா	,,	சிறந்தார்	41
ஊர்ந்தான்	59	சொல்லா	65
ஊழியும்	60	திரியழல	54
ஊனுண்டு	55	திரிவிறறறிற	26
எண்ணெக்கு	81	திருவுந்திணை	34
எருதுடையான்	45	திருவொக்கும்	6
எல்லாவிட	76	தூர்ந்தொழி	63
எள்ளற்க	3	தேவரீன	62
எளளற்பொ	43	நகையினிது	32
என்றுமுள	49	நகைநலம்	21
ஏதிலா	36	நல்லார்	68
ஏரிசிறி	81	நலனு	67
ஒருவனறி	83	நன்றிசாம	38
ஒன்றூக்கல்	70	நாக்கினறி	64
கடற்குட்டம்	14	நாவன்ரே	66
கண்டதே	33	நாற்றமுறை	39
கண்ணிறீந்திறந்த	46	நிலத்துக்கணி	9
கண்ணுள்	53	நீரான்	70
கந்திற்	9	நெய்விதிர்	51
கரப்பவர்	32	பட்டாங்கே	74
கல்லா	69	படியை	2
கல்லிற்	6	பதிநன்று	59
கள்வமென்	7	பல்லிஞ	11
கள்ளாமை	71	பழியின்மை	52
கள்ளிவயி	5	பறைநன்று	12
கள்ளினிடும்	78	பறைபட	4
கற்பக்கழி	24	பிணியன்னர்	28

பிறக்குங்காற்	35	மறக்களி	30
பின்னவாம்	56	மறையறிப	73
புகழ்செய்	19	மனைக்காக்க	16
புகைவித்தா	27	மனைக்குப்பாழ	18
பூவிலை	41	மனைக்குவிள	83
பெருக்குக	72	மாசுபடி	80
பெற்றனதிர்	17	மாண்டவர்	48
பொய்த்தலிறு	15	மையாற்ற	31
பொறிகெடு	37	மொய்சிதை	18
போரின்றி	36	யாறுளடங்கு	44
மகனுரை	58	யானையுடை	45
மடிமை	72	வடுச்சொன்	78
மண்ணி	4	வளப்பாத்தி	13
மதிமன்னு	1	வன்கண்	75
மலைப்பினு	20	வாலிழை	79
மழையின்றி	40	வைததலை	82

பிரீ பிரின்டர்ஸ், 147, பவழக்காரத் தெரு, சென்னை.

For M. S. 95-B. 3-47, C. 800.

கழக வெளியீடு — கஅசு

காரியாசான்

இயற்றிய

சிறுபஞ்சமூலம்



பாளையங்கோட்டை, அர்ச்-சவேரியா கல்லூரித்
தலைமைத் தமிழாசிரியர்

வித்வான் பு. சி. புன்னைவனநாத முதலியாரவர்கள்

எழுதிய

விளக்க வுரையுடன்



:: திருநெல்வேலி, தென்னிந்திய ::

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்

திருநெல்வேலி & சென்னை

First Edition 1936

[*Copy-right*]

Published by

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS

PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.

TINNEVELLY & MADRAS

October. 1944

The Central Art Press, Madras.

உ

கடவுள் துணை.

நான்மணிக்கடிகை

தமிழ்மொழி பல்லாயிரம் யாண்டுகளாகத் தோற்றமுற்றிலங்கும் உயர்தனிச் செம்மொழி. இதனைச் சங்கம் நிறுவிப் போற்றி வளர்த்த பெருமை பாண்டியர்க்கே யுரியது. பாண்டியர் நிறீஇய முச்சங்கங்களிற் கடைச்சங்க மிருந்து தமிழாராய்ந்தார், சிறு மேதாவியார், மருதனிளநாகனார், பெருங்குன்றூர்க்கிழார், நக்கீரனார் முதலானவர். அவர்கள பாடியன கூத்தும், வரியும், பேரிசையும், சிற்றிசையும், பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும, பதினெண்கீழ்க் கணக்கும் என்றித் தொடக்கத்தன. இவற்றுள, பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் மேற்கணக்கைச் சார்ந்தவை.

> "அடிநிமிர் பில்லாச் செய்யுட்டொகுதி
> அறம்பொருள் இன்பம் அடுக்கி அவவத்
> திறம்பட உரைப்பது கீழ்க்கணக்காகும்"

என்ற பன்னிருபாட்டியற் சூத்திர மேற்கோளுக் கிணங்கக் குறைந்த அடிகளையுடைய செய்யுட்களான் அறம் பொருள் இன்பம் இவற்றைத தழுவி அமைந்த நூல கீழ்கணக்காகும. கணக்கு—நூல். கீழ்க்கணக்கு சிறுபான்மை ஐம்பதிற் குறைந்தும் ஐநூறறின மிக்கும் வரும் இனியது, இன்னா, கார், களவழி நான்கும் ஐம்பதிற் குறைந்து வந்தன. ஏப்பாலாகிய திருக்குறள் ஐந்நூற்றின் மிக்கு வநதது இக் கீழ்க் கணக்கு நூல்களேயே "தாயபனுவல்," என்னும் பெயராற் கூறுவர் எவவும், இவை அறம் பொருள இவபம் என்னும் மூன்றற்கும் இலகணஞ் சொல்லுவ எனவும், இடையிடை அவையன்றியுந தாஅய்ச்செல்வது முண்டெனவும், இச செய்யுட்கள் அடி நிமிராது இரணடடி முதல ஆறடி யிறுதியாக வருவன வெனவும், அவை பல எழுத்தினுன் அகன்று காட்டாது சில எழுத்தினுன் வருவன எனவும்,

"வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியால் நாயபனுவலோ
டம்மை தானே அடிநிமிர் பின்றே"

என்ற தொல்காப்பியம், பொருளதிகாரம், செயயுளியல் உருஆம் சூத்திரத்துப் போசிரியரும் நச்சினர்க்கினியரும் உரைத்தலான் உணர்ந்து கொள்க.

பதினெண் கீழ்க்கணக்கு நூலகளாவன :—

"நாலடி நான்மணி நானூற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
மெயந்நிலைய காஞ்சியோ டேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

என்ற பாட்டிற் கண்டபடி (1) சமண முனிவர்கள இயற்றிய நாலடியார், (2) விளம்பிநாகனார் இயறறிய நான்மணிக்கடிகை, (3) பூதஞ்சேந்தனார் இயற்றிய இனியவை நாற்பது, (4) கபிலர் பாடிய இன்ன நாற்பது, (5) மதுரைக் கணணங் கூத்தனார் இயற்றிய கார் நாற்பது, (6) பொய்கையார் பாடிய களவழி நாற்பது, (7) மாறன் பொறையனார இயற்றிய ஐந்திணை ஐம்பது, (8) கண்ணஞ் சேந்தனார் பாடிய திணைமொழி ஐம்பது, (9) மூவாதியார் இயற்றிய ஐந்திணை எழுபது, (10) கணிமேதாவியார் இயற்றிய திணைமாலை நூற்றைம்பது, (11) திருவள்ளுவனாரியற்றிய திருக்குறள், (12) கல்லாதனார் இயறறிய திரிகடுகம், (13) பெருவாயின் முள்ளியார பாடிய ஆசாரக்கோவை, (14) முன்றுறை யரையனார் பாடிய பழமொழி, (15) காரியாசான் பாடிய சிறுபஞ்சமூலம், (16) மாரோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புலலங்காடனார் இயறறிய கைந்நிலை, (17) கூடலூர்க்கிழார இயற்றிய முதுமொழிக்காஞ்சி, (18) கணிமேதாவியார் இயறறிய ஏலாதி என்பன.

இவ்வெண்பாப் பழம் பிரதிகளுள் "இன்னிலைய காஞ்சியுட னேலாதி என்பவே, நன்னிலைய தாகுங் கணக்கு," "ஐந்தொகை முபபால்", "நனனிலைய வாங்கிழக் கணக்கு" எனச் சிறிது சிறிது வேறுபட்டுக் காணப்படுதலின், சிலர்

இந்நூலையென்று பொய்கையார் பாடிய 45 வெண்பாக்க ளடங்கிய நூலை மேற்குறித்த கைந்நிலைக்குப் பதிலாகக் கூறுவர். கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு இவையே என்று இன்னும் வரையறுக்கப்படாமை வியப்பே

மருத்துவ நூலிற் கூறப்பட்ட கண்டங்கத்திரிவோ, சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர, பெரு மல்லிவேர் ஆகிய பஞ்ச மூலங்கள் மக்கள் பிணிகளைத் தீர்ப் பதுபோல, இந்நூல் தன்னில் அமைந்த ஒவ்வொரு செய்யுட களிலும் அடங்கிய ஐந்தைந்து பொருளைகளாலும் தன்னைப் படித்துணர்கின்றவர் பிறவி நோயைப் போக்கத்தக்க நல் லொழுக்க நெறிகளை விளக்கிக காட்ட வல்லது

இந்நூல் இயற்றியவர் காரியாசான் இவர் ஆசிரியர், மாக்காயனார் இவை இந்நூற் பாயிரச் செய்யுளால் விளங் கும் இந்நூலாசிரியர் சைனமதத்தவராவர்.

இந்நூல் பாயிரச செய்யுள் உள்பட 100 செய்யுட்களை கொண்டது. இவற்றில்,

> ‘‘வைதா ரொருவ னினிதிய வாழ்த்திய
> தெய்தா வுரையை யறிவா னேனெஞ்ச
> லறிவறி யாவாண டெனவுரைப்பார் வாயுட்
> டறிவெறியார் தக்காரே தாம்’’

> ‘‘நெடியமண் ணென்றுரா அயத்தன்
> தெய்வந் தணிப்பா னிவையென்னும் பெற்ருனைத
> தெய்வமாத் தேறுமாற் றேர்ந்து’’

என்ற இரண்டு செய்யுட்களின் மூலமட்டும் வழுசசெறிந்து சிதைந்து பொருள் கண்டு கொள்ளக்கூடாத முறையில் அமைந்துள்ளன. இந்நூலிற் பதிப்பித்துளள பழைய பொழிப் புரை கொண்டு இறைகு அறுபதாண்டுகட்கு முன் யுவ ஆண்டில் வெளியான பதிப்பிலும இதே பாடங காணப்படு கின்றது. ஆதலின் எங்கேனும் கிடைக்கும் சிறுபஞ்சமூலம் ஏட்டுச சுவடியில் இவ்விரண்டு பாடல்களின் மூலமும் உரை யும் காணப்படுமேல் அவற்றை அடுத்த பதிப்பில் வெளி

யிடக் காத்திருக்கின்றேம். அச்சிட்டு வெளியாயுள்ள செய்யுள் மூலங்களிற் கண்ட பாடபேதங்கள சில புறத்தீரட்டுப் போன்ற நூல்களிற கண்ட செய்யுட் பாடத்துக்கேற்பத் திருத்தி யமைகக்பெற்றுள்ளன. இப்பொழுது எழுதப பெற்றுள்ள உரை பெரும்பாலும் செந்தமிழ் நடையில் விளக்கமான முறையில் அமைக்கப்பெற்றிருபபதும் பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரைகளும் ஏற்றவாறு அமைக்கப்பெற்றிருப்பதுங் கற்போர்க்கு இன்பத்தை யெளிதி லூட்டுமென்றெணணுகின்றேம்.

பதிணெண்கீழக்கணக்கு நூல்களில் தக்க உரையெழுதப் பெறுமலிருக்கும் நூல்கட்கும் இதுபோல் விளக்கவுரை யெழுதித்தரக் கேட்டு, அங்ஙனமே எழுதியவற்றை யசசிடுத் தமிழுலகிற குதவிவருந் திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்க்கு எமது உளமார்ந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவிக்கின்றனம்

இந்நூல் அச்சிடப் படுங்காலத்து ஒப்பு நோக்கித் திருத்தம் புரிந்துதவிய திருச்சி அரசினர் மகமதிய உயாதரப் பாடசாலைத் தமிழாசிரியர் திரு அ. நடராச பிள்ளையவர்கட்கு எம் உளமார்ந்த நன்றி உரித்தாகும்.

இவ்விளக்கவுரை தமிழ்க்கலைபபயிறசி கருதும் அறிஞர்கட்கும், பள்ளிமாணவர்கட்கும் பெரிதும் பயன்படுமாதலின், தமிழகததார் இத்தகைய வெளியீடுகளை விருப்புடன் ஏற்றுப போறறுவார்களாக. இறைவன் திருவருள் முன்னிற்க.

"புலவரகம்"
பாளையங்கோட்டை,
25—9—1936

இங்ஙனம்,
பு சி. புன்னைவனநாதன்,
தமிழாசிரியர்.

ஓம

சிறுபஞ்சமூலம்

மூலமும் விளக்கவுரையும்

கடவுள் வாழ்த்து

முழுதுணர்ந்து மூன்றெழுதிது மூவாதான பாதம்
பழுதின்றி யாற்றப் பணிந்து—முழுதேதத்தி
மணபாய ஞாலத்து மாந்தர்க் குறுதியா
வெணபா வுரைப்பன் சில.

(பதவுரை) முழுது உணர்ந்து-எல்லாவறறையும் அறிந்து, மூன்று ஒழித்து - காமம், வெகுளி, மயக்கம என்னும மூக்குற்றங்களையும் நீக்கி, மூவாதான் - மூபபில்லாதவனுகிய கடவுளின, பாதம் - திருவடிகளை, பழுது இன்றி - குறறம் இல்லாமல, ஆற்ற - மிகுதியாக, பணிந்து - வணங்கி, முழுது ஏத்தி - (அவனுடைய மங்கள குணங்கள) முழுவதும போறறி, மண் - மண்ணுலகத்து, பாய - பரவியிருகின்ற, ஞாலத்து - இப்பூமியிலுள்ள, மாந்தர்க்கு - மக்கட்கு, உறுதியா - நன்மை யுண்டாகுமாறு, சில வெணபா - சில வெணபாச் செய்யுட்களால் ஆகிய சிறுபஞ்சமூலம் என்னும இந்நூலை, உரைபபன் - யான் சொல்வேன்; (என்றவாறு.)

(பழைய பொழிப்புரை) காமாதி மூன்றையு மொழித்து மூற்றுமுணர்ந்து, மூப்பில்லாதான பாதம் மனக்குற்ற நீக்கி மிகவும் வணங்கிப் பல குணங்களைப் புகழ்ந்து மண்பரந்த வுலகில் மக்கட் கெல்லாம் உறுதியாகிய பொருள்மேற் றொடுத்து வெணபாவாகிய சில செய்யுட்களை யுரைப்பேன்.

(கருத்துரை) நிலைபெற்ற கடவுளின் அடிகளை வணங்கிப் போற்றி இந்நிலவுலகினர்க்கு நன்மை யுண்டாகுமாறு இந்நூலை யான் கூறுவேன்.

இச்செய்யுளில் கடவுள் வணக்கமும் செயப்படு பொருளும் உரைக்கப் படுகின்றன வாதலின், இது சிறப்புப் பாயிரம் எனப்படும். ஆசிரியர், தாம் எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற் பொருட்டு ஆன்றோர் முறைப்படி இக் கடவுள்வாழ்த்துக் கூறினர்.

முழுதுணர்தல் - எல்லாம் அறிதல். மூவாதான் - மூ என னும் பகுதியடியாகப பிறந்த எதிர்மறை வினையாலணையும் பெயர். மூவாதான் என்றமையால் கடவுளின் எனறு மொரு படிததா யிருக்குந் தன்மை யுணரப்படும். பழுது - வழிபாடு செய்தலில தவறுதல். பணிதல் - தனமுயற்சியின்றி யடங்குதல். உறுதி - அறம, பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்கள். சில வெண்பா என்பது கருவியாகு பெயராய்ச் சில வெண்பாக்களாலாகிய நூலை யுணர்த்திற்று. உறுதியாக என்பது உறுதியா எனக் ககரந்தொகுகு நின்றது. பாய - இறநத காலப் பெயரெச்சம். 'சிறு பஞ்சமூலம்' என்ற இந்நூற் பெயர்க்கேற்ப இதன் ஒவ்வொரு செய்யுளிலும் ஐந்து பொருள்கள் அமைந்திருததல வேணடுமெ அம் முறைப்படி, இக் கடவுள் வாழ்த்துச் செய்யுளிலும் முக்குற்ற மொழித்தலில் மூன்றும், முழுதுணர்தல ஒன்றும், மூவாமை ஒனறும் ஆக ஐந்து பொருளகள அமைந்திருத்தல காண்க. (க)

நூல்

ஒத்த வொழுக்கங் கொலைபொய் புலால்களவோ
டொதத விவையல வோர்நாலிட்—டொத்த
உறுபஞ்ச மூலந்தீர் மாரிபோற கூறீர
சிறுபஞ்ச மூலஞ் சிறந்து.

(ப - ரை.) ஒதத - பொருந்திய, ஒழுக்கம் - நன்னடகைகை, கொலை - கொல்லுதல், பொய - இல்லது கூறல், புலால - புலால உண்ணுதல, களவு ஓடு - திருட்டு ஆகிய இவற்றுடனே, ஒத்த - பொருந்திய, இவை அல - இவற்றுக்கு எதிரிடையாகிய, ஓர் - ஒரு, நால் இட்டு - (கொலலாமை, பொய் கூருமை, புலாலுணணுமை, கள்ளாமை என்னும்) நான்கையுஞ் சேர்த்து, ஒத்த - உலகிற் பொருந்திய, உறுமிகுதியாகிய, பஞ்சமூலம் - சிறுவிலைக் காலத்தின் காரணத்தை, தீர் - அகற்றுகின்ற, மாரி போல் - மழையைப் போல, சிறு பஞ்சமூலம் - (நோய்களை யகறறும்) சிறு பஞ்ச

மூலங்களைப் போன்ற இந்நூலை, சிறந்து - சிறப்புற்று, கூறீர் - (கலவியறிவாளரே! நீங்கள் மக்கள் தீய குணங்களை நீக்கி நற்குணங்களைப் பெருக்குமாறு) சொல்லக்கடவீர், (எ - று)

(ப-பொ-ரை.) பொருந்திய வொழுக்கங் கொலை பொய் புலால் களவோ டொத்த வினையனறி யிவற்றுக்கு மறுதலை யாகிய நான்கு மென்று சொல்லப்பட்ட இவ்வைந்து மகப் பட்ட மிக்க பஞ்சத்தின் மூலத்தைத் தீர்க்கும் மாரிபோலச் சிறு பஞ்சமூலமென்று மருந்தாகக் கூறீர் மிக்கு

(க - ரை.) பஞ்சத்தைத் தீர்க்கும் மழையைப்போல மக்கள் வினைகளைத் தீர்க்கும் இச் சிறுபஞ்ச மூலமும என்க.

இந்நூலில் ஒழுக்கம் கொலையின்மை முதலிய ஐந்தைப் பற்றிய பொருள்களே வருதலால், இவ்வைந்தையுஞ் சேர்த்து சிறுபஞ்சமூலங் கூறீர் என்றார் கொல்லாமை, பொய யாமை, புலாலுண்ணுமை, கள்ளாமை முதலியனவும் ஒழுக் கத்தில் அடங்கு மெனினும், சிறந்த அறங்களாக நிற்பதால் அவை நானகையுந தனித்தனி அறமாகக் கொண்டு மற்ற அறங்களை யெல்லாம ஒன்றுக்கி இவ்வைந்தையுஞ சேர்த்துச் சிறுபஞ்சமூலமெனக் கூறினார சிறு பஞ்சமூலம - உவமை யாகுபெயர். சிறு பஞ்சமூலங்களாவன - சிறிய ஐந்து வேர் கள், அவை கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறு மல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சில் வேர். இந்நூலி லுள்ள ஒவ்வொரு வெண்பாவும் உயிர்க்குறுதி பயக்கும் அவ்வைநது பொருளகளையுடைமையால், இநநூலும் சிறு பஞ்சமூலம் எனப்படலாயிற்று. ஒழுக்கமும், ஓர் நூலும் எனக்கூட்டுக. உறு - மிகுதி, உரிச்சொல். தீர்மாரி - வினைத் தொகை. அல - எதிர்மறை வினையாலணையும் பெயர். கூறீர எனபதற்கு நீங்கள் என்பது வினைமுதலாக வருவிக்கப் பட்டது. (உ)

பொருளுடையான் கணணதே போக மறனு
மருளுடையான் கணணதே யாகு—மருளுடையான
செய்யான பழிபாவஞ் சேரான புறமொழியு
மெய்யான பிறாசெவிக குய்தது.

(ப - ரை.) போகம் - உலக இன்பமானது, பொருள் உடை.யான் கணணதே ஆகும - செல்வப் பொருளுடையவ

னிடத் துண்டாகும், அறனும் - நலலொழுக்கமும், அருள் உடையான் கண்ணதே ஆகும் - இரக்க முளளவனிடத்தி லுள்ளதாகும், அருள் உடையான் - அத்தகைய அருளு யுடையவன், பழி செய்யான் - பழிக்கப்படுந் தீய செயல் களைச் செய்யான், பாவம் சேரான - தீவினையைச் செய்ய மனத்திலும் நினையான், புறமொழியும் - புறங்கூற்றுச் சொற் களையும, பிறர் செவிக்கு - மற்றையவர் காதுகளில், உய்தது-செலுததி, உய்யான் - பிழைகக மாட்டான்; (எ - று.)

(ப-பொ-ரை.) பொருளுடையான் கண்ணதே யாகும இன்பம்; அறவினையும் உயிர்கள்மேல் அருளுடையான மாட்டேயாகும்; அவ்வருளுடையான் பழியைச் செயயான, பாவத்தை யடையான், பிறர் செவியின்கட்செலுத்திப் பிறரைப் பழிபடக் கூறும் புறமொழிகளையும் நடத்தான்.

(க - ரை.) பொருளுளளவனுக்கு இன்பம பெருகும; அருளுள்ளவனுககு அறம் விளையும், அருளுள்ளவன் பழியை யும், தீவினையையும் புறங்கூறுதலையுஞ செய்யான்.

'பொருளுடையான் கண்ணதே போகம்,' எனறதனாற் போகத்தைத் தரக்கூடிய பொருளைத் தேடிக்கொள்ள வேண்டியது இன்றியமையாத தென்பது பெறப்படும். 'அருளிலார்க் கவ்வுலக மில்லை' என்ற குறட்பொருள், 'அறனும் அருளுடையான் கண்ணதேயாகும்.' என்பதில் அடங்கி யுள்ளது. அறன் - அறம் என்பதன் போலி. ஆகும் எனபது தீபகமாக இரண்டிடத்துங் கூடடப்பட்டது. செவிக்கு - ஏழனுருபு நான்கனுருபாக மயஙகிவந்த உருபு மயக்கம். செவியிற்கு என்றும் பாடம். (ந)

கறபுடைய பெணணமிர்து கற்றடங்கி ஞனமிர்து
நறபுடைய நாடமிாதந் நாட்டுக்கு—நறபுடைய
மேகமே சேர்கொடி வேநதமிர்து சேவகனு
மாகவே செய்யி னமிர்து.

(ப-ரை.) கற்பு உடைய பெண - கற்புள்ள பெண்ணை வளை, அமிர்து - தன் கணவனுக்கு அமிர்தம போல்வாள், கறறு - (அறிவு நூல்களைக்) கற்று, அடங்கினன் - (அவற்றின் வழியில்) அடங்கி நிறபவன், அமிர்து - (உலகத்தார்கு) அமிர்தம் போலவான, நற்பு உடைய நாடு - நன்மையுள்ள நாடு, அமிர்து - (அந்நாட்டரசனுக்கு) அமிர்தம் போன்றது

அ நாட்டுக்கு - அந்த நாட்டுக்கு, நற்புடைய மேகமே சேர் கொடி வேநது - நன்மையைச் செய்கின்ற மேகத்தை யளாவு கின்ற கொடியையுடைய அரசன், அமிர்து - அமிர்தம்போல் இன்பஞ செய்வான், சேவகனும் - (அவ்வேந்தனது) சேவக னும், ஆகவே செயயின - (அவ்வேந்தனுக்கு) நன்மையான வறறையே செயவானையின், அமிர்து - அவ்வேந்தனுக்கு அமிர்தம் போல்வான், (எ - று.)

(ப-பொ-ரை.) கற்புடைய பெண் தனது கொழுநறகு அமிர்தோடொக்கும், கற்றுவைத்துப் பொறிகளோந்தையும அடக்கினன் உலகத்தார்க்கு அமிர்தோ டொக்கும், நற் செய்கைகளையுடைய நாடுகள் அந்நாடாளும அரசர்க்கு அமிர்தோடொக்கும், அநநாட்டிறகு மழைபோல் நன்மை யைச் செய்யும் மேகத்தைச் சேர்ந்த கொடி வேநத னமிர்தோ டொக்கும், அவன் சேவகனும் அவ்வரசர்க்கு நன்மையாகவே செய்யின் அமிதோ டொக்கும்.

(க-ரை.) கற்புடைப் பெண், கற்றடங்கினன், நாடு, வேநது, சேவகன் இவர்கள் முறையே கணவன் முதலியவர்க ளுக்கு அமிர்தம்போல் நினறு உதவுவார்கள.

கற்பு - கணவன் முதலானோரிடத்து நடக்கவேண்டிய முறைமைகள் எல்லாவறறையுங கற்றல், தொழிற பெயா. அடங்குதலாவது - உளம் உரை செயல்கள அடங்கபபெறு தல். மேகம்சேர் என்பதறகு மேகத்தின் தன்மையெனின், மேகம் பொருளாகு பெயர. நற்பு - நன்மை எனனும் பண படி விகாரம. ஆகவே எனபதை ஆகு+அவே என்று பிரித்து நன்மையாகின்ற அத் தொழிலகளையே எனக் கூறு தலு முணடு. அமிர்து - மரணதத்தினின்று தவிாபபது இது சாவா மருந்து, மூவா மருந்து எனப்படும். (சு)

கல்லாதான ரொன்காணு நுட்பமுங் காதிரண்டு
மிலலாதா ளேக்கழுதஞ் செய்தலு—மிலலாதா
ளெலலாப் பொருளில்லார்க கீததளியா னெனறலு
நலலார்கள் கேட்பி னகை.

(ப-ரை.) கல்லாதான் - (ஆசிரியனிடத்துக் கறகவேண் டிய முறைபபடியே) கல்லாதவனுகிய ஒருவன், தான் காணும் - தானே ஆராய்ந்து காண்கின்ற, நுட்பமும் - நுண பொருளும், காது இரண்டும் - இரண்டு காதுகளும், இல்லா

தாள் - இலலாதவளாகிய ஒருத்தி, ஏக்கழுத்தம் செய்தலும் - (தான் மிக்க அழகுடையவளென்று) இறுமாப்படைதலும், இல்லாதான் - கையிற் பொருளில்லாதவன், இல்லார்கு - தன்னை ப்போற பொருளற்ற வறியவர்கட்கு, ஒல்லாப பொருள் - அவர்களின் விருப்பந தணிவதற்குப் பொருநதாத பொருளை, ஈந்து - கொடுத்து, அளியான் - (தான் வறியவரிடத்து மிகவும்) அருளுடையவன், என்றலும் - என்று தற் பெருமை சொல்லுதலும், நல்லார்கள் - அறிவுடையவர்களாகிய நலலவர்கள், கேட்பின் - கேடடால், நகை - அவர்கட்குச் சிரிப்பை உண்டாக்கும்; (எ - று.)

(ப-பொ-ரை) கல்லாதா னெருவன் தான் ஆராயந்து காணும் நுண்மைப்பொருளும், காதிரணடும இல்லாதாள் அழகுடையேன் என்றெறுத்த முகத்தினளா யொழுகலும், பொருளில்லாதவன் இல்லாதார்க் கியத்தறியா னென்றலும், ஒருவன் தான் தனக்கியன்ற பொருளன்றி யியலாத பொருளை ஈயாதா னென்றலும அறிவுடைய நலலோர் கேட்பின் நகையாம்.

(க-ரை.) கல்லாதான நுட்பம் முதலானவை அறிஞர்க்கு நகைப்பினையே விளைவிக்கும்

ஆசிரியனிடத்து நூல்களை முறைபெறக் கல்லாதவன் நுண் பொருளாய்ந்து நுவலப்புகின், நேர் பொருளன்றி இடக்கர்ப பொருளையே விரிக்க முற்பட்டு அறிஞர் இகழ்ச்சிக்கு உரியவனுவன் என்க "கல்லாதா னெஞ்சுங கழியநனருயினுங கொள்ளா ரறிவுடையார்," என்ற குறளும், "கற்றதூஉ மினறிக் கணக்காயர் பாடத்தாற், பெற்றதாம் பேதையோர் சூத்திரம் - மற்றதனை, நல்லா ரிடைப்புக்கு நாணுது சொல்லித்தன், புல்லறிவு காட்டி விடும்", என்ற நாலடியும் மேற்படி பொருளை வலியுறுத்துவனவாம். காதுகளே பெண்கள் முகத்துக்கு நகையணிந்து அழகு செய்யும் சிறபபுறுப்பாகும் கல்லாதான் நுட்பம, காதில்லாள இறுமாப்பு, இல்லாதான் ஒல்லாப் பொருளீதல், அளியானென றல், நல்லார் கேட்டு நகைத்தல் ஆகிய ஐநது பொருள்களும் இச்செய்யுளில் அமைந்திருத்தல் காணக. நுட்பம் - குணவாகு பெயர். ஏக்கழுத்தம் - இறுமாப்பு "எள்ளு நர்கட் கேக்கழுத்தம் போல இனிதன்றே," என்னும் சிநதாமணி (காந்தரு. ச) அடியின் பொருளை நோக்குக. அளியான் - தன்மையிற் படாக்கை வந்த இடவழுவமைதி. காதிரணடும - உம்மை முற்றுப்பொருள் (று)

உடம்பொழிய வேணடி னுயர்தவ மாற்றீண்
டிடமபொழிய வேணடுமே லீகை—மடம்பொழிய
வேணடி னறிமடம வேணடேல பிறர்மனை
யீணடி னியையுங திரு.

(ப-ரை.) உடம்பு - உடலெடுத்தல், ஒழிய வேண்டின் - உன்னை விட்டு நீங்கவேண்டுமாயின், உயர்தவம் - உயர்ந்த தவத்தை, ஆற்று - செய்வாயாக, ஈண்டு - இவ்வுலகத்தில், இடம் - நீ இருக்கும் இடமானது, பொழிய வேண்டுமேல் - புகழான மேன்மையடைய வேண்டுமானால், ஈகை ஆற்று - (இரபபவர்க்கு வேண்டியவற்றைக்) கொடுததலைச் செய்வாயாக, மடம் பொழிய வேண்டின் - மெல்லிய வீரம் தனக்குள்ளே நிறைய வேண்டினையாயின், அறிமடம் - அறிவின் கண் அடங்கி யொழுகுக, பிறர்மனை வேண்டேல - பிறர் மனைவியை விரும்பாதொழிக, ஈண்டின் - சிறிதாயினும் வருவாய் நாடோறும் பொருந்துமாயின், திரு இயையும் - செல்வம் வந்து தானே நிறையும்; (எ - று.)

(ப-பொ-ரை.) பிறப்பான் வரும உடம்பை நீக்க வேணடினையின் உயர்தவத்தைச் செயக, இவ்வுலகத்தினிடமெல்லாந தன்புகழால் நிறைய வேண்டினையின ஈகையைச செய்க, மெல்லிய வீரம் தனக்கு நிறைய வேண்டினையின் அறிவின்கண் அடங்கி யொழுகுக, பிறர் மனையாரை விரும்பாதொழிக, சிறிதாயினும் வருவாய் நாடோறும் ஈணடிற் செல்வம் ஒருவற்கே கூடும்,

(க-ரை) பிறவி யொழியத் தவமும், புகழ் நிறைய ஈகையும், உள்ளம் தூய்மையாய் நிரம்ப அறிந்தும் அறியாமையும், பிறர்மனை நயவாமையும், வருவாய நாடோறும் சிறிதாகச் சேர உண்டாகும் செல்வமும் ஒருவற்கு வேண்டற்பாலனவாம்.

'ஈதலிசைபட வாழ்தலதுவல்ல தூதியமில்லை யுயிர்க்கு' என்றமையால் ஈகை ஆற்று எனப்பட்டது. மடம் என்பது மென்மை. ஈண்டு மென்மையின் பயனுகிய இணக்கத்தை யுணர்த்துகின்றது. தான் கூறுவது அறியமாட்டாதாரிடத்து, அவரறியாமையைக் கூறின் அவரோடிணங்குதறகுத் தடையுண்டாமாதலின, "மடம் பொழிய வேண்டி னறிமடம," என்றார். அறிமடமாவது - தான் கூறுவது அறியும் அறிவில்லாமாட்டு அவரறிய மாட்டாமையைத் தானறிந்தும்

அறியாதான் போன்றிருத்தல். அவர் அறியாமையை அவருக்குத் தெரிவிப்பின் பயனில்லை என்றவாறுயிறறு. பாவங்களிற் கொடியது பிறர்மனை விரும்பல் ஆதலின், பிறர்மனை வேண்டேல் என்றார். வள்ளுவரும், "பகைபாவ மச்சம் பழியென நான்கும், இகவாவா மில்லிறப்பான் கண்," என்றனர். ஆற்று என்பது தீபகமாக மூன்றிடங்களிலும் கூட்டப்பட்டது. மனை - மனையாள்; இடவாகு பெயர். (சு)

படைதனக்கு யானை வனப்பாகும் பெண்ணி
னிடைதனக்கு நுண்மை வனப்பா—நடைதனக்குக்
கோடா மொழிவனப்புக கோற்கதுவே சேவகர்க்கு
வாடாத வன்கணை வனப்பு.

(ப-ரை.) படை தனக்கு - நால்வகைப்படைக்கு, யானை வனப்பு ஆகும - யானைப் படையே அழகாகும, பெண்ணின் - பெண்ணினுடைய, இடைதனக்கு - இடைக்கு, நுண்மை - நுட்பமானது, வனப்பு ஆம் - அழகாகும், நடைதனக்கு - ஒருவனுடைய ஒழுக்கத்திற்கு, கோடா மொழி - கடுஞ்சில தவறுத சொல்லே, வனப்பு - அழகாகும், கோற்கு - செங்கோலுக்கும், அதுவே - அந்தக் கோடா மொழியே அழகாகும், சேவகர்கு - போர் வீராக்கு, வாடாத - கெடாத, வன்கண் - வீரமானது, வனப்பு - அழகாகும்; (எ - று.)

(ப-பொ-ரை.) படைக்கு வனப்பாவது யானை, பெண்ணிடைக்கு வனப்பாவது நுண்மை, ஒழுக்கத்துக்கு வனப்பாவது ஒருவர்க்காகப் பாங்குரையாமை, செங்கோலுக்கு வனப்பாவது ஒருவர்க்குப் பாங்குரையாமை, சேவகர்க்கு வனப்பாவது கெடாத வன்கண்மை.

(க-ரை.) சேனைக்கு யானைப்படையும், பெண்கள் இடைக்குச் சிறுமையும், ஒழுக்கத்துக்கும் அரசன் செங்கோலுக்கும் கடுவு நிலை பிறழாத சொல்லும், படை வீரர்க்கு அஞ்சாமையும் அழகாகும்.

கரி, பரி, தேர், காலாள் என்ற நால்வகைச் சேனையில் கரிப்படை சிறந்ததாதலின், படைதனக்கு யானை வனப்பாகும் என்றார். சேவகர்க்கு எதிரிகளால் உடற்கு ஊறு வந்த காலத்தும் குறையாத வீரத்தன்மையே அழகாதலின, சேவகர்க்கு வாடாத வன்கண வனப்பு என்றார். படைதனக்கு,

இடைதனக்கு முதலியவற்றிலுள்ள தனக்கு என்பதில் தன், அ - சாரியைகள் நுணமை - பணபுப் பெயர். ஆகும் - இசை யெச்சம். கோல் - செங்கோல்; உவமையாகுபெயராய்க் கண்ணோடாது குடிகள் யாவரிடத்தும் முறை செய்தலை யுணர்த்தியது. வன்கண்மை என்பது வன்கண் என மையீறு கெட்டு நின்றது. (எ)

பற்றினன் பற்றற்ற ஞாறவசி யெப்பொருளு
முற்றறிவ னெஞ்சு முதலவனாற்—பற்றினறை
பாதத்துணபான பார்ப்பான் பழியுணர்வான் சானற
காதத்துணபான் காணை பிணி. [வன்

(ப-ரை.) பற்று அற்றான் - எல்லாப் பொருள்களிலுங் கலந்து நின்றே அவற்றிற் சார்பில்லாதவனாகிய கடவுளாற் செய்யப்பட்ட, நூல் - முதனூலை, பற்றினன் - கடைப் பிடித்து ஒழுகுகின்றவன், தவசி - வீடு பேற்றை விரும்பி நோற்பவனாவான், எப்பொருளும் - எல்லாப் பொருளையும், முற்றினன் - முற்றவுணர்ந்தவன், முதல்வன் ஆகும - எல் லார்க்குந் தலைவனாவான், நூல் பற்றினால் - நூல்களிற் கூறப்பட்ட அறங்களைக் கைக்கொள்வதனால், பாத்து உண் பான் - தன் மனைக்கு வரும் விருந்தினர் முதலியவர்களை யுண்பித்துத் தானும் உண்கின்றவன், பார்ப்பான் - அந்தண னாவான், பழி உணர்வான் - பழிக்கு ஏதுவான செயல்களை அறிந்து விலக்குவோன், சான்றவன் - அறிவா னிறைந்த பெரியோனாவான், காத்து - உடற்குப் பொருந்தாத உணவு களை மறுத்து, உண்பான் - உண்பவன், பிணிகாணான் - நோய் கொள்ளானீ ; (எ - று.)

(ப-பொ-ரை.) பற்றற்றானாற் சொல்லப்பட்ட நூலைப் பற்றினன் தவசியாவான், எப்பொருளையு முற்ற வறிந்தான் முதல்வனாவான், நூலின்கட் சொன்னபடியே பகுத்துண் பான் பார்ப்பானாவான், பழியை யுணர்வான் சான்ற னாவான், தனக்கு நுகர்கலாகாதெனறு சொல்லியவறறை நுகராதே காத்து நுகர்வான் பிணிகாணன.

(க-ரை.) கடவுள் நூலுணர்ந்தொழுகுபவன் தவமுடை யன், எல்லா முணர்ந்தவன் தலைவன், பிறர்க்குப் பகுத்துக் கொடுத்துணபவன் அந்தணன், பழியை விலக்கி யொழுகு பவன் பெரியோன், நல்லன தெரிந்துண்பவன் நோயறியான்.

பற்றற்றான் - தொடர்பற்றவனுகிய முழுமுதற் கடவுள். 'பறறுக பற்றற்றான பற்றினை,' என்றார் திருவள்ளுவர். பற்றற்றான நூல் என்பது இறைவன் ஓதிய வீட்டு நூல். எப்பொருளையும் உணர்ந்தவன் பலரையும் நல்லாற்றுப் படுத்துந் திறனுடையனுகவே அவனை யாவருந் தலைமகனுகக் கொண்டு போறறுவார் என்பார், 'எப்பொருளும் முற்றினனுகு முதலவன்,' எனறார். பழியை யறிந்து நீக்குவோன் எல்லாராலும் பாராட்டப்படுஞ சிறப்புடையவனுதலிற் சான்றோன் எனபபடடான். "அற்ற தறிந்து கடைப்பிடிதது மாறலல துய்க்க துவரப பசித்து" "மாறுபாடிலலாத வுண்டி மறுதது முண்ணின் னறுபா டில்லை யுயிர்க்கு," என்னுங் குறட்பொருளுணர்ந்து, கொள்ளத் தகாத வுணவை நீக்கிக் கொள்ளத் தகக வுணவைக் கொளவோன் நோயற்று வாழ்வான் என்பார், 'காத்துண்பான் காணன் பிணி.' என்றார். பாதது - பகுத்து என்பதன் மரூஉ. காத்தல் - தடுத்தல், மறுத்தல். (அ)

கண்வனப்புக் கணஞ்ஞட்டங் கால்வனப்புச் செலலாமை
எண்வனப் பித்துணையா மெனறுரைத்தல்—பணவனப்புக
கேட்டார்நன் றெனறல் கிளர்வேந்தன் றனனாடு
வாட்டானான றென்றல வனப்பு.

(ப-ரை.) கண் வனபபு - கண்ணுக்கு அழகாவது, கண் ணஞ்ஞட்டம் - பிறர்மேற் கண்ணஞ்ஞடுதலாம், கால் வனப்பு - கால்களுக்கு அழகாவது, செல்லாமை-பிறரிடத்தில இரக்கப் போகாமையாம், எண் வனப்பு - ஆராயச்சிக்கு அழகாவது, இதுணை ஆம் என்று உரைத்தல் - பொருளை அறுதியிட்டு முடிவு செய்தலாம், பண் வனப்பு - இசைக்கு அழகாவது, கேட்டார் - அதனைக் கேடடவர்கள், நன்று என்றல் - இது நல்லது என்று புகழ்ந்துரைத்தலாம், கிளர் - புகழினல் விளஙகுகின்ற, வேந்தன வனப்பு - அரசனுக்கு அழகாவது, தன் நாடு - தனது நாட்டினுள்ள குடிகளை, வாட்டான - (இவன்) வருத்தான, நன்று (இவனுடைய ஆட்சி) நல்லது, என்றல் - என்று (உலகதததவர் அவனைப் புகழ்ந்து) கூறுதலாம்; (எ - று.)

(ப-பொ-ரை.) கணணிற்கு வனப்பாவது பிறர்மேற் கண்ணஞ்ஞடுதல், காலிறகு வனப்பாவது பிறர் மாட்டிரகது செல்லாமை, ஆராய்ந்து சூழுஞ் சூழ்ச்சிக்கு வனப்பாவது

இவ்வளவு இனனதென்று துணிந்துரைத்தல், பாடும் பண்ணிற்கு வனப்பாவது கேட்டார் நன்றென்றல், படைகிளாநதெழும் வேந்தற்கு வனப்பாவது தானைஞும் நாடடினை வருத்தான் மிகவும் நன்றென்றல.

(க-ரை) கண்ணுக் கழகு கணணேட்டம், காலுக்கழகு இரந்து செல்லாமை, ஆராயச்சிக கழகு பொருளைத் துணிந்து சொல்லுதல, இசைக் கழகு கேட்பவர் அதனைப் புகழ்தல், அரசனுக்கழகு குடிகள் அவனை நல்லவ னெனறல்.

கண்ணேட்டம் - கண் பிறர்மேற் செலலுதல் அதாவது அன்புடன் பார்த்தல்; அருட்பார்வையற்ற கண் கொடுங் கண், வன்கண எனப்படும் செல்லாமை - நடவாமை. கண் வனப்பு கால் வனப்பு முதலிய நான்கும் நானகாம் வேறறுமைத் தொகைகள் எண் - எணணுதல், ஆராய்ச்சி. 'வேந்தன தன்னுடு வாடடான் நன்றென்றல் வனப்பு' என்பதை வேந்தன் வனப்பு தன் நாடு வாட்டான் நனறு என்றல் என்று பொருளுரைக்கப்படுவது கொண்டுகூட்டுப்பொருள் கோள். (கூ)

கொனறுணடா ஞசசாங் கொடுங்கரிபபோ வாஞ்சா
நனறுணாவா முலைகலலா ஞவுஞ்சா—மொனறுனுங்
கணடுழி நாசசாங் கடவான குடிபபிறநதா
னுணடுழி நாச்சா முணர்ந்து.

(ப-ரை.) கொன்று - ஒருயிரைக் கொன்று, உண்பான் - அதன் தசையைத் தினபவனுடைய, நா - நாககானது, சாம் - அறறு விழும், கொடும் கரி போவான - பொய்ச் சானறு கூறபபோகின்றவனுடைய, நா சாம - நாக்கானது அற்று விழும், நன்று உணர்வார் மூன் - நன்முகக் கற்றறிநதவர் களுக்கு எதிரில, கல்லான் நா சாம் - கறறுணராதவனுடைய நாக்கானது அடங்கும், கடவான் - தான் சொல்லிய சொல்லிக (கடவாத) நெறியினடப்போன், ஒன்று கண்டுழி - (தனிசு தண்ட வேணடி வந்தா) ஞெருவனைப் பார்த்த விடத்து, நா சாம் - (தான் வாக்குச் சொனனவனிடம் பேசுதற்கு) நாவெழாது, குடி பிறந்தான் - உயர்குடியிற் பிறந்தவன், உண்டுழி - தான் யாதானு மொருவனிடத்து ஒரு நன்மையைப பெற்றுப் பின் அவன் குற்றஞ் செயததாக அறிந்தபொழுது, உணர்ந்து - அதனை யுணர்ந்து, நா சாம் - நாவால் அதனைப் பிறர்க்குச் சொல்லான் ; (எ - று.)

(ப-பொ-ரை.) உயிர்களைக் கொன்றுண்பானுடைய நாச்சாம், ஒருவர் பாங்கிலே நின்று பொய்சான்று போவானுடைய நாவுஞ்சாம், மிகக் கற்றுணர்ந்தோருடைய பொருமறுமாற்றஞ் சொல்லமாட்டாது கல்லாதானுடைய நாவுஞ்சாம், தனிசு வேண்டிவந்தா னொருவனைக் கண்டால் தனிசு கொண்டவனுடைய நாவுஞ்சாம், குடிப்பிறந்தா னொருவனுடைய நா ஒருவனுதவி பெற்ற விடத்து அவ்வுதவி செய்தான் திறத்து ஒரு தீமை சொலலமாட்டாது மற்றவன் செய்த நன்றியை நினைத்துச் சாம்.

(க-ரை.) புலாலுண்போன் முதலியவர்களின் நாக்கள் சாம்.

கொன்றுண்பவனது நாவைக் காலதூதுவர் அறுத்தெடுப்பாராதலின், "கொன்றுணபான் நாசசாம்," என்றார். கொடுங்கரி - பண்புதொகை. கண்டுழி, உண்டுழி - உழி இரண்டும் ஏழாம் வேற்றுமைச் சொல்லுருபுகள். கண்டவுழி உண்டவுழி எனபன அகரந் தொக்குக் கண்டுழி உண்டுழி எனவந்தன. உயிர், தசை - இசையெச்சங்கள் (கo)

சிலம்பிக்குத தனசிறை கூறறநீள் கோடு
விலஙகிற்குக் கூற்ற மயிர்தான—வலமபடா
மாவிற்குக் கூற்றமா ளெண்டிறகுத் தன்பார்ப்பு
நாவிறகு நனறல வசை.

(ப-ரை.) சிலம்பிக்கு - சிலநதிப் பூச்சிக்கு, தனசிறை - தன்னுடைய கருவாகிய முட்டையே, கூறறம் - எமனுகும், விலங்கிற்கு - எருது முதலிய மிருகஙகளுக்கு, நீள்கோடு - நீண்ட கொம்புகளே, கூற்றம் - எமனுகும், வலம்படா - வெற்றி யுண்டாகாத, மாவிறகு - கவரிமானுக்கு, மயிரதான் - அதன் மயிரே, கூற்றம் - எமனுகும், ளெண்டிற்கு-நண்டுக்கு, தன் பார்ப்பு - தன் குஞ்சுகளே, (கூற்றம்) - எமனுகும், நாவிற்கு - ஒருவனுடைய நாவுக்கு, நன்று அல் - நன்மையல்லாத, வசை - பழிமொழிகள், (கூற்றம்) - எமனுகும்; (எ - று.)

(ப-பொ-ரை.) சிலம்பிக்குத் தன் முட்டை சாக்காட்டைக் கொடுக்குமாதலாற் கூற்றமாம், நீண்டதங் கொம்புகள துன்பங் கொடுக்குமாதலால் விலஙகிற்கும் அவையே கூற்றமாம், வென்றியில்லாத கவரிமாவிற்குச்

சாக்காட்டைக் கொடுக்குமாதலால் அதற்குத் தன் மயிரே கூற்றமாம, ஞெண்டிற்குச சாக்காட்டைக் கொடுக்குமாத லால் அதற்குத் தன்பார்ப்பே கூற்றமாம், ஒருவனது நாவிற் குப் பழியைக் கொடுக்குமாதலாற் பிறரை நன்றலலாத வசை சொல்லுதல் கூற்றமாம்.

(க-ரை.) சிலந்திப் பூச்சிக்கு அதன முட்டையும, மிருகங்க ளுக்கு அவற்றின ரீண்ட கொம்புகளும், கவரிமானுககு அதன் மயிரும், நண்டுக்கு அதன் குஞ்சுகளும், ஒருவனுடைய நாவிற்கு வசைமொழியும் எமனுகும்.

சிலந்திப்பூச்சி முட்டையிட்டவுடன தானழிதலால், "சிலம்பிக்குத் தனசிறை கூறறம்," எனறும விலங்குகட்கு ரீண்ட கொமபிருநதால் அது மரஙகள் முதலியவறறிற் குத்தி மூறியப்பெற்று வருந்துமாதலாலும், எவர்மீதேனும்பட்டு ஊறு விளைக்குமென்று அறுக்கபபடுமாதலாலும், ரீளகோடு விலஙகிறகுக் கூறறம் என்றுங கூறினர். கவரிமான் முட் செடி முதலியவற்றிற் பட்டுத் தன் மயிர் ஒன்று உதிர்ந்தால், 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமா', என்ற குறட்குணங்க, அது தன் உயிரை விட்டுவிடுமாதலால், "மயிர் தான் வலம படா மாவிறகுக் கூற்றம்," என்றார். "நணடு சிப்பி வேய் கதலி நாசமுறுங் காலத்திற கொண்ட கருவழிக்கும," என்ற படி நண்டு குஞ்சுகளை ஈனறவுடன் அழிந்துபோகுமாதலால், 'ஞெண்டிற்குத் தன் பாரப்பு' (கூறறம்) என்றார். பிறா பழி கூறுவோன் அடையும் பயன் இம்மையில் இகழப்படுதலும, மறுமையில் எரிவாய நிரயத்து அழுநதலும ஆதலால், 'நாவிறகு நன்றல் வசை,' (கூறறம்) என்றார். மயிர்தான் - தான் அசை. ஈறறிலுளள கூறறம என்பதைத் தீபகமாக்கி ஞெண்டிற்கும நாவிறகும் கூட்டப்பட்டது. வசை-பழிப்பு; ஆகுபெயராய்ப் பழிப்பா மொழியை யுணர்ததிற்று. (கக)

நாணிலான் சால்பு நடையிலா னன்னெஞ்சின்பு
மூணிலான செயயு முதாரதையு—மேணிலான்
சேவகமுஞ் செநதமிழ தேறறுன கவிசெயலு
நாவகமே நாடி னகை.

(ப-ரை) நாண் இலான் - நாணமில்லாதவனது, சால் பும - அமைதியும், நடை இலான் - நல்லொழுக்கம் இல்லா தவனது, நல் நோன்பும - நல்ல நோன்பும், ஊண் இலான் தனக்கே உண்பொருளில்லாதவன், செய்யும உதாரதையும்

செய்கின்ற ஈகையும், ஏண் இலான - வலிமையில்லாதவனது, சேவகமும் - வீரத் தொழிலும், செந்தமிழ் - செந்தமிழில், தேற்றான் - (தன் மனதைத்) தெளியச் செய்யாதவன், கவி செயலும் - பாட்டுக்களைச் செய்தலும், நா அகமே நாடின் - நாவினிடத்துக் கொண்டு ஆராயின், நகை - சிரிப்புக்கு இடமாம் (எ - று.)

(ப-பொ-ரை.) நாணில்லாதவன் அமைதியும், சிலங்களைச் செயயாதான் கொள்ளு நல்ல நோன்பும், தனக் குண்ணும் பொருளில்லாதான செய்யுமவண்மையும், வலியில்லாதான் சொலலும் வீரமும், செந்தமிழறியாதான கவியைச் செய்தலுமென இவ்வைந்தும் நாவகத்தாலே மேவியாராயின் நகையாம்.

(க-ரை.) நாணமில்லாதவன் அமைதி, நன்னடையில்லாதவன் நோன்பு, உண் பொருளில்லாதவன் ஈகை, வலியில்லாதவன் வீரம், செந்தமிழ்த் தோச்சியில்லாதவன் கவி பாடுதல் என்னும் இவ்வைந்தும் பயனிலை என்பதாம்.

சால்பு என்பது குணங்களானிறைந்த தன்மை. சால்பினை ஆக்குங குணங்களைந்தனுள் நாணம் ஒன்றாதலாலும், இழிதொழிலைச் செய்ய நாணுத ஒருவனுக்குச் சால்புடைமை அமையாதாதலானும், 'நாணிலான் சாலபு நகைதரும்,' என்றார். உதாரதை - பெருங்கொடைத் தன்மை. நடை - நன்னடை. தேற்றான் - பிறவினை. (கஉ)

கோறலு நஞ்சூணத துய்ததல கொடுநஞ்சு
வேறலு நஞசுமா றல்லாணத—தேறினு
னீடாங்கு செயதலு நஞ்சா மிளங்கிளையை
நாடாதே தீதுரையு நஞ்சு.

(ப-ரை.) கோறலும் - உயிரைக கொல்லுதலும், நஞ்சு - ஒருவனுககு நஞ்சு போலும், ஊணே துயத்தல் - அங்ஙனம் கொல்லபபட்ட உயிரின் தசையைத் தின்னுதலும், கொடு நஞ்சு - கொடிய நஞ்சு போலும், மாறு அலலாணே - தனக்கு எதிர அல்லாதவனை, வேறலும் - எதிர்த்து வெல்லுதலும், நஞ்சு - நஞ்சு போலும், தேறினுன் - ஒரு காரியத்துக்கு உரியவனென்று ஆராயநது தெளியபபட்டவனுகிய ஒருவன், நீடாங்கு செயதலும - (அக் காரியத்தின்மேல்) கால நீட்டிப்பு செய்தலும், நஞ்சு ஆம் - நஞசுபோலும், இளம்

கிளையை - இனைய சுற்றத்தாரை, நாடாதே - ஆராயாமலே, தீது உரையும் - தீயவுரைத்தலும், நஞ்சு - நஞ்சுபோலும; (எ - று.)

(ப-பொ-ரை.) ஒருயிரை அருளின்றிக் கோறலும் தனக்கு நஞ்சு போலும், பிறிதொன்றினுடைய ஊனைத் தின்றலும தனக்குக் கொடிய நஞ்சு போலும், தனக்கு எதிராகா தானை அடர்த்து வெல்லுதலும் தனக்கு நஞ்சு போலும், ஒருவனை ஒரு கருமத்துககு ஆமென்றுராயந்து தேறினல் அக்கருமத்தில் விடாதே நீடடித்துக்கொண்டு செலுததலும் தனக்கு நஞ்சு போலும், தன்னினைய சுற்றத்தாரை ஆரா யாதே தீதுரைத்தலும் தனக்கு நஞசு போலும.

(க-ரை.) கொலை செய்தலும், புலாலுண்டலும், நீகரில லாதவனை எதிர்த்து வெல்லுதலும், ஆராய்ந்து தெளிந்த ஒருவனை வினைமேற் செலுததாது காலம் நீட்டித்தலும், இளங்கிளைஞரை யாதாயாது திங்கு சொலலுதலும் ஆகிய ஐந்தும, ஒருவனை நஞ்சுபோலத் துன்பஞ்செய்யும் என் பதாம்

நீடு ஆங்கு என்ற விடதது, நீடு - நீடித்தல; முதனிலைத் தொழிற் பெயர்; ஆங்கு - அசை. கோறல, வேறல - கொல, வெல் முதனிலைகள். கிளை - உறவு இளங்கிளை என்பதில் இளமை சிறுமை; ஆதலின் வறிய சுற்றத்தார் என்க. இனைத்த சுற்றத்தாரையே பழித்தலும் புறக்கணித்தலும இயல்பு. உரை - முதனிலைத் தொழிற்பெயர். தீதுரை யாவது - உளம் வருந்தும்படியான பழிமொழிகளை எடுத் துரைத்தல 'துயத்தல்' என்பதற்கும் உம்மை கூட்டுக. 'மாறல்லானை வேறலு நஞ்சு' என்றது, தனகு யாதொரு துன்பமுஞ் செய்யாத, பகைமையும் வலிமையுமில்லாத ஒரு வனைத் துன்புறுத்தல் கொடும் பாவச் செயலாய், அதைச் செய்தவனுக்கு அதற்குரிய தீங்கைத் தவறுது விளைவித்தலின என்க. வினை செய்வான் ஒருவன் வகையறச் சூழ்ந்து அவ் வினை செய்யத்தக்க ஒருவனைத் தெளிந்தபின், அவனை உடனே அவ் வினைமேற் செலுததாது கால நீட்டித்தல அவ் வினை முடிதற்குக் கேடாக நிகழுமாதலின் "தேறினனீடாங்கு செய்தலும் நஞ்சு" என்றார். (கஉ

இடரின்னு நட்டார்க ணீயாமை யின்னு
தொடர்பினனு நள்ளார்கட் டூயார்ப்—படர்பின்னு

கண்ட லவிர்பூங் கதுப்பினு யின்னுதே
கொண்ட விரதங் குறைவு.

(ப-ரை.) கண்டல் - தாழைமலர், அவிர் - (முடிக்கப் பட்டு) விளங்காநின்ற, பூ கதுப்பினுய் - அழகிய கூந்தலை யுடையவளே! நட்டார்கண - நண்பாகளிடத்து, இடர் - செய்யுந்துன்பம, இன்னு - தீது, ஈயாமை - (அவாகள் இடருற்ற காலத்தில் அவர்க்கு வேண்டும் பொருளைக்) கொடாதிருத்தல், இனனு - தீது, நள்ளார்கண - பகைவ ரிடத்து, தொடர்பு - நட்புக்கொள்ளுதல, இன்னு - தீது, தூயார் - உளத்தூய்மை யுடையவரை, படர்பு - விட்டுநீங்கு தல், இனனு - தீது, கொண்ட - (ஒருவன்) கைக்கொண்ட, விரதம் - நோன்பில், குறைவு - குறைவுபடுதல், இன்னு - தீது; (எ - று.)

(ப-பொ-ரை) நட்டார்மாட்டுக் கணட இடரின்னு, அவர்மாட்டு ஈயாமையின்னு, வஞசனையுடையார் மாட்டு நடக்கு நட்பின்னு, மனந்தூயாரை நீங்குதலின்னு, கண்டல் விளங்குங் குழலாய்! தாங்கொண்ட விரதங்கள் நிரம்ப முடியாதே குறையாக ஒழுகுதல் இன்னு.

(க-ரை.) நட்டாரிடத்தில் துனபஞ்செய்தலும், அவர்கட் கிடருற்றகாலத்து ஈயாமையும், பகைவரிடம் உறவுகொள்ளு தலும், தூயாரை நீங்குதலும், எடுத்த விரதத்தை முடிக்கா மையும் ஆகிய இவ்வைந்தும் தீயபயனகளைத தரும் என்ப தாம.

கண்டலவிர் பூங்கதுப்பினுய்-மகடூஉ முன்னிலை. அவிர்பூ-வினைத்தொகை. நட்டார்கண் என்பது தீபகமாக இரண் டிடத்துங கூட்டப்பட்டது. ஈயாமை, தொடர்பு, படர்பு, குறைவு-தொழிற் பெயாகள. இன்னுதே என்பதில் ஏ-அசை. தேற்றமுமாம். தூயார்படர்பு - ஐந்தாம் வேற்றுமைத் தொகை. (கச)

கொணடான் வழியொழுகல பெணமகவ றந்தைக்குத்
தண்டான் வழியொழுகல் தன்கிளையஃ—தண்டாதே
வேல்வழி வெமமுனை வீடாது மன்னுடு
கோல்வழி வாழ்தல் குணம்.

(ப-ரை.) பெண் - (இல்வாழ்க்கைக்கு இசைநத) பெண் ணினவள், கொண்டான வழி - தனனை மணநது கொண்டவ

னுடைய சொல்வழியே, ஒழுகல் - நடத்தலும, மகன் - (ஒருவனுக்குப்) புதல்வனுயிருப்பவன், தநதைக்கு - தகப்பனுக்கு, தண்டான் - (அவனது கட்டளையைவிட்டு) நீங்காதவனுய, வழி - அவனுரைக்கும் வழியிலேயே, ஒழுகல் - நடத்தலும, தன் கிளை - அத்தநதையினுடைய சுற்றததார்க்கு, அஃது - அக்குணமே பொருந்தியிருத்தலும், மன - மன்னனுடைய, வெம்முனை - வெவவிய போரைச் செய்யும் வீரர்கள், அண்டாது - பகைவரோடு சேர்ந்துகொள்ளாமல், வேல்வழி - அரசன பகைவர்மீது ஏவுகின்ற வேல் செல்லும் வழியே போய், வீடாது (வாழ்தல்) - அவனை நீங்காது போர்செய்தலும், நாடு - குடிகள், (மன்) கோல்வழி - அரசன் செங்கோல் முறைப்படி, வாழ்தல் - ஒழுகுதலும், குணம - நன்மையாம்; (எ - று.)

(ப-பொ-ரை) கொழுநன்வழி யொழுகுதல பெண் குணம், தந்தைக்கிடைவிடாதே நிரநதரமா யொழுகல் மகன்குணம்₂ அவனைப்போல் வழியொழுகுதல கிளையின் குணம, பகைவரோடு செறியாதே வேல்வழியினிடை விடாது வாழ்தல் அரசன் வெம்முனையிற் போயிருந்தார் குணம், அவ்வரசன் கோல்வழியே வாழ்தல் நாட்டின் குணம்.

(க-ரை) பெண் கணவன் சொற்படி யொழுகுதலும், மகன தநதை சொல்வழி நடத்தலும், கிளை அவன்பொலவே வழி யொழுகுதலும, வெம்முனையின்கட் போயிருநதார் பகைவரோடு சேராதே அவரை வெல்லும் வழியால் இடைவிடாமல் வாழ்தலும், நாடு அரசனது கோல்வழியே வாழுதலும் அவரவாகட்குரிய குணங்களாம்.

''கோணெக்கிவாழுங் குடி'' என்ற நான்மணிக்கடிகையடிகணங்க, 'நாடு கோல்வழி வாழுதல்' என்றார். வேல்வழி - வெலலும் வழி எனலுமாம். வீடாது - கெடாது. தட்டான் என்பது தண்டான் என மெலித்தல் விகாரம் பெறறது முனை - போர். அஃது ஆகுபெயராய்ப் போர செய்யும் வீரர்களை யுணர்த்திறறு. மன், வாழ்தல் என்பன இரண்டிடத்துங கூடடப்பட்டன. நாடு - இடவாகுபெயர் (கரு)

பிழைததல பொறுததல பெருமை சிறுமை
யிழைதததீங் கெணணி யிருத்த—லிழைதத
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நலலார்
நகைகெட வாழ்வது நனறு.

(ப-ரை.) பிழைத்தல் - (தனக்குப பிறனொருவன் செயத) பிழையை, பொறுத்தல - பொறுததுக் கொள்ளுதல், பெருமை - பெருமையாகும், இழைத்த - பிறர்செய்த, தீங்கு - தீமையை, எண்ணி இருத்தல்-நினைத்துக்கொண்டேயிருததல், சிறுமை - சிறுமையாகும், இழைத்த - தான் செயத, பகை கெட - பிழைகள கெடும்படி, வாழ்வதும - வாழ்தலும, பல் பொருளார் - பல பொருள்களையுடைய செல்வர்களும், நல்லார் - பெரியோர்களும், நகைகெட - ஏளனஞ்செய்து நகைப்பது நீங்க, வாழ்வதும் - வாழ்தலும், நன்று - நன்மையாம்; (எ - று.)

(ப-பொ-ரை) தனக்குப் பிற னொருவன் செய்த பிழையைப் பொறுத்தல் பெருமையாவது, பிற ரிழைதத தீங்குகளை மறவாதிருததல் சிறுமையாவது, தான் செய்த பிழைகளைப் பின்பு கெட வாழ்தலும், பல பொருள்களையு முதவியோரும் நலலோரு மிகழ்ந்து நகுநடையினைக் கெட வாழ்தலும் நன்று.

(க-ரை.) பிறாதவற்றைப பொறுத்தல் பெருமை, பிறர் செய்த தீங்கை எண்ணிக்கொணடிருத்தல் சிறுமை, பிறர் பகை கெட வாழ்தலும் செல்வரும் நலலோரும் ஏளனஞ் செய்து நகைக்காது வாழதலும் நன்மை யுடையனவாம்

தவறு - ஒருவன் அறியாது செய்த குற்றம் இதனைப் பொறுப்பவர் பெருமை யடைவர் பொறுக்காதிருத்தலால் அத் தீங்கின் தொடர்ந்த எண்ணமே நெடுநாட் பகைவினைத்துக் கேடும பயக்கும். இதனாற் சிறுமையே நேரும். பிறர் பகை ஏற்படின் அதனை நால்வகையி லொன்றால் நீக்கி வாழ வேண்டும. பிறரால் நகைத்து எள்ளப்பட வேண்டாதவர் வறுமையையும இரப்பையும் நன்முயறசியால் நீக்கி வாழ வேணடும். பெருமை, சிறுமை நன்று என்பன பண்புப் பெயர்கள். (கசு)

கதநனறு சானருணமை தீது கழிய
மதநன்று மாணபிலலார் முனனர்—விதநன்றற்
கோயவாயிற் கிழுயிர்க்கே துறறுக் குரைத்தெழுந்த
நாலவாயு ணலல தசை.

(ப-ரை.) மாண்பு இலலார் முன்னர் - நறகுண மில்லாதார் முன்பு, கதம் நன்று - கோபம் நல்லது, சான்றாண்மை - சாலபுடைமை, தீது - தீதாகும், கழிய - மிக்க, மதம் - வலி

செயதல், நன்று - நல்லது, கோய்வாயின் - கோய்போலும் வாயையுடைய, கீழ் உயிர்க்கு - கீழ்மக்களுக்கு. ஈ - கொடுக்கும், துற்று - உணவு, குரைத்து எழுந்த - குரைத்துக் கொணடே எழுந்த, நாய வாயுள் - நாயின் வாயிற் கொடுத்த, நல்லதசை விதம் - நல்ல மாமிசவிதத்தினும், நனறு - நன்மையாம, (எ - று)

(ப-பொ-ரை) நன்மைக் குணமில்லாதார் முன்பு கோபம் நனறு, சான்ருண்மை தீது; மிக்கவலி செய்தல் நன்று; கள்ளினை முகக்குங் கோய்போலும் வாயையுடைய கீழ் மக்கட் கீயும் உணவும் குரைத்தெழுந்த நாய்வாய்க்கீயும் தசையின் றிறப்பாட்டினன்று.

(க-ரை.) நற்குணமில்லாதவர்க் கெதிரில் கோபமே நனறு, சான்ருண்மை தீது, மிகக வலிசெய்தல் நன்று; கீழ் மக்கட்கு ஈயு முணவு குரைத்துவரும் நாய்வாயிற் கொடுத்த தசைக்கு நிகராகும்.

சான்ருண்மை - சால்புடைமை, சால்பாவது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை ஆகிய ஐந்தும் நிறைந்திருப்பது. மாண்பு - நற்குணம். கோய் - கள முகக்கும் கலம்; இது கீழமக்கள் வாய்க்கு ஒப்பு கீழ் மக்கள் வாய் மிகுநத உணவை உருட்டிப்போடுதற்கு ஏற்றபடி அகன்றதாயும் வேற்று வடிவம் பெற்றதாயும் கெட்ட மொழிகள் வெளிபபடத்தக்கதாயும் அருவருக்கத்தக்கதாயு மிருக்கும். வாயுள் - உள, ஏழனுருபு. ஆல், அசைநிலை. (கள)

நடடாரை யாககிப் பகைபணிதது வையெயிற்றுப்
பட்டா ரகலல்கு லாபடிந்—தொட்டிதத
தொடஙகினு நிலலகத தன்பிற றுறவா
வுடம்பினு ணுய பயன்.

(ப-ரை.) நட்டாரை - நட்புக்கொண்டவரை, ஆக்கி - செல்வராக்கி, பகைபணித்து - பகைவரைத் தாழ்த்தி, வை எயிற்று - கூரிய பற்களையுடைய, பட்டு ஆர் - பட்டாடை யணியப்பெற்ற, அகல் அல்குலார் - அகன்ற அல்குலையுடைய மாதரை, படிநது ஒட்டி - சேர்ந்து தொடர்புற்று, தொடங்கினுர் (அகதது) - முறையாயினுர்மாட்டும், இல்அகத்து - தாம் பிறந்த குடியிற் பிறந்தவரிடததும், அன்பின் - அன்பினால, துறவா - நீங்காமையும ஆகிய இவ்வைநதும், உடமபினை -

அரிதாகிய மக்கட் பிறப்பால், ஆய பயன் - உண்டாய பயன் களாம்; (எ - று.)

(ப-பொ-ரை.) தம்மோடு நட்புக் கொண்டாரைச் செல் வத்தின் கண்ணே யாக்கி, பகையைக் குறைத்து, கூரிய எயிற் றுப்பட்டாரகலல்குலாரைச் சேர்ந்து முயங்கிப் பொருந்தி, அசுசுற்றமாயத் தொடர்பு பட்டு முறையாயினர் மாட்டும, தாம் பிறந்த குடியிற் பிறந்தார் மாட்டும் அன்பினனீங்காது இப்பெற்றிப்பட்ட ஐந்தும் உடம்பு பெற்றதனுடைய பயன்.

(க-ரை.) நட்டாரையுயர்த்தல், பகைவரைத் தாழ்த்தல், மாதரைச் சோதல், அவரிடத்தும் தங்குடியிற் பிறந்தாரிடத் தும் அன்போடிருத்தல் ஆகிய ஐந்தும், மக்கட் பிறப்பின பயன்.

ஆக்கி என்பதன்முன் செல்வதனில் எனபது இசையெச் சம். ஒருவன சுற்றத்தார் அவனோடு நன்மையான காரியங களில் சேர்ந்து உதவிசெயய முயல்கின்றவராதலால் அவரை ஒட்டித் தொடங்கினர் என்றார். இல்லகம் - அகம் ஏழனுருபு. இல் ஆகுபெயராய் இல்லத்திலுள்ளவரை யுணர்த்தியது. அனபின - இரண்டிடத்தும் தீபகமாகக கூட்டுக துறவாமை என்பதன் மையீறு தொக்குத துறவா என நின்றது. உடம்பு - ஈண்டு மக்களுடம்பு. (கஅ)

பொய்யாமை பொன்பெறினுங கள்ளாமை மெல்லியலார்
வையாமை வார்குழலா நச்சினும்—நையாமை
யோர்த்துடம்பு பேருமென் றுணவா யுணணுனேற்
போர்த்துடம்பு கோட லரிது.

(ப-ரை) பொன் பெறினும் - ஒருவன் பொன்னைப் பெற் றனுயினும், பொயயாமை - பொய் சொலலாமையும, கள் ளாமை - பிறர் பொருளைக் களவு செயயாமையும், மெல் இயலார் - மெல்லிய தன்மையை யுடையாராகிய எளியாரை, வையாமை - திட்டாமையும், வாகுழலார் - நீண்ட கூந்தலை யுடைய பெண்கள், நச்சினும் - விரும்பினுலும், நையாமை - உளந்தளராமையும், (மேற்கொணடு) உடம்பு - தனுடம்பு, பேரும் என்று - மெலியுமென்று, ஓர்த்து - அறிந்து, (அதைக் காக்கும் பொருட்டு) ஊன் - பிறிதோருடம்பின தசையை, அவாய - விரும்பி, உண்ணுன்ஏல் - உணணுதிருப்பானுயின்,

(அவன்), பேர்த்து - மீட்டும், உடம்பு கோடல் - பிறிதோ ருடமபைக் கொள்ளுதல், அரிது - இல்லை ; (எ - று.)

(ப-பொ-ரை.) பொன் பெற்றுளையினும், பொய சொல் லாதும், பிறர் பொருளைக் களவு கொள்ளாதும, எளியாரை வையாதும், வார்குழலார் தம்மைக் காதலிபபினும் தன் மனநதளராதும, தன்னுடம்பு தளருமென்றோர்ந்து பிறி தொன்றனாகைக் காதலித் தொருவ னுண்ணுளையின் மறித் துப் பிறிதுடமபு கோடல் அரிது.

(க-ரை) பொய்யாமை கள்ளாமை முதலியவறறை யுடையவன் பிறப்படையான் என்பது.

கள்ளல் - பிறர்பொருளை வஞ்சித்துக்கொள்ளுதல. மெல் லியலார் - பொருளில்லாமையால மெலிந்திருப்பவர். ஓர்ந்து என்பது ஓர்த்து என வலிந்தது. பெறினும், நச்சினும் - உம்மைகள இழிவுசிறப்புப்பொருள. வார்குழல் - விளைத் தொகை. ஏல் - எனின் என்பதன மரூஉ. அரிது இன்மைப் பொருளது. (கூ)

தேவரே கறறவர் கலலாதார் தேருங்காற்
பூதரே முனபொருள் செயயாதா—ராதரே
துனப மிலேம்பண டியாமே வனபபுடையே
மெனபா ரிருகா லெருது.

(ப-ரை) கறறவா - அறிவு நூலகளைப் படித்தவா, தேவரே - தேவரை யொப்பவரேயாவர்; கல்லாதா - அவற் றைக் கல்லாதவரைப்பற்றி, தேருங்கால்-ஆராய்ந்து பார்க்கு மிடத்து, பூதரே - பசாசுகளோ டொப்பவரேயாவா, முன - முதுமைப் பருவம் வருதற்கு முனபே, பொருள செய்யா தார் - பொருளதேடி வைத்துக்கொள்ளாதவர், ஆதரே - அறி விலாரேயாவர், பண்டு - முன்னே, யாம - நாம், துன்பம் இலேம் - (செல்வமுடையோ மாயிருந்ததனால) துனபம் உடையோமலலோம், வனப்பு உடையேம் - அழகுடையேம், என்பார் - என்று சொல்லுவோர், இருகால் எருது - இருகால் மாடுகளுக்கு நிகராவர் ; (எ - று.)

(ப-பொ-ரை.) நூலைக்கறறா தேவரோ டொப்பர், கல் லாதார் ஆராயுங்காற் பூதபசாசுகளோடொப்பர், தமக்கு மூப்பு வருதற்கு முன்பே பொருளைத் தேடித் தமக்கு வைப்

பாகவையாதார் ஒன்று மறியாது ஒரு பற்றின்றித் திரியு மாந்தரோ டொப்பர், பண்டு செல்வமுடையேமாதலால் ஒரு துனபமும் இலோ மென்பாரும், பண்டியாமே யழகி யோம் என்பாரும் இருகாலுடைய எருதுகளோ டொப்பர்.

(க-ரை.) படித்தவர் தேவர், படியாதவர் பூதபசாசுகள், மூதுமைக்கு இளமையிலேயே பொருள தேடாதவர் அறி விலார, முன்பு பொருளுடைமையால் துனபமற்றோரும், முன்பு அழகுடையவராயிருந்தோம் என்பவா இரணடுகால் மாடுகள்.

தேவரே, பூதரே, ஆதரே—ஏகாரம், தேற்றம், பிரிநிலையு மாம். தேர்தல் - ஆராய்தல். நாற்காலெருத்திற பிரித்தற்கு இருகாலெருது என்றார். 'தேவரனையர் புலவரும்' என்றார் நான்மணிக் கடிகை யாசிரியர் (செ - எச). கல்லாதாரை 'விலங்கு' எனறார் வள்ளுவர். (உ ०)

கள்ளான்சூ தெனறுங் கழுமான் காரியாரை
நள்ளா னுயிரிரங்க நாவாடா னை—நளளானு
யூலமறுத்துக் கொள்ளானே லூனுடம் பெஞ்ஞான
தாலமறுததுக் கொள்ளான் றளர்ந்து. [றுந்

(ப-ரை.) களளான் - (பிறர்பொருளைக்) களவு செய்யா தவனுய, சூது - சூதாடடதில், என்றும் - எக்காலத்தும், கழுமான் - கலவாதவனுய், காரியாரை - கீழ்மகளை, நள்ளான் - நட்புக் கொள்ளாதவனுய், உயிர இரங்க - பிறவுயிர க ளிரங கும்படி, நா ஆடான்-நாவாடாதவனுய, ஊன் நள்ளான் ஆய - ஊனுணவைப் பொருந்தாதவனுய், மறுத்து - தடுத்து, கொள ளானேல் - அவஞுணவை ஒருவன் கொளளாதிருப்பா னுயின், தான் - அவன் தான், மறுதது - மீட்டும், ஊன் உடம்பு - தசையோடு கூடிய உடம்பை, எஞ்ஞான்றும் - எந்நாளும், தளர்ந்து - ஒழுககம் தளர்ந்து, கொளளான் - எடுக்கமாட்டான் ; (எ - று.)

(ப-பொ-ரை.) பிறர் பொருளைக் களவு காணாது, சூதி னைப் பறறிக் காதலியாது, கீழ்மக்களுடன் நட்புக் கொள் ளாது, பிறர் மனந் துன்புறும்படி வன்சொற் சொல்லாது கடைப்பிடியுடையனுய் ஊனுணவை மறுத்து விரும்பா னுயின் எஞ்ஞான்று மொழுககத்திற றளர்ந்து மாறிப் பிறந்து ஊனுடம்பினை கொள்ளான்.

(க-ரை) கள்ளாமலும் சூதாடாமலும் கயவருடன் நட்புக்கொளளாமலும் பிறர் வருந்த வன்சொற் கூறுமலும் ஊனுணணுமலும் ஒருவ னிருப்பானுயின அவன் மீடடும் பிறக்கமாட்டான் என்பதாம்.

பிறர் மனங் திடுக்கிடப பேசுதல், கொலையை நிகாத்த பழிச் செயலேயாகும். கள்ளல் முதலிய தீய செயல்களை விட்டொழிப்பவன் இமமையிலும் சாத்தியுடனிருநது பின் பிறபபு நீங்கி வீடடைவன். கள்ளான், கழுமான், நளளான், நாவாடான் என்பன முற்றெச்சங்கள். கழுமல் - பறறல், கலத்தல். கரியார் - கருமையை யுடையவர். கருமை - மனவிருள். நா ஆடல் - நா அசைதல், பேசுதல். 'ஊன் நளளானுய் மறுத்துக கொள்ளானேல்' என்பதற்கு ஊனை விரும்பாதவனுய் அதனியுண்ணும பிறரையும் தடுத்துத் தானும் உடகொள்ளானேல் எனப பொருள கூறுதலு முண்டு. உயிர் என்றது ஈண்டு மக்களுயிரை. (உக)

பூவாது காய்க்கு மரமுள நன்றறிவார்
மூவாது மூததவர் நூலவலலார்—தாவா
விதையாமை நாறுவ விதுள மேதைக
குரையாமை செலலு முணர்வு.

(ப-ரை.) பூவாது - பூக்காமலே, காய்க்கும் - காய்க்கின்ற, மரம் உள - மரங்களும உண்டு, (இவை போல) நன்று அறிவா - நன்மையை அறிபவர், மூவாது மூததவர் - ஆண்டுகளால் மூவாதவர்களாயினும் அறிவினுல மூத்தவரோடொப்பர், நூல் வல்லார் - நூல்களைக் கற்று வல்லவர் (அத்தனமையரே யாவர்); தாவா - கெடாதிருக்க, விதையாமை - பாததி கட்டி விதைக்காமலே, நாறுவ - முளைபபனவாகிய, வித்து உள - விதையும உண்டு, (இதேபோல) மேதைக்கு - அறிவுடையவனுக்கு, உரையாமை - பிறர் எடுத்துரைகக்காமலே, உணர்வு - அறிவானது, செல்லும் - தோன்றி நடக்கும்; (எ - று.)

(ப-பொ-ரை.) பூவாதே காய்க்கும் பலா மூதலாயின மரமுள, நன்மையை அறிவார் ஆண்டுகளால் மூத்திலராயினும் மூத்தாரோடொப்பா, நூல்கற்று வல்லவரும அப்பெற்றியர், நிலத்தில் விளையாது முளைக்கும் வித்து முள, மதியுடையவர்களுப பிறர் அறிவியாமலே செல்லும உணர்வு.

(க-ரை.) பூவாது காயக்கு மரமபோல் ஆண்டுகளால மூவாதாரும் அறிவினுல் மூததாராவா. நூல்வல்லாரும் அங்ஙனமே. பாத்தி கட்டி விதைக்காமலே முளைக்கிற விதை போல பிறர் அறிவிக்காமலே அறிவுடையாாக்கு அறிவு தோன்றும்.

பூவாது காய்க்கும் மரங்கள் அத்தி, ஆல், பலா, அரசு முதலியன. ஆண்டால் முதியோரைப பெருந்தன்மையுடைய ராயும் இளைஞரைச் சிறுதன்மையுடையராயும் கூறுவது உலக இயற்கையாயினும் சில இளைஞர் நன்மையுணர்ச்சி நூலுணர்ச்சி முதலியவறறுல் அப் பெரியார் தனமையை அடைதலுங கூடும. ஆண்டு மூத்துப பெருந்தன்மையடை யும் முறைமையின்றியே சிலர் இளமையில் அறிவாற் பெருந் தன்மை யடைகின்ற காரணத்தால், பூவாது காயக்கும் மரங் கள இவர்க்கு உவமையாயின. விதையாமை நாறுவ வித்து - பறவை எச்சம் முதலாயினவற்றுலுள்ள வித்து. மேதை - பேரறிவு இது அதனீ யுடையவனீ யுணர்த்தியதால் பண் பாகு பெயர். இச்செய்யுள எடுததுக்காட்டுவமையணி. விதை யாமை, உரையாமை - மையீற்று வினை யெச்சங்கள். (உஉ)

பூததாலுங் காயா மரமுமுள நன்றறியார்
மூததாலு மூவார்நூ றேறறுதார்—பாததிப்
புதைததாலு நாறுத வித்துள பேதைக
குரைததாலுஞ செல்லா துணர்வு.

(ப-ரை) பூத்தாலும - பூத்திருந்தனவாயினும், காயா - காய்க்காத, மரமும் உள - மரங்களும் உண்டு, (அதுபோல) நன்று அறியார் - நன்மையறியாதவர, மூத்தாலும் - ஆண்டு களால முதிர்ந்தாலும், மூவார் - அறிவினுல முதிராா, நூல் தேற்றுதார் - அறிவு நூல்களைக் கற்றுத் தெளியாதவர் (அத தன்மையரேயாவர்); பாத்தி புதைத்தாலும் - பாத்தி கட்டிப் புதைததாலும், நாறுத - முளைக்காத, வித்து உள - வித்து முண்டு, (அதுபோல) பேதைக்கு - அறிவில்லாதவனுக்கு, உரைத்தாலும் - நன்மையை எடுத்துக் கூறினாலும், உணர்வு செல்லாது - அறிவு தோனறுது; (எ - று.)

(ப-பொ-ரை) பூத்தாலுங் காயாத பாதிரி முதலாயின மரங்களுள, நன்மையை யறியாதார் ஆண்டுகளால் மூத்தா ராயினும் மூவாதாரோ டொப்பர், நூறேற்றுதாரும்ப் பெற்

றியர், பாத்தியின்கட் புதைத்தாலு முளையாதவித்துள, பேதையாயினாககுப் பிறருரைத்தாலு முணர்வு புகாது.

(க-ரை) பூத்தாலுங்காயா மரம்போன்றவர் ஆண்டு மூதிர்ந்தும அறிவு முதிராதவரும் நூல்களைக் கற்றுத் தெளியாதவரும் ஆவர். புதைத்தாலும முளைக்காத விதையைப் போன்று அறிவிலானுக்கு எவ்வுரையாலும் அறிவுண்டாகாது.

பூத்தாலுங் காயாமரம் பாதிரி முதலியன தேற்றுதார் - தன்னினப்பொருளில் வந்தது. நாறு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் நாறல் - முளைத்தல். நூலுணர்ச்சி பகுத்தறிவு வளர்ச்சிக்குத் துணையாவது மரம், வித்து - சாதியொருமைகள். இதுவும் எடுத்துக காட்டுவமையணியின் பாறபடும். (உங)

வடிவிளமை வாய்தத வனபபு வணங்காக
குடிகுலமென றைநதுங் குறிதது—முடியா
துளங்கா நிலைகாணர் தொககீர பசுவால
இளங்காற றுறவா தவர்.

(ப-ரை.) வடிவு - உருவம், இளமை - இளம்பருவம், வாய்த்த வனப்பு - பெற்ற அழகு, வணங்கா குடி - தாழாத குடி, குலம் - (தாழாத) குலம, என்ற ஐந்தும் - என்று சொல்லப்பட்ட இவ்வைந்தும், குறித்து - தாம்எணணி, முடியா - நுகாச்சி முடியபபெற்று, துளங்கா நிலைகாணர் - அழியாத நிலையைக் காணமாட்டார், (ஆதலால்) இளங்கால் - இளம் பருவத்திலேயே, துறவாதவர் - நீங்கித் தவஞ செயயாதவர், தொக்கு - கூடி, ஈர் - பாரத்தை இழுககின்ற, பசு - எருதோடொப்பர், (எ - று)

(ப-பொ-ரை) வடிவும் இளமையும் வாய்தத வனப்பும், தாழ்விலலாத குடிபபிறப்பும், நற்குலமும் எனறு சொல்லப்பட்ட இவ்வைந்தும தாங்குறித்த நுகர்ச்சி நுகர்ந்து முடியுமளவு நிற்கு நிலைமை யாவருங் காணமாட்டார். ஆதலாற் கூடி யொருபாரததை இழுககு மெருதோடொப்பா; இளங்காலத்திலே துறவாதார.

(க-ரை.) உருவு, இளம்பருவம, அழகு, உயர்குடி, உயர்குலம் இவ்வைந்தும் முடிவுபோக நுகர்வது அருமையாத

லால், இளம் பருவத்திலேயே துறவாதவர் பாரமிழுத்துச் செல் எருது என்றபடி.

வணங்கா என்பது குலத்துடனும் சேர்க்கப்பட்டது. என்ற ஐந்தும் என்பது என்றைந்தும என நிலைமொழி ஈறு தொகுத்தல பெற்றது. துறத்தல் - இருவகைப் பற்றுக்களையும் விடுதல். வடிவு முதலிய ஐந்தனுள் எண்ணும்மைகள் தொக்கன கால் - ஏழன் சொலலுருபு முடியா என்பதைப் பலவின்பால் வினைமுற்றுகளி னுகர்ந்து முடியமாட்டா என்பதாம். (உச)

கள்ளுண்டல காணிற கணவற பிரிந்துறைதல
வெளகில ளாய்ப்பிற ரிறசேற—லுளளிப
பிறர்கரும மாராய்த றீபபெண கிளமைத
திறமதுதீப் பெணணின தொழில.

(ப-ரை.) காணில் - (பெண்கள் குணத்தைப்பற்றி) ஆராயந்து பார்ககுமிடத்து, கள் உண்டல் - கள்ளுண்டலும், கணவன் - தன் கணவனை, பிரிந்து உறைதல் - (புணர்ச்சி வேண்டாது) பிரிந்துறைதலும், வெள்கு இலள் ஆய - நாணுதல் இல்லாதவளாய், பிறர் இல் சேறல் - பிறர்மனைக்குட் செல்லுதலும், பிறர் கருமம உள்ளி - பிறர் கருமத்தை நினைத்து, ஆராய்தல - பிறருடன ஆராய்தலும், தீப்பெண - தீயபெண்டிரோடு, கிளமை - நேயமுடைமையும், (ஆகிய ஐந்தும்) திறமது - தனக்கே யுரியதாக, தீபெண்ணின தொழில் - தீய பெண்டிரின் தொழிலகளாம்; (எ - று.)

(ப-பொ-ரை.) கள்ளுண்டலும், ஆராயுங்காற் றங்கணவனைப் புணர்ச்சி வேண்டாதே பிரிந்துறைதலும், நாணிலளாயப் பிறருடைய மனைக்கட் சேறலும், பிறர் கருமத்தை நினைதலுப் பிறருடனு ராய்தலும், தீப்பெணணினெடிணங்குதலுமென இவ்வைந்துந் தனக்கே கூருகத் தீப்பெண்ணின் தொழில்.

(க-ரை.) கள்ளுண்டல் முதலிய ஐந்தும் தீப் பெண்ணின் தொழில் என்க.

உண்டல, உறைதல், சேறல், ஆராயதல் என்பன தொழிற் பெயர்கள. வெள்கு - முன்னிலைத் தொழிறபெயர். கிளமை - தொழிற் பண்புப்பெயர். கள்ளுணடல் தன் மதி

மயக்குக்கும், தன் குடிப்பழிக்கும் ஏதுவாவது. தீப பெண்டிர்நீணக்கம் தனக்குத் தீங்கு பயக்கும். (உடு)

பெருங்குணத்தார்ச் சேர்மின் பிறன்பொருள் வெளவன்மின்
கருங்குணதாதார் கேணமை கழிமி—ஞெருங்குணர்ந்து
தீசசொலலே காமின வருங்காலன றிணணிதே
வாய்சசொல்லே யன்று வழக்கு.

(ப-ரை.) பெருங்குணத்தார் - நன்மைக் குணமுடையவர்களோ, சோமின் - சென்றடையுங்கள, பிறன் பொருள் - பிறன் பொருளோ, வெளவல் மின் - கவராதேயுங்கள், கருங்குணத்தாரா - தீக்குணத்தாரது, கேணமை - நட்பை, கழிமின் - விடுங்கள, ஒருங்கு உணர்ந்து - முற்றுமறிந்து, தீ சொல்லே - (பிறரைச்சொல்லும்) தீயசொற்களேயே, காமின் - (சொல்லாது) தடுங்கள், காலன் வரும் - யமன வருவான், திண்ணிதே - இஃது உறுதியானதே, வாயச்சொலலே அன்று - இது வாய்சசொல்லேயன்று, வழக்கு - உலக வழக்காம்; (எ - று.)

(ப-பொ-ரை.) பெருங்குணத்தாரைச் சென்றடைமின், பிறன் பொருளைக் கொள்ளன்மின், தீக்குணத்தாரோடு நட்பை விடுமின், எல்லாமுணாந்து பிறரைச் சொலலுந் தீச் சொற்களைச் சொல்லாது காமின, காலன் வருகையுண்மையே, யாஞ் சொல்லுகினற எம்முடைய சொலமாத்திரையேயன்று உலகினகண் வழங்கி வருகினற வழககாகக் கொள்க

(க-ரை.) நற்குணமுடையாரைச் சேருங்கள், பிறன் பொருளைக் கவராதேயுங்கள், தீக்குணமுடையவரை ஒழியுங்கள், தீய சொற்களைப் பேசாதிருங்கள்; காலன் வருவன்; இஃது உண்மை.

பெருங்குணம் - பெருமைக்குக் காரணமான சாந்த முதலிய நற்குணங்கள். சொல்லிழுக்குப்பட்டுச் சோகாமலிருப்பான் தீச்சொல்லே காமின் என்றார். காத்தலாவது தன்னிடத் துண்டாகாது தடுத்தல். திண்ணிது - திண்மை என்னும பண்படியாய்ப் பிறந்த ஒன்றன்பாற் குறிபபு விகீன முற்று. திண்ணிது வழக்கு என்பனவற்றைச் சேர்மின முதலிய ஐந்தனோடுங் கூறும் நீதி என்பதறகுப பயனிலையாகக் கொளவாரும் உண்டு. (உசு)

வான்குருவிக் கூடரக்கு வாலுலண்டு கோற்றருதல
தேனபுரிந் தியார்கருஞ செயலாகா—தாம்புரீஇ
வலலவர் வாய்ப்பன வென்ணெரோ ரோவொருவர்க்
கொலகாதோ ரொனறு படும.

(ப-ரை.) வானகுருவி கூடு . தூக்கணங் குருவியினுற் கடடப்பட்ட கூடும, வால் உலண்டு - தூய உலண்டு என்னும புழுக்களால் நூற்கப்பட்ட நூலும், கோல் தருதல் - கோற புழுவால் செய்யப்படுவதாகிய கோற்கூடும், தேன்-தேனீக்க ளாற் றிரட்டப்பட்ட தேன பொதியும், (ஆகிய இவவைந தும்) புரிந்து - விரும்பி, யார்க்கும் - எவர்க்கும், செயல் ஆகா- செயதல் முடியா ; ஆதலால, வல்லவர் - எல்லாங் கற்று வல்லவரும், தாம்புரீஇ - தாம் விரும்பி, வாயப்பன என்னா - நமக்கிவை வாயப்பாகச் செயயலாமெனக் கருதமாட்டார், ஓரோ ஒருவர்க்கு - ஒவ்வொருவர்க்கு, ஒல்காது - குறையாது, ஓரொன்று - ஓரோவொரு அருமையாகிய செயகை, படும் - உண்டாயிருக்குமாதலால்; (எ - று.)

(ப-பொ-ரை.) வாலிய தூக்கணங்குருவி செய்யுங் கூடும், பேரெறும்புகளால் செயயப்படுமரக்கும், வாலிய வுலண டென்னும் புழுக்களால் நூற்ற நூலும், வேருரு புழுவாற செய்யப்பட்ட கோற்கூடும், தேனீயாற் றிரட்டப்பட்ட தேன்பொதியும் என இவவைந்தும் விரும்பியவாகுச் செய்யமுடியாவாதலால் எல்லாங்கற்று வல்லவர் நமக்கிவை வாயப்புச் செயயலாமென்று கருதார் ; ஓரோவொருவறகுச் செயலாற் குறைபடாதே யொரோவொரு செயகையருமை கள் படுமாதலால்

(க-ரை.) வான்குருவிக்கூடு முதலியனவற்றைச் செயதற் கருமை கருதி அவற்றை எலலாங் கற்று வல்லவரும் செய் யலாமென்று மனத்திலுங் கருதார் என்றது.

வான் குருவி - தூக்கணங்குருவி. இது பற்பல நார்களைக் கொண்டு விசித்திரமான கூண்டுகளைப் பின்னுவதிற் றேர்ந் தது. அரக்கு - செம்மெழுகு. இச்செய்யுளால் தற்பெருமை பேசுதல் கூடாது எனபது பெறப்படும். தருதல் - தீபகமாய் இரண்டிடததுங் கூட்டப்பட்டது. புரீஇ - சொல்லிசையள பெடை. (உஎ)

அறனட்டா னன்னெறிக்க ணிற்க வடங்காப்
புறனட்டான புன்னெறிப்போ காது—புறனட்டான்
கண்டெடுத்துக் கட்களவு சூது கருத்திறை
பண்டெடுதது காட்டும பயினறு.

(ப-ரை.) அறன் - அறத்தை, நட்டான் - விரும்பியவன், நலநெறிக்கண - நல்லவழியில, நிற்க - நிற்பதற்கு, அடங்கா-மீதிக்கு அடங்காத, புறன் - அறததுக்குப் புறமாகிய காரி யத்தை, நட்டான் - விரும்பியவனுக்குரிய, புலநெறி - புன்மை யான வழிகளில், போகாது - செல்லமாட்டான, புறன் - அறத்துகுப் புறமாகிய காரியத்தை, நட்டான - விரும்பிய வன், கள், களவு, சூது - களளுணடலியும, களவு செயதலி யும், சூதாடலியும, கருததினுல் - தன உள்ளத்தினுலே, கணடு - பாரத்து, எடுதது - நல்லனவென்று எடுத்துக கொணடு, பயின்று - அவற்றிற் பழகி, பணடு - அவற்றுல் நேர்நத பழைய தன்மைகளை, காட்டும் - விளக்கிக் காடடு வான ; (எ - று.)

(ப-பொ-ரை.) அறத்திற்குப் புறமாகிய பாவவினைகளை யுலகதினகணணே நட்டான சொல்லியடஙகாத புல்லிய நெறியிற போகாதே குற்றமில்லாத அறத்தினைச் சொல்லு நூலினை யுலகத்துள்ளே நட்ட முழுதுணர்நத அறிவினுற் சொல்லப்பட்ட நனனெறியின் கணணே நின்றொழுகுக ; பாவநெறியினை நட்டவன் ஆராய்நதெடுத்துக கள்ளினையும் களவினையும் சூதினையும் தன் கருத்தினுலே பயின்று பணடு செய்தாரை எடுத்துக் காட்டுமாதலால்

(க-ரை.) அறவழி நடப்பவன் தீவழி புகான், தீவழி செல்வோன் தீத்தொழிற் பழகி அதனுலாகும் பலனகளை யெல்லாம உலகுக்குக் காட்டுவோன ஆவன.

அறன் புறன் - ஈற்று னகரம் போலி நிற்க - வினை யெச்சம். புறன் - ஆகுபெயராயப் புறததே நிகழுஞ் செய லைக் குறிததது. போகாது - சிறபபின் வந்த தினைவழு வமைதி. காட்டும் - செய்யும் வாயபாட்டு வினைமுற்று. (உஅ)

ஆணைகமம வேணடாதா ஞசா னவற்கியைந்த
மாணைக்க னன்பான் வழிபடுவான்—மாணைக்கன்

கறபனைத்து மூலறுங் கடிநதான கடியாதா
னிறபனைத்து நெஞ்சிறகோர் நோய்.

(ப-ரை.) ஆண் ஆக்கம் வேண்டாதான் - பிரமசரியம் காப்பவன், ஆசான் - ஆசிரியன் என்றற் குரியவன், அவறகு இயைந்த - அவனுக்குப் பொருநதிய, மாணக்கன் - மாணவனுவான், அன்பான் - அவன் மீது அன்பினையுடையவனும், வழிபடுவான் - வழிபடுவோனும் என்றிருவகையர், மாணக்கன் - மாணக்கனுவான, கறபு அனைத்தும் - கற்கும் அளவும, மூன்றும் - காமம் வெகுளி மயக்கங்கள் என்கிற மூன்றையும், கடிநதான் - ஒழித்தவனே, கடியாதான் - அவற்றைக் கடியாதவன, நிற்பு அனைத்தும் - நிறகும் அளவும், நெஞ்சிற்கு - ஆசிரியனது மனதிற்கு, ஓர் நோய் - ஒரு நோய் போல்வான்; (எ - று)

(ப-பொ-ரை) ஒருவகை யாசிரியனுவான் பிரமசரியங் காப்பான, அவனுக்கு இயைந்த மாணக்கன அன்புபடுவோனும் வழிபட்டேவியது செய்வானும் என இவவிருவரன்றியும், மாணக்கனுவான் கற்குமளவும் காமம வெகுளி மயக்கங்களாக கடிவான, இவையிற்றைக் கடியாதான் நிறகுமளவுந் தன்னுசிரியன் நெஞ்சிற்கு ஒரு நோயாம்.

(க - ரை) பிரமசரியங் காபபவன் ஆசிரியனுவான். அவனை அன்பு செய்து வழிபடுவோர் முதலியோர் மாணக்கராவர்

ஆணக்கம் வேண்டாமை - பிரமசரியம. ஆணக்கம் என்றது ஆணமக்கட்குரிய இணவிழைச்சு முதலியவற்றை. வேண்டுதல் - விரும்புதல. காமம் வெகுளி முதலியவற்றைக கடிந்து கற்பவரே மாணக்கரென்க. நன்னூலாரும் மாணக்கராகாதார் இவர் என்பதைக் "களிமடி மானி காமி களவன்.....பகரார் நூலே" என்று கூறி யுளளதும் காணக. (உகூ)

நெய்தல முகிழுதது ணீ யாங்குடுமி நேர்மயிரு
மூய்த லொருதிங்கள் காளாகுஞ்—செய்த
னுணங்குநூ லோதுதல கேட்டலமா ணக்கர்
வணங்கி வலங்கொண்டு வந்து.

(ப-ரை) மாணக்கர் - மாணாக்கருடைய, குடுமி - சிகையானது, நெய்தல - கருநெயதலின், முகிழ்துணை ஆம் - அரும்பினளவாயிருத்தல் ஆகும், நேர்மயிர் - பொருந்திய மயிர், உயதலும - கழுவாது ஒழிதலும், ஒரு திங்கள் நாள ஆகும் - ஒருமாத தினங்கள் ஆகும், செயதல் - அவர்கள் செய்தலும், வந்து - (ஆசிரியனிடத்தே) வந்து, வணங்கி - (அவனை) தொழுது, வலம்கொணடு - வலப்புறமாகச் சுற்றிவருது, நுணங்குநூல் - நுட்பமாகிய நூல்களை, ஓதுதல் - படித்தலும், கேட்டல் - கேட்டலும், (ஆம்) - ஆகும் (எ - று)

(ப-பொ-ரை) நெய்தல்மொட்டி னளவினதாம் மாணாக்கர்க்குக் குடுமி, தலையின்கண் நீண்டமயிரு மண்ணுதொழிவது ஒருதிங்களாகும், இனி அவர்கள் செய்கை - ஆசானை வலங்கொண்டுவந்து வணங்குதலும், நூல்களைப படமோதலும், ஓதியவறறின் பொருள கேட்டலுமாக மூனறு.

(க-ரை) மாணக்கன குடுமி நெய்தல்மொட் டளவாக இருக்கவேண்டும், அவன் மாதம் ஒருமூறை தலை முழுகலாம்; ஆசிரியரை வணங்குதல் ஓதுதல் கேட்டல் அவனுக்குரிய கடமையாம்.

நெய்தல் - கருநெய்தல் முகிழ் - மொட்டு, மொக்கு. துணை - அளவு உய்தல் - ஒழிதல்; (கழுவா தொழிதல்); அதாவது தலை முழுகா தொழிதல் நேர்மயிரு முயதல் என் பதில நேர்மயிர் உய்தலும் என உம்மை மாற்றிக்கொள்ளப் பட்டது. ஆகும் என்ற முற்று இரணடிடத்துங் கூட்டப் பட்டது. (ஈ0)

ஒருவ னறிவானு மெலலாமயா தொனறு
மொருவ னறியா தவனு—மொருவன
குணனடங்கக குறறமில லாரு மொருவன்
கணனடங்கக கறருணு மில.

(ப-ரை.) எல்லாம அறிவான் ஒருவனும் - எல்லாவற்றையும் அறிவானெருவனும், யாது ஒனறும் அறியாதவன் ஒருவனும் - யாதொனறையும் அறியாதானெருவனும், குணன் அடங்க இல்லான் ஆம் ஒருவனும் - நற்குண முழுதும் இல்லாதவனுகிய ஒருவனும், குறறம் இல்லான ஆம் ஒருவனும் - குற்றமுழுது மிலலாதானெருவனும், கணன அடங்க கற்ரு

ணும் - நூற்றொருகுதி முழுதுங் கற்றொருவனும், இல் - இவ்வுலகத்தில் இல்லை; (எ - று.)

(ப-பொ-ரை.) எலலாவற்றையும் அறிவானொருவனும, யாதொன்று மறியாதானொருவனும், குணனடங்க வில்லாதானொருவனும, குற்றமில்லாதானொருவனும், எல்லா நூற்றொருகைகளும் ஓழியாமற் கறறொருவனும் உலகத்தினகண் இல்லை.

(க-ரை) எல்லாமறிந்தவனும், ஏதுமறியாதவனும் நல்வியல்பே யில்லாதவனும, குற்றமேயில்லாதவனும், எலலாக் கல்விகளையுங் கற்றவனும் இவ்வுலகில இல்லை

இச்செய்யுளால் மக்களில் ஒருவரை யொருவர் இழித்துரைக்கும இழிகுணம் கூடாதென்பதும், எவரும் தற்பெருமை கொள்ளுதல் கூடாதென்பதும உணரப்படும். ஒருவனறிவானு மெல்லாம் என்பது எல்லாம் அறிவான் ஒருவனும் என உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது இல்லானும் என்பது தீபகமாக இரணடிடங்களிலும கூடடப்பட்டது. குணன், கணன் என்பவறறில் நகரம் ஈற்றுப் போலி. அடங்க - முழுதும். 'குணனடங்கக் குற்ற முளானும்' எனவும பாடம். (ங க)

உயிரோநோய்செய் யாமை யுறுநோய மறறதல்
செயிர்நோய் பிறர்கட்செய் யாமை—செயிரோநோய
விழைவு வெகுளி யிவைவிடுவா ஞயி
னிழிவின் றினிது தவம

(ப-ரை.) உயிர் நோய செய்யாமை - பிறிதோர உயிர்க்குத் துன்பஞ் செய்யாமையும், உறு நோய - தனக்குப் பிறரால் வருந் துன்பத்தை, மறறத்தல் - மறறத்தலும், செயிர் நோய் - கோபத்தாலுண்டாகுந் துன்பத்தை, பிறர்கண் செயயாமை - பிறரிடத்துச் செய்யாமையும், செயிர்நோய் - குற்றத்தைச் செய்யுந் துன்பத்தைத் தருகின்ற, விழைவு - அவாவும், வெகுளி - கோபமும், ஆகிய இவை - ஆகிய இவற்றை, விடுவான் ஆயின் - விட்டுவிடுவானே யாஞல், தவம் - அவஞல் செய்யப்படும் தவமானது, இழிவு அன்று - தாழ்ந்ததன்று, இனிது - இனிமையுடையதாகும்; (எ - று.)

(ப-பொ-ரை.) பிறிதோருயிர்க் கொரு நோயுஞ் செய்யாமை, தனக்குப் பிறரால் வந்துற்ற நோயை மறத்தல், கோபத்தால் தான் பிறர்மாட்டு இன்னுதன செய்யாமை, குற்றத்தைச் செய்யு நோயைபபண்ணுங் காதலியும், மனத்தின்கட் பிறர்மேலுளள செற்றத்தையும் விடுவானுயின், அவன் செயயுந்தவம் இமிவன்றி இனபத்தைத் தரும.

(க-ரை) பிற உயிர்கட்குத் துன்பஞ செய்யாமை மூதலியன மேற்கொண்டு விழைவு வெகுளி முதலியவற்றை விடுவிடுவானுயின், அவன் செய்யுந் தவம் இனிமையுடையதே யாகும்.

உயிர்க்கொலை முதலியவறறை விட்டவனின் தவமே சிறப்புடையது. இதனை, "உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை, அற்றே தவத்திற் குரு," என்ற வளளுவர் வாய்மொழியானும தெளிக. விழைவும் வெகுளியும் பல குற்றங்களையும் துன்பங்களையும் விளைவிப்பனவாதலின, "செயிர் நோய் விழைவு வெகுளி" என்றார். (ஈ உ)

வேட்பவன பார்ப்பான் விளங்கிழைக்குக் கற்புடைமை
கேட்பவன கேடில் பெரும்புலவன—பாட்டவன
சிந்தையா னுகுஞ சிறந்த துலகினுட்
டநதையா னுகுங குலம்.

(ப-ரை.) வேட்பவன்-வேளவி செய்பவன, பார்ப்பான் - பார்ப்பானுவான், விளங்கு இழைக்கு - விளங்குகின்ற அணிகள அணிந்துள்ள பெண்ணுக்கு, கற்பு உடைமை - கற்பினையுடைத்தாயிருததல் சிறநதது, கேட்பவன் - பல நூல்களையும் ஆசிரியனை யடுத்துக் கேட்பவன், கேடுஇல் - அழிவில்லாத, பெரும் புலவன் - பெரிய புலவனுவான், அவன் - அப்புலவன், சிந்தையான் ஆகும் - மனத்தானுராய்நது பாடும், பாட்டு - செய்யுள, உலகினுள் - உலகத்தில், சிறந்தது - மேம்பட்டது, குலம் - ஒருவனது குலனுடைமை, தந்தையான் ஆகும் - அவன் தநதையாலே அழகுபெறறு விளங்கும்; (எ - று.)

(ப-பொ-ரை.) வேள்வியைச் செய்தவன் பார்ப்பானுவான், கறபுடையாள் விளங்கிழையாவாள், கேடில்லாத பெரும் புலவனுவான் பல நூல்களையும் பொளுணரக் கேட்பவன், அப்புலவன் சிந்தையினழகாலே பாடும் பாட்டுச்

சிறப்பது, உலகின்கண் ஒருவர்க்குக் குலமுடைமை தந்தை யழகாலேயாம்.

(க-ரை.) வேள்வி செய்பவன் அந்தணனும், கற்புடைய வள் பெண்ணும், நூற்கேள்வி யுடையவன் புலவனும், ஆராய்ச்சியினியல்வது பாட்டும், தந்தையான் ஏற்படுவது குலமுமாகும்.

வேட்டல் - வேள்வி செய்தல். விளங்கு இழை - விளைத் தொகைபுறத்துப் பிறநத அன்மொழித தொகை. சிநதை - ஆராய்ச்சி. சிறந்தது என்பதை முன்னுங கூட்டுக. புலவன் - அறிவுடையவன் ; புலம் - அறிவு. (ஈஈ)

வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிக
னுயப்பானே யாசா னுயர்கதிக்—குய்ப்பா
னுடம்பினுர் வேலி யொருப்படுதது ஞரத்
தொடங்கானேற சேறற றுணிவு.

(ப-ரை.) வைபபானே - பொருளை யீட்டி வைபபவனே, வள்ளல் - வள்ளலென்று சொல்லப்படுவான், வழங்குவான் - அப்பொருளைப் பிறர்க்குக் கொடுபபவனே, வாணிகன - வாணிகனென்று சொல்லபபடுவான், உயர்கதிக்கு - (ஒருவ னுக்கு நல்லறிவூட்டி, அவனை) மேலான பதவிக்கு, உய்ப் பானே - செலுததக் கூடியவனே, ஆசான் - சிறந்த ஆசிரிய னுவான, உயர்கதிக்கு உய்ப்பான் - உயாகதியிற செலுத்த வல்லோன், உடம்பின் ஆர் வேலி - உடம்பினகண் பொருந்தி யுள்ள உயிராகிய வேலியை, ஒருப்படுத்து - நீக்கி, ஊன் - அவற்றின் தசையை, ஆர-உண்ண, தொடங்கானேல் - ஆரம் பியாளுயின், சேறல் - (அவன்) உயர்கதியிற செல்லுதல், துணிவு - உண்மையாம் ; (எ - று.)

(ப-பொ-ரை.) ஈட்டி வைப்பானை வள்ளலாகக் கொள் ளப்படும், தான பயனது கொள்ளாது பிறர்க்குப் பொருள் களைக் கொடுபபவன் வாணிகனை டொக்கும், அக்கொடையி னுய பயன்விளைவு மறுமைக்குத் தனக்கு விளைத்துக் கோட லால் ஒருவர்க்கு ஆசிரியனுவான், அவனை யுயர்ந்த பிறப்பின் கண்ணே செலுத்த வல்லா னடாத்தும் ஒழுக்கத்தால் உடம பாகிய வேலியையுடைய உயிர்களைக் கொன்று ஒருப்படுத் துப்போக்கி, அவற்றினூனை யுணணத் தொடங்காயின உயர்கதிக்குச் சேறல் உண்மையாம்.

(க-ரை) பிறர்க்குப் பயன்படும்படி பொருளை யீட்டி வைப்பவன் வள்ளல், அவற்றைப் பயன் கருதி எவனேனும் வழங்குவானையின் அவன் வாணிகனை யொப்பான், மாணக்கனை உயர்கதிக்குச செலுத்துபவனே ஆசிரியனுவான், மாணக்கன் உயிர் கோறலும் ஊன் புசித்தலும இல்லானுனல் உயர்கதிக்குச் செல்லல் துணிவேயாம்.

உடம்பின்: இன் - சாரியை உயிர நீங்கின் உடல் நாறிக் கெடுதலின, அஃது உடற்கு வேலியாகக் கூறப்பட்டது ஒருப்படுத்தல் - நீகுதல், இதில் பகுதியாகிய ஒரு - மூதனிலைத் தொழிற் பெயர் (ஈச)

வைததனு னுகும் வசைவணகக நன்றுகச்
செய்ததனு னுகுஞ செழுங்குலமுற—செய்த
பொருளினு னுகுமாம் போக நெகிழ்ந்த
வருளினு னுகு மறம.

(ப-ரை) வைததனுன்—(ஒருவன் பிறனை) வைததனுல், வசை ஆகும் - (அவனுக்கு) வசையுண்டாகும், நன்றுக வணக்கம செயததனுல் - நன்மை வணக்கம என்பவறறைப் பிறாக்கும் செய்ததனுல், செழுங்குலமும் ஆகும் - வளமையாகிய குடிப்பிறபபுமாகும், செய்த பொருளினுல் - ஈட்டிய பொருளினுல், போகம் ஆகும் - இன்பம உண்டாகும், நெகிழ்ந்த - (பிறர் பொருட்டுத்) தன் மனம நெகிழந்த, அருளினுன் - அருள காரணமாக, அறம் ஆகும் - தருமம் உணடாகும; (எ - று.)

(ப-பொ-ரை.) பிறனையொருவன் வைததனுல் வசையாகும; பிறர்க்கு வணக்கத்தையும, நன்மையையும் உளவாகச் செயததனுல் வளமையுடைய குடிப்பிறப்பம்; காலத்திலே முந்துறச் செயத பொருளானின்பமாகும்; பிறர்க்குத் தன்மனம் நெகிழ்நத அருளினுன் அறமாகும்.

(க-ரை.) பிறரைத் திட்டுதலாற பழியும், வணக்கமும் நன்மையும் மேற்கொண்டிருத்தலாற குலமேன்மையும், பொருளாற் போகமும், அருளால் அறமும் உணடாகும்.

வணக்கம் என்பதை ஒரு பொருளாகவும் நனறு என்பதை ஒரு பொருளாகவுங் கொள்க. நன்று - பெயர். செய்தல், ஈண்டுப் பெருகுதல் என்க.

போகம் - நுகர்ச்சி இன்பம். நெகிழ்தல் - உருகுதல். அருள் - காரணங் கருதாது ஒரு தன்மைத்தா யெல்லார் மேலுஞ் செல்லு மிரக்கப் பெருக்கு. (நடு)

இலவியலார் நல்லறமு மேனைத் துறவறமு
நல்லியலி னுடி யுரைக்குங்கா—னலலியற்
றூனததாற் போகந தவத்தாற் சுவர்க்கமா
ஞானததால் வீடாக நாட்டு.

(ப-ரை.) இல் இயலா - மனைவாழ்க்கை இயற்கையாக வுடையார் நல அறமும. - நல்ல அறமும், ஏனை துறவறமும் - மற்றைத் துறந்தோர் செய்யும் நல்ல அறமும், நல்இயலின் - நன்மையாகிய முறையால்; நாடி - ஆராய்ந்து, உரைக்குங் கால் - சொல்லுமிடத்து, நல் இயல தானத்தால் - நல்லிய லாகிய கொடையினால், போகம - செல்வ நுகர்சசியும், தவத்தால் சுவர்ககம் ஆ - தவததினால் சுவர்க்க நுகர்ச்சி யாகவும், ஞானத்தால் - ஞானத்தினால், வீடு ஆ - வீடாகவும், நாட்டு - நிலைபெறுத்துவாயாக; (எ - று)

(ப-பொ-ரை) மனைவாழ்க்கை யியற்கையை யுடை யார் செய்த நல்லறமும், மற்றைத் துறந்தார் செய்யு நல் லறமும், நல்லவியலினாலே யாராய்ந் துரைக்குங்கால் நல்ல இயல்புடைய கொடையாற் செல்வநுகர்ச்சியும், தவத்தாற் சுவர்க்க நுகர்ச்சியைப் பெறுவதும், மெயயுணர்ச்சியால வீடும் என்று நாட்டுக.

(க-ரை.) இலலறத்தார் செய்த அறமும், துறவறத்தார் செயத அறமுமு ஆராயின், கொடையாற் செல்வ நுகர்ச்சியும் தவத்தாற் சுவர்க்கமும, ஞானததால் வீடும் பெறுவ ரென்பதாம்.

இல் - இல்வாழ்க்கை. இயல் - முறைமை; நடுவுநிலைமை. வீடு - முத்தி. ஞானத்தாலே வீடுஎனபது, "ஞானத்தால் வீடு" என்னுஞ் சிவஞான சித்தியினும பெறப்படும். நல்லறம், துறவறம் என்பன அவற்றின் பயன்களை உணர்த்தி நினறன. போகம் - குணவாகு பெயராய் அக் குணநதிற்குரிய பூமியை உணர்த்தலுமாம். (நசு)

மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பு
முகிர்வனப்புங் காதின வனப்புஞ்—செயிர்தீர்ந்த

பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு.

(ப-ரை.) மயிர் வனப்பும் - தகுமயிரானுண்டாகும் அழகும், கணகவரும் - (கண்டவர்) கணகளைக் கவர்தற்குரிய, மார்பின் வனப்பும் - மார்பினால் உண்டாகும் அழகும், உகிர் வனப்பும் - நகத்தால் உண்டாகும் அழகும், காதின் வனப்பும் - செவியினால் உண்டாகும் அழகும், செயிர் தீர்ந்த - குற்றம் நீங்கின, பலவின் வனப்பும் - பல்லினாலுண்டாகும் அழகும, வனப்பு அல்ல - அழகல்ல, நூற்கு இயைந்த - நூல் கட்குப் பொருந்திய, சொல்லின் வனப்பே - சொல்லழகே, வனப்பு - அழகாகும்; (எ - று.)

(ப-பொ-ரை.) தகுமயிரான் வருமழகும், கண்டார் கண்ணைக் கவரு மார்பினால் வருமழகும், உகிரான் வருமழகும், காதினால் வருமழகும், குற்றநீர்ந்த பலவினால் வருமழகும் என இவ்வைநதழகும் ஒருவற்கு அழகல்ல; நூல் கட்குப் பொருந்திய சொல்வன்மையால் வரும் அழகே அழகாவது.

(க-ரை.) தகுமயிர், மார்பு, நகம், செவி, பல் இவற்றினழகினும் சொல்லழகே சிறந்தது.

மயிர் - மக்கள் தகுமயிர், கண்கவர்தல் - பார்த்த கணபாத்த பொருளினைறும் பெயராதபடி வயப்படுதல். நெஞ்சத்து நலலம்யா மென்னு நடுவு நிலைமையாற கல்வியழகே மறறெவ்வழகினும மேம்பட்டது என்றபடி. நூற்கு இயைந்த சொல்லின் வனபபே வனப்பு என்பதற்கு இலக்கண வரம்பினபடி பேசும் அழகு என்று வேறு பொருளுங் கூறலாம். வனப்பே - ஏ பிரிநிலை. (நஎ)

தொழீஇ யடவுணர்ந் தோழரிற் றுஞ்சார்
வழீஇய பிறர்பொருளை வெளவார்—கெழீஇக
கலந்தபிற் கீழகாணர் காணுய் மடவாய்
புலந்தபிற் போறரூர் புலை.

(ப-ரை.) தொழீஇ - தொழுத்தையானவள், அட உண்ணா - சமைத்துவைக்க அதனை அறிவுடையார் உணணமாட்டார், தோழர் - நண்பரது, இல் - வீட்டில், துஞ்சார் - தனியே புகுந்து உறங்கமாட்டார், வழீஇய - மறந்த, பிறர் பொருளை - பிறரது பொருள்களை, வெளவார் - கவர்ந்து

கொளள மாட்டார், கெழீஇ - தழுவி, கலநதபின் - சிலரை நட்டபின்னர், கீழ் - அவரது கீழ்மையாகிய குணத்தை, காணூர் - ஆராய்ந்து பார்க்கமாட்டார், புலந்தபின் - சிலருடன் பகைததபின்பு, புலை - அவரது கீழ்மைக் குணத்தை, போற்றூர் - போற்றுது அவரை எதிர்த்துக் கெடுப்பார்; மடவாய் - பெணணே! காணுய - இவற்றை ஆராய்நது பாராய்; (எ - று).

(ப-பொ-ரை.) தொழுத்தை யடவுணணூர், தோழரில் லிற் றனியே புக்குறங்கார், பிறர்பொருளை மறநதாகிலும் வௌவிக்கொள்ளார, மருவிச் சிலரோடு நட்டபின்பு கீழ்மைக குணததை யாராயார், மடவாய்! ஆராய்ந்து பாராய்! சிலரோடு பகைத்தபினபு கீழ்மைக் குணததைப் போற்றுது எதிர்த்துக் கெடுப்பார்.

(க-ரை.) இழிவான வேலைக்காரிகள் சமைத்த உணவை யுண்ணல் முதலியவற்றை அறிஞர்கள் செய்யார்.

தொழுத்தை - அடிமைப்பெண், ஆணபால் - தொழும்பன் வழுவிய எனறபாலது வழிஇய என அளபெடுத்தது; சொல்லிசையளபெடை. மடவாய் - மகடூஉ முன்னிலை. புலத்தல் - பகைத்தல் சீல், புலை - பண்பாகுபெயர். (நடை)

பொயயாமை நனறு பொருணனை றுயிர்நோவக்
கொலலாமை நனறு கொழிக்குங்காற—பல்லார்முற்
பேணுமை பேணுந தகைய சிறிதெனினு
மாணுமை மாணடார் மனம.

(ப - ரை) பொயயாமை - பொய்சொல்லாதிருத்தல், நன்று - நனமையாம், பொருள் - தன் முயற்சியால் வரும் பொருள், நன்று - நன்மையாம், உயிர் - பிறிதோருயிர், நோவ - வருந்த, கொல்லாமை - கொல்லாதிருத்தல், நனறு - நன்மையாம், கொழிக்குங்கால - ஆராயுமிடத்து, பேணும தகைய - விரும்புந் தன்மையவறறை, பல்லார் முன் - பலரறிய, பேணுமை - விரும்பாமை, நன்று - நன்மையாம, மாண்டார் மனம் - மாட்சிமைப் பட்டவர்களுடைய மனமானது, சிறிது எனினும் - சிறிதாயினும், மாணுமை - (மணவாழ்க்கைக்கு மீள்கைக்கண்ணே) ஒருப்படாமை, நன்று - நன்மையாம். (எ - று)

(ப-பொ-ரை.) பிறர்க்குப் பொய சொல்லாமை நன்று, பொருளுண்டாக்குத னன்று, பிரிதோ ருயிரையுந் துன்புறக்

கொல்லாமை நன்று, ஆராயுங்கால தாம் விரும்புவன பல ரறிய விரும்பாமை நன்று, மாட்சிமைப்பட்ட தவசிகள் சிறி தாயினும் மனிவாழ்க்கையின்கண் மீள்கைக்கு மாணு தொழிகை நன்று.

(க-ரை.) பொயயாமை, கொல்லாமை, பேணுமை முத லியன நனமை என்பதாம்.

பொயயாமை, கொல்லாமை, பேணுமை, மாணுமை : எதிர்மறைத் தொழிற்பெயாகள். 'மாண்டார் மனம சிறி தெனினும் மாணுமை,' என்பதற்கு மாட்சிமைப பட்டவர் களுடைய மனமானது கொஞ்சமாவது பெருமையடையா திருத்தல நன்மை எனவும் கூறலாம். ஒரு நன்று பின்னிரண் டிடங்களினுங் கூட்டப்பட்டது. கொழித்தல் - தெளளுதல், ஆராய்தல். (நகூ)

பணடாரம பலகணக்குக கண்காணி பாததிலலா
ருணடா ரடிசிலே தோழரிற—கொணடாரா
யாகைகக்குத தகவறி விலலார்க் காப்படுப்பிற்
காக்கைக்குக காப்படுத்த சோறு.

(ப-ரை.) பண்டாரம் - பண்டாரத்துக்கும், பல்கணக்கு - பல கணக்குத் தொழிலுக்கும், கண்காணி - (பொருள்களைத் திருடுபோகாமற் காக்கும்) மேற்பாாவைத் தொழிலுக்கும், இல்லார் - இல்லக் கிழத்திகளின் காவலுக்கும், பாதது - பல் பேர் பங்கிட்டு, உண்டு ஆர் - உண்டு வயிறு நிறைகின்ற, அடிசில் - உணவின் காவலுக்கும், யாக்கைக்கு - உடம்பு எடுத்ததற்கு, தக்க - தகுதியான, அறிவு இல்லார் - மேலான அறிவில்லாதவர்களை, தோழனின் - தங்கள் நண்பர்களைப் போல, கொண்டாராய் - மனத்துட் கொண்டவர்களாய், கா - காவற்றொழிலுக்கு, படுபபின் - ஏற்படுத்தினால், (அவை யெல்லாம் அவாகளிடத்து) காகதைக்கு - காகத்துக்கு, காப்பு அடுத்த-தன் காவலில் சேர்ந்த, சோறு - சோறும், (அதாவது அச் சோற்றைப்போலக் காவலாலேயே களவு போம்); (எ - று.)

(ப-பொ-ரை.) பண்டாரத்தினையும், பல் கணக்கினையும், கண்காணியையும, தன் கோயிலு ளுறையும மங்கையரை யும், தனக்காக்கு மூணவினையும் பகுத்து மக்கள் யாக்கைக் குத்தகை அறிவில்லாதாரையும் தன் தோழரைப் போலக் கொண்டு தேறிக் காக்கவிடின் அக்காவல் காக்கையைச் சோறு காக்கவிட்டதனை டொக்கும்.

(க-ரை) பண்டார முதலியவற்றை அறிவில்லார் காக்க விடின் அக்காவல் சோறு காத்தற் பொழிலைக் காகத்திற் கிட்டாற்போலும்.

பண்டாரம் - பொருள் சேரிடம்; கருவூலம். கண்காணி - மேற்பார்வையாளி, இது கங்காணி என மருவியும் வழங்கும். கா - காவல்; முதனிலைத் தொழிற்பெயர். படுத்தல் - உண்டாகுதல். (சo)

உடையிட்டார் புனமேய்வா ரோடுநீர் புக்கா
படையிடடார் பறறேறது மின்றி—நடையிட்டா
ரிவ்வகை யெவரையு மெனறு மணுகாரே
செவ்வகைச் சேவகர் சென்று.

(ப-ரை.) உடை இட்டார் - (தமக்குஞ்சி) உடுத்த உடையைப் போகவிட்டவர், புல்மேய்வார் - புல்பறித்து வாயிலிட்டார், ஓடுநீர் புக்கார் - ஓடுகின்ற நீரிற் புகுந்தவர், படை இட்டார் - கைப்படையை விட்டவர, பற்று ஏதும் இன்றி - பற்றுச் சிறிதுமில்லாமல், நடையிட்டார் - (ஓடமாட்டாது) நிலைதளர்ந்திருந்தவர், இவ்வகை ஐவரையும் - இவ்வகைப்பட்ட ஐவரையும், செவவகை சேவகர் - செம்மையான தன்மையையுடைய வீரர்கள், என்றும் - எந்நாளும், சென்று - (தீங்கு செய்யச்) சென்று, அணுகா - சேரமாட்டார்; (எ - று.)

(ப-பொ-ரை.) தமக்குஞ்சி யுடுத்த புடைவையைப் போக விட்டார், புலலினைப் பறித்து வாயிலிட்டார, ஓடு நீரின்கட் புக்கார், கைப்படை துறநதார, மறறேரரணின்றி ஓடமாட்டாது நிலைதளாநதிருந்தார் இப்பெற்றிப்பட்ட ஐவரையு மொருநாளுந் தீங்கு செய்யச்சென்றணுகார் அறம்பொருள் செய்யுஞ் சேவகர்.

(க-ரை.) உடுக்கை யிழந்தவர் முதலிய ஐவரையும் வருத்தா தொழிதல் வீரர்க்குரிய அறமாம்.

உடை - உடுக்கை, தொழிலாகுபெயர். புல் மேய்தல் - புல்லை மெல்லுதல். இடல் - வைததல், செய்தல என இரு பொருளில வந்துள்ளது. உடையிட்டார் முதலிய ஐந்திடங்களிலும் எண்ணும்மைகள் தொக்கன. படை - படுத்தற் குரியது, படுத்தல் - கொல்லுதல். செவ்வகை - நீதித் தனமை. ஓடுநீர்புக்கார் - புறங்காட்டி யோடுபவர் எனலுமாம். (சக)

பூவாதாள் பூப்புப் புறங்கொடுத் தாளிலிங்கி
ஓவாதாள் கோல மொருபொழுதுங்—காவாதாள்
யார்யார் பிறர்மனையா ளுள்ளிட்டிவ் வைவரையுஞ்
சாரார் பகைபோற் சலிதது.

(ப-ரை.) பூவாதாள - பருவமடையாத கன்னியும், பூப்பு புறங்கொடுததாள் - மாதவிடாய் நீங்கியவளும், இலிங்கி - தவமுடையவளும், ஒருபொழுதும் - ஒருகாலத்தும், கோலம் ஓவாதாள் - கோலஞ் செய்தல் நீங்காதவளாகிய, காவாதாள் - கற்பைக்காவாத பரத்தையும், யார் யார் பிறர்மனையாள் - பிறராகிய யாவர்க்குமுரிய மனையாளும், உளளிட்ட இ ஐவரையும் - உள்ளிட்ட இந்த ஐவரையும், பகைபோல் சலித்து - பகைவரைபபோல வெறுத்து, சாரார் - (அறிவுடையார்) சேரார் ; (எ - று.)

(ப-பொ-ரை.) பூபபிலலாத கன்னியும், பூபபுத் தவிர்ந்தாளும், தவத்திறபுக்க விலிங்கியும், கோலஞ் செய்கையொருபொழுது மோவாளாகிக் கற்புகாளாகாத கணிகையும், பிறாயாவாக்குமுரிய மனையாளு மூள்ளிட்டிவ்வைவரையுஞ சாரார் பகைபோல வேறுபட்டு.

(க-ரை.) பூவாத கன்னியையும், பூப்பு நீங்கிய விருத்த மாதையும் தவப்பெண்ணையும் வேசியையும் பிறா மனையாளையும் அறிஞர் சேரமாட்டார்.

பூவாதாள் - திரளாத பெண் ; பூப்புப் புறங் கொடுத்தாள் - பூபபு நின்று விட்டவள். தன்னை யெப்பொழுதும் கோலஞ்செயதுகொணடு ஆடவரை மயக்குகின்றவளாதலாலும், கற்புப் பேணுதவளாதலாலும் வேசையை ''ஓவாதாள் கோல மொருபொழுதுங் காவாதாள்'' என்றார். பகை - பண்பாகுபெயர். (சஉ)

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழந்துவிரும் தோம்பித—திருவாக்குந்
தெய்வதையு மெஞ்ஞாறுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெணடிர் சிறப்பு.

(ப-ரை.) வருவாய்க்கு - தமகணவரது வரும்படிக்கு, தக்க - தகுதியாகிய, வழக்கு அறிந்து - வழங்குதலை (செலவை)த் தெரிந்து(செய்து), சுற்றம் - பந்துக்கள், வெருவாமை.

(தங்கள் கோபச் சொலலால்) பயந்தொதுங்காமல், வீழ்ந்து - (அவர்களை) விரும்பி, விருந்து ஓம்பி - விருந்தினரைப்பேணி, திரு ஆக்கும - செல்வத்தை மென்மேலும் உயரச்செயகின்ற, தெய்வதையும் - தெயவத்தையும், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், தேற்றம் - தெளிவாகிய, வழிபாடு செய்வதே - வணங்குதலேச் செய்வதே, பெண்டிர் சிறப்பு - மாதர்க்குரிய சிறபபுக்களாம்; (எ-று.)

(ப-பொ-ரை.) தமக்குள்ள பகுதியினளவறிந்து அதற்குத்தக்க போக்கறிந்து, சுற்றத்தை வெருவாமைத தழுவி, விருந்து புரநது, திருவினீயாக்குந தெய்வத்தை வழிபாடு செயக. இவவைந்து தொழிலும் பெண்டிர்க்குச் சிறப்பாவன.

(க-ரை.) இல்வாழ்க்கைத துணைவியர்க்குச் சிறப்புக்களாவன கணவருடைய வரவினளவைத தெரிதலும், அதற்குத்தக்க செலவு செயதலும், சுற்றநதழுவுதலும், விருநதோமபலும், தெய்வத்தை வழிபடுதலும் என்பனவாம்.

வழங்குதல் என்னுந் தொழிற பெயர் விகுதிகுன்றி முதனிலைத தொழிற் பெயராய வலித்தல விகாரம் பெற்று வழக்கு என நின்றது. சுற்றம் - சூழ்தல்; தொழிலாகு பெயராய்ச் சூழ்வாரை யுணர்த்தியது. வெருவாமை—எதிர்மறை விகுனையெச்சம். விருந்து - புதுமை; பணபாகு பெயராய்ப் புதியாரை யுணாத்தியது. சிறப்பு—கருவியாகு பெயர்; சிறப்பைத் தருபவையாதலின். (சஉ)

நாள்கூட்ட மூர்தத மவறறோடு நனருமக
கோளகூட்டமை யோகநு குணனுணர்நது-தோள்கூடட
லுற்றனு மல்லானு மைந்து முணர்வானுற
பெறறனுட் கொள்க பெரிது.

(ப-ரை.) நாள் கூட்டம் - நாட் பொருத்தமும், மூர்த்தம்-முழுத்தமும், அவற்றோடு - அவற்றுடனே, நன்று ஆம - நன்மையாகிய, அ கோள்கூட்டம் - அநதக் கோளின் பொருத்தமும், யோகம் - யோகமும், குணன - (இவறறு லுண்டாகிற) நன்மையும், உணாந்து - ஆராயந்தறிந்து, பெறறால் - (இவை ஐநதும் நன்மையாயிருக்கிற) நாளைப்பெற்றால், ஐந்தும் உணர்வான் - இவ் வைந்தனையு மறிந்து சில நன்மையாகிய காரியங்களைச்செய்வோனும், தோள் கூட்டல் உற்றனும் (ஒருவனோடு ஒருத்தியைத்) தோள் கூட்டலுற்றவனும்,

பெரிதுநாள் கொள்க - மிகவும நல்ல நாளாகக் கொள்க; (எ - று.)

(ப-பொ-ரை.) நாள் பொருந்துதலும், மூர்த்தமும், நனருய்க கோள் கூடுதலும், அமிர்தயோக முதலாயின யோகமும், இவற்றினுன் வருநன்மையு மாராயந்துணர்வானுட் பெற்முலங்நாளை நன்றென்று கொள்க; ஒருவனே டொருத்தியைக் கூட்டலுற்றவனு மற்றுஞ் சில நன்மைக் காரியஞ் செய்யலுற்றவனும்.

(க-ரை) திருமணம் முதலிய நற்செயல்களுக் கெல்லாம் நாட்பொருத்தம் நாழிகைப் பொருத்தம் முதலியன பார்த்து நல்ல நாள் கொள்ள வேண்டும.

நாள - (வாரம், திதி, நட்சதத்திரம்) கிழமை, பிறை, விண்மீன். மூர்த்தம - மூழுதத்ம எனபதின மரூஉ முழுத்தமாவது மூன்றேமுக்கால் நாழிகை கொண்டவேளை. கோள் - ஞாயிறு திங்கள் முதலிய ஒனபது கோள்கள். ஆணபெண கூட்டத்துக்குத் தோள் கூட்டம் என்றல் மரபு. வள்ளுவரும் 'பிறர்கருயாள் தோள் தோயாதார்' எனறனர். பெறமுல - விளையெச்சம். ஆல் - அசைநிலை (சச)

பேணடக்கம பேணுப் பெருந்தகைமை பீடுடைமை
நாணுடுகக மென்றைநது நனருகப— பூணுடுககம்
பொனவரைகோங கேர்முலைப் பூந்திருவே யாயினும்
தனவரைத தாழ்த்த லரிது.

(ப-ரை) பேண் - உறவினரைப் பேணுதலும், அடக்கம-அடக்க முடைமையும், 'பேணு - பிறரை விரும்பாத, பெருந்தகைமை - பெருந்தன்மையும், பீடுடைமை - பெருமையுடைமையும், நாண் ஒடுக்கம் - நாணததா லுண்டாகும் ஒடுக்கமும், என்ற ஐந்தும் - என்று சொல்லப்பட்ட ஐநதனையும், (பொருநதாது) பூண் ஒடுக்கம் - பூணடங்கின, பொன்வரை - பொன்மலைபோன்ற, கோங்குஎர் - கோங்கரும்பின் அழகையுடைய, முலை - முலைகளையுடைய, பூ திருவே ஆயினும் - தாமரை மலரில வாழ்கின்ற திருமகளே யாஞலும, தன்வரை - (தன்கொழுநனைத்) தன்னளவின், தாழ்த்தல் - தாழ்த்துதல், அரிது - (நன்மையாதல்) இல்லை; (எ - று)

(ப-பொ-ரை.) சுறறத்தாரைப் பேணலும், அடக்கமுடைமையும், பிறனெருவனைப் பேணுத பெருந்தகைமை

யும், ஒப்புரவு முதலாயுள்ள பீடுடைமையும் நாணுல் வரும் ஒடுக்கமென்று சொல்லப்பட்ட ஐந்தனையும் பொருந்தாது தன் கொழுநனைத் தன்வரைத் தாழ்த்தலாது, பொன்வரைக் கோங்கேர்முலைப் பூந்திருவேயாயினும்.

(க-ரை) திருமகளைப்போன்ற செல்வியே யெனினும் ஒரு பெண் சுறறந்தழுவுதல் அடக்கம் முதலியன உடையளாய்க் கணவன் அளவில் அடங்கியிருத்தலே நனரும்.

பேண் - முதனிலைத் தொழிறபெயர். 'தன்வரைத் தாழ்த்தல்' என்றது தன்னளவில் கணவனை அடக்கி வைததுக் கொள்ளுத லென்றற்கு. தகைமை - அழகு. அடக்கம் - மெய் மொழி யடக்கத்துடன் உளத்தடக்கமுமாம. அரிது, இன்மை குறித்து நின்றது. (சரு)

வார்சான்ற கூந்தல! வரம்புயர வைகலு
நீர்சால றுயரவே நெலலுயருஞ— சீர்சான்ற
தாவாக குடியுயரத தாங்கருஞசீரக் கோவுயரு
மோவா துரைகக முலகு.

(ப-ரை.) வாசான்ற - நீட்சி மிகுந்த, கூதல் - கூந்தலை யுடைய பெண்ணே! வைகலும் - நாடோறும், வரம்பு - (வயல் களின்) வரப்பானது, உயர - உயர்ந்திருக்க, (நீர் நிலைதது நிற்கும்) (அங்ஙனம்) நீர்சான்று - நீர மிகுநது, உயரவே - உயர்ச்சியடையவே, (அந்நீர்வளத்தால) நெல் உயரும - நெற் பயிரானது வளர்ந்து உயர்வடையும், (அங்ஙனம் வளர்ந்த நெல் நல்ல விளைவைக்கொடுக்கக குடியானவாகள செழிப் படைவார்கள் அவவாறு நிலவளத்தால்) சீர்சான்ற - சிறப்பு மிகுந்த, தாவா - அழியாத, குடி உயர - குடியானவர்கள் உயர்வடைய, தாங்கு அரும் - (பிறரால்) தாங்குதல் அரிதா கிய, சீர் - சிறப்பினையுடைய, கோ உயரும் - அரசன் உயர் வான் (என்று), உலகு - இவ்வுலகமானது, ஓவாது உரைக் கும் - ஒழியாமற் சொல்லா நிற்கும்; (எ - று.)

(ப-பொ-ரை.) வார்சான்ற கூந்தலையுடையாய்! வயலி னது வரம்புயரவே, வைகலு நீருயர்ந்து, நாடோறு நெல்லுய ரும், சீரமைந்த கெடாத குடியுயரவே, பகைவராற்றாங்குதற் கரிய சீர்மையையுடைய மன்னுயரு மென்றொழியாதே சொல்லாநிற்கு மிவ்வுலகம்.

(க-ரை.) வரம்புயர நீருயரும், நீருயர நெல்உயரும், நெல் லுயரக் குடியுயரும், குடியுயரக் கோனுயர்வான் என்பதாம்.

வார் - நீட்சி. சான்ற - சால் என்னும் உரிச்சொல்லடி யாகப் பிறந்த பெயரெச்சம், தாவா - ஈறு கெட்ட. எதிர் மறைப் பெயரெச்சம். தா - பகுதி. உலகு - இடவாகு பெய ராய் உலகோரை யுணர்த்தியது. பதவுரையில இடையி டையே சிற்சில சொற்கள் பொருள் முடிபுகேற்ப இசை யெச்சமாக வருவிக்கப்பட்டன. (சசு)

அழியாமை யெத்தவழுஞ் சார்ந்தாரை யாக்கல்
பழியாமை பாததலயா மாட்டு—மொளியாமை
கனறுசா வப்பால கறவாமை செய்யாமை
மன்றுசார் வாக மனை.

(ப-ரை.) எ தவமும் - எவ்வகைப்பட்ட தவத்தினையும், அழியாமை - கெடுக்காமையும், சார்ந்தாரை - தம்மை வந் தடுத்தவரை, ஆகுகல் - உயரச் செய்தலும், பழியாமை - பிறர் தம்மைப் பழியாமல், யார்மாட்டும் - யாவரிடத்தும், ஒளியாமை - மறைக்காமல், பாத்தல் - பகுத்துண்டலும், கன்றுசாவ - கன்று இறந்துபோன பின், பால் கறவாமை - அதன் (தாய்ப்பசுவின்) பாலைக் கறவாமையும், மன்று சார்வு ஆக - மன்றை யடுத்திருக்க, மனைசெயயாமை - மனையெடா மையும, (ஆகிய இவை நனமையென்று கூறுவர் பெரி யோர்) எ - று.

(ப-பொ-ரை.) யாதானுமொரு தவத்தை யழியாமையும், தம்மையடைந்தாரை யாக்குதலும், பிறர்தம்மைப் பழி யாமை, யாவர் மாட்டு மொளியாமைப் பகுத்துண்டலும், கன்று சாவப் பால்கறவாமையும், மன்றருகு மனையெடாமை யுஞ செய்க.

(க-ரை.) தவத்தை யழிக்காமையும், அடைந்தாரை யாக் குதலும, பிறர் தம்மைப் பழியாமையும,கல் றிறந்த பசுவைப் பால் கறவாமையும், மன்று சார்வாக மனை யெடாமையும நற்செயல்களா மென்பதாம்.

தவத்தை யழித்தலாவது - தவத்திற்கு இடையூறு செய் தல். பழியாமை - எதிர்மறைவினையெச்சம். மன்று - நீதித் தலம், சபை. மனைசெயதல் - வீடெடுத்தல்; கட்டுதல். சாவ - என்பதற்கு இறந்து போகும்படி என்றும கூறலாம். (சஎ)

நசைகொல்லார் நச்சியார்க் கென்றுங் கிளைஞர்
மிசைகொல்லார் வேளாணமை கொல்லா—ரிசைகொல்லார்

பொனபெறும் பூஞ்சுணங்கின் மென்முலையாய்! நன்
என்பெறினுங் கொல்லா ரியைந்து. [குணார்ந்தார்

(ப-ரை.) நச்சியார்க்கு - தம்மை விரும்பினவரது, நசை - விருப்பத்தை, என்றும - எக்காலத்தும், கொல்லார் - கொல்ல மாட்டார், கிளைஞர்மிசை - தம கிளைஞர் மிசையுமுணவினை, கொல்லார் - கொல்லமாட்டார், இசை கொல்லார் - தமக்கு வரும் புகழையுங் கொல்லமாட்டார், வேளாணமை - ஒருவர் மற்றொருவாக்குச் செயயும் உபகாரத்தை, கொலலார் - கெடுக்கமாட்டார், நனகு உணர்ந்தார் - அறத்தை யறிந்தவர, எனபெறினும் - எவ்வின்பத்தைப் பெறலாயிருப்பினும், இயைநது - மனம் இசைந்து, கொல்லார் - ஒருயிரையுங் கொல்லமாட்டார், பொன்பெறும் - பொன்னிறத்தைப் பெறற, பூ - அழகாகிய, சுணங்கின் - தேமலியுடைய, மெல முலையாய - மெல்லிய முலைகளை யுடையாய்! (எ - று.)

(ப-பொ-ரை) தம்மை நச்சியாருடைய நசையை யெஞ் ஞான்றுங் கொல்லார், தங்கிளைஞர மிசையும் மிசையைக் கொல்லார், உபகாரத்தைக் கொல்லார், புகழைக் கொல்லார், பொன்போலும் பூஞ்சுணங்கின் மென் முலையாய! மிகவு முணர்நதா ரெல்லாவின்பமும் பெற்ரராயினும் பிறி தோருயிரை மேவிக்கொல்லா.

(க-ரை) நன்குணர்ந்தார் நசை கொல்லார், கிளைஞர் மிசை கொல்லா, வேளாண்மை கொல்லார், இசை கொல்லார், ஓருயிரையுங் கொல்லார் என்பதாம்.

நசை - விருப்பம்; கொல்லல் - கொடுத்தல். மிசை - உண்ணல் முதனிலைத் தொழிற்பெயர். இஃது ஆகுபெயராய் உணவை உணர்த்தியது. வேளாண்மை கொல்லார் என்பதற்குப பலாக்கும பயன்படுவதான பயிர்த்தொழிலைக் கெடுக்கமாட்டார்கள் எனப் பொருளுரைத்தலுமாம். நன்கு- பண்புப்பெயர். (சு அ)

நீண்டநீர் காடு களர்நிவந்து விணடோய
மாண்ட மலைமக்க ளுள்ளீட்டு—மாண்டவ
ராய்ந்தன வைந்து மரணு வுடையாவி
வேந்தனு நாட்டல் விதி.

(ப-ரை.) நீண்டநீர் - நகரைச்சுற்றி நீண்டுவளைந்த அகழி நீரும், காடும் - காட்டெல்லையும, களர் - சேற்று நில

வெல்லியும, நிவந்து - உயர்ந்து, விணதோயும் மாண்ட மலி - வானத்தைத் தொடுகின்ற மாட்சிமைப்பட்ட மலியும், மக்கள் - குடிமக்களையும், உள்ளிட்டு - அகபபடுத்து, மாண்டவர் - பெரியோர, ஆய்ந்தன ஆராய்ந்தெடுத்தனவாகிய, ஐந்தும - இவவைந்தனையும், அரண் ஆ உடையானை - தனக்கு அரணாக வுடையவனை, வேந்தன் ஆ நாட்டல் - அரசனாக ஏற்படுத்தல், விதி - முறையாகும்; (எ - று)

(ப-பொ-ரை.) மிக்க நீரும் காடும் சேறும் கிளர்ந்து விண்டோயு மாண்டமலியும் மக்களுமகப்பட வாய்ந்து சொல்லப்பட்ட வைந்தானுந் தனக்கரணாக வுடையானை வேந்தனை நாட்டத்தரும்.

(க-ரை.) நீரரண் முதலிய ஐந்துவகை அரண வலிமை களையும் உடையான் ஒரு நாட்டுக்கு அரசனாக அமைதல் நன்மையாம்.

நீண்டநீர் - அகழி. களர் - சேற்றுநிலம்; பகைவர் கால் வைத்தால் அவர்கள் கால்களை உளளிழுத்து நடக்க முடியாத படி செய்வது. உள்ளிட்டு என்பது சோதது என்னும பொருளிலும் வரும். காடு - குறுங்காடு, பெருங்காடுகள். மாண்ட என்பதை மக்களுக்கு அடையாக்கிப் போர்த்தொழிலிற் கைவந்த மக்கள் என்க. (சுக)

பொச்சாப்புக் கேடு பொருட்செருக்குத தானகேடு
முற்றுமை கேடு முரணகேடு—தெற்றத
தொழின்மகன றனனேடு மாறுயி னெனறு
முழுமகற்குக் கேடி னுரை.

(ப-ரை.) உழுமகற்கு - உழவுதொழிலையுடைய மனிதனுக்கு, பொச்சாப்பு கேடு - மறதி கேடாம், பொருள் செருக்கு - பொருளை மிகுதியாலுண்டாகும் செருக்கு, கேடு - கெடுதியாம், முற்றுமை - அறிவு முதிராமை, கேடு - கெடுதியாம், முரண கேடு - பிறரோடு மாறுபடுதல் கெடுதியாம், தெற்ற - தெளிவாக, தொழில்மகன் தன்னேடு - தனக்கு அடிமைத் தொழில் புரியும் மனிதனேடு, மாறு ஆயின - பகைமையானால், எனறும் - எஞராளும், கேடின் உரை - கேடாகச் சொல்லக் கடவை; (எ - று.)

(ப-பொ-ரை.) கடைப்பிடி யில்லாமை கேடு, பொருள் மிகவுடைமையாற் களிக்குங களிப்புக் கேடு, தானறிவு முதி

ராமை கேடு, பிறரொடு பகைகோடல் கேடு, தெளியத் தனக்குத் தொழில் செய்யு மகனெடு மாறுபட்டுச சீறுவனுயின் உழவினுல வாழுமகற்குக் கேடாய்விடும்.

(க-ரை.) வேளாளனுகுப் பொச்சாப்பு முதலியன கேடுதருவனவாம்

செருக்குத்தான் : தான் - அசை மூற்றுமை - தொழிற் பெயர். கேடு - முதனிலை திரிந்த தொழிற் பெயர், கேடின் என்பதில இன்சாரியை. மகன் தன்னெடு தன் - சாரியை. பொச்சாப்பு - கடைப்பிடியின்மை. கடைப்பிடி - கருமமுடிக்குந துணிவு. செருக்கு - களிப்பு. உழுமகன் - உழுதொழில் செய்து வாழுமகன். (ரு0)

கொல்லாமை நனறு கொலை தீதெழுததினைக
கலலாமை தீது கதநதீது—நலலார்
மொழியாமை முனனே முழுதுங் கிளைஞர்
பழியாமை பலலா பதி.

(ப-ரை.) கொல்லாமை - ஓருயிரையும் கொல்லாமை, நன்று - நனமையாம், கொலை தீது - கொல்லுதல தீமையாம், எழுத்தினை கல்லாமை தீது - எழுத்தைக் கற்றுக்கொள்ளாமை தீமையாம், கதம் தீது - பிறரைக் கோபித்தல் தீமையாம, நல்லார் மொழியாமை முன்னே - அறிவுடையார் தனக்குச் சொல்வதற்கு முன்பே, கிளைஞர் முழுதும் பழியாமை - தன்னைச் சேர்ந்தவரெல்லாரும் பழியாதவழி யொழுகுவான், பல்லா - பலர்க்கும், பதி - இறைவனுதற குரியவன் ; (எ - று.)

(ப-பொ-ரை) ஓயிருரைக் கொல்லாமை நன்று, கொலை தீது, எழுத்தினைக் கல்லாமை தீது, பிறரை வெகுளல் தீது, அறிவுடையார் தமக்கு மொழிவதறகு முன்னேயும் பழியாதவழியொழுகுவான் பலர்க்கு மிறைவனுவான்.

(க-ரை.) பலர்க்குந் தலைவனுவானெருவன் சான்ரோர் அறிவு சொல்லுதறகு முன்னமேயே தானேயுணர்ந்து கிளைஞரைப பழியாமை முதலியன அவற்கு நன்மையாம்.

எழுத்தினைக் கல்லாமை - கல்வியைக் கல்லாமை. கதம் - கோபம். பதி - தலைவன். கொலை - தொழிற் பெயர். 'அறவினை யாதெனிற் கொல்லாமை', 'நல்லாறெனப் படுவது...

யாதொன்றுங் கொலலாமை சூழு நெறி' முதலியன கொண்டு, "கொல்லாமை நன்று" என்றார். (நாக)

உணர்ணமை நனறவா நீககி விருந்துகணமா
றெணர்ணமை நனறிகழ நீதெளியா—ரெணணி
னரியரா வார்பிறரிற் செல்லாரே யுண்ணூர
பெரியரா வார்பிறர் கைதது.

(ப-ரை.) அவா நீக்கி - (துறந்து) அவாவினை யொழித்து, உண்ணமை - உண்ணாது நோற்றல், நன்று - நனமையாம், விருநது - விருந்தினரை, கண்மாறு எண்ணமை - கண்மாறு நினையாமை, நன்று - நனமையாம், எளியார் இகழல் - தம்மின் எளியாரை இகழ்ந்துரைத்தல், தீது - தீமையாம், எண்ணின் - ஆராயுமிடத்தில், அரியர் ஆவார் - பெறுதறகரியராவார் (யாரெனின்), பிறா இல் செல்லாரே - பிறரில்லாளை விரும்பி அவரிடத்திற் செல்லாதவரே, பெரியராவார் பிறர்கைத்து உண்ணூர் - பெரியராவார் (யாரெனின்) பிறர் பொருளை யுண்ணுதவரே; (எ - று.)

(ப-பொ-ரை) துறநதவா நீக்கி யுண்ணமை நோற்றனன்று, மனைவாழ்க்கையின்கண் அறிவாராயின் விருந்தினரைக் கணமாறுத னினையாமை நனறு, தமக்கெளியாரை யிகழ்ந்துரைப்பா ராயிற் றீதாம், ஆராயிற் பெறுதற் கரியராவார் பிறா மனையாளை விரும்பி யொழுகாதார், பெரியராவார் பிறரை யிரநதுண்ணுதார்.

(க-ரை) அவாவை யொழித்துத் துறந்து உண்ணுது நோற்றல் நன்மை, விருந்தினரைக் கண்ணோட்டஞ் செய்தல் நன்மை, எளியாரை யிகழ்தல் தீமை, பிறர் மனைநோக்காதவர் அரியர், பிறர் பொருளுண்ணுதவர் பெரியர் எனபதாம்.

உண்ணமை நோற்றற்கேயாதலால், உணர்ணமை என்பதற்கு உண்ணாது நோற்றல் என்றுரை கூறப்பட்டது. விருந்து - பண்பாகு பெயர், கண்மாறெணர்ணமை - கண்ணோட்டஞ் செய்தல். இல்-இடவாகு பெயர். கைத்து - கையிலுள்ளது, பொருள. விருந்தினர்மீது வெறுப்புருமையும் பிறர் மனை விரும்பாதிருத்தலும் சிறநத அறங்களாம். (நாக)

மக்கட் பெறுதன் மடனுடைமை மாதுடைமை
யொக்க வுடனுறைத லாணமைவு—தொக்க

வலவலே யல்லாஅமை பெணமகளிர்க் கைந்து
தலேமகனேத் தாழ்க்கு மருந்து.

(ப-ரை.) மக்கள் பெறுதல்-தான் மக்களேப் பெறுதலும், மடன் உடைமை - அடக்க முடைமையும், மாது உடைமை - அழகுடைமையும, ஓக்க உடன் உறைதல் - (கணவனது) கருத்துக்கு இசைய அவனேடுறைதலும், ஊண் அமைவு - (அவனுண்ணும்) உணவின் மிகுதியை விரும்புதலும், தொக்க-கூடிய, ஐநது - ஐநது குணங்களும, அலவலே அல்லாமை - அற்ப காரியங்களல்லாமையால், பெண மகளிர்க்கு - பெண டிர்க்கு, தலேமகனே - தம் கொழுநனே, தாழ்க்கும் - தம்மிடத் தில் வணக்குகிற, மருந்து - மருந்தாகும; (எ - று.)

(ப-பொ-ரை.) தான் மக்களேப் பெறுதல், அடக்க முடைமை, அழகுடைமை, அவனிலேவிற கொக்க உடனெழு குதல, அவனுண்ணும உணவுக்கு விரும்புதலென இத் தொக்க ஐந்து குணனும் பிறரையொத்தலே தனக்கொழுக்க மாகவுடையளல்லளாயிற் றங்கொழுநனேத் தம்பாற் பெண டீர் வணககும் மருந்தாவாள்.

(க-ரை.) மக்கட்பேறும், அடக்கமுடைமையும், அழ குடைமையும, கணவனுடைய கருத்துக்கிசைய அவனேடுட னுறைதலும், அவனுண்ணும உணவை விரும்புதலும் ஆகிய இவ்வைநது குணங்களும பெண்டிர்க் கிருக்குமாயின அவை அவர் கணவரை வணக்கு மருநதாகும் எனபதாம்.

மகளிர்க்கு மக்கட்பேறே சிறந்ததாதலின், 'மக்கட் பெறுதல' என்றார். மடன் - மடம் என்பதன் போலி. ஈண்டு அடக்கம் என்னும் பொருளது. ஊண் அமைவு என்பதற்குக் கணவனுகுப் பிரியமான உணவைச் சமைக்குந்தொழிலில் பொருத்த முடைமையும் எனப் பொருளுரைப்பினும் அமை யும். மாது - விருப்பம், இங்கு விருப்பத்தைத் தரும் அழகை யுணர்த்திற்று. தலேமகன் - கணவன்; ஒரு சொல். அலவலே - அற்ப காரியம். (நூ)

கொணடான கொழுந னுடன்பிறந்தான் றனமாமன
வணடார்பூந் தொங்கல் மகன்றந்தை—வண்டாராய்!
யாப்பார்பூங் கோதை யணியிழையை நன்கியையக
காப்பரார் கருது மிடத்து.

(ப-ரை.) கொண்டான் - கணவனும், கொழுநன் உடன் பிறந்தான் - கணவனுடன் பிறந்தவனும், தன் மாமன் - தன மாமனும், வண்டு ஆர் - வண்டுகள் மொய்க்கின்ற, பூ தொங கல் - பூமாலையை அணிந்த, மகன் - மகனும, தகதை - தகப பனும், யாப்பார் - கட்டுதலமைந்த, பூகோதை - பூமாலையை யணிந்த, அணியிழையை - அழகிய நகையை அணிநத ஒரு பெணணை, கருதும இடதது - நினைக்குமிடத்து, நன்கு இயைய - நன்மை யுண்டாக, காப்பார் - காப்பவராவார், வணதாராய் - வளவிய பூமாலையை யுடையவளே, (எ - று)

(ப-பொ-ரை.) தன்னைக்கொண்ட கொழுநனும், உடன் பிறநதானும், மாமனும், வண்டார் பூந்தொஙகல் மகனும் தந்தையுமென இவ்வைவரும் யாப்பார் பூஙகோதை யணி யிழையை மிகவுஞ செறியக் காப்பார்கள்; வண்டாராய்.

(க-ரை) ஒரு பெணணின் கற்புக் கழிவுவராமல் காக்கத் தக்கவர், கணவன், கணவனுடன பிறநதவன், மாமன், மகன், தநதை இவ்வைவரும் என்றபடி.

வண்டாராய! என்றது மகடூஉ முன்னிலை. அணியிழை - விசேஷத்தொகைப புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். நன்கியையக் காததலாவது கற்பாகிய நன் மையமையக் காத்தல் யாப்பு - தொழிற்பெயர்; கட்டுதல். கோதை - மாலை. (ருச)

ஆமபல்வாய் கண்மனம வார்புருவ மெனறைநது
தாமபலவா யோடி நிறைகாத்த—லோமபார்
நெடுங்கழைநீண மூஙகி லெனவிகழந்தா ராட்டுங
கொடுங்குழை போலக் கொளின.

(ப-ரை.) ஆம் - உண்டாகிய, பல் - பல்லும், வாய - வாயும், கண் - கண்ணும, மனம் - மனமும், வார்புருவம் - நீணடபுருவமும், என்ற ஐந்தும - என்று சொலலப்பட்ட உறுப்பைநதையும் (கண்டு), தாம்பல்வாய ஓடி - தம் மனம் பலவிடங்களிலோடி, நிறைகாத்தல் ஒம்பார் - தமது நிறை யைக் காக்கவியலாத ஆடவர், ஆட்டும - அசைவிகிறு, கொடுங்குழை - கொடுஙகுழை யணிந்த பெண்ணை, நெடும கழை நீள் மூஙகில் என - நெடிதாய்த் திரணட நீண்மூங்கில் போலக் கருதி, இகழ்ந்தார் - இகழ்ந்தாராய், போல - அம் மூங்கிலைப்போல, கொளின் - மனத்தகத்தே கொன்வா ராயின், (அவ்வாடவர் நிறைகாத்த லோம்புவர்); (எ - று.)

(ப-பொ-ரை.) பல்லும் வாயும் கண்ணும் மனமும் புருவமுமாகிய உறுப்பைந்தையுங் கணடு அரிவையர்க் கன் பாயத் தாம் பல இடங்களிலுடித் தங்கள் நிறையைக் காக மாட்டாதார் குவளையையுந் தாமரையையு மசைவிக்கின்ற காதிற் கொடுங் குழையையுடைய அரிவையை நெடிதாய்த திரண்ட நீள்மூங்கிலைப போலக் கருதி யிகழ்வராயின் அவர்க்கு நிறைகாகலாம்.

(க-ரை.) மனவுறுதியின்றிப் பெண்ணைசையால் ஓடித் திரிபவர், பெணகளின் பல் வாய் முதலிய ஐந்தையும் மூங்கி லின் தனமையையுடையன எனக் கொணடால், மூங்கிலே என்று பெண் தன்மையை இகழ்ந்து, பெண்விருபபை நீக்கி யவராய் விடுவர்.

அரிவையை மூங்கில் போலக் கொண்டிகழுதலாவது, மூங்கிலிலுள்ள முத்து அவள் பல்லாகவும், மூங்கிலின் குழல் அவள் வாயாகவும், மூங்கிலின் கணு அவள் கண்ணாகவும், பொய்ப்பட்ட உள்ளம் அவள மனமாகவும், மூங்கிலின் வில் அவள் புருவமாகவும், கொண்டிகழ்தல். இவ்வகைக் கருத லால் அவள்மே லன்பு நிகழாதெனக கொள்க. கழை - மூங் கில் தாம் - அசை. கொடுங்குழை - பண்புத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித தொகை முத்து, மூங்கில முதலிய இருபது பொருள்களிடத்தும பிறக்கும். (டுடு)

பொனபெறுங் கறறுன பொருளபெறு நற்கவி
யெனபெறும் வாதி யிசைபெறு—முனபெறக்
கலலார்கற றுரினதத ரல்லார் பெறுபவே
நலலா ரினதது நகை.

(ப-ரை.) கற்றுன் - கற்றுவலலவன, பொன்பெறும் - பொன்னைப் பெறுவான், நல்கவி - பாடவல்லவன். பொருள பெறும் - (அரசனை) எலலாப் பொருள்களையும் பெறுவான், வாதி - வாதுசெயது வெலல வல்லவன், என்பெறும் - ஏது பெறுவானெனின், இசைபெறும் - (வென்றனன் என்னும்) இசையைப் பெறுவன, முன்பெற - காலமுண்டாக, கல் லார் - கல்வி கல்லாதாரும், கற்றுர இனத்தர் அலலார் - கற்றுரினத்தரல்லாதாரும், நல்லார் இனத்து - நல்லோர் கூட்டத்தினடுவே, நகைபெறும் - அவரால் நகைக்கப்படு தலைப் பெறுவர்; (எ - று.)

(ப-பொ-ரை.) கற்றுவல்லவன் பொன்னீன பெறும், நற்கவி செய்யவல்லவன் அரசனுலே யெல்லாப் பொருளும் பெறும், வாதம பணணி வெல்ல வல்லவன் யாது பெறுமெனின் வென்றுனென்னும் புகழைப்பெறும், முன்னே இளமைக் காலத்திலே கலலாதாரும், கற்று வல்லாரினத் தல்லாதாரும் நல்லாரினத்தினுடுவே இகழ்ச்சி பெறுவர்.

(க-ரை.) கறருன் பொன் பெறுவான், கவி பொருள பெறுவான், வாதி இசை பெறுவான், கல்லாரும், அவரைச சாராதவரும் இகழப்பெறுவர் எனபதாம். (ருசு)

நலல வெளிபபடுததுத தீய மறந்தொழிந்
தொலலை யுயிர்ககூறறங கோலாகி—ஒலலுமெனின
மாயம பிறர்பொருட்கண மாறறுக மானததா
ணுயி னழித லறிவு.

(ப-ரை.) (ஒருவன்) நலல - (பிறர் தனக்குச் செய்த) நல்லவற்றை, வெளிப்படுத்து - பலர்க்கும் வெளியிட்டுச் சொல்லி, தீய - தீயவற்றை, மறந்து ஒழிந்து - நிலையாது அவற்றின் எணணத்தைவிட்டு நீங்கி, ஒல்லும் எனின் - தன்னுல் இயலுமேயானுல், உயிர்க்கு - இடையூற்றுக் குட்பட்ட பிற உயிர்கட்கு, ஒல்லை - விரைவில், ஊற்றங்கோல் ஆகி - ஊன்றுகோல் போல் நின்று உதவி, பிறர் பொருட்கண் - பிறர்க்குரிய பொருளில், மாயம் மாற்றுக - வஞ்சனைச் செயலை நீக்குக, மானத்தான் ஆயின் - மானமுடையான் ஆனுல், அழிதல் - குற்றம வந்த விடத்து உயிர்விடுதலே, அறிவு - அறிவுடைமையாம; (எ - று).

(ப-பொ-ரை.) பிறர் செய்த நன்மைகளை வெளிப்படப் பணணி, பிறர் செயத தீமைகளை நினையாது மறந்தொழிந்து, பிறவுயிர்கட் கிடையூறு வந்தால் அவ்வுயிர்கட்கு விரைந்து ஊற்றுகோலாகி, தனக்கியலுமாகிற் பிறர் பொருட்கண் வஞ்சனையைத தவிர்ந்து, பெரிய மானங் காத்தற் பொருட்டாகத் தான் சாதல் தனக்கு அறிவாவது ஆராயின்.

(க-ரை) நல்லன வெளிப்படுத்தல் முதலியவற்றை ஒருவன செய்யக்கடவன.

மறந்து என் னது 'மறந்தொழிந்து' என்றமையால் மனத்து நினைத்தலுமாகாது என்றதாயிற்று. நல்ல, தீய - குறிப்பு வினையாலணையும் பெயர்கள். ஊன்றுகோல் என்

பது வலித்து அம்சாரியை பெற்று ஊற்றங்கோல் என் ருயிறறு. ஆய்தல் - ஆராய்தல். மானததான் - ஆன்உருபு நான்காவதன் பொருட்டுப்பொருளில் வந்தது. 'மானமழிந்த பின் வாழாமை முன்னினிறு' என்ற இனியவை நாற்பதின் அடி கருதத்தக்கது. (நுஎ)

தனனிலையுந் தாழாத் தொழினிலையுந் துப்பெதிர்ந்தா
ரினனிலையு மீடி யியனிலையுந்—துன்னி
யளநதறிந்து செய்வா னரசமைச்சன் யாதும
பிளந்தறியும் பேராற்ற லான.

(ப-ரை.) தன்னிலையும் - தனது நிலைமையினையும், தாழா - தாழ்தலிலலாத, தொழில் நிலையும் - தான் தொடங் கிச் செய்யும் வினையினது நிலைமையினையும், துப்பு - வலியி னால், எதிர்ந்தார் - (தன்னோடு) எதிர்த்தவராகிய பகைவரிடத் துளதாகிய, இன்நிலையும - இனிய நிலைமையினையும், ஈடுஇல- கேடில்லாத, இயல்நிலையும் - உலக வழக்கு நிலைமையினையும், துனனி - நெருங்கி, அளந்து அறிந்து - ஆராய்ந்தளவிட்டுத் தெரிந்து, செய்வான் - (போர்முதலிய அரசுக்குரிய தொழி லைச்) செய்பவன், அரசன் - அரசனுவான், யாதும் - எல்லா வற்றையும், பிளந்து அறியும் - பாகுபடுத்தறிகின்ற, பேராற் றலான் - பெரிய ஆறறலையுடையவன், அமைச்சன் - அமைச்ச னுவான்; (எ - று.)

(ப-பொ-ரை.) தன்னுடைய நிலைமையினையும், தாழ்வின் றித் தான் செயயும வினையது நிலைமையினையும், வலியினுற் றன்னுடனெதிர்ந்த மாற்றூமாட்டுளள இனிய நிலைமை யினையும், கேடில்லாத வுலக வழக்கு நிலைமையினையும், ரூன் புக் காராயந்தறிந்து செலுத்துவான் அரசனுவான், அந் நான்குமன்றி மற்றுமெல்லாம் வேறு பகுத்தறியும் பெரிய வாற்றலையுடையான் அமைச்சனுவான்.

(க-ரை.) தன்நிலை, தனவினைநிலை, பகைவர்நிலை, உலகிய னிலை என்பவற்றை யாராய்ந்து செய்பவனே அரசனுவான். இவற்றையே யன்றி மற்றெல்லாக் காரியங்களையும் பகுத் தறிய வல்லவனே அமைசசனுவான்.

தாழ்தல் - தாமதித்தல். துபபு - வலி. ஈடு - அழிவு. இயல் - உலகியல். ஆற்றல் - வினைமுடிக்குந் திறம். உல கியல் எல்லாவற்றினுஞ் சிறந்ததாதலின் 'ஈடில் இயல்' எனப்பட்டது. (நுஅ)

பொருள்போக மஞ்சாமை பொன்றுங்காற் போந்த
அருளபோகா வாரறமென றைந்து—மிருடீரக்
கூறப படுங்குணததான் கூர்வேல்வல வேந்தனற்
றேறப் படுங்குணததி னை.

(ப-ரை.) பொருள் - பொருளும, போகம - இன்பமும், அஞ்சாமை - (இடுக்கண் வருதால் அதற்கு) அஞ்சாமையும், பொன்றுங்கால் - பிறிதோருயிர அழிய வந்த விடத்து, போகத அருள் - மிக்க அருளும், போகா - நீங்காத, ஆர் - அரிய, அறம் - அறமும், என்ற ஐந்தும் - என்று சொல்லப் பட்ட இவ்வைந்தும, இருள்தீர - குற்றந தீர, கூறப்படும் - சொல்லப்படுகின்ற, குணத்தான் - தன் குணங்களை யுடைய வன், கூர் - கூரிய, வேல - வேற்படையையுடைய, வல் வேந்த னை - வலிய அரசனை, தேறப்படும் - (ஒரு கருமத்தின் மேற் செலுத்தத் தகுதவனென்று) தெளியப்படுகிற, குணத்தினை - குணததை யுடையவனென்று சொல்லபபடுவான்; (ஏ - று.)

(ப-பொ-ரை.) பொருளும், இன்பமும், இடுக்கண் வந்தா லஞ்சாமையும், பிறிதோருயிர் பொனறவந்தவிடத்து மிக்க வருளும, நீங்காத வரிய வறமுமென்று சொல்லப்பட்ட இவ் வைந்துங குற்றந்தீரச் சொல்லப்படுங் குணத்தான் கூர் வேலை வலல வேந்தனை லொரு கருமத்தினன றுய்த்துத் தேறப்படுங் குணததினன்.

(க-ரை) பொருளும், இன்பமும், இடுக்கண் வந்த காலத்து அதற்கஞ்சாமையும், பிறிதோருயிர் அழிய வந்த விடத்து அதற்கிரங்கும் அருளுடைமையும், அருமையாகிய அறமும் என்று சொல்லப்பட்ட இவவைநததினையு முடைய வன் அரசனலொரு கருமத்தினமேற் செலுத்துதற்குரிய னுவான்.

இன்பம் முதலியவற்றை நுகர்தல் பொரு ளில்வழி கூடாமையின் பொருளை மூனவைத்தார். அறம்போலச் சிறநதது மக்களுயிர்க்குப் பிறிதொன்றின்மையான் ஆரறம் என்ரூர். என்றைந்தும - என்பதில் என்ற என்பதின் ஈற் றகரந் தொகுத்தல். தேறல் - தெளிதல்; நம்புதல். போந்த என்பது வந்த என்னும் பொருளில் நின்றது. (ருகூ)

நன்புலதது வையடக்கி நாளுமா டோபோற்றிப்
புன்புலத்தைச் செய்தெருப் போற்றியபி—னின்புலத்தின்

பணகலப்பை யென்றிவை பாற்படுப் பானுழவோ
நுண்கலப்பை நூலோது வார்.

(ப-ரை.) நன்புலத்து - விளை நிலத்திலுள்ள, வை - வைக்கோலை, அடக்கி - (தன்னிடத்துள்ளதாகத்) திரட்டி, நாளும் - நாடோறும்; மாடு - உழுமாடுகளை, போற்றி - காப்பாற்றி, புன்புலத்தை - புல்லிய நிலத்தை, செய்து - நனசெய்யாகத் திருத்தி, எரு போற்றியபின் - எருவினால் அதனைப் போற்றின பின்பு, பண் - பண்படுத்தல், கலப்பை - கலப்பையால் உழுதல், என்ற இவை - என்ற இவைகளை, இன்புலத்தின பால் படுப்பான் - (உரமேற்றிய அந்த) நிலத்தினிடத்தே செய்பவன், உழுவோன் - உழுதொழிலிற் சிறந்தவனாவான், (இங்ஙனம் பெரியோர்) நுண் - நுட்பமாகிய, கலப்பை நூல்- உழவு நூலை, ஓதுவார் - சொல்லுவார்கள்; (எ - று.)

(ப-பொ-ரை.) விளைபுலத்திலுள்ள வைக்கோலினைத் தன்பாலுள்ளதாகத் திரட்டி, நாடோறும் உழும் பகடுகளைப் பாதுகாத்து, புன்புலத்தை நன்புலமாகத் திருத்தி எருவினை அதனைப போற்றிய பின்பு, பண்ணுங் கலப்பைகளை இன்புலத்தின்கட் பகுதிப்படுப்பானுழவனுவானென்று சொல்லுவார் நுணர்ணிய உழவுநூலோதிய அறிவார்.

(க-ரை.) வைக்கோலைச் சேர்த்து, அதனால் உழவெருதுகளைப போறறிப் புன்செயலை எருவிட்டு நன்செய்யாகத் திருத்திப் பின், அந்த நன்செய்யைப் பண்படுத்தல் உழுதல் முதலியவற்றைச் செய்பவனே உழுதொழிலாளன் என்று சொல்லுவர உழவு நூலோதியுணர்ந்தோர்.

புலம் - இடம், வயல். அடக்கல் - தன்னிடத்திற் சேர்த்தல். மாடோ என்பதில் ஓகாரம் இசை நிறை. இன்புலம் - நன்செய். எருவில்லாமையால் வனமையுற்றிருக்கும் நிலம் புன்புலம் எனபபடும். பண் - முதனிலைத் தொழிற் பெயர். கலப்பை - கருவியாகுபெயராய் அதன் காரியமாகிய உழவை யுணர்த்தியது. (சுo)

ஏலாமை நன்றீத றீதுபண் பில்லார்க்குச்
சாலாமை நனறுநூல் சாயினுஞ்—சாலாமை
நன்று தவறனி செய்தறீ தெனபாரை
யினறுகா றியாங்கண டிலம்.

(ப-ரை.) ஏலாமை - (ஒரு பொருளை ஒருவனிடத்துச் சென்றிரந்து அவர்கொடுக்க) ஏற்றுக்கொள்ளாமை, நன்று - நன்மையாம், பண்பு இல்லார்க்கு - நற்குணம் இல்லார்க்கு, ஈதல் - (அவர் வேண்டிய தொருபொருளைக்) கொடுத்தல், தீது - தீமையாம, நூல் சாலாமை - (நற்குண மில்லாதவர்க்கு) நூறகல்வி நிரம்பாதிருத்தல், நன்று - நன்மையாம், சாயினும் - (ஒருவன்) கெடுவதாயிருந்தாலும், சாலாமை - நற்குணங்களால் உயாவடையாதிருத்தலே, நனறு - நன்மையாம், நனி - மிகுதியாக, தவம் செய்தல - தவததை இயற்றுதல், தீது - கெட்டதாம், என்பாரை - என்று சொல்பவர்களை, யாம் - நாம், இன்று காறும் - இன்றளவும், கண்டிலம் - பார்த்திலம், (இவ்வாறு ஒருவரும் சொல்லமாட்டார்கள் என்றபடி); (எ - று)

(ப-பொ-ரை.) ஒருவா மாட்டுச் சென்றிரந் தேலாமையு நன்று, குணமில்லாதார்க்கு ஒன்றையீதலுந் தீது, குணமிலலாதார்க்கு நூல் நிரம்ப அறிவியாமையும் நன்று, ஒருவன் சால்புடையனல்லாமை நன்று, மிகத்தவஞ் செய்தல் நனறன்றென்று தாஞ்சாயினுஞ் சொலலுவாரை இன்றளவும் யாங கண்டிலேம்.

(க-ரை.) ஈயாமை முதலியன நன்மையாம், ஈதல் முதலியன தீமையாம் எனபவர் எவருமிலா.

ஏலாமை, சாலாமை என்ற எதிர்மறைத் தொழிற் பெயர்கட்குப் பகுதிகள் முறையே ஏல், சால் என்பன. 'இன்றுகாறியாங்கண்டிலம்' என்றமையால இனிக காணுமோ வென்னுமையம் நிகழ்தற்கிடமாயிற்றென்க சாயினும் என்பதன் உம்மை - உயர்வு சிறப்புப் பொருட்டு (கூக)

அரமபோற கிளையடங்காப் பெணவியகைத் தொணடு
மரமபோன மகனமாறுய் நினறு—கரமபோலக
கள்ளநோய காணு மயலுநது மாகுமே
லுள்ளநோய் வேணடா வுயிர்க்கு.

(ப-ரை.) அரம்போல் - அரம்போல் தனனைத் தேய்க்கின்ற, கிளை - உறவும், அடங்கா - தனக்கடங்காத, பெண் - மனைவியும், வியக்கத்தொணடு - அடங்காதனை செயயும் அடிமையும், மரம்போல் மகன - மரம்போன்ற தன்புதல்வனும், மாறு ஆய நின்று - மாறுபட்டு நின்று, கரம்போல - நுஞ்ச

போல, கள்ளம நோய் காணும் - வஞ்சகனியாகிய நோயைச செய்கிற, அயல் - அயலிருப்புமை, ஐந்தும் - ஆகிய இவ்வைந்தும், ஆகும் ஏல் - உளவாயின், உயிராகளுக்கு, உள்ளநோய் - மறரெரு மனப்பிணி, வேண்டா - வேணடப் படாது; (எ - று.)

(ப-பொ-ரை.) அரம்போலத் தன்னைத் தேய்க்குங்கிலை யும், தனகடங்காத மனவியும், அடங்காதனவே செயயுந் தொழும்பும், அறிவில்லாத தன்புதல்வனும, மாரூயத் தமக் கிடமாய் நோயைச் செய்யுமயலிருப்பு மெனை இவ்வைந தும் உளவாயினுயிருடையா ருள்ளத்திற்கு மற்றுநோய் வேண்டா.

(க-ரை) அரம்போலுஞ சுற்ற முதலிய ஐந்துமே மக் கட்கு, உள்ளக் கவலையை விளைத்தற்குப போதும்.

காணும் மயல் எனக்கொணடு, ஏறபடத்தக்க அனனிய மாதரின் மயக்கம் எனறலும் ஒன்று. வியகதத்தொணடு என்பதற்குப் பாராட்ட அதன பொருட்டுப் பணிபுரியும் அடிமையாளுமை என்பதுமாம். கிளை - தலலீறு கெட்ட தொழிறபெயர், கிளைத்தல் - நெருங்கல, இஃது ஆகுபெய ராய் நெருங்குதலையுடைய உறவினரையுணாத்தி நின்றது. பெண் மகன் முதலிய உயர்திணைப் பெயாகள் அஃறிணை யோடு கலந்து இழிவினுல் அஃறிணை முடிபையேற்றன. கிளை முதலியவற்றினிறுதியில் எணணும்மைகள் தொக் கன. (சூ உ)

நீரறம் நனறு நிழனனறு தலனிலலுட்
பாரறம் நனறுபாத துணபானேற—பேரறம
நனறு தளிசாலை நாட்டறற பெரும்போக
மொன்றுமாஞ சால வுடனை.

(ப-ரை.) நீர்அறம் - நீர் அறஞ்செய்தல், நன்று - நன்மை யாம், நிழல் நன்று - நிழலறஞ செய்தல் நன்மையாம், தன் இல்லுள் - தன் வீட்டில், பார் அறம் நன்று - பிறர் உறைய இடங் கொடுத்தலாகிய அறம் நன்மையாம, பாத்து - பிற வுயிர்கட்குப் பகிர்ந்து, உண்பானேல்-உண்பானுயின், பே அறம் - (அது) பெரிய அறமாம், தளி சாலை - கோவிலொடு மரஙகள் கவிந்த சாலையையும், நாட்டல - அழியாது நிலை பெறச் செய்தல், நனறு - நன்மையாம, (இவ்வைந்தனையுஞ்

செய்தவர்க்கு) பெரும்போகம் - பேரின்பம், உடன் - உடனே, சால - மிகுதியாக, ஒன்றும் - உண்டாகும்; (எ - று.)

(ப-பொ-ரை.) நீரறஞ் செய்தனன்று, நிழலறஞ செய்தனன்று, தன்மனியுட் பிறருறைய விடங்கொடுத்தனன்று, பகுத்துண்பாஞயிற் பேரற னன்று, தளியுஞ்சாலியும் நிலை பெறச் செய்தல னன்று, இவைலைந்துஞ் செய்தார்க்குப் பெரும்போகம் பொருந்தும.

(க-ரை.) தணணீர் அறம் முதலியன செயதார்க்குப் போகப பேறுகள் உணடாகும்.

நீர் அறம் - தணணீர் வார்ததலாகிய அறம். ஒன்றுமாம் என்பதில் ஆம் அசையிடைச் சொல. சால - உரிச்சொல் லடியாகப் பிறந்த விகீனயெச்சம். பார் அறம் - இடமில்லாது வருந்துவோர்க்கு இடம் உதவுதல். (சூடு)

பிடிபபிச்சைப் பினனிறை யையங்கூழ் கூறரே
டெடுததிரந்த வுப்பித துணையோ—டெடுததுச்
சிறுபய மெனனா சிதவலிப பீவார
பெறுபயன் பிை சாலப் பெரிது.

(ப-ரை.) பிடிப்பிசசை - ஒரு பிடியுளடங்கும் பிசசைச சோறும், பின இறை - பின்னா விரலிறை யளவு பிச்சைச சோறும், ஐயம் - உண்டோ இலலையோ எனறையப்படும் பிசசைச சோறும், கூழ்-கூழும், கூறறு ஓடு எடுத்து - இல்லை யென்று கூறுஞ்சொல்லையும் ஏறகும் ஓட்டையும் மேலே தூக்கி, இரந்த - இரக்கலான, உப்பொடு - உப்பும் (ஆகிய), இத்துணை - இவவளவும், சிறு பயம் - சிறு பயனுடையன, என்னா - என்று கருதாதவாகளாய, அடுத்து - (இரப்பவரிடத்தே) நெருங்கி, சிதவலிப்பு - குறைவுபட்ட பிசசையை, ஈவார் - கொடுப்பவர், பின் - பின்பு, பெறு பயன் - அடையும் பயன, சால பெரிது - மிகப்பெரியது, (எ - று.)

(ப-பொ-ரை.) ஒரு பிடியுளடங்கும் பிச்சை, விரலிறை யுளடங்கும் பிசசை, உணடோ இல்லையோ என்றையப்படும் பிச்சை, கூழ்வார்த்தல், ஒருவன் சொல்லோடடுத் திரந்த உப்பு இத்துணையும் பொருந்திய பயன சிறியவென்று கருதாராய சிதவலிப்பினை யீவார் பின்பு பெறும்பயன் மிகப் பெரிது.

(க-ரை) பிடிப்பிச்சை முதலியவை சிறியவை இவை தரும் பயனும் சிறியனவென்று நினையாது கொடுப்பவர் பின்பு பெறும் பயன் மிகப்பெரிது என்பதாம்.

பிடிப்பிசசை - கைப்பிடியுளள பிசசைச சோறு, கூழ் - மாவினுலாகசப்படும் உணவு. கூறறு ஓடு எடுத்து இரநத உப்பாவது-உப்பில்லாத ஒருவன் உப்பிடுங்கள் உப்பிடுங்கள் என்று கூவி ஓட்டையெடுத்துக்கொண்டு கேட்கும் உப்பு. சிதவலிப்பு - சித்தம் வலிப்பு - மன உறுதி யென்றலுமாம். "இறப்பச சிறிதென்னு தில்லென்னு தென்றும், அறப்பயன் யார்மாட்டுஞ் செயக - முறைப் புதவின, ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோல், பைய நிறைத்துவிடும்." எனபதற்கு இணஙக இம்மித துணையானும் இயைந்த கொடுத்துணவேண்டும். இறை, ஐயம் - அளவை யாகுபெயர்களாய்ப் பிச்சையை யுணர்த்தின. சிதவல - குறைவுபட்ட து. சிறுபயம் எனறது ஆகுபெயராய அதனை யுடைய பொருளை யுணர்த்தியது. (கூச)

வெந்தீக்காண வெண்ணெய மெழுகுநீர் சேர்மணணுப
பந்தன மகறசார்ந்த தந்தையென—றைநதினு
ளொன்றுபோ லுணணெகிழந தீயிற் சிறிதெனினுங்
குனறுபோற் கூடும் பயன்.

(ப-ரை.) வெம் தீ - வெப்பமாகிய நெருபபை, காண் - கண்ட, வெண்ணெய் - வெணணெயும, மெழுகு - மெழுகும், நீர் சேர் மண் - நீர் சேர்ந்த மண்ணும், உப்பு - உப்பும், அந்தம் - அழகையுடைய, மகன் சார்நத - மகனைத் தழுவிய, தந்தை - தகப்பனும், என்ற ஐந்தினுள் - என்று சொல்லப் பட்ட ஐந்தினுள்ளே, ஒன்றுபோல் - ஒனறு போல, உள நெகிழ்ந்து - (இரவலரைக் கண்டு) மனமிரங்கி, ஈயின் - ஒருவன் கொடுபபானுயின, பயன் - (அதனுலுளதாகும) பயன், குன்றுபோல கூடும் - மலைபோல மிகப் பெரியதாய் வந்து சேரும்; (எ - று.)

(ப-பொ-ரை.) வெவ்விய தீயைக்கணட வெண்ணெயும் மெழுகும், நீர்சேர்ந்த மண்ணும், உப்பும், தனனழகிய குளிர்ந்த மகனைத் தழுவிய தந்தையுமென்று சொல்லப்பட்ட ஐந்தினு ளொன்றுபோலே இரவலரைக் கணடால் உள்நெகிழ்ந்து ஈதலியைந்த பொருள் சிறிதாயினு மதனுல் வரும் பயன் குன்றுபோலப் பெரிதாய்க் கூடும்.

(க-ரை) நெருப்பைக்கண்ட வெண்ணெய் முதலிய பொருளகளி லொன்றைப்போல மன முருகி இரவலர்க்கு வேண்டும் பொருள் சிறிதாய் இயைந்தவளவிற் கொடுத்த வொருவனுக்கு அச்சிறு கொடையாலுண்டாகும் பயன் மலை போல மிகப் பெரிதாம்.

வெண்ணெய் முதலியவற்றி னிறுதியில் எண்ணும்மைகள் தொக்கு நின்றன. காண் வெண்ணெய் - விகாரத் தொகை. (சு டு)

குளந்தொட்டுக கோடு பதித்து வழிசீத
துளந்தொட டுழுவய லாககி—வளநதொட்டுப
பாகு படுங்கிணறரே டெனறிவ்வைம பாறபடுத்தா
னேகுஞ சுவாககத தினிது.

(ப-ரை.) குளம் தொடடு - குளத்தைத் தோண்டி, கோடு பதித்து - (சுற்றிலும்) மரக்கிளைகளை வெட்டி நட்டு, வழி சீத்து - மக்கள் நடக்கும் வழியைச் செதுக்கி, உளம் - (தரிசு நிலத்தின்) உள்ளிடத்தை, தொட்டு - வெட்டி (செப்பஞ் செய்து), உழுவயல் ஆக்கி - உழுகின்ற கழனியாகச் செயது, வளம் தொட்டு - (அவற்றுடனே) வளமாகத் தோண்டி, பாகு படும் - (சுற்றிலும்) கரையுண்டாகும், கிணறு ஒடு - கிணற்றையுண்டாக்குதலும், என்ற - என்று சொல்லப்பட்ட, இ ஐம் பால படுத்தான் - இந்த ஐந்து பகுதிகளையும் உண்டாக்கியவன், சுவர்க்கதது - சுவர்க்க லோகத்திலே, இனிது - இனிதாக ஏகும் - செல்வான்; (எ - று)

(ப-பொ-ரை.) குளத்தைக் கல்லி, மரக்காவை நட்டு, வழி சீத்துத் திருத்தி, மேடாயின நிலங்களை யுட்டோண்டி, யுழு வயலாக்கி வளம்படத் தோண்டி, வகுப்புப் படக் கிணறரே டு சொல்லப்பட்ட இவ்வைந்தும் மிகுதிபடச் செய்தான் சுவர்க்கத்திற்குச் செல்லு மோரிடையூறின்றி.

(க-ரை.) குளம வெட்டுதல் முதலிய அறஙக ளைந்தினையும, செயதவன் துறக்கம் புகுவன என்பதாம்.

தொடுதல - தோண்டுதல். கோடு - மரக்கிளை; அது சினையாகு பெயராய் மரத்தை யுணர்த்திற்று. உள்ளம் - உள்ளிடம். பாகுபடுதல் - பகுக்கப்படுதல் எனறுமாம். ஒடு - ஒடு என நீண்டு, எண்ணி நிறறற் பொருளில் வந்தது. பால் - பகுப்பு. இனிது ஏகும் என்றது இடையூறறினிலத்துப்

பெரும் பாமபாய் வீழ்ந்த நகுடன் போலாது இடையூறின் றிச் செல்வான் என றபடி. (சுசு)

போர்த்து முரிந்திட்டும் பூசியு நீட்டியு
மோர்தலொரு பான்மறைத தண்பான்மே—யோர்த்த
வறமாமேற் சொற்பொறுக்க வன்றேற் கலிக்கட்
டுறவறமபொய் யில்லறமே வாய்.

(ப-ரை.) போர்ததும் - முழுமெய்யும் தோன்றுமற் போரத்தும், உரிந்திட்டும் - உடுத்த உடையைக் களைந்தும, பூசியும் - உடம்பு முழுதும நீறு பூசியும, நீட்டியும் - சடையை நீட்டியும், ஓர்த்து - ஆராய்ந்து, ஒருபால் மறைத்து - உடம்பில் ஒரு பக்கத்தை மறைத்தும், உண்பான் - உணடற்கு, மேய் ஓர்த்த - மேவியாராயந்து கொண்டனவாகிய இவ்வேடங்க ளைநதும், மேல சொல அறம் ஆம் - மேலோர் சொல்லிய துறவறமே, பொறுக்க - (துறவறமாயின் பிறர் சொல்லிய கடுஞ்சொற்களைப்) பொறுததுக் கொள்க, அன்றேல் - பொருராயின், கலிக்கண் - இக்கலிகாலத்தில், துறவறம் பொய - துறவறம் பொயயாம், இல்லறமே வாய் - இல்லறமே மெய்யாம். (எ - று.)

(ப-பொ-ரை.) முழுமெய்யுந் தோன்றுமற போர்ததும், உடம்படைய நீறு பூசியும, சடையை நீட்டியும், உடமபிலொரு கூற்றினை மறைத்தும், உணடற்கு மேவியாராய்ந்து கொணடன இவவேடஙக ளைந்தும் பண்டுள்ள நலலார் சொல்லிய துறவறமே துறவறமாயிற் பிறர சொல்லிய கடுஞ் சொறகளைப் பொறுக்கப் பொருராயிற் கலிகாலத்தின்கண் நிகழும் துறவறம் பொயயாம், இல்லறம் மெய்யாவது.

(க-ரை.) உலகவர் பழியைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வதாயின, துறவறம் கொள்க; அன்றேல் இல்லறமே கொள்க என்பது.

போரத்தும் முதலிய உம்மைகள எணணும்மைகளாதலின், மறைத்து எனபதனோற்றிலும் அவ்வும்மை சேர்க்கப் பட்டது. உண்பான் - பானோற்று விகுதியெச்சம். மேவி என்பது மேய் என்றுயது. வாய்மை - மெய்: இது வாய் என ஈறு தொகுத்தல். தவவடிவங கொண்டவர்களில் உண்மையுடையவர்களையும் போலித் தவசிகளையும் பகுத்தறியுமாற்றல் பொதுமக்கட் கின்மையான் அவர்கள் எல்லாத்

துறவிகளையும் பழிப்பார்கள். துறவுக்கு முதலிலக்கணம் பொறுத்தல். இப்பொறை கொள்ளாதவன் துறவற மேற் கொள்ளல தகாது என்றபடி. கலிகாலத்தில் போலித் துற விகளே பெரும்பான்மையர் என்பது குறிப்பு. உரிந்திட்டு : இடு - துணைவினை. (கூஎ)

தானபிறந்த வினனினைந்து தனனைக் கடைப்பிடித்துத்
தான்பிற ராற்கருதற பாடுணர்ந்து—தானபிறராற
சாவ வெனவாழான் சானரோராற பலயாணடும
வாழக வெனவாழுத னனறு.

(ப-ரை.) தான்பிறந்த இல் நினைந்து - தான்பிறந்த குடியை நினைத்து, தன்னை கடைப்பிடித்து - தன்னை நல் லொழுக்கத்தில வழுவாதபடி கடைப்பிடித்து, தான் பிற ரால் கருதறபாடு உணர்ந்து - தான் பிறராலே மதிக்கப்படு தற்குரிய செய்கைகளை அறிந்து, தான் பிறரால் சாவ என வாழான் - பிறராலே இவன் செத்தொழிக வென்று சொல் லும்படி யொழுகாது, சான்ரோரால் - பெரியோரால், பல யாண்டும் - பல்யாண்டளவும், வாழ்க என - வாழ்கவென்று சொல்லும்படி, வாழுதல் - ஒருவன் உயிர் வாழ்ந்திருத்தல், நன்று - நன்மையாம்; (எ - று.)

(ப-பொ-ரை.) தான்பிறந்த குடியை நினைத்து, தன்னை யொழுக்கத்தின் வழுவாதவகைக் கடைபபிடித்து, தான் பிற ரால மதிக்கபபடுஞ செய்கையை யுணாந்து, தான் பிறராற் சாகவென்று சொலலும்படி யொழுகாது சான்ரோராலே பல்யாண்டும் வாழ்வானுக என்று சொல்லும்படி யொழுகுத னன்று.

(க-ரை.) ஒருவன் தான் பிறந்த குடியின் பெருமையை நினைத்தல் முதலியவற்றை யுடையவனுய் உயிர்வாழ்தல் நன் மையாமென்பதாம்.

இல் - குடி. இது முதலாகுபெயராய்த் தன்பெருமையை யுணர்த்தி நின்றது. கடைப்பிடித்தல் - தெளிவாயறிதல; உறுதியாய்ப் பற்றுதல். பாடு - பெருமை. வாழான் - முற் றெச்சம். சான்ரோ - நிறைவுடையவர். பெரியோர் ஒருவ னது நலலொழுக்கங்கண்டு மனமகிழ்ந்து இவன் இவ்வுலகத் தில் பல்யாண்டும் இனிது வாழ்ந்திருப்பானுகவென்று ஆசி கூறவேண்டுமென்பார், ''சான்ரோராற் பல்யாண்டும் வாழ்க வென,'' என்ரார். (கூஅ)

நெடுக்கல் குறுக்கல துறைநீர்நீ டர்டல்
வடுததீர் பகல்வா யுறையே—வடுததீரா
வாகுமந நான்கொழித தைநதடககு வாணகின
வேகுமபம வேணடாை விடும.

(ப-ரை.) (ஒருவன்) நெடுக்கல் - மயிரைச் சடையாக நீட்டு தலும், குறுக்கல் - மயிரைக் குறைததலும், துறைநீர் - கங்கை முதலிய தூய நீரத்துறைகளில், நீடு ஆடல் - நெடிதாகப் போயாடுதலும், வடுதீர்பகல் - குறறம் நீங்கின பகற்காலத் தில், வாயுறை - உணணுதலும் என்று சொல்லப்படுகிற, வடுதீரா ஆகும் - குற்றம் நீங்காதனவாகிய, அ - அந்த, நான் கும் ஒழித்து - நானகையு மொழித்து, ஐந்து அடக்குவா ஞயின் - ஐம்புலன்களீயும் அடக்குவாஞயின், (அவன்) வே - சுடுகாட்டில் வேதறகுரிய, கும்பம - குடம்போன்ற உடம் பிீன, வேண்டான் விடும் - விரும்பாதவனகி விட்டொழி வான்; (எ - று.)

(ப-பொ-ரை.) மயிரைச் சடையாக நீட்டுதலும், மயி ரைக குறைத்தலும், தீர்த்தங்கள் நெடிதாகப் போயாடு தலும், வடுத்தீர்ந்த பகலினகண் உணணுதலென்கின்றகுற்ற மூந தீராவாகினற அந்நான்கிீனையு மொழித்தலும், ஐந்து புலனகளீயு மடக்குவாணகிற் சுடலீத் தியுள் வேகக்கடவ கும்பமாகிய உடம்பிீன வேண்டான் விடும்.

(க-ரை.) சடையை வளர்த்தல் முதலியவறறுல் இப் பிறவி யொழியாது; ஐம்புலன்கள் அடக்கு மாற்றுல் நீஙகும். புலன்களீ யொடுக்காதவர்களுக்குச சடைவளர்த்தல் முதலி யன பயனதரா.

நெடுக்கல் குறுக்கல் என்பன பிறவிீனகள் உறை - உணவு. சுவை பார்த்தலினறி ஆவைப்போல் உணணுத லெனறற்கு வாயுறை எனறார். ஏகாரம் - எண, பிறவறறிற் குங் கூட்டுக. வேகும்பம் - விீனத்தொகை. கும்பம குடம: உடம்பிற்கு உவமையாகுபெயர். குடம் உடைந்தொழிதல போன்று உடம்பொழிதலால் அது குடமெனப்பட்டது. வேண்டான் - முறறெச்சம். வேகும்பம வேண்டான் விடும் - பிறவியில்லாதவனவா னென்றபடி "மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம், பழிதத தொழித்துவிடின்." என்ற குறட் கருத்து இச்செய்யுளிற் காணப்படும். (சு கூ)

கொன்ரூன் கொலேயை யுடன்பட்டான் கோடாது
கொன்றதனிக் கொண்டான் கொழிக்குங்காற்-கொன்றதனி
அட்டா னிடவுண்டா னேவரினு மாகுமெனக
கட்டெறிந்த பாவங் கருது.

(ப-ரை.) கொன்ரூன் - ஓ ரு யி ரைக் கொன்றவன், கொலேயை உடனபட்டான - பிறன் செய்யுங் கொலேக்கு உடன்பட்டு நின்றவன், கோடாது - நாணுமல், கொன்றத னிக் கொண்டான் - கொன்ற தசையை விலேக்குக் கொண்டவன். கொழிக்குங்கால் - ஆராயுமிடத்து, கொன்றதனி அட்டான் - அங்ஙனங் கொல்லபபட்டதன ஊனிச்சமைத்தவன், இட உண்டான் - சமைத்ததனி இட உண்டவன் (என்று சொல்லப்படுகிற), ஐவரினும் - இந்த ஐவரிடதும், கட்டு எறிந்த பாவம் - வரம்பழித்ததினுலுண்டாகிய பாவமானது, ஆகும் என - நிகழும் என்று, கருது - கருதுவாயாக, (எ - று.)

(ப-பொ-ரை) உயிரைக் கொன்றவன், கொலேக்குக கோடாதே யுடனபட்டவன், கொலலப்பட்டதனுடைய ஊனிக்கொண்டவன, ஆராயுங்காற் கொல்லப்பட்டதனுடைய ஊனி அட்டான், அதனியிட வுண்டான் என இவ்வைவர் மாட்டு முளவாய் நிகழுமென்று வரம்பழித்துச செயத பாவத்தைக கருது.

(க-ரை.) கொலே செய்தவன்முதல் உண்டவன் ஈருக எலலார்க்குமே கொலேக்குற்றமுண்டு

கொனரூன், உடன்பட்டான், கொண்டான், அட்டான், உண்டான் - வினேயாலணேயும பெயர்கள். ஊன்தின்பவாகளே கொலேகருரிய எல்லாச் செயல்கட்கும் காரணராவரெனபதை, "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும, விலேப்பொருட்டால ஊன்தருவா ரில்," என்ற திருக்குறளால் உணர்க. கொலேயை - உருபுமயக்கம். கட்டு-உயர்ந்தோர் உயிராகொலலலாகா தெனக்கூறிய நீதிவரம்பு. (எ0)

சிறைக்கிடந்தார் செத்தார்க்கு நோற்பார் பலநாள்
உறைக்கிடந்தா ரொன்றிடையிட் டுண்பா—பிறைக்கிடந்து
முறறனேதது முணணு தவர்க்கிந்தார் மனைவராய்க்
கறறனேதும் வாழுவார் கலந்து.

சிறுபஞ்சமூலம்

(ப-ரை.) சிறை கிடந்தார் - சிறைக்கூடத்தி லிருந்தவர்க்கும, செத்தார்க்கு - இறந்தவர்கட்கு (நற்பதவி கிடைக்கும் பொருட்டு), நோற்பார் - உணணுது நோன்பியற்றுவோருக்கும், பலநாள் - பலநாளும, உறைகிடந்தார் - மருந்தில் கிடந்தார்க்கும், ஒன்று இடை இட்டு - ஒருநாள் (உணவில்லாமல்) இடையில் விட்டு, உண்பார் - (மறுநாள்) உணவுணபவாக்கும, பிறைகிடநது - முதற்பிறையிலிருந்து, முறறறுநீத்தும் - அது முடியும்வரையிலும் (பூரணமை வரையிலும்), உண்ணுதவர்க்கு - உணவு உண்ணுதவர்களும், ஈந்தா - உணவளித்தவர்கள், அநீத்தும் கறறு - எல்லா நீதிகளையும் படித்து, மன்னவராய் - அரசராகி, கலந்து - உயர்ந்த பதவியிற் சேர்ந்து, வாழவார் - வாழ்வார்கள, (எ - று.)

(ப-பொ-ரை.) சிறையின்கட் கிடந்தார, செத்தவர்க்கு நன்மை வேண்டி யுண்ணுது நோற்பார், பலநாளுந் தான் கொண்டபிணிக்கு மருந்தாயுண்ணுது கிடந்தார், ஒருநா ளிடையிட்டுண்பார், பிறைக்கிடநது நிரம்புமளவும் உண்ணுத தவசிகளென இவ்வைவாக்கும உணவு கொடுத்தவர்கள் அநீத்து நூல்களுங் கலநது கற்ற மன்னராய வாழ்வார்

(க-ரை.) சிறைககிடந்தா முதலிய ஐவருககும் உணவு கொடுத்தவர்கள் கல்வியறிவுள்ள அரசராய் நீடுவாழ்வா.

சிறைக்கிடந்தா - சிறைவாசம புரிவோர், வெளியேறிப் பொருள்தேடமுடியாது அந்தப்புரத்திலிருக்கும மாதரென லுமாம். உறை - மருந்து. உறைக்கிடந்தார் - மருந்துணடு பத்தியத்திலிருபபவா. ஒருநாள் இடையிட்டுண்ணுதல் - ஒருவகை நோன்பு. ஈற்றில விரித்துக் கூறப்பட்ட நான்க னுருபு மற்றைய நான்கிடங்களிலுங கூட்டியுரைக்கப்பட்டன. (எக)

ஈனறெடுத்தல் சூல்புறஞ் செய்தல் குழவியை
யேன்றெடுததல் சூலேற்ற கன்னியை—யாலை ற
வழிந்தாஈ யில்வைத்தல பேரறமா வறற
மொழிந்தார் முதுநூலார் முன்பு.

(ப-ரை.) ஈன்று எடுத்தல் - தாய தானீன்ற குழவியை யோம்பி வளர்த்தல், சூல்புறம் செய்தல - தான் கொண்ட சூலை யழியாது புறப்படுத்தல், குழவியை - வளர்ப்பாரிலாத குழவியை, ஏன்று எடுததல் - கணடெடுத்து வளர்த்

தல், சூல் ஏற்ற கன்னியை - சூல்கொண்ட கன்னியையும், ஆனற அழிந்தாரை - மிகவும் அழிந்தவரையும், இல வைத தல் - தன் வீட்டில் வைத்துப் போற்றலும், (ஆகிய இவ் வைக் தும்) முதுநூலார் - பழைய நூலறிவுள்ள பெரியோர், முன்பு - முற்காலத்தில், பேர்அறம் ஆ - பெரிய அறமாக, ஆற்றமொழிந்தார் - மிகவும் சொன்னார்கள; (எ - று.)

(ப-பொ-ரை.) ஈன்ற தாய் குழவியைத் துறவாதோமபி வளர்த்தல், தான்கொண்ட சூலைத் தானழியாது புறஞசெய் தல், வளர்ப்பாரில்லாத குழவியைக் கண்டாலேன்று வளர்த் தல், சூலேற்ற கன்னியையும் அழிந்த மகளையாரையும் நீக் காது தன்னில்வைத்துப் புறந்தருதல் என இவ்வைநதும் பெரிய அறமாக மிகவுமொழிந்தா முதிய நூலையுடையவர் பண்டு.

(க-ரை) ஈன்றெடுததல் முதலிய ஐந்தும் பெரிய அற மாக முற்காலத்தில் நூலறிவையுடைய பெரியோர சொன் னார்கள்.

குழவியைப் பெற்ற தாயே வளர்த்தல் சிறந்தது. பிள்ளை களை வளர்த்தலும, மருதுவும் பார்த்தலும், கருப்பவதிகளை யும் கைம்பெண்களையும் பேணுதலும் பெரும்பாலும பெண களே செய்யத்தக்கனவாதலின் இச் செயல்கள இலலறப் பெண்களுக் குரியன என்றபடி. இச்செயயுளில் குழந்தை களைப் பேணி வளர்க்கும் பொறுபபுப் பெண்களுக்குக கொடுக்கப்பட்டிருப்பது கருதத்தக்கது. இதனை யறியாா பிறரைக் கொண்டு குழவியை வளாப்பித்தல் நலல நாகரிகம் என்பாா எடுத்தல் - தூக்குதல்; இங்கு வளர்தததற் பொரு ளில வந்தது. அற்ற மொழிந்தா என்பதை அற்றம் மொழிந்தா எனறு கொண்டு உண்மையிற் சொன்னார்கள் என்பதுமாம். ஆறற - மிகவும் என்றவிடத்து முதல் குறுகி யது. ஏன்று - ஏல் பகுதி. (எஉ)

வலியழிந்தார் மூததார் வடககிருந்தார் நோயால
நலிபழிந்தார் நாட்டறைபோய் நைந்தார்—மெலிவொழிய
வினனவரா மென்னரா யீந்த வொருதுற்று
மனனவராச் செயயா மதித்து.

(ப-ரை.) வலி அழிந்தார் - வலியழிந்தவர், மூததார் முதியர், வடக்கு இருந்தார - வடக்கு நோக்கியிருந்து நோ

பவர், நோயால் நலிபு அழிந்தார் - பிணியினுல நலிந்தழிந்தவர், நாட்டு அறைபோய் நைந்தார் - தமது நாடுவிட்டுப் போயத் தளர்ந்தவர், (என்று சொல்லப்படுகிற இவ்வைவருடைய) மெலிவு ஒழிய - தளர்சசி நீங்கும்படி, இன்னவாஆம் என்னுர் ஆய - இன்னுராவாரென்று ஆராயாமல், ஈந்த-கொடுத்த, ஒரு துற்று - ஒருகவளவுணவு, (கொடுத்தவரை அடுத்த பிறவியில்) மதித்து - கணித்து, மன்னவர் ஆ செய்யும - அரசராகச் செய்யும்; (எ - று.)

(ப-பொ-ரை.) வலிகெட்டவர், மூத்தவர், வழிபடடுண்ணுது வடக்கிருந்தார, பிணியானலியப்பட்டழிந்தார், தமது நாடுவிட்டுப் போயத் தளர்ந்தாரென இவ்வைவரும் தளர் வொழியும்படி உற்ருரயலாரென் ருராயாதே ஈயப்பட்டதோ ருணவு மன்னவராகச் செய்யு'மதித்து.

(க-ரை.) வலியழிந்தார் மூதலிய ஐவருக்கும் ஒரு துற் றுணவு கொடுத்தவர் அவ்வறப்பயனுல் அரசராயப் பிறப்பார் என்பது.

வடக் கிருத்தல் - வடக்கு நோக்கியிருந்து நோற்றல் வடபாலுனேக்கித் தியானித்தலுமாம் நாட்டறை போதல் - நாட்டைவிட்டு நீங்கிப்போதல. அறை - அறுதல்; தொழிற பெயர். நலிபு - செய்பு என்னும் வாய்பாட்டு விணையெச்சம். துற்று - சிறிதுணவு. 'நம்மவர் அயலார' என்னும் பாகுபாடின்றி எல்லோருக்கும் ஒரு தன்மைத்தாகச் செய்யுமறமே சிறந்ததாதலின "இன்னவரா மெனனுராயீந்த" என்ருர். (எ)

கலங்காமை காத்தில் கருப்பஞ் சிதைந்தா
லிலங்காமை பேரறததா லீற்றம்—விலங்காமைக்
கோடல குழவி மருந்து வெருடடாமை
நாடி னறமபெருமை நாட்டு.

(ப-ரை.) கருப்பம் - வயிற்றுட் கருவானது, கலங்காமை - அழியாமல், காததல் - காத்தலுமை, (கருப்பம்) சிதைந்தால் - கருப்பம் சிதைந்து விட்டால், பேர் அறத்தால் - பெரிய அறததன்மையால், இலங்காமை - (பிறர்க்கு) வெளிபபடாமல், ஈற்றம் - மறையப் பெயர்த்து வாங்குதலும், குழவி - குழவியை, விலங்காமை கோடல - இடை விலங்காமற்செய்து கொள்ளுதலும், மருந்து - (குழவிபிறந்து

நோய் கொண்டால் அதற்கு) மருந்தும், வெருட்டாமை - (அக்குழவியை) அச்சுறுத்தாமையும், (ஆகிய இவ்வைந்தினையும) நாட்டின் - ஆராயின், பெருமை அறம் - பெரிய அறமென்று, நாட்டு - நிலைபெறுத்துவாயாக; (எ - று)

(ப-பொ-ரை) வயிற்றுட் கருவழியாமை காத்தலும், கருப்பஞ் சிதைந்தாறு பிறாகு வெளிப்படாமை மறையப் பெயர்த்து வாங்குதலும், குழவியை இடைவிலங்காதபடி இயற்றிக கோடலும், குழவி பிறந்து பிணிகொண்டால் அதற்கு மருந்தும், அக்குழவியை அச்சுறுத்தாமையும் என்னும் இவ்வைந்தினையும் பெரிதாய அறமாக நாட்டுவாயாக

(க-ரை) கருப்பங் கலங்காமை காத்தல் முதலிய ஐந்தும் பேரறமாக நாட்டுவாயாக என்பதாம்.

கலங்காமை இலங்காமை விலங்காமை என்பன எதிர்மறை விகீனயெசசங்கள வெருட்டாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். வெருட்டு - பகுதி ஈறறல் - ஈனறல்; விலங்காமை - விலகாமை. அறம் பெருமை என்பன முன்பின்னாய மாறறிப் பொருள் கொள்ளப்பட்டன. (எச)

சூலாமை சூலிற படுந்துனப மீனறபி
னேலாமை யேறறூல வளாப்பருமை—சாலபவை
வலலாமை வாய்ப்ப வறிபவ ருணணுமை
கொலலாமை நனறூற் கொழித்து.

(ப-ரை) சூலாமை - சூல் கொள்ளாமையால வருந்துன் பமும், சூலின்படுமை துன்பம் - சூலினுலுண்டாகுந் துன்பமும், ஈன்றபின் ஏலாமை - குழவியைப் பெற்றபின்பு அதகீன ஏறறுக்கொள்ளாமை, ஏற்றூல் வளர்ப்பு அருமை - ஏறறுக கொண்டால அதகீன வளர்த்தல் அருமை, சால்பவை வல்லாமை - (வளர்த்தபிள்ளை) சால்பு குணங்களகீ மாட்டாமையும், ஆகிய இவ்வைந்தினையும், வாயப்ப அறிபவர் - வாய்பப உணர்வோர், கொழித்து - ஆராயாது, கொல்லாமை - ஒருயிரைக் கொல்லாமையும், உண்ணுமை - (அதன் தசையை) உணணுமையும், நனறு - நன்மையாம்; (எ - று.)

(ப-பொ-ரை.) சூற் கொள்ளாமையால் வருந்துன்பம், சூற் கொண்டால் வருவதொரு மெய் வருத்தம், பிளளை பெற்று வைத்தும் பிள்ளையைக் கொள்ளாமை, பிள்ளையைப் பெற்றுக்கொண்டால் வளர்க்குமருமை, வளர்ந்த பிளளை

சாலபு குணங்கள் மாட்டாமை, இவைவந்திசீயும் வாய்ப்ப அறிந்தவா ஆராய்ந்து ஒருயிரைக் கொலலாமையும் அவ ஆசீ யுணணுமையும் நனறு.

(க-ரை.) பிறப்பிணுலுணடாகும ஐவகைத் துன்பங்களீ யும் ஆராய்நதுணர்வோர் உயிர் கொல்லாமையும் புலாலுண் ணுமையும் நன்று என்பதாம்.

சூலாமை - எதிர்மறைத் தொழிற்பெயர், சூலல் - உடன் பாட்டுத தொழிற் பெயர். அஃது அல்விகுதி குனறிச சூல் என முதனிலைத் தொழிற் பெயராய் நின்றது. நன்றல் - ஆல் அசை. (எ று)

சிககர் சிதடர் சிதலைப்போல் வாயுடையார்
துககர் துருநாமர் தூககுங்காற—றொகக
வருநோய்கள முனனாளிற றீாததாரே யிந்நா
ளொருநோயு மினறிவாழ வார்.

(ப-ரை.) தூக்குங்கால் - ஆராயுமிடத்து, சிக்கர் - தலை நோயுடையாரும், சிதடர் - பித்துடையாரும், சிதலைப்போல் வாய் உடையார் - வாய்ப் புற்றுடையாரும், துக்கர் - சய நோயுடையாரும், துருநாமர் - மூலநோய கொணடாரும், தொகக - வருநதுகின்ற, அருநோய்கள் - தீாத்தற்கரிய நோய கஸீ, முனனாளில் - முற்காலத்தில், தீர்த்தாரே - தீர்த்தவரே, இந்நாள் - இக்காலத்தில், ஒருநோயும் இனறிவாழவார் - ஒரு பிணியுமில்லாமல் சுகமாய வாழ்ந்திருப்பார், (எ - று.)

(ப-பொ-ரை.) தலைநோயுடையாரையும், பித்துற்றுரை யும், வாய்ப்புற்றுடையாரையும், கயநோய கொண்டாரை யும, மூலநோய் கொண்டாரையும், அடைந்து வருந்துன்பங் கஸீ முற்பிறப்பிற் றீர்த்தவர்க ளிபபிறப்பின்கண் ஒரு நோயுமின்றி வாழவார்.

(க-ரை.) தலை நோயுடையார் முதலிய ஐவரையும் அவர் படுந்துன்பங்களினின்று முற்காலத்தில் ஒழித்தவரே இக் காலத்தில் ஒரு நோயுமில்லாமல் வாழ்ந்திருப்பர் எனபது.

சிதல் - கறையான்; இங்கு அஃது உறையும புறறைக் குறித்தது. துககம் - சயநோய். துரு நாமம் - மூலநோய். முன்னாள், இந்நாள் - முற்பிறப்பு, இப்பிறப்பு. அருமை -

மூடியாமைமேனின்றது. ஒரு நோயும் - உம்மை முற்றுப் பொருள். (எசு)

பக்கம் படாமை யொருவர்க்குப் பாடேறறல
தககம் படாமை தவமலலாத்—தககா
ரிழியினார்கசே யாணும் பசிததாாக ணீதல்
கழிசினங் காததல கடன.

(ப-ரை.) ஒருவர்க்கு பக்கம் படாமை - எல்லா வுயிர்க்கும் ஒத்தலும், பாடு ஏற்றல் - படுந்துன்பம ஆறறுதலும், தக்கம் படாமை - ஒரு பொருளினிடததும் பற்றுப்படாமையும, ஆகிய இம்மூன்றும், தவம் - தவத்தாாக்குரிய குணங்களாம், தவம் அல்லா - தவஞ்செய்தலில்லாத, தககார் - தகுதியாகிய இல்வாழ்வார்கசு, இழி இனர்க்கேயாணும் - இழிகுலதாார்க்கே யாயினும், பசிததா கண் - பசித்தவர்க்கு, ஈதல் - உணவு கொடுத்தலும, கழிசினம காத்தல் - மிகு கோபத்தைத தடுத்தலும், கடன் - கடமைகளாம; (எ - று.)

(ப-பொ-ரை) எல்லா வுயிர்க்கும் ஒத்தலும், படுந துன்பம் ஆற்றுதலும், ஒரு பொருளின் கண்ணும் பற்றுப் படாமையும், இம்மூன்றுந் தவஞசெய்வா குணமாவன. அவர்களல்லா இலவாழ்வார்க்குக் குணமாவன. கீழ்ககுலத் தார்க்கே யாயினும் பசித்தவர்க்கு உணடி கொடுத்தலும் மிக்க வெகுளிகாத்தலும்.

(க-ரை.) நடுவுநிலமை முதலிய மூன்றும் துறவறத் தார்க்கும், பசித்தவர்க் குணவளிததல் கோபம் காத்தல ஆகிய இரண்டும் இல்லறத்தாாக்கு முரிய குணஙகள்.

பக்கம் படுதல் - ஒருபாற் கோடல், நடுவுநிலை பிறழ்தல். தக்கம் - பறறு; பயனின்றி வீணே யிருபபதுமாம். ஆயினும் என்பது ஆணும் எனத்தொக்கது. பசித்தார் கண் - உருபு மயக்கம. (எஎ)

புணபட்டார் போறறுவா ரிலலாதா போகுயிரார்
கண்கெட்டார் காலிரண்டு மில்லாதார்—கண்கண்பட்
டாழ்ந்து நெகிழ்ந்தவர்க் கீந்தார் கடைபோக
வாழ்ந்து கழிவார் மகிழந்து.

(ப-ரை.) புண்பட்டார்கண் - போரின்கண்ணே புகுந்து புண்பட்டவரிடத்தும், போற்றுவார் இல்லாதாகண - காக்குங கூஉகணில்லாதவரிடத்தும், போகு உயிரார்கண் - உயிர் போகுந தன்மையை யுடையவரிடத்தும், கணகெட்டார் கண் - குருடரிடத்தும், கால் இரண்டும் இல்லாதார்கண் - இரண்டு காலகளு மில்லாதவராகிய முடவரிடத்தும், கண் பட்டு - கண்ணேடி, ஆழ்ந்து நெகிழ்ந்து - மனமுருகி நெகிழ்ந்து, அவாக்கு - (புண்பட்டாரு முதலிய) அவ்வைவருக்கும், ஈந்தார் - அவர் வேண்டுவனவாகிய உணவு முதலியவற்றைக் கொடுத்தவா, கடைபோக மகிழ்ந்து வாழ்ந்து கழிவா - இடையூறு பட்டொழியாமல் கடைபோக மகிழ்ந்து வாழ்ந்து கழிவார், (எ - று.)

(ப-பொ-ரை.) போரின்கண புகுந்து புண்பட்டார், பாதுகாக்குங கூஉகணில்லாதார், உயிர்போந் தன்மையையடைந்தோர், குருடா, முடவா வன்று சொல்லப்படடாருடைய கணணிலே தஙகள் கண்கள பட்டிரங்கி மனநெகிழந்து வேண்டுவன கொடுத்தா இடையூறு படடொழியாதே கடைபோக மகிழ்ந்து வாழ்ந்து போவார்.

(க-ரை.) புணபட்டவர் முதலிய ஐவருக்கும் மனமிரஙகி அவர் வேண்டுவன கொடுதததுப் போற்றியவா இடையூறின்றி மகிழ்ந்து வாழ்ந்து கழிவார் என்பது.

வேண்டுவன - உணவு முதலியன. கடைபோக வாழ்தல் - முடிவு போக வாழதல். மனிதனுக் கேற்பட்ட வாழ்நாள் அளவும வாழதல். கண் என்னும் ஏழனுருபு ஐந்தி டஙகளிலும் கூட்டப்பட்டது. கண்படல் - கண்பார்வை செலல். (எ அ)

பஞ்சப் பொழுதகததே பாத்துண்பான் காவாதான
அஞ்சா துடைபடையுட் போந்தெறிவான்—எஞ்சாதே
உணபதுமு னீவான் குழவி பலிகொடுப்பான
எண்பதின மேலுமவாழ வான்.

(ப-ரை.) பஞ்சப்பொழுதகத்தே - சிறுவிலைக் காலத்தில், பாத்து - (தன்னிடமிருக்கும் உணவுப் பொருள்களை பலர்க்கும்) பகிர்ந்து, உண்பான் - (பின்பு) தான் உண்பவனும், காவாதான் - தன்னிடத்துள்ள பொருளை வீணே காவாது பிறருக்கே யுதவுவோன், உடைபடையுள் - உடைநத

தன் படையினுள்ளே, அஞ்சாது போந்து - அஞ்சாமற் புகுந்து, எறிவான் - (பகைவர் படையை) எறிந்து தன் படையை உயயக் கொள்பவன், எஞ்சாதே - ஒருநாளுமொழி யாமல், உண்பது - தான் உண்பதை, முன் - முன்னே, ஈவான் - பிறருக்குக் கொடுத்துப் பின் உண்பவன், குழவி பலிகொடுப்பான் - பசித்த குழவிகளுக்குச் சோறளிபபவன், (ஆகிய இவ்வைவரும்) எண்பதின் மேலும் - எண்பது வய துக்கு மேலும், வாழ்வான் - சுகமாக உயிாவாழ்ந்திருப் பான்; (எ - று)

(ப-பொ-ரை.) சிறுவிலைக் காலத்து, பலர்க்கும் பகுத துண்பான், தன்மாட்டுளள பொருள் காவாது பிறருக்கே ஈவான், படையுடைநத விடததுத் தா னஞ்சாதே வருகின்ற படையை யெறிந்து மீட்டுப பலரையு முய்யக்கொள்வான், ஒருநாளு மொழியாதே தானுண்பதனீ முன்னே பிறர்க்கீத துண்பான், பசித்த குழவிகட்குப பலிகொடுப்பான் எண்ப திறருண்டின் மேலுந் துன்புறுது வாழ்வான்.

(க-ரை.) சிறுவிலைக் காலத்திற் பகுத்துண்ணுதல் முத லியன செய்பவன் எண்பது ஆண்டுகட்கு மேலும் நீண்ட வாழ்நாளுடன் வாழ்வான்.

பகுதது என்பது பாத்து என மரூஉ வாயிற்று. விலை என்பது விற்கும் பொருளை யுணர்த்தும். அறச் செயல் களைப் புரிபவன் மனிதறகுரிய நூற்றிருபதியாண்டில மூன்றி லிரண்டுபஙகுக் காலமாகிய எண்பதின்மேலும் வாழ்வான் என்றபடி. குழவி பலி நான்காம் வேற்றுமைத் தொகை. உடைபடை - வினைத்தொகை. எஞ்சாதே என்பதில், ஏ - அசை. எண்பது - ஆயுளுக்கு எணணலளவை யாகுபெயர். வேணடப்படுவனவாகிய இசை யெச்சஙகள் வருவித் துரைக் கப்பட்டன. பாத்துண்டல் எலலாக் காலத்தும் பேரறமே யாயினும், சிறுவிலைக் காலத்தில் அது செய்தல் மிகச் சிறந்து காட்டும் என்பது தோன்ற, 'பஞ்சப்பொழுதகத்தே பாத் துண்பான,' என்றும் அச சிறப்பு நோக்கியே அதனீ முன் னெடுத்தும் கூறினர். (எசு)

வரைவிலலாப் பெண்வையார் மன்னீப்புற் றேறரூர்
புரையில்லார் நள்ளார்போர் வேந்தனை - வரைபோற்
கடுங்களிறு விட்டுழிச் செல்லார் வழங்கார்
கொடும்புலி கொட்கும் வழி.

(ப-ரை.) வரைவு இல்லா - மணஞ் செய்தல் இல்லாத, பெண் - பொதுப பெண்டிரை, வையார் - (தமக்கு மனைவியராகத் தமது வீட்டில்) வைத்துக்கொள்ளமாட்டாராகள், மன் - நிலைபெற்ற, நை - மழுங்குதலையுடைய, புற்று - பாமபின புற்றினமேல, ஏரூர் - ஏறமாட்டார்கள், புரை இல்லார் - தமக்கு நிகரில்லாதவரோடு, நள்ளார் - நட்புக்கொள்ளார், போர்வேந்தன - போர்த்தொழிலில வல்ல அரசனது, வரைபோல் - (உருவத்தால) மலைபோன்ற, கடும - கடுமையான குணம் பொருந்திய, களிறு - யானையை, விட்டுழி - விட்ட இடத்தில், செல்லார் - போகமாட்டார்கள், கொடும் புலி - கொடுமையான செயலையுடைய புலியானது, கொட்கும் - சுழன்று திரிகின்ற, வழி - காட்டு வழியில், வழங்கார் - நடக்கமாட்டாராகள; (எ - று.)

(ப-பொ-ரை.) பொது மகளைத் தமக்கு மனையாளாக மனையின்கண் வையார, பழையதாய்த தலைமழுங்கியிருந்த புற்றினமே லேரூர், தம்மோடு நிகரில்லாதாரோடு நடபுக் கொள்ளார், போரவேந்தனுடைய வரைபோலுங் கடுங் களிறு விட்டுழிச் செல்லார், கொடும்புலி சுழலும் வழியின் கண் நடவார்.

(க-ரை) அறிஞர்கள் வேசையரை வீட்டில் வைதுக கொள்ளுதல் முதலியன செயயமாட்டார்கள

வரைவு - வரைதல்; தொழிற் பெயர். இது மணஞ் செயதல் என்னும் பொருளது. வரைவிலாப் பெண்களுக்கு, அவர் ஒருவரையே மணம புரிந்துகொளளாது பலர்கமும் போகமாதரா யிருத்தலால், பொதுப் பெணடிா என்னும் இப் பெயர் வழங்கலாயிற்று. வரைபோல் எனற உவமையால உருவப் பெருமையும கருநிற முதலியனவுங் கொள்க கடுமை - கொலைத்தொழில் வனமை. விட்டவழி - விட்டுழியெனத் தொகுத்தல பெற்றது. (அ0)

தக்கார் வழிகெடா தாகுந் தகாதவ
ருக்க வழியரா யொலகுவர்—தகக
வினதறிஞ ரகுமை பழியும் புகழு
மனதறிஞ ரகு மறி.

(ப-ரை.) தக்கார் - தகுதியுடையாரது, வழி - சந்ததி, கெடாது ஆகும் - என்றுந் தளராது விருத்தியடைவதாகும்,

தகாதவர் - தகுதியற்றவர், உக்க வழியராய - அழிந்த வழியை யுடையவராய், ஒல்குவர் - தளர்வார், பழியும் புகழும் - ஒருவனுக்குளவாகும பழியும் புகழும், தக்க இனதது ஞன் ஆகும் - அவன் சேர்ந்த இனத்தினுளவாகும், மதி - அறிவானது, மனத்தினை ஆகும் - (ஒருவனது) மனத்தினளவே உண்டாகும்; (எ - று.)

(ப-பொ-ரை.) தகுதியுடையார் வழிமரபுகெடாதாகும, தகுதியில்லாதார கெட்டவழி மரபையுடையராயே தளர்வார், பழிக்கதக்க இனத்தினு ளுகும் பழியும், புகழுக்குத் தக்க இனதத்தினுளுகும் புகழும், தனது மனத்தினளவே யுண்டாகும் அறிவும்.

(க-ரை.) நல்லவர்கள் காலவழி கெடாது, நல்லவர்களல்லாதவர் கால்வழியே கெடும், தீய சேர்க்கையால் பழியும், நற்செய்கையால் புகழும், தத்தம் மனவியற்கைக்கு ஏற்ப அறிவும் மக்கட்குண்டாகும்.

தக்கார - தகுதியுடையார், தகாதவர் - அஃதிலலாதவர். இவ்விருவாக்கும் எச்சமுணமையும் இன்மையும் குறிகளாதல், "தக்கார் தகவில ரென்ப தவரவர், எச்சத்தாற் காணப் படும," என்ற தீருக்குறளாலும் விளங்கும். "மனத்தானு மாந தர்க் குணர்ச்சி இனத்தானு, மின்னு னெனப்படுஞ் சொல்," என்ற குறட் கருதது, "தக்க இனதத்தினு ளுகும் பழியும் புகழும், மனத்தினு ளுகு மதி," என்ற அடிகளில் அமைந்திருதல் காணக. (அக)

கழிந்தவை தானிரங்கான கைவாரா நச்சா
னிழிந்தவை யினபுரு னில்லார்—மொழிந்தவை
மென்மொழியா லுணணெகிழ்ந தீவானேல் விணேணுரா
வினமொழியா லேதுதப படும.

(ப-ரை.) தான - ஒருவன், கழிந்தவை - (தனனிவிடடு) நீங்கிய பொருளகட்கு, இரங்கான் - வருந்தாதவனுயும், கைவாரா - தனக்குக் கைவராதவற்றை, நச்சான் - விரும்பாதவனுயும, இழிந்தவை - தாழ்ந்த பொருளகளின மேல், இன்பு உரூன் - மனக்களிப் படையாதவனுயும், இல்லார் - பொருளில்லாத வறிஞர், மொழிந்தவை - (விரும்பித் தமக்கு வேண்டுமென்று) சொன்னவற்றை, மெலமொழியால் - மெல்லிய இன் சொல்லோடு, உள் நெகிழ்ந்து - மனமுருகி, ஈவான்

ஏல் - கொடுப்பவனுயின், (அவன்), விண்ணோரால் - தேவர்களால், இன் மொழியால - இன சொற்களால, ஏத்தப்படும் - துதிக்கப் படுவான்; (எ - று)

(ப-பொ-ரை.) இறந்த பொருட்குத தானிரங்கான், தனக்குக் கைவாராதனவற்றை நச்சி வருந்தான, நல்லாரானிகழப்பட்டவற்றை யின்புற்றுன், வறியாரிரந்து வேண்டியவற்றை மென்மொழி சொலலி யுண்ணெகிழ்ந்தீவானுயிற் றேவர்களானினிய மொழிகளாலே புகழப்படும்.

(க-ரை) கழிந்தவறறிறகு இரங்கான் முதலியன உடையான் தேவர்களாற் புகழ்தற்குரியனுவான்.

கழிந்தவை தானிரங்கான - நான்காம் வேற்றுமைத் தொகை வாரா நச்சான - இரண்டாம் வேற்றுமைத் தொகை. மொழியால் எனபதில் ஓடடுருபு ஆலுருபாக மயங்கி வந்தது கழிந்தவை, இழிந்தவை, கைவாரா—வினையாலணையும் பெயர்கள். (அஉ)

காடுபோற கடகினிய விலலம பிறர்பொரு
ளோடுபோற ரூரம் பிறந்ததா—யூடுபோய்க்
கோதறினு சொலலானுய்க கொலலானேற பலலவு
ரோதறினு லெனன குறை.

(ப-ரை.) (ஒருவன்) கட்கு இனிய - கண்ணுக் கினிய, இலலம் - பிறருடைய இல்லத்தை, காடுபோல - காடுபோலக் கொண்டு விரும்பாமல, பிறர் பொருள் - பிறர் பொருளை, ஓடுபோல் - ஓடு போலக்கொண்டு விரும்பாது, தாரம் - பிறர் மனையாளை, பிறந்த தாய - தான் பிறத்தறகிடமாயிருந்த தாயாகக்கொண்டு விரும்பாது, ஊடுபோய் - பிறரிடததே சென்று, கோத்து - தொடுதது, இன்னுசொல்லானுய் - பழி மொழிகளைச் சொல்லாதவனுய், கொல்லானேல் - ஒருயிரையுங் கொல்லாதவனுயின், (அவனுக்கு) பல்லவா - பெரியார் பலரும் கூறிய, ஓத்தினுல் - நூல்களால் தெரியவேண்டிய, என்ன குறை - எனன குறையுண்டு; (எ - று.)

(ப-பொ-ரை.) பிறருடைய கண்ணுக் கினிய வில்லத்தைக் காடுபோலக் கொண்டு விரும்பாது, பிறருடைய பொருளை ஓடுபோலக் கொண்டு விரும்பாது, பிறர் மனையாளைத் தான் பிறந்த தாயாகக்கொண்டு விரும்பாது, பிறரூடு போய்க் கோத்தின்னுதனவற்றைச் சொல்லாது, ஒருயிரை

யுங் கொல்லாஞயி னல்லார் பலருஞ் சொல்லிய நூல்களாற் காரிய மென்னை யவற்கு?

(க-ரை.) ஒருவன் பிறரது அழகிய இலலத்தைக் காடு போலவும, பிறர் பொருளை ஓடுபோலவும், பிறன மனையா ளைத் தன் தாயாகவும் கருதி விரும்பாமல், பிறரைப் பழித் துரையாமல, ஓருயிரையுங கொல்லாதிருப்பானுயின், அவ னுக்குப் பெரியோர் சொல்லிய நூல்களால் அறியவேண்டிய குறை என்ன உண்டு என்பது.

காடுபோல் என்றதனுனே கருதாமையும் விரும்பாமை யும் பெறப்பட்டன பிறர் என்பது இல்லத்திற்கும் தாரத் திற்கும் கூட்டி யுரைகபபட்டது. என்ன குறையென்றது நூல்களால் அவனைக் குறைகூறக் கிடந்ததொனறுமில்லை யெனலுமாம். (அ)

தோறகன்று காட்டிக் கறவார் கறந்தபால
பாற்பட்டா ருண்ணூர் பழிபாவம் - பாறபட்டா
ரேறறவா தினபுறறு வாழவன வீடழியக்
கூற்றுவப்பச் செய்யார் கொணாநது.

(ப-ரை.) பாற்பட்டார் - நன்னெறியின பாற்பட்டவர், தோலகன்று காட்டி - தோலாற் செய்த கன்றினைக் காட்டி, கறவார் - பசுவைக் கறவார், பாற்பட்டார் - நன்னெறிப்பட் டவர், கறந்தபால - அவ்வாறு கறநத பாலை, உண்ணூர் - பரு கார், பழிபாவம - பழியையும் பாவத்தையும், ஏற்று - தம் மேலேற்றுக்கொண்டு, அவாவாது - விரும்பாமல், இன் புற்று - தம் கிளைகளோடு, கூடிச்சுகமுற்று, வாழ்வன - வாழ் வனவாகிய உயிர்களை, சுடு அழிய - (அவற்றின்) பெருமை குன்ற, கொணர்ந்து - கொண்டு வந்து, கூற்று உவப்ப செய் யார் - கூற்றுவன் விரும்பக் கொலை செயயார். (எ - று.)

(ப-பொ-ரை.) தோற்கன்று காட்டிப் பசுவைக் கற வார், அப்பெறறியாற் கறந்த பாலை நெறிப்பட்டா ருண்ணூர், பழியையும் பாவததையும தம்மே லேற்றுக்கொண்டு விரும் பாதே தன் கிளையோடினபுற்று வாழுமுயிர்களைக கூற்று விருமபகொணர்ந்து கொலை செய்யார்.

(க-ரை.) நன்னெறிப் பட்டவர் தோற்கன்று காட்டிப் பசுவின்பாலைக் கறத்தல் முதலிய தீச்செயல்களைச செயயார் என்பதாம்.

தோற்கன்று காட்டலாவது இறந்துபோன கன்றின் தோலை யுரித்து அதனுள்ளே வைக்கோலைப் பொதிந்து அதனை உயிர்க் கன்றுபோல் அதன் தாய்ப்பசுவுக்குக் காட்டுதல். பாலை அருந்துதலே கறத்தலுக்குங் காரணமாதலின், "கறந்த பால் உண்ணூர்," என்று அப்பாலை அருந்துதலையும் விலக்கினார், ஆசிரியர். பால - வெண்மை. இஃது உவமையாகு பெயராய்த் தூயகுணத்தை யுணர்த்தி நின்றது. அவாவாது என்பது அவாது எனத் தொகுத்தலாயிற்று. செய்யார் - கொலை செய்யார். (அசை)

நகையொடு மந்திரம் நட்டார்க்கு வாரம
பகையொடு பாட்டுரையென் றைந்தும்—தொகையொடு
மூத்தோ ரிருந்துழி வேண்டார் முதுநூலுள்
யாததா ரறிந்தவ ராய்ந்து.

(ப-ரை.) நகையொடு - சிரிப்புடன், மந்திரம் - செவிச் சொல்லும், நட்டார்க்கு வாரம் - நண்பருக்காக ஒருபாலாகப் பேசுதலும், பகையொடு - (ஆகாதவரிடத்தே) பகையான பேச்சுக்களைப் பேசுதலும், பாட்டு உரை - செய்யுளுக்குப் பொருள் சொல்லுதலும், என்றைந்தும் - என்ற இவ்வைந்து செயல்களும், தொகையொடு - கூட்டத்தோடு, மூத்தோர் - பெரியோர், இருந்துழி - இருக்குமிடத்தில், வேண்டார் - செய்ய விரும்பார் (அறிவுடையார்), (என்று), ஆய்ந்து - (உலக இயல்களை) ஆராய்ந்து, அறிந்தவர் - உணர்ந்தவர்கள, முது நூலுள் - பழமையான நூல்களில், யாத்தார் - தொடுத்து உறுதியாக உரைத்துவைத்தார்; (எ - று.)

(ப-பொ-ரை.) சிரித்தலும், ஒருவனோடு செவிச்சொல்லும், தம்முற்றாகாக வாரம் சொல்லுதலும், பகையாடுதலும், பாட்டுக்குப் பொருட் சொல்லுதலும் இவ்வைந்தும் கூட்டத்தோடறிவுடையரா யிருந்துழி வேண்டாராய்ப் பழைய நூல்களிலே யாத்து வைத்தார் அறிவுடையார் ஆய்ந்து.

(க-ரை.) பெரியோர் கூடியிருக்குமிடத்தில சிரித்தல் இரகசியப் பேசசுப் பேசுதல், நட்பினர்க்குப் பாரபக்கமாக நலம் பேசுதல், ஆகாதவர்க்குப் பகைமை பேசுதல, பாட்டுக்கு உரை சொல்லுதல் ஆகிய ஐந்து செயல்களையும் அறிவுடையோர் செய்யமாட்டார்கள்.

மாநிரம் - இரகசியச் சொல் அல்லது சூழ்ச்சியுரை. நகை - தொழிற் பெயர்; நகு - பகுதி. உரை - சொல். அது பொருளின்மே னின்றது. என்ற ஐந்தும் என்பது என்றைந் தும எனத் தொகுத்தலாயிற்று. யாத்தல் - தொடுத்தல். இது சொல்லுதல்மே னின்றது வாரம் - அன்பு. "செவிச் சொல்லும் சேர்ந்த நகையு மவித்தொழுகல, ஆன்ற பெரியா ரகதது," என்னுந் திருக்குறளை யிதற் குதாரணமாகக் கொளலாம். (அடி)

சததமெய்ஞ் ஞானந் தருககளு சமயமே
விததகர் கணடவீ டுள்ளிட்டாங்—கததகத
தந்தவிவ் வைந்து மறிவான றலியாய
சிநதிப்பிற சிட்டன் சிறநது.

(ப-ரை.) சததம் - வழக்காகிய இலக்கண நூலும், மெய்ஞ்ஞானம் - அறிவுநூலும், தருக்கம் - அளவை நூலும், சமயம் - சமய நூலும், விததகர் - அறிவின் மிக்கோர, கணட - செய்த, வீடு - வீட்டு நூலும், உள்ளிட்டு - உட்பட, அத்தக இவ்வைந்தும் - அத்தகைமையாகிய இவ்வைந்தனையும், அந்தம் அறிவான் - அழகா யறிபவன, சிந்திப்பின - ஆலோசிக்கு மிடத்து, சிறநது - சிறப்படைநது, தலை ஆய சிட்டன் - தலைமையாய சிட்டனுவான; (எ - று.)

(ப-பொ-ரை.) வழக்கு நூலும், சொன்முடிபு நூலும், தருகக நூலும், சமய நூலும், அறிவின் மிக்கார் கணட வீட்டு நெறியும் இவவைந்தும் அழகாக அறிவான தலை யாய சிட்டனுவான் சிறந்து.

(க-ரை.) இலக்கண நூல் முதலானவற்றை நன்கறிந்த வனே மக்களுட் சிறந்தவனுவான.

சத்தம் - ஒலி. அஃது ஒலி வடிவமாகிய எழுத்தையும் சொல்லையும் பற்றிய இலக்கண நூலை யுணர்த்தி நின்றது. தருக்கம - ஒரு பொருளின் உறுதியைப்பற்றிச் சொற் போராடல். அஃது அதனையுடைய தருக்க நூலை யுணர்த் திற்று. ஐந்து நூலையுமுணர்ந்தவன் மிக ஒழுங்குடையவனு யும், உலகத்திறகுப் பயன்படுபவனுயு மிருப்பான், ஆதலின் அவனை, 'தலையாய சிட்டன்,' என்னூர் ஆசிரியர். ஆங்கு - அசை. அந்தம் என்பது மவ்வீறு கெட்டு நின்றது சிட்டன் - மேலானவன. (அசு)

கண்ணுங்காற கணணுங் கணிதமே யாழினே
டெணணுங்காற் சாநதே யிலநறுக்கிட்—டெண்ணுத
லிட்டவிவ் வைநது மறிவா னிடையாய
சிட்டனென றெணணப படும.

(ப-ரை.) கண்ணுங்கால் - நிகீனகது மிடதது, கண்ணும - நிகீனத்தற்குரிய, கணிதம் - கணிதமும், யாழினேடு - யாழினுடன், எணணுங்கால் - எண்ணுமிடதது, சாந்து - சந்தன மரைத்தல், இலை நறுக்கிட்டு - இலை கிள்ளி, எணணுதல் - எண்ணல், இட்ட - ஏற்படுத்தப் பட்ட, இவவைநதும் - இந்த ஐந்து தொழில்களையும், அறிவான் - அறிநது செய்ய வல்லவன், இடை ஆய சிட்டன் என்று - இடையாகிய சிட்டன் என்று, எண்ணப்படும் - எண்ணபபடுவான், (எ - று.)

(ப-பொ-ரை.) கருதுங்காற் கருதபபடு மெணணும், யாழ்வல்லனுதலும் சந்தனமரைத்தலும எணணலும் தொழில்பட இலை நறுக்கலும் என இவவைநது காரியமும் அறிந்து வல்லனுவான் இடையாய சிட்டனென றெண்ணபபடும்.

(க-ரை.) கணித நூல் முதலிய ஐநதனையும் கற்று வலல வன இடையாய சிட்டனென்று சொல்லப்படுவா னென் பதாம்.

நறுக்கு - முதனிலைத் தொழிற் பெயர். அறிவான் - விகீன யாலகீனையும பெயர். கண்ணல - நிகீனத்தல். கண்ணுங்கால், எண்ணுங்கால் - விகீனயெச்சங்கள். ஏ - எண்ணுப் பொருள். கணிதம், யாழ், சாந்து என்பன அவறறைச் செய்தலாகிய தொழில்கண்மே னின்றன. (அள)

நாணில னுய்நன்கு நவளாதா னுய்ப்பெரியார்ப்
பேணில னுய்பிறர் சேவகனு—யேணில்
பொருநதிய பூணமுலையார் சேரிகைத தில்லான
பருத்தி பகாவுழி நாய்.

(ப-ரை.) நாண் இலன் - நாணமில்லாதவன், நாய் - நாய்க்கு நிகராவன், நன்கு - நன்மையாக, நள்ளாதான் - (பிறரோடு) நட்புக் கொள்ளாதவன், நாய - நாயோடொப் பாவன், பெரியார் - (தாய் தநதையர் முதலிய) பெரியாரை,

பேணிலன் - பாதுகாவாதவன், நாய் - நாயை நிகர்ப்பான், பிறர் சேவகன - பிறருடைய பணியாளனு யிருந்து வாழ் பவன், நாய் - நாயைப போல்வன், ஏண இல் - உயர் வில் லாத, பூண் பொருந்திய - நகைகளை யணிந்த, முலையார் - தனங்களையுடைய பரத்தையரது, சேரி - தெருவில், (அவர்க ளது ஆசையால் திரியும்) கைத்து இல்லான் - கைப்பொருள் இல்லாதவன், பருத்தி பகர்வுழி - பருத்தி விலை கூறுமிடத்து, (போய் நிற்கின்ற) நாய் - நாய்க்கு நிகராவான், (எ - று.)

(ப-பொ-ரை) நாணமில்லாதானு நாயோடொக்கும், பிறரொடு நணபு கொள்ளாதானு நாயோடொக்கும், பெரி யாரைப் பேணுதானு நாயோடொக்கும், பிறாக்குச் சேவக னுய்த திரிவானு நாயோடொக்கும், மனத்தின்க ணிலையில லாத பூணையுடைய முலையார் சேரியின்கட் கைப்பொரு ளின்றிக் காதலாற் சென்று திரிவானும் பருத்தி விறகுமிடத் துச் சென்று நிற்கு நாயோடொக்கும்.

(க-ரை) நாணமில்லாதவன் முதலியோர் நாய்க்கு ஒப்பாவார்கள்.

பருதத விற்குமிடதது அங்குக் காத்துக் கிடக்கும் நாய்க்கு ஏதும் உணவுப் பண்டம் கிடையாமை போலப பொருளுக்குத் தம் உடம்பை விறகும் பொருட் பெண்டீர் சேரியிற் பொருளிலனுய்த் திரிவானுக்கு ஏதும் அவர் புணர்ப்பு நேராதாகலின் அவரைப் பருத்தி பகர்வுழி நாய �என்றார. பகர்வுழி - பகாவுழி, வகரம் மெய்யீறறு உடம்படு மெய்யாகப் பொருந்தியது சேரி - ஒரு வகுபபார் சேர்ந் திருக்கும் இடம். இச்செய்யுள் கடையாய சிட்டரியலபு கூறுவது. ஏண் - மனநிலையெனினுமாம். (அஅ)

நாணெளிது பெணமை நகையெளிது நட்டானே
லேணெளிது சேவக னேறபெரியார—பேணெளிது
கொம்பு மலறக்கு மிடையா யளியன்மீ
தம்பு பறதத லரிது.

(ப-ரை.) கொம்பு - வஞ்சிக் கொமபை, மறைக்கும் மறைக்கின்ற, இடையாய் - இடையை யுடையவளே பெணமை - (ஒருத்தி) பெண்மைக் குண முடையளாயின நாண் எளிது - (அவளுக்கு) நாணம் எளிதாகும, நட்டானேல ஒருவனை டொருவன நட்புக கொளவானுயின, நகை எளிது

(அவனுக்கு) மகிழ்ந்து நகுதல் எளிதாகும், சேவகனேல் ஒருவன் சேவகனுயின், ஏண் எளிது - (அவனுக்கு) வண்மை எளிதாகும், பெரியார் - குணத்தாற் பெரியராயின், பேண் எளிது - (அவர்க்குப்) பிறரைப் பேணுதல் எளிதாகும். அளி யன்மீது - (யாவரிடத்தும்) அருளுடையான்மேல், அம்பு பறத்தல் - பிறர் எய்யும அம்பு விரைந்து செலலுதல், அரிது- அரிதாகும்; (எ - று.)

(ப - பொ - ரை.) ஒருத்தி பெண்குணத்தையுடையளா யின் அவளுக்கு நாணெளிது, ஒருவனேடொருவன் நட்டா னுயின் அவற்கு மகிழ்ந்து நகுதல் எளிது, ஒருவன் சேவக னுயின் அவனுக்கு வலிசெய்தல் எளிது, குணத்தாற பெரிய ராயின் அவர்க்குப் பிறரைப் பேணுதல எளிது, வஞ்சிக் கொம்பை மறைக்கும் இடையினையுடையாய்! பலர்க்குஞ் சோறிடுவார்மேற் பிறர் அம்பு பறநது சேறல் அரிது.

(க - ரை) பெண்டிற்கு நாணும், நட்டார்க்குச் சிரிப்பும் சேவகர்க்கு வலிமையும், பெரியார்களுப் பிறரைப் பேணுத லும் எளிது, ஆனல் அன்புடையாாக்குச சினம் தீது செயதல் அருமையாகும்.

பெண்மைக்குணம் நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்ற நான்கும். எல்லோரிடததும அன்புள்ளவன்மீது சகல ரும் நட்புடையவர்களாகவே யிருப்பாாகளாதலின் அவன் மேல் எவரும பகைகொண்டு அம்பைச் செலுத்தமாட்டார் கள். வஞ்சி - ஒருவகைக் கொடி வஞ்சிக் கொம்பு, மெனமை பற்றி இடைக்கு உவமையாகக் கூறப்படும். நாணி மறை யும் என்பது தோனற கொம்பு மறைக்கும் என்ருர். நாண், ஈகை, பேண் என்பன முதனிலைத் தொழிற் பெயர்கள். ஏண் - வலி. பறத்தல் - விரைந்து செல்லுதல் என்னும் பொருட்டு. அளி - யாவர்மீதும் ஒரு தன்மைத்தாய அரு ளுடைமை. (அசு)

இன்சொலா னுகுங் கிளைமை யியல்பில்லா
னெசொல்லி னுகும் பகைமைமன—மென்சொலலி
னேய்வில்லா வாரருளா மவ்வரு ணன்மனத்தான்
வீவில்லா வீடாய் விடும்.

(ப - ரை) இனசொலான - (ஒருவன் உரைக்கும்) இனிய சொற்களால, கிளைமை - உறவு, ஆகும் - (அவனுக்கு) உண

டாகும், இயல்பு இல்லா - நற்குணம் இல்லாத, வன் சொல வின - வலிய சொல்லினுல, பகைமை - பகைமையானது, ஆகும் - உண்டாகும், மென் சொல்லின் - மெலலிய சொல்லி னுல், மன - பெருமையும், ஓயவு இல்லா - ஓயதல் இலலாத (இடைவிடாத), ஆர் - நிறைந்த, அருள் - இரக்கமும், ஆம் - உண்டாகும், அ அருள் - அவ்விரக்கம் பொருந்திய, நன் மனத்தான் - நல்ல மனத்தினுலே, வீவு இல்லா - கேடில் லாத, வீடு ஆய்விடும் - வீடு பேறு உண்டாயவிடும்; (எ - று)

(ப - பொ - ரை) ஒருவன சொல்லும உறுதியாகிய சொலலினுற் சுற்ற முளதாகும், குணமில்லாத கடுஞ்சொற் களாற் பகைகளுளவாம், பிறாக்குச் சொலலு மெலலிய சொல்லினுற் றளர்விலலாத அருள உளதாம், அவ்வருளாவ தொருவன் மன நன்மையால் கேடிலலாத வீடாய் விடும

(க - ரை.) இன்சொல்லாற கிளைமையும், வன் சொல் லாற் பகைமையும், மென்சொல்லாற பெருமையும இரக்க மும, அவ்விரக்க மனததால் வீடும் ஒருவனுக்கு உண்டாகும்.

மெல்லிய சொறகளேயே ஒருவன் பேசிக்கொணடிருப் பானுயின் அச்சொறகளால் அவனுக்கு எவரிடத்தும் இரக்க மன முண்டாகும். அதனுல் அவனைப் பலரும் உயர்ந்தவ னென்று கொண்டாடுவாகள். உயிர்க் குறுகண் செய யாமையாகிய தவநிலையுடையவன் முத்தியாகிய வீடும் அடை வன் வீவு, வீடு - தொழிற பெயர்கள கிளைமை - பண்புப் பெயர். ஆயவிடும் : விடு - துணிவுப் பொருளுணர்த்தும் விகுதி. அருள்பெறல் அரும் பேருதலால், ஆரருள் என்ருர்

தக்க நிளையான் றவஞ்செல்வ னுணமறுதத
றக்கது கற்புடை யாளவனபபுத—தக்க
தழற்றண்ணென் ரோளா ளறிவில ளாயி
னிழற்கண முயிருய் விடும்.

(ப - ரை.) இளையான் - இளையவன், தவம - (துறநது) தவஞ்செய்தல், தக்கது - தகுதியுடைத்து, செல்வன் - செல்வ முடையோன, ஊண் மறுத்தல் - உணவு வெறுத்து விரதங் காத்தல், தக்கது - தகுதியுடைத்து, கற்பு உடையாள் - கற் புடையவளது, வனபபு - அழகானது, தககது - தகுதி யுடைத்து, தண் என - குளிர்ந்திருக்கும், தோள் ஆள் - தோள்களையுடையவளாகிய ஒருவனுடைய மனைவியானவள்,

அறிவு இலள் ஆயின் - அறிவற்றவளாயின், அழல் - நெருப்புப்போன்றும், நிழல் கண் - நிழலினிடத்து, முயிறு ஆய் விடும் - முயிறறைப்போன்றும் அவனைத் துன்புறுத்துவர்; (எ - று.)

(ப - பொ - ரை) இலையான் துறந்து தவஞ் செய்தல தக்கது, செல்வத்தையுடையான் இல்லறத்தினகணின்று இடையீட்டை யுண்மறுத்து நோன்பு புரிதல் தக்கது, கற்புடையாள வனப்பு தக்கது, ஒருவன் மனையாள் அறிவிலளாயொழுகின் நிழலின்கண் முயிரோடழலை யொக்கும்

(க - ரை) இலையான் தவமும், செல்வன் நோன்பும், அழகுடையாள கறபும் தக்கவை அன்பும் இன்பும் உணர்தற்குரிய இல்லாள் அறிவிலளாயின் அழலையும மரநிழற்கண்ணுள்ள செவ்வெறும்பையும் ஒப்பாவள்.

செல்வன எத்தகைய உயர்ந்த உணவுகளையும் நுகரக கூடியவன். அவன் அவற்றை நீககி விரதங் கொள்ளுதல் உயர்ந்தது. முயிறு - இலுப்பை மா முதலிய மரங்களிலிருக்கும் ஒருவகைச் செவ்வெறும்பு. 'கற்புடையாள் வனப்பு' எனபதை 'வனப்புடையாள் கற்பு' எனறு மாற்றுவது மொழி மாற்றுப் பொருள் கோள். அழல் அணுகவு மொட்டாது அகலவும் ஒட்டாமைபோல் அறிவில்லா இலலக்கிழத்தியை அவள் கணவன் விட்டு நீங்கவுமாட்டாமல் அன்றி அணைடி மகிழவுமாட்டாமல் இடர்படுவானகலின், அழல் என்றார். முன் மூன்றனோடு 'தண்ணெறித்தோளாள் அறிவிலளாயின் அழல்' என்ப தொன்றும், 'நிழற்கண் முயிரூய் விடும்' என்ப தொன்றும் கூட்டி ஐந்தாக்கிக்கொளக. ()

பொய்யாற் சுவர்க்கம்வா யானிர யம்பொருள்
மையார் மடந்தையால் வாழவினி தும்—மெய்யன்ரு
மைத்தக நீண்ட மலர்க்கண்ணாய் நீதன்ரு
லெததவ மானும் படல.

(ப - ரை.) மைதக - மைதீட்டுதலால் தகுதியுறறு, நீண்ட - காதளவோடிய, கண்ணாய் - கண்களையுடைய பெணணே! பொய்யால் - பொய்ந்நெறி யொழுக்கத்தால், சுவர்க்கம் - மேலுலகமுளதாம், வாயால் - மெயந்நெறி யொழுக்கத்தால், நிரயம் - நிரயமுளதாம், பொருளால் - நிலையற்ற செல்வப்பொருளால், இனிது வாழ்வு - இனிதாக

வாழ்தலும், மை ஆ - குற்றம் பொருந்திய, மடந்தையால் - வேசிப் பெண்ணின சோக்கையால், இனிது வாழ்வு - இனிதாக வாழ்தலும், மெய அன்று - உணமையல்ல, எததவம் ஆனும் - எநதத்தவமாயினும், படல் - ஒருவரிடத்தே யுணடாதல், தீது அனறு - தீமையானதன்று; (எ - று.)

(ப - பொ - ரை) பொயநெறி யொழுகினுல் அவர்க்குச் சுவர்ககமுளதாம், மெயநெறியி லொழுகினுல் அவர்க்கு நிரயமுளதாம், பொருள் தேடுதலினிதாம், குற்ற மிக்க மடந்தையரோடு கூடி இல்வாழும் இல்வாழ்க்கையினிதா மென றல மெய்ம்மையுமனருல், மைத்தக நீணட மலர்க்கணணுய்! யாதேனு மொரு தவமபடுதல் தீதன்று நன்மையேயாம்

(க - ரை.) பொய்யாற சுவர்க்கம் பெறுதலும, மெய யால் நரக மடைதலும், நிலையறற செல்வப் பொருளால் இனிது வாழ்தலும், குற்றம் பொருந்திய பெண சோக்கை யால் இனிது வாழுதலும மெய்யன்று, ஒருவரிடததே எந்தத் தவமேனும் உண்டாதல் தீதன்று என்பதாம்.

இச்செயயுள் கடவுளில்லை யென்னும வாதிகள மெய யென்று சொல்பவற்றைப் பொயயென்றும், பொயயென்று சொல்பவற்றை மெய யென்றும் விளக்கிச் செல்வது. வாய்மை என்பது மைவிருதி குறைந்து வாய என நின்றது. மையார் என்ற குறிப்பால் மடந்தை பொதுமகளெனக் கொள்ளப்பட்டது. மெயயன்ருல், தீதன்ருல். ஆல் - அசை நிலைகள் ஆயினும் எனபது ஆனும் என நின்றது. மடந்தை யால் என்பதிலுள்ள ஆல உருபும, வாழ்வினிது என்பதும் பொருள் எனபதனேடும் கூட்டிககொள்ளபபட்டன (கூஉ)

புலலறத்தி னலறு மனைவாழகை போற்றுடைததே னலலறததா ரோடு நடகககலா—நலலறததார்க கட்டிடடுண் டாறறவாழந் தார்களே யிமமையி லட்டிட்டுண் டாற்றவாழ வார்.

(ப - ரை.) மனைவாழ்க்கை - மனைவியோடு கூடி வாழும் இல்வாழ்க்கை, புல அறத்தின் நன்று - தழுவும் இல்லறம் துறவறமாகிய இரண்டில் நல்லதாம், போறறுடைத்தே - நன்கு பாராட்டப்படுமானுல், நல்லறததாரோடும நடகக லாம் - நல்ல துறவறததாரோடும் அது வைத்தெண்ணப்பட லாம், நல் அறத்தார்க்கு - நல்ல துறவறத்தார்க்கு, அட்டு -

சமைத்து, இட்டு - பகிர்ந்திட்டு, உணடு - (பிறகு) தாமும் உண்டு, ஆற்ற வாழ்ந்தார்களே - மிகவும் இனிதாக முற்பிறப்பில் வாழ்ந்தவர்களே, இம்மையில் - இப்பிறப்பில், அடடு இட்டு உணடு - சமைத்திட்டுண்டு, ஆற்ற வாழ்வார் - மிகுதியாக வாழ்ந்திருப்பவர்; (எ - று.)

(ப - பொ - ரை.) புல்லிய துறவறத்தினன்று மனை வாழ்க்கை, மனையறத்திற்குச் சொனனபடியே யொழுகிற் றுறவறத்தாரோடு நடக்கலாம், ஆதலால் நல்ல துறவறத்தாக்குத் தாம் ஆக்கியிட்டுத் தாமும் இடப்படாதுண்டவர்கள் இப்பிறப்பின்கண் மிகவிட்டுண் டில்வாழ்க்கை வாழுவார்

(க - ரை.) மக்கள் இல்லற வாழ்வில் நின்று யாவர்க்கும் பயன்படுமாறு வாழ்தல் நன்றும்.

புல்அறம் - புல்லும்அறம இல்வாழ்க்கையைச் செவ்வையாக ஆற்றில அதுவே துறவற வாழக்கைக்கு ஒபபாகும் என்பார், போறறுடைத்தேல நல்லறத்தாரோடு நடக்கலாம் என்றார் ''அறத்தாற்றின இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றின், போஒய்ப் பெறுவ தெவன்,'' என்னும் திருக்குறளைக் காண்க முறபிறப்பில நல்லில வாழ்வு பெற்றாரே இபபிறபபில அது பெறும் பேறுடையாரென்பது பின்னிரண்டடிகளின கருத்து. முத்திக்கு வித்தாதலால் குற்றமற்ற துறவறத்தை 'நல்லறம்', என்றார் (கூஉ)

ஈவது நன்றுதீ தியாமை நலலவர்
மேவது நன்றுமே வாதாரோ—டோவாது
கேட்டுத தலைநிறக கேடி லுயர்கதிக்கே
யோடடுத் தவநிறகு மூர்ந்து.

(ப - ரை.) ஈவது - (பிறாக்கு வேண்டிய பொருளாக) கொடுப்பது, நன்று - நன்மையாம், ஈயாமை - கொடாமை, தீது - தீமையாம், நல்லவர் - நல்லோர, மேவாதாரோடு - பொருந்தாதவரோடு, மேவது - பொருந்தியிருப்பது, நனறு நன்மையாம், ஓவாது - இடையறுமல், கேடடு - (நன்னெறிக்குக் காரணமாகிய நூற்பொருளைக்) கேட்டு, தலை - (அந்நெறியின்) கண்ணே, நிற்க - நிற்றலைச் செய்க, (நின்ரூல அந்நிலை) கேடு இல் - அழிவிலலாத, உயர்கதிக்கு - உயர்ந்த வீட்டு நெறியின்கண்ணே, ஓட்டு - விரைந்து செல்லுஞ் செலவின்

கண், தவ ஊர்ந்து நிற்கும் - மிகுதியாக மேம்பட்டு நிற்கும்; (எ - று.)

(ப - பொ - உரை.) பிறர்க்கொன்றை யீவது நன்று, பிறர்க்கீயாமை தீது, மேவாதாரோடு நல்லராயிருப்பார் மேவி யொழுகுவதுவே நன்று, நன்னெறிக்கு வழியாகிய நூலினையே கேட்டதன் கண்ணே நிற்க, கேடிலாத உயர்கதி யாகிய வீட்டு நெறியின்கண்ணே செல்லும் செலவின் கண்ணே நிறக மேற்கொண்டு.

(க - ரை.) ஈகை நன்று, ஈயாமை தீது, தம்மைச் சேரா தவரோடும் நல்லவர்கள் ஒருவாறு சோந்தாற்போலிருப்பது நன்று, நல்லனகேட்டு அவற்றுகுத் தக ஒழுகுதல் அவ வொழுக்கம் மேன்மேல் உயர்ந்து நற்பேற்றிறகு மக்களைச் சேர்ப்பியா நிற்கும்.

மேவாதாரால் ஏதுக தமக்குத் தீங்கு நேராமைப் பொருட்டு நல்லோர், 'மேவது நன்று', எனப்பட்டது. ஓட்டு - முதனிலைத தொழிற்பெயர். தவ - மிகுதிப்பொருள தரும் உரிச்சொல். மேவு - முதனிலைத்தொழிற்பெயர், அது என்னும முதல் வேற்றுமைச் சொல்லுருபேற்று மேவது என வநதது. அது சாரியை எனினுமாம். (கூச)

உண்ணிடத்து மொன்னுர் மெலிவிடத்து மந்திரங்கொண்
டெணணிடதுஞ் செல்லாமை தான்றலையே—யெண்ணி
யுரைப்பூசல கோற வுயாதவமேற் கங்கைக
கரைப்பூசை போறறக் கடை.

(ப-ரை) உண்இடதது - பிறர் உணணுமிடத்தும், ஒன்னுர் - பகைவர், மெலிவு இடதது - தளாந்த விடத்தும், மந்திரம் கொண்டு - மந்திராலோசனையை மேறகொணடு, எண்இடத்தும - ஆலோசிக்குமிடதது, செல்லாமை - போகாமையே, தலை - தலையாய ஒழுகமாம், எண்ணி - ஆராய்ந்து, உரை - சொலலுஞ் சொல்லில், பூசல - மாறுபடு தலும், உயர்தவம் மேல் - உயர்ந்த தவவேடத்தை மேற கொண்டகாலத்தில், கோறல் - ஒருயிரைக் கொனறு தின்ன லும், போற்ற - ஆராயுமிடத்து, கங்கைக்கரை - கங்கைநதிக் கரையி லுட்கார்ந்திருக்கிற, பூசை - பூனைபோல, கடை - கடையாய ஒழுக்கமாம்; (எ - று.)

(ப-பொ-ரை.) பிறருண்ணுமிடத்தும் பகைவராயினுர் தளர்ந்தவிடதது பிறர் சூழ்ச்சிகொள்ளுமிடத்துஞ் செல்

லாமையும, தாமொருவர்க்குத் தகுமையாகிய குணம் ஆராய்ந்து பிறரொடு மாறுபட்டுச் சொலலுஞ சொல்வின் றித் தமக்குளதாகப் பாதுகாததகுலச் செய்தலும், மிக்க வறத்தை மேற்கொண்ட காலத்துப் பிறவுயிரைக்கொன்று தின்கையும், காரணமாய்நதாற் றவவேடங் கொண்ட பூசை யொத்தலாகிய கீழ்மையாம்.

(க-ரை.) பிறர் உண்ணு மிடத்திலும், பகைவர்கள் தளாச்சியுடையவரா யிருக்குமிடத்திலும், மறைமொழிகள் கூறி ஏதோ ஆழ்ந்து நிகீனத்துக கொணைடிருக்கு மிடத்திலும் செல்லலாகாது. ஆன்றோர் அறிவுரைகளுக்கு மாறுபடுத லும், உயிர்க்கொலை புரிதலும், உளளொன்று வைத்து மேலே தவக்கோலம் பூண்டிருத்தலுந் தீதாம்.

மந்திரம் ஈண்டு மறைவிற் பேசிக்கொள்ளும் பேச்சு. கஙகைக் கரையாகிய புண்ணிய இடத்தில் அமர்நது உயிர்க் கொலைகளைப் புரிந்துவரும் பூலை களை ஒப்பக் கடையானவர் களை மேலே தவக்கோலம் பூணடு மறைவில் தீயன புரிந் தொழுகுவா ரென்பது ஈற்றடிகளிற் கூறபபட்டது செல் லாமைதான் என்பதில் தான் அசை தேற்றப்பொருளில் வந்ததெவினுமாம். "உரைப்பூசல் கோறல் எண்ணி மேல் உயர்தவம் போற்று" எனக் கூட்டுக பூசல் - போர், உரைப் பூசல் - உரையோடெதிர்த்தல், அது சொல்லுகு மாறுபட்டு நடத்தலை யுணர்த்திற்று. பூசை - பூனை. (கூடு)

பத்தினி சேவகன பொததில கடுந்தவசி
பொத்தில் பொருட்டிறத்துச் செவ்வியான்—பொத்தின்றி
வைத்தா ரதுவழக்குஞ் சானறவர் தஞ்செமமை
செததா லறிக சிறநது

(ப-ரை.) பத்தினி - கற்புடையாளும், சேவகன் - சேவ கனும், பொத்தில - குறறமிலலாத, கடும்தவசி - அரிய தவத் தைச் செயவோனும், பொத்து இல் - குற்றமில்லாத, பொருளதிறத்து - பொருட்டிறத்தில், செவ்வியான் - செவ் வியனுய்த் தேறப்படுவோனும், பொத்து இன்றி - குற்ற மில்லாமல், வைத்தார் அது வழக்கும் - அரசனுலே முதன்மை யாக ஏற்படுத்தப்பட்டவருடைய சால்பும், (ஆகிய இவ்வை வரும்) சான்றவர் - மேலோராவர், செம்மை - (இவருடைய) செம்மைக்குணத்தை, செத்தால் - (இவர்) இறந்து பட்டால், சிறந்து அறிக - மிகுதியாக அறியக்கடவாய்; (எ - று.)

(ப-பொ-ரை) பத்தினியும, சேவகனும, குற்ற மில்லாத கடுந்தவசியும், பொருட்டிறத்தின்கட் பொத்தினறிச் செவ்வியனுய்த் தேறப்படுவானும், முதன்மையாக அரசனுலே வைகுகபபட்டார் பொத்தின்றி வழுக்கும் சான்றவனுமென இவ்வைவர் செம்மையும் இவர் செத்தாலறிக மிகவும்.

(க-ரை.) பத்தினி சேவகன் முதலியோருடைய செமமைக் குணங்கள், அவரிறந்தபின் மிகவும் உலகத்தாரால் அறியப்படும்.

பதினி - இது கற்புடை மாதையும், நன்மனியாளையுங் குறிக்கும். கடுந்தவசி யென்றது உணவு நீர் முதலியவற்றை வெறுத்து என்பெழுந் தியங்கும் யாக்கையனுய நிறகுங கடுந்தவத்தோனை. செவ்வியான் - செமமைகுணங காடடுபவன. பொத்தில பொருளாவது - அடைக்கலமாக வைக்கப் பட்ட பொருளை அடைகலம் பெற்றவன கவரக்கருதி மறைக்கத்தகாத பொருள். "செத்தால் தெரியும் செட்டியார் வாழ்வு," என்ற பழமொழிப் பொருளினை, 'செம்மை செத்தா லறிக,' எனற அடியிற் குறித்தனர் ஆசிரியர். (கூசு)

வழிப்படரல் வாயல வருநதாமை வாய்மை
குழிப்படரல தீசசொறக ளோடு—மொழிப்பட்ட
காயந்து விடுதல களைந்துயக கறறவர்
ஆயந்து விடுதல அறம்.

(ப-ரை) உயய - நல்லவாழ்வை அடையும் பொருட்டு, கற்றவர் - (அதற்குரிய நன்னெறிகளை) கற்றுணாந்தவர்களை, தீச்சொற்களோடு - தீய சொற்களைக் கூறுதலுடனே, வழிப்படரல் - மக்கள் நடக்கும் வழியிற சென்று பிறர்க்குத் துன்பமாதலும், வாய் அல் வருந்தாமை - பொருந்திய இருட்டிறகு வருநதாமையும், வாய்மை - மெய்ம்மையானது, குழிப்பு - தாழ்வு படுதலில், அடரல் - பொருந்துதலும், மொழிபபட்ட - (பெரியோர்) சொற்களிலடங்கிய நீதிகளை, காய்ந்து - சினநது வெறுத்து, விடுதல் - விடுதலும், (ஆகிய ஐந்தையும்) ஆராய்நது - ஆராய்ந்து பார்த்து, களைநது விடுதல் - நீக்கி விடுதல, அறம் - அறமாகும், (எ - று.)

(ப-பொ-ரை) பிறர்வழிச் செலவும், வாய்க்குங் காரியங்களை முயன்று வருந்தாமை, மெய்ம்மையல்லா நெறியின்கட் சேறல், பிறரைப் பழிகூறுஞ் சொற்கள், நலலாராற் சொல்

லப்பட்ட குணங் களேநது நீக்குதலெள இவ்வைந்தையுங், கற்றறிவார் களேநது நீக்குதலறமாவது.

(க-ரை.) நல்வாழ்வடைய விரும்புகின்றவர்கள் தீச் சொற்கள் கூறுதலும், வழிபபறிக் கொளகே செயதலும், பிறர் பொருள் கவரலும், மெயம்மை தவறுதலும், அறிவுரை களேக் கடதலும் ஆகா.

படர் - துன்பம், படரல் - துன்பமாதல். வழியில் துன்ப மாதலாவது, ஆறலேத்தல். குழிப்பு - தாழ்தல். மொழிப பட்ட - பலவினபால் விகுயாலணியும் பெயா. உய - உய்ய என்பதன் இடைக்குறை. உயதலாவது பிறவித்துன்ப மொழிந்து வீடெய்தி என்றும அழியா இன்பெய்திவாழ்த லாம். குழிப்படரல என்பதை குழி படரல என்று பிரித்துத் தாழ்விற் செல்லுதல் எனறுங்கூறலாம். வழிப்படரல் முத வியவற்றை ஆய்ந்து களேந்து விடுதல் அறம எனக்கொணடு கூட்டி முடிக்க. (கூஎ)

பாயிரம்

மல்லிவர்தோணி **மாக்காயன்** *மாணுக்கன் மாநிலதது*ப
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினுற்—கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை **மாக்காரி யாசான்**
சிறுபஞ்ச மூலஞ்செய் தான.

(ப - ரை,) மல் இவர் தோள் - மறபோர் விரும்பும் தோள் வலிமையையுடைய, மாக்காயன் மாணுக்கன் - மாக்காயன் என்பவர் மாணுக்கராகிய, பஞ்சம் தீர் - வற்கடத்தைத் தீர்க்கின்ற, மழைக்கை - மழையைப்போலும் ஈகையொழுக்கமுடைய, மா - சிறந்த, காரியாசான் - காரியாசான் எனபவர், மாநிலத்து - இப்பேருலகத்தில், பல்லவர் நோய் நீக்கும பாங்கினுல் - மக்கள் பலருடைய அறியாமை நோயை நீக்குந் தகைமையால், கல்லா - அறிவு நூல்களே (அவாகள்) கல்லாத, மறுதீர் - குற்றந்திரும்படி சிறுபஞ்ச மூலம் - சிறுபஞ்சமூலம் என்னும் இந்நூலை, செயதான் - இயற்றினுரெனக; (எ - று.)

(க - ரை) மாக்காயனுர் மாணுக்கராகிய காரியாசான் எனனுஞ் சான்ருேர் மக்கள் அறியாமையுங குற்றமும் நீங்கும்படி 'சிறுபஞ்ச மூலம்' என்னும் இந்நூலை யியற்றினுர் என்பது.

மாகாயன் என்ற பெயரால் இவர் சிறந்த உடற் கூறமைந்தவர் என்பது விளங்கும். மழைக்கை எனறதனல் கொடை வள்ளலுமாவர் என்க. தீர் எனபது தீபகமாகப் பஞ்சந்தீர எனவும், மறுதீர் எனவும் இரண்டிடங்களினுங கூட்டப்பட்டது இவர்தல் - விரும்புதல் இப்பாயிரச் செய்யுள், ஆகுகியோகாலத் தறிஞரால் செய்யப்பட்டதாகும்.

சிறுபஞ்ச மூலம்

செய்யுள் முதற்குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்
அழியாமை யெத்தவமும் சரு	
அரம் போற்கிளை	ருஎ
அறனட்டான்	உகூ
ஆணைக்கம் வேண்டா	,,
ஆம்பல்வாய்கண்	ருக
இடரினனு	கரு
இல்லியலார் நல்லறமு	ஙசூ
இன்சொலானுகுங்	அஉ
ஈவது நன்றுதீ	அசூ
ஈன்றெடுத்தல் சூல்	சூசூ
உடம்பொழிய வேண்டி	எ
உடையிட்டாரா	சo
உணணுமை	சகூ
உண்ணிடத்து	அள
உயிர்நோய் செய்	ஙஉ
ஏலாமை நன்றீத	ருசூ
ஒத்த வொழுக்கங்	உ
ஒருவனறிவானும்	ஙக
கண்ணுங்காற்கண்	அo
கணவனப்புக்கண	கo
கதநன்று சான்றுண்மை	கஅ
கலங்காமை காத்தல	சூஅ
கல்லாதான்றுன்	ரு

செய்யுள்	பக்கம்
கழிந்தவைதா	எரு
கள்ளான் சூதென்	உஉ
கள்ளுண்டல காணிற்	உசூ
கற்புடைய பெண்	ச
காடுபோற் கட்	எசூ
குளந்தொட்டுக்கோடு	சூக
கொண்டான் கொழு	ருo
கொணடான்வழி	ககூ
கொல்லாமை நன்று	சஅ
கொனறுன கொலையை	சூரு
கொன்றுணபாணச	கக
கோறலு நஞ்சூனை	கச
சத்தமெயஞ்ஞானங்	எகூ
சிக்கர் சிதடர்	எo
சிலம்பிக்குத் தன்	கஉ
சிறைக் கிடந்தார்	சூரு
சூலாமை சூலிற்	சூகூ
தக்கதிலையான்	அங
தக்கார் வழிகெடா	எச
தன்னிலையுந்தாழா	ருச
தான்பிறந்த	சூங
தேவரே கற்றவா	உக
தொழீஇ யடவுண்ணுர்	ஙஎ

செய்யுள்	பக்கம்
தோற்கன்று காட்டி	௭௭
நகையொடு மந்திரம்	௭அ
நசைகொல்லார்	சடு
நட்டாரையாக்கி	ககூ
நல்லவெளிபபடுத்து	டுங
நனபுலத்துவையடக்கி	டுடு
நாணிலனுய நன்கு	அ0
நாணிலான் சால்பு	கங
நாணெளிது பெண்மை	அக
நாள்கூட்ட மூாத்த	சஉ
நீண்டநீர் காடு	சசூ
நீரறம் நன்று	டுஅ
நெடுக்கல் குறுக்கல்	சூச
நெய்தல் முகிழ்த்துனை	ந0
பக்கம்படாமை	௭க
பஞ்சப்பொழு	௭உ
படைதனக்கு யாணை	அ
பண்டாரம் பல் கணக்கு	நகூ
பத்தினி சேவகன்	அஅ
பற்றினன் பற்றற்	கூ
பிடிபபிச்சைப்பின்	டுகூ
பிழைத்தல் பொறுத்தல்	கள
புண்பட்டார் போற்	௭க
புல்லறத்தினன்றுமணை	அடு
பூத்தாலுங் காயா	உச
பூவாதாள் பூப்பு	சக

செய்யுள்	பக்கம்
பூவாதுகாய்க்கு	உங
பெருங்குணத்தார்	உள
பேணடக்கம்பேணு	சங
பொச்சாப்புக் கேடு	சள
பொய்யாமை நன்று	நஅ
பொயயாமை பொன்	உ0
பொய்யாற் சுவர்க்கம்	அச
பொருளுடையான்கண்	நட
பொருள் போக	டுடு
பொன்பெறுங்கற்	டுஉ
போாத்துமுரிந்	சூஉ
மக்கட் பெறுதன்	சகூ
மயிாவனப்புங்	நசூ
மல்லிவர்தோண்	கூக
முழுதுணர்ந்து	க
வடிவிளமைவாய்த்த	உடு
வருவாய்க்குத் தக்க	சக
வரைவில்லாப்பெண	௭ங
வலியழிநதார் மூத்	சூள
வழிப்படரல் வாயல்	அகூ
வார்சான்ற கூந்தல்	சச
வான்குருவி	உஅ
வெந்தீக் காண்வெண	சூ0
வேட்பவன் பார்ப்பான்	நங
வைதததனனுகும்	நடு
வைப்பானே வள்ளல்	நச

சிறுபஞ்சமூலம்

அருஞ்சொல்லகராதி

(எண் - பாட்டு எண்)

அடங்க - முழுதும், ஙக
அடரல் - பொருந்துதல், கூஎ
அட்டான் - சமைத்தவன், எ0
அட்டு - சமைத்து, கூஙூ
அமிர்து - மரணத்தினின்
றுந் தவிர்ப்பது, ச
அலவலை - அறபகாரியம், டுஙூ
அவாய் - விரும்பி, கசு
அவிர்தல் - விளங்குதல், கச
அழல் - நெருப்பு, கூக
அளியன் - அருளுடைய
வன், டு, அசு
அறிமடம் - தான் கூறுவ
தறியும் அறிவில்லா
மாடடு அவ ரறிய
மாட்டாமையைத் தா
னறி ந் து ம் அறியா
தான் போன்றிருத்
தல், சூ
அறை - அறுதல், எஙூ
ஆட்டுமை - அசைவிக்கும, டுடு
ஆதர் - அறிவிலார், உ0
ஆர - உண்ண, ஙூச
ஆறற - மிகுதியாக, க
ஆற்று - செய், சூ
ஆன்ற - மிகவும, எஉ
இலிங்கி - தவமுடைய
வள், சஉ
இல் - குடி, கஅ, சூஅ
இன்னு - தீது, கச
ஈடு - பெருமை, அச
ஈடுஇல் - கேடில்லாத, டுஅ
ஈர் - இழுக்கின்ற, உச
உகிர் - நகம், ஙூஎ
உக்க - அழிந்த, அக
உதாரதை - ஈகை, கஉ
உயதல் - ஓழிதல், ஙூ0
உய்த்து - செலுத்தி, ஙூ
உய்யான் - பிழைக்க
மாட்டான் ஙூ
உறு - மிகுதி, உ
உறுதியா - நன்மையுண்
டாகுமாறு, க
உறை - உணவு, சூகூ
மருந்து, எக
எண்வனப்பு - ஆராய்ச்
சிக்கு அழகு, கூ
எக்கழுத்தம - இறு
மாப்பு, டு
எண் - வலிமை, கஉ, அகூ
உயர்வு அஅ
எத்த - துதிக்க, அஉ
எத்தி - போற்றி, க
ஏர் - அழகு, சடு
ஏலாமை - ஏற்றுக்
கொள்ளாமை, சூக
ஒத்த - பொருந்திய, உ

ஒருப்படுத்து - நீக்கி, நச
ஒல்லா - பொருந்தாத, டு
ஒன்னார் - பகைவர், சுடு
ஓத்து - நூல், அங
ஓய்வு - ஓய்தல், கூ0
ஓர்த்து - அறிந்து, ககூ
ஆராய்ந்து, சுஎ
ஓவாது - இடையறாமல், கூச
கடிந்தான் - ஒழித்தவன, உகூ
கடுமை - கொலைத்
தொழில்வன்மை, அ0
கடைபோக வாழ்தல் -
முடிவுபோக வாழ்தல், எஅ
கடைப்பிடித்தல -
தெளிவாயறிதல், சுஅ
கட்டு - வரம்பு, எ0
கண்ட - செய்த, அசு
கண்டல் - தாழைமலர், கச
கண்ணல் - நினைத்தல், அள
கண்படல் - கண்பார்வை
செலல், எஅ
கண்பட்டு - கண்ணேறு, ,,
கண்மாறெணுமை-கண்
ணேட்டஞ் செய்தல், டுஉ
கதம் - கோபம், களடுக
கருதுமை - நினைக்கும், டுச
கருமை - மனவிருள், உக
கலிக்கண - கலிகாலத்
தில், சுஎ
கழிய - மிக்க, கள
கழிமின் - விடுங்கள், உசு
கழுமல் - பற்றல், கலத்
தல் உக
கழை - மூங்கில், டுடு
களர் - சேற்று நிலம், சகூ
களைந்து - நீக்கி, கூஎ
கள்ளாமை - களவு
செய்யாமை, ககூ
கற்பு - கற்றல், ச
கிளர் - விளங்குகின்ற, கூ
கிளை - உறவு, கநூ
கிளைமை - நேய
முடைமை, உடு
கும்பம - குடம், சுஙூ
குழிப்பு - தாழ்வு, கூஎ
குன்று - மலை, சுடு
கூழ் - மாவினுலாக்கப்
படும் உணவு, சுச
கூற்றம் - எமன், கக
கெழீஇ - தழுவி, நஅ
கைத்து - பொருள், டுஉ
கைப்பொருள, அஅ
கொடுங்கரி - பொய்ச்
சான்று, க0
கொட்கும - சுழன்று
திரிகின்ற, அ0
கொலலல் - கெடுத்தல், சஅ
கொழித்தல - தெள்ளுதல்,
ஆராய்தல், நக
கோடல் - கொள்ளுதல, ககூ
கோடாது - நாணுமல எ0
கோடாமொழி - நடுநிலை
தவறுதசொல், எ
கோடு - கொம்பு கக
மரக்கிளை, சுசு
கோதை - மாலை, டுச
கோய் - கள் முகக்கும்
கலம், கள
கோள் கூட்டம் -
கோளின் பொருத்தம், சச

கோறல் - கொல்லுதல், கூடு
சலித்தல் - வெறுத்தல், சஉ
சார்ந்த - தழுவிய, சூடு
சாலாமை - நிரம்பாதிருத்தல், சூக
சால்பு - அமைதி, கஉ
சான்றவன் - அறிவானிறைந்த பெரியோன், அ
சிக்கர் - தலைநோயுடையார், எசூ
சிட்டன் - மேலானவன், அசூ
சிதடர் - பித்துடையார், எசூ
சிதல் - கறையான், ,,
சிதவலிப்பு - குறைவுபட்ட பிசசை, சூச
சிந்தை - ஆராயச்சி, . ஙங
சிலம்பி - சிலந்திப் பூசசி, ஙக
சிறை - கருவாகிய முட்டை, ,,
சீத்து - செதுக்கி, சூசூ
சுணங்கு - தேமல், சஅ
சுவர்க்கம் - மேலுலகம, கூஉ
செயிர் நோய்-கோபத்தாலுண்டாகுந் துன்பம, ஙஉ
செருக்கு - களிப்பு, டுo
சேரான - நிறையான், ஙே
சேரி - தெருவு, அஅ
சேவகம் - வீரததொழில், கஉ
ஞெண்டு - நண்டு, ஙக
தகைமை - தன்மை, சடு
தக்கம் - பற்று, எஎ
தருக்கம் - அளவை நூல், அசூ
தவ - மிகுதி, கூச
தாவா - கெடாதிருக்க, உஉ
தாழ்தல் - தாமதித்தல், டுஅ
தானம - கொடை, ஙசூ
திரு - திருமகள், சடு
துக்கர் - சயநோயுடையார், எசூ
துணை - அளவு, ஙo
துப்பு - வலி, டுஅ
துருநாமர் - மூல நோய் கொண்டார், எசூ
துளங்கா - அழியாத, உச
துற்று - உணவு, கள, எங
துன்னி - நெருங்கி, டுஅ
தெறற - தெளிவாக, டுo
தேறப்படும் - தெளியப்படும், டுகூ
தேற்றுதார் - தெளியாதார், உங
தொக்க - கூடிய, டுங
தொங்கல் - மாலை, டுச
தொட்டு - தோணடி, சூசூ
தொழிஇ - தொழுத்தை, அடிமைப் பெண், ஙஅ
நகை - நகுதல், அசூ
நசை - விருப்பம், சஅ
நச்சான-விரும்பாதவன், அஉ
நச்சினும - விரும்பினும், கசூ
நடை - ஒழுக்கம், எ
நட்டான்-விரும்பியவன், உஅ
நள்ளார் - நட்புக்கொள்ளார், அo
நற்பு - நன்மை, சு
நன்புலம் - விளைநிலம், சூo
நன்று - நன்மை, உங
நாடாது - ஆராயாது, கங

நாண் - நாணம், கஉ
நாரு - முகிழ்க்காத, உங
நாறுவ - முகிழ்ப்பன, உட
நிரயம் - நரகம், கூஉ
நீடாங்கு-கால நீட்டிப்பு, கங
நுணங்கு - நுட்பம், நo
நெடுக்கல - நீட்டுதல, சுசு
நைந்தார் - தளர்ந்தார், எங
நையாமை - உளநதள ராமை, கசு
பகாவுழி - கூறுமிடத்து, அஅ
பக்கம் படுதல் - ஓருபாற கோடல், எள
பஞ்சமூலம் - சிறிய ஐந்து வேர்கள் அவை —கண டங்கதகிரி வேர், சிறு வழுதுணை வேர், சிறு மல்லி வேர், பெருமல்லி வேர், நெருஞ்சில் வேர், உ
படா - துன்பம், கூஎ
படாபு - விட்டு நீங்கு தல, கச
படல் - உண்டாதல், கூஉ
படிந்து - சேர்ந்து, கஅ
படுத்தல் - உண்டாக்கு தல, சo
பண - இசை, கூ
பணடாரம் - கருவூலம், சo
பதி - தலைவன், நுக
பலி - சோறு, எசு
பற்று - சார்பு, அ
பழுது - குற்றம, க
பாடு - பெருமை, கூஅ
பாததல - பகுதத்துண் டல், சள
பாய - பரவி, க
பார்ப்பு - குஞ்சு, கக
பால் - பகுப்பு, சூசு
பிறர் இல் - பிறர் இல்லாள், நுஉ
பீடுடைமை - பெருமை, சநு
புரிந்து - விரும்பி, உள
புரை - நிகர், அo
புலத்தல் - பகைத்தல், நஅ
புலம் - அறிவு, நங
புலை - கீழ்மைக குணம், நஅ
பூசல - போர், கூநு
பூசை - பூனை, ,,
பூகர் - பசாசுகள, உo
பேணு - விரும்பாத, சநு
பேணிலன் - காவாத வன், அஅ
பொச்சாப்பு - மறதி, நுo
பொத்து - குறைபம, கூசூ
பொனறுங்கால் - அழிய வந்த விடத்து, நுகூ
போகம் - உலக வின்பம் நு; இன்பம், நுநு
மடம் - மெல்லிய வீரம், சூ
மடன் உடைமை - அடகக முடைமை, நுங
மதம் - வலி, கள
மந்திரம் - இரகசியச் சொல், சூழ்ச்சி யுரை, அநு
மல் இவர் - மற்போர் விரும்பும், (பாயிரம்)
மறு - குற்றம், ,,

மனைசெய்தல் - வீடெடுத்தல், சள
மன் - நிலைபெற்ற, அ0
பெருமை, கூ0
மனறு - நீதித்தலம், சபை, சள
மா - சிறந்த, (பாயிரம்)
மாண்ட - மாட்சிமைப் பட்ட, சகூ
மாதுடைமை - அழகுடைமை, ருங
மாயம் - வஞ்சனைச் செயல், ருள
மாரி - மழை, உ
மாறு அல்லான் - எதிர் அல்லாதவன், கங
மிசைதல் - உண்ணுதல், சஅ
முகிழ் - மொட்டு, ங0
முகூர்த்தம் - முழுத்தம் (மூன்றேமுக்கால் நாழிகை கொண்ட வேளை,) சச
முயிறு - செவ்வெறும்பு, கூக
மூரண் - மாறுபாடு, ரு0
மூவாதான் - மூப்பில்லாதவனுகிய கடவுள, க
மூன்று ஒழித்து - காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களையும் நீக்கி, க
மெலிவு - தளர்ச்சி, எங
மேதை - அறிவுடையவன், உஉ
மேவாதார் - பொருந்தாதவர், கூச
மை - குற்றம், கூஉ
யாத்தல் தொடுத்தல, சொல்லுதல், அரு
வஞ்சி-ஒருவகைக்கொடி, அகூ
வசை - பழிமொழி கக
வடக்கிருத்தல - வடக்கு நோக்கி யிருந்து நோற்றல், எங
வடு - குறறம், சுகூ
வண்தார்-வளையமாலை, ருச
வரைவு - மணஞ் செய்தல், அ0
வலம் - வெறறி, கக
வனபபு - அழகு, எ
வன்கண் - வீரம். ,,
வாரம் - அனபு, அரு
வார்சானற - நீட்சி மிகுந்த, சசு
வால் உலண்டு - தூய உலண்டு என்னும் புழு, உள
வீதி - முறை, சகூ
வெகுளி - கோபம், ஙஉ
வெருட்டாமை - அச்சுறுத்தாமை, எச
வெள்கு - நாணு, உரு
வேட்பவன் - வேள்வி செய்பவன், ஙங
வேளாண்மை - உபகாரம், சஅ
வேறல் - எதிர்த்து வெல்லுதல, கங
வை - வைக்கோல், சு0
வெளவல்மின் - கவராதேயுங்கள், உசு